# கம்பன் கவித்திரட்டு

## அயோத்தியா காண்டம்
## ஆரண்ய காண்டம்



அமரர் சக்திதாசன் சுப்பிரமணியன்
ஜலஜா சக்திதாசன்

# கம்பன் கவித் திரட்டு

(இரண்டாம் பாகம்)

## அயோத்தியா காண்டம்

தொகுப்பாசிரியர்கள் :
அமரர் சக்திதாசன் சுப்பிரமணியன்
ஜலஜா சக்திதாசன்

நித்தியானந்த ஜோதி நிலையம்
த. பெ. 2184
D3, 43 V.K. சாலை, சென்னை28.

விலை: ரூ. 22

முதல் பதிப்பு—1990
உரிமம்—தொகுப்பாசிரியருக்கே

மாருதி பிரஸ்,
173, பீட்டர்ஸ் ரோடு,
சென்னை 600 014.



# இராமாயணத்தில் பால காண்ட நிகழ்ச்சிகள்

## சுருக்கம்

அயோத்தி நாட்டு மன்னன் தசரதன் மகப்பேறு இல்லாமை குறித்து மிக வருந்தினான். குல குருவாகிய வசிட்டரின் ஆலோசனைப்படி மகப்பேறு கருதி யாகம் ஒன்றை செய்ய முடிவு செய்தான். அந்த யாகத்தை செய்யக் கூடியவர் ஒருவரே. அவரே கலைக்கோட்டு முனிவர்; விபாண்டக முனிவரின் வழிதோன்றல்; அவர் அங்க நாட்டில் இருந்தார். தசரதன் அங்க நாட்டிற்குச் சென்று, கலைக்கோட்டு முனிவரை தன் நாட்டிற்கு அழைத்தான். யாகத்தைப் பற்றியும் கூறினான். முனிவர் அயோத்திக்கு வந்து யாகத்தை நடத்தினார்.

யாகத் தீயினின்று ஒரு பூதம் கையிலே பொன் தட்டு ஒன்றில் அமிர்த பிண்டம் ஏந்தி வந்தது. தட்டை பூமியில் வைத்தது. யாகத்தீயில் மறைந்தது.

அப்பிண்டத்தை தசரத சக்ரவர்த்தியின் தேவியர் மூவரும் பகிர்ந்து உட்கொண்டனர். நாட்கள் ஓடின. தேவியர் மூவரும் கருத்தரித்தனர். உரிய காலத்தில் தசரதனுக்கு நான்கு பிள்ளைகள் பிறந்தனர். கோசலைக்கு இராமனும், கைகேயிக்கு பரதனும், சுமித்திரைக்கு இலக்குமணனும், சத்துருக்னனும் பிறந்தனர்.

அரசக் குமாரர்களுக்குரிய வில் வித்தை மற்றும் ஏனைய சாத்திரங்களையும் கற்று, தேர்ச்சி பெற்ற தம் மக்களைக் கண்டு பெரு மகிழ்ச்சியடைந்தான் தசரதன். சில ஆண்டுகளுக்குப்பின் ஒரு நாள் விசுவாமித்திர முனிவர் தசரதனிடம் வந்தார்.

''சித்த வனத்திலே வேள்வியொன்று செய்ய நினைக்கிறேன். அந்த வேள்விக்கு அரக்கரால் இடையூறு வராவண்ணம் காக்க இராமனை என்னுடன் அனுப்புவாயாக!'' எனக் கூறினார். மிகுந்த வேதனையுடன் இராமனைப் பிரிந்தான் தசரதன். அண்ணனைத் தொடர்ந்தான் இலக்குமணன். இடையூறு விளைவிக்க வேகமாக வந்தாள் தாடகை. முதலில் அவள் பெண் ஆயிற்றே என்று இராகவன் தயங்கினாலும், விசுவாமித்திரர் அவளைப் பற்றிக் கூறிய வரலாற்றை நினைவுபடுத்திக் கொண்டான். ஓர் அம்பு விடுத்தான். வீழ்ந்தாள் தாடகை மகிழ்ச்சியுற்ற முனிவர் படைக்கலங்களைப் பற்றிய இன்னும் பல அரிய விவரங்களைக் கற்பித்தார்.

வழியில் கௌசிகி ஆற்றை கடக்கும்போது, அந்த ஆற்றின் வரலாற்றையும் கூறினார் கௌசிக முனிவர். சித்தாசிரமத்திலே ஆறு நாட்கள் வேள்வி நடந்தது. யாகத்தைப் பாழ்படுத்த வந்தனர் அரக்கர். யாகக் குண்டத்தை அழிக்கப் பல்வேறு உத்திகளைக் கையாண்டனர். இவ்வரக்கர்களுள் முக்கியமானவர்கள் மாரீசன், சுபாகு என்ற தாடகையின் இரு புதல்வர்கள்- இராமன்

அமைத்த அம்புக் கூரையைக் கண்டனர்; வெகுண்டனர். யாகத்தை அழிக்க மாயங்கள் செய்தனர். கண்டான் இரகுவீரன். இரண்டு அம்புகளை எய்தான். இவை இவ் விருவரையும் ஓட ஓட துரத்தியது. சுபாகுவைக் கொன்றது. மாரீசனைக் கடலிலே போட்டது.

வேள்வி முடிந்ததும் மிதிலைக்கு அரசிளங்குமரரை அழைத்துச் சென்றார் முனிவர். வழியில் இராமனின் மரபிலே தோன்றிய சகரன் ஆகியோர் பற்றியும் பகீரதன் தன் முன்னோரை உய்விக்க கங்கையை இவ்வுலகுக்குக் கொண்டு வந்த நிகழ்ச்சியையும் கூறினார்.

விதேக நாட்டின் ஊடே மூவரும் சென்று, மிதிலையின் புறமதிலை அடைந்தனர். அங்கு தான் கௌதம முனிவரின் மனைவி, அகலிகை சாபத்தின் காரணமாகக் கல் உருக் கொண்டு கிடந்தாள். இராமனுடைய திருவடி தூசி அக்கல்லில் பட்டது. சாபம் நீங்கி, சுய உருவம் பெற்றாள் அகலிகை. மீண்டும் தன் கணவனை அடையும் பேறு பெற்றாள்.

மிதிலையை அடைந்தனர் அம்மூவர்.

மிதிலையில் கன்னி மாடத்தின் மேல் மாடத்தில் தோழிகள் சூழ நின்றிருந்தாள் சீதை. அங்கே நின்றான் இராமன். பின்?

''அண்ணலும் நோக்கினான்
அவளும் நோக்கினாள்!''

சீதைக்குச் சுயம்வரம். ஆனால் இது சிறிது வித்தியாச மானது சிவதனுசுக்கு நாணேற்றுபவனே சீதைக்கு மாலை யிடலாம். இந்த இளங்குமரன என்ன செய்வானோ என்று வியப்புடன் எல்லோரும் இராமனையே நோக்கிய வண்ணம் இருந்தார்கள். 'படார்' என்ற வில் முறிந்த சத்தம் அவர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது.

மிதிலை மாநகர் வழியே உலா வரும் இராமனைக் காண, முட்டித் தள்ளிக் கொண்டு வந்த பெண்கள் தான் எத்தனை, எத்தனை!

இராமனுக்கும் சீதைக்கும் பங்குனி உத்திரத்தின் போது திருமணம் நிகழ்ந்தது. அதே வேளையில் இராமனுடைய சகோதரர்களுக்கும், சனகனுடைய பெண்கள் மூவருக்கும் திருமணம் நடைபெற்றது.

மிதிலையிலிருந்து தசரதனின் திருமகனும், அவனுடைய தம்பியரும், புதுமணப் பெண்களும் அயோத்திக்குப் புறப்பட்டனர்.

வழியில் கோடாலியை ஏந்தி உருத்திரன் போல் எதிர்ப்பட்டான் பரசுராமன். இவன் கார்த்த வீரியார்ச்சுனனை கொன்றவன். தன் தந்தையை கொன்றவன் க்ஷத்திரியன் என்பதால் அந்த வகுப்பாரையே அழிக்க உறுதி கொண்டவன். தன் வில்லை நாணேற்றும் படி இராமனுக்குச் சூளுரைத்தான். இரகுவீரன் பரசு ராமனிடமிருந்து வில்லை வாங்கினான். எளிதில் நாணேற்றினான். பரசுராமன் தன் பழிவாங்கும் எண்ணத்தைக் கைவிட்டான். இராமனை வணங்கினான். விடை பெற்றுக் கொண்டான்.

அயோத்தியிலே ஒரே கோலாகலம். மக்கள் அந்நகரை மிக மிக அழகாக அலங்கரித்தனர். ஏன்? தம் பேரன்புக்கு உரிய இராமனும் அவன் தம்பியரும் மணமுடித்து வருகிறார்களே, எவ்வளவு மகிழ்ச்சிகரமான செய்தி!

பரதனைக் காண அவன் பாட்டன் கேகைய அரசன் விழைந்தான். பரதனும், சத்துருக்கனனும் கேகைய நாட்டிற்குச் சென்றனர்.

அவர்கள் சென்ற பின், தசரதன் இராமனுக்கு முடி சூட்ட தீர்மானித்தான். நாளும் குறித்தாயிற்று. இதுவே பாலகாண்டம்.

# அயோத்தியா காண்டம்

கோசல நாட்டின் தலைநகர் அயோத்தி. அந்த அயோத்தி மாநகரில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை விவரிக்கும் காண்டம் ஆதலின் இஃது அயோத்தியா காண்டம் எனும் பெயர் பெற்றது.

இந்தக் காண்டம் 12 படலங்கள் கொண்டது. இந்த பன்னிரண்டு படலங்களிலுமாக மொத்தம் 1343 பாடல்கள் உள்ளன. அவற்றுள் 56 பாடல்களைத் திரட்டி இப்பதிப்பில் வெளியிட்டிருக்கிறோம்.

பெருமகன் என்வயின் பிறக்கச் சீதையாம்
திருமகள் மணவினை தெரிய கண்ட நான்
அருமகன் நிறை குணத்து அவனி மாது எனும்
ஒருமகள் மணமும் கண்டு உவப்ப உன்னினேன்.

இராமனாகிய திருமகன் என் வயிற்றில் பிறந்தான். அதனால் சீதையாகிய திருமகளின் திருமணம் கண்டேன். அரிய அம்மகன் நிறைந்த குணமுடைய பூமி தேவி என்கிற ஒரு மகளை மணக்கும் முடிசூட்டு விழாவையும் கண்டு மகிழ விரும்புகிறேன் என்று கூறினான் தசரத மன்னன்.

பதவுரை:

பெருமகன்- புருஷோத்தமனாகிய ஸ்ரீராமன்; என் வயின் பிறக்க- என்னிடத்திலே பிறக்க- (அவ்விராமனுக்கு) சீதையாம்- சீதையாகிய; திருமகள்- திருமகளது; மண வினை- மணக்கோலத்தை; தெரியக் கண்ட நான்- கண்ணாரக் கண்ட நான்; அருமகன்- அருமை மகனாகிய அவன்; நிறை குணத்து- நிறைந்த குணத்தை உடைய; அவனி மாது எனும்- பூமிதேவி என்கிற; ஒரு மகள்- ஒரு பெண்ணை; மணமும்- திருமணம் செய்து கொள்கிற கோலத்தையும்; கண்டு உவப்ப- கண்டு களிக்க; உன்னினேன்- உளங் கொண்டேன்.

★ ★ ★

இராமன் முடிசூட ஒரு நல்ல நாள் பார்த்து சொல்லுமாறு சோதிடர்களுக்குப் பணித்தான் மன்னன் தசரதன்.

''நாளையே நல்ல நாள்'' என்று கூறினார் சோதிடர்.

பட்டாபிஷேகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு கட்டளையிட்டான் தசரதன். நகரத்தை அழகு செய்யுமாறு கூறினான். இராமனுக்கு முடிசூட்டு விழா என்பதை நகர மக்களுக்குப் பறைசாற்றி அறிவிக்குமாறு கட்டளையிட்டான்.

இச் செய்தியறிந்தாள் மந்தரை எனும் கூனி.

அந்நகர் அணிவுறும் அமலை வானவர்
பொன்னகர் இயல்பு எனப் பொலியும் ஏல்வையில்
இன்னல் செய் இராவணன் இழைத்த தீமைபோல்
துன்னரும் கொடுமனக் கூனி தோன்றினாள்.

அலங்கரிக்கின்ற ஆரவாரத்தை உடைய அந்த அயோத்தி நகரம் தேவர் வாழும் பொன்னகர் போல் பொலிகின்ற சமயம்.

உலகினுக்குத் துன்பம் செய்கின்ற 'இராவணன் இழைத்த தீமை எல்லாம் ஒரு வடிவு கொண்டு வந்தது போலத் தோன்றினாள். தோன்றியவள் எவள்?

நெருங்குவதற்கு அரிய கொடிய மனம் கொண்ட கூனி.

அந் நகர்- அந்த அயோத்தி நகரத்தை; அணிவுறும்- அலங்கரிக்கின்ற; அமலை- பேர் ஆரவாரத்தினால்; வானவர் பொன்னகர் இயல்பு என- தேவலோக நகரின் இயல்பு போல; பொலியும் ஏல் வையில்- விளங்கும் சமயத்தில்; இன்னல் செய்- (எவ்வுலகுக்கும்) துன்பமே செய்கின்ற; இராவணன் இழைத்த தீமைபோல்- இராவணன் முற்பிறப்பில் செய்த தீமையெல்லாம் ஒரு உருக்கொண்டு தோன்றியது போல்; துன் அரும்- பெறுதற்கு அரிய; கொடு மனக கூனி- கொடுமை கொண்ட மனத்தினளான; கூனி (மந்தரை) தோன்றினாள்- வெளியே போந்தாள்.

★ ★

தோன்றிய கூனியும் துடிக்கும் நெஞ்சினாள்
ஊன்றிய வெகுளியாள் உளைக்கும்
உள்ளத்தாள்
கான்று எரி நயனத்தாள் கதிக்கும்
சொல்லினாள்
மூன்று உலகினுக்கும் ஓர் இடுக்கண் மூட்டுவாள்.

கூனி எக்காட்சி வழங்குகிறாள்? துடிக்கின்ற நெஞ்சினள்; உள்ளத்தை அமுக்கிக் கொண்டிருக்கும் கோபத்தாள்; குழம்புகின்ற மனத்தாள்; கோபத்தால் சிவந்து தீப்பொறி கக்கும் கண்ணினள்; மூன்றுலகுக்கும் துன்பமூட்டும் இயல்பினள்.

தோன்றிய கூனியும்- அவ்வாறு வெளிப் போந்த கூனியும் (அந்நகர் அலங்கரிக்கப்படுதல் கண்டு) துடிக்கும் நெஞ்சினாள்- கோபத்தால் துடிக்கின்ற மனம் உடையாளாய்; ஊன்றிய வெகுளியாள்-நிலைத்த கோபத்தளாய்; உளைக்கும் உள்ளத்தாள்-வேதனைப்படுகின்ற உள்ளம் கொண்டவளாய்; எரி கான்ற நயனத்தாள்-தீ உமிழ்கின்ற கண்கள் உடையவளாய்; கதிக்கும் சொல்லினாள்-தடுமாறும் சொல் உடையாளாய்; மூன்று உலகுக்கும் ஓர் இடுக்கண் மூட்டுவாளாய்-மூன்றுலகுக்கும் ஓர் ஒப்பற்ற துன்பத்தை ஏற்படுத்துபவளாய் தோன்றினாள்.

ஆழ்ந்த பேர் அன்பினாள் அனைய கூறலும்
சூழ்ந்த தீவினை நிகர் கூனிசொல்லுவாள்
'வீழ்ந்தது நின் நலம்; திருவும் வீந்தது
வாழ்ந்தள் கோசலை மதியினானல்' என்றாள்.

இவ்வாறு தோன்றிய கூனி என்ன செய்தாள்? கைகேயி இருந்த மாளிகைக்குச் சென்றாள். படுக்கையிலே படுத்திருந்தாள் கைகேயி. அவளது பாதங்களை மெல்ல வருடினாள் கூனி. கண் திறந்தாள் கைகேயி.

'கிரகணம் பிடிக்கும் வரையில் எவ்வித களங்கமும் இல்லாமல் ஒளி வீசும் சந்திரன் போல் இருக்கிறாய்.'

உனக்குப் பெருந்துன்பம் வரப் போகிறது. அப்படியிருந்தும் அதை அறியாமல் தூங்குகிறாய்'' என்று இடித்துக் கூறினாள் கூனி.

''நால்வர் பிள்ளைமார் இருக்கும் போது எனக்கு எத்தகைய துன்பம் வரப் போகிறது'' என்று பதில் கூறினாள் கைகேயி. அவ்விதம் கைகேயி கூறவும்,

''வீழ்ந்தது உன் நலன்; வீழ்ந்தது உன் செல்வம்; கோசலை புத்திசாலி. வாழ்வும் திருவும் பெற்று விட்டாள்'' என்று இலேசாக வத்தி வைத்தாள் கூனி.

ஆழ்ந்த பேர் அன்பினாள்- இராமனிடத்து ஆழ்ந்த பேரன்பு கொண்ட கைகேயி; அனைய கூறலும்- அவ்வார்த்தை கூறலும்; சூழ்ந்த தீவினை நிகர் கூனி; தீவினை சூழ் நதது போன்ற கூனி; சொல்லுவாள்- பின்வருமாறு சொல்லத் தொடங்கினாள்; வீழ்ந்தது நின் நலம்- உனது நலன் அழிந்தது; திருவும் வீழ்ந்தது- செல்வமும் அழிந்தது; கோசலை மதியினால் வாழ்ந்தனள்- கோசலை தன் புத்தியினால் வாழ்ந்தாள்; என்றாள்- என்று சொன்னாள்.

சிவந்த வாய்ச் சீதையும்
கரிய செம்மலும்
நிவந்த ஆசனத்து இனிது
இருப்ப, நின் மகன்
அவந்தனாய் வெறு நிலத்து
இருக்கல் ஆனபோது
உவந்தவாறு என் இதற்கு?
உறுதியாது? என்றாள்.

சிவந்த வாயினை உடைய சீதையும், கார்முகில் வண்ணனாகிய இராமனும் சிங்காதனத்திலே இனிது அமர்ந்து இருக்க உனது மகன் பரதன் தரையிலே நிற்கும் கதி வந்துவிட்டது. இதற்கு நீ மகிழ்ந்தது ஏன்? உனது மன உறுதி என்ன?

சிவந்த வாய் சீதையும்- சிவந்த வாயினை உடைய சீதையும்; கரிய செம்மலும்- கரு நிறத்தை உடைய இராமனும்; நிவந்த ஆசனத்து- உயர்ந்த சிங்காதனத்தில்; இனிது இருப்ப- இனிமையாக வீற்றிருக்க. நின் மகன்- உனது மகன் பரதன்; அவந்தனாய்- ஒன்றும் இல்லாதவனாய்; வெறு நிலத்து- தரையிலே; இருக்கல் ஆனபோது- இருக்கும் கதி வந்து விட்ட பிறகு; உவந்த ஆறு- மகிழ்ந்த காரணம்; என்?- என்ன? இதற்கு உறுதி யாது- இதற்கு நீ கொண்ட மன உறுதி என்ன?

அரசர் இல் பிறந்து பின்
அரசர் இல் வளர்ந்து
அரசர் இல் புகுந்து
பேர் அரசி ஆன நீ
கரை செயற்கு அரும்
துயர்க் கடலில் வீழ்கின்றாய்
உரை செயக் கேட்கிலை
உணர்தியோ? என்றாள்.

சாதாரண குடும்பத்திலே பிறந்தவளாகயிருந்தால் அவளுக்கு அரசியல் தெரியாது எனலாம். மாற்றாள் மகன் அரசன் ஆதல் குறித்து மகிழ்வடைகிறாள் எனலாம்.

ஆனால் நீயோ அரச குடும்பத்திலே பிறந்தவள். அரச குடும்பத்திலே வளர்ந்தவள். அரச குடும்பத்திலே புகுந்தவள்; பட்டத்து அரசி வேறு.

இத்தகைய நீ மாற்றாள் மகன் அரசனாவது குறித்துச் சிறிதும் கவலையில்லாது இருக்கிறாயே! அதனால் உனக்கும் பெருந்துன்பமுண்டாகும் என்பதை அறியாது இருக்கிறாயே! சொன்னாலும் கேட்க மாட்டேன் என்கிறாயே!

★ ★ ★

அரசர் இல் பிறந்து-அரச குடும்பத்தில் தோன்றி; அரசர் இல் வளர்ந்து- அரச குடும்பத்திலே வளர்ந்து; அரசர் இல் புகுந்து-அரச குடும்பத்திலே வாழ்க்கைப்பட்டு; பேர் அரசி ஆன நீ-பெரிய பட்டத்து அரசியாகிய நீ; கரை செயற்கு அரும்-கரை காண அரிதாகிய; துயரக் கடலில்-துன்பக் கடலில்; வீழ்கின்றாய்- வீழ்ந்து விடப் போகின்றாய்; உரை செயக் கேட்கிலை- சொன்னாலும் கேட்க மாட்டேன் என்கிறாய்; உணர்தியோ-நீ-யாகவும் உணரவில்லை.

எனக்கு நல்லையும் அல்லை;
நீ; என் மகன் பரதன்
தனக்கு நல்லையும் அல்லை;
அத் தருமமே நோக்கின்
உனக்கு நல்லையும் அல்லை
வந்து ஊழ்வினை தூண்ட
மனக்கு நல்லன சொல்லினை
மதியிலா மனத்தோய்.

அறிவில்லாதவளே! எனக்கு நல்லது செய்வது போல் ஏதோ சொல்கிறாய். அது எனக்கு நல்லது அன்று; என் மகன் பரதனுக்கும் நல்லது அன்று; உனக்கும் நல்லது அன்று. விதி உன் மதியைத் தூண்ட ஏதோ சொல்கிறாய்.

★ ★ ★

எனக்கு நல்லையும் அல்லை- எனக்கு நல்லவளும் அல்ல; என் மகன்- எனது மகன்; பரதன் தனக்கு- பரத னுக்கு; நல்லையும் அல்லை- நல்லவளும் அல்ல; அதருமமே நோக்கின்- அந்த அரச நீதியையே நோக்கி னால்; உனக்கு நல்லையும் அல்லை- உனக்கு நல்லது செய்து கொள்பவளும் இல்லை; வந்து ஊழ்வினை தூண்ட- உனது முன்னை வினை தூண்ட; மனக்கு நல்லன- மனத் திலே நல்லனவாக இருப்பவற்றை; சொல்லினை- சொன் னாய்; மதியிலா மனத்தோய்- அறிவு இல்லாதவளே.

*மந்தரை பின்னரும்*
*வகைந்து கூறுவாள்*
*அந்தரம் தீர்ந்து உலகு*
*அளிக்கும் நீர்மையால்*
*''தந்தையும் கொடியன்*
*நல்தாயும் தீயளால்*
*எந்தையே! பரதனே!*
*என் செய்வாய்?'' என்றாள்.*

''ஐயோ? பரதா! உன் தந்தையாகிய தசரதனோ உன்னிடம் அன்பின்றி ஒருதலையாக இராமனுக்கு முடி சூட்டுகிறான். இந்த கைகேயியாவது அதைத் தடுத்து உனக்கு முடி சூட்ட முயலலாமே. அதுவுமில்லை, சொல் லியும் கேட்கவில்லை. இராமன் முடி சூடுதல் கேட்டு மகிழ்கிறாள். இப்படி உன் தந்தையும் கொடியனாய், தாயும் கொடியவளாய் இருக்கின்றார்களே! பாவம், நீ என்ன செய்வாய்!''

இவ்வாறு கூறி பரதனுக்கு இரங்குவாள் போல் நடித்து கைகேயி மனத்தில் விஷவித்து ஊன்ற முயல் கிறாள் கூனி.

மந்தரை- அந்தக் கூனி; பின்னரும்- மீண்டும்; வகைந்து- வகைப்படுத்திக் கூறுவாள்- சொல்வாள் ஆயினாள்; அந்தரம் தீர்ந்து- உலகு- இராமனுக்கே முடி சூட்ட வேண்டுய என்று இரகசியமாக மனத்தின் உள்ளே தீர்மானம் செய்துக் கொண்டு; உலகு அளிக்கும் நீர்மையால்- அரசு கொடுத்த தன்மையால்; தந்தையும் கொடியன்- தந்தையாகிய தசரதனும் உனக்குக் கொடியவன் ஆனான்; நல் தாயும் தீயள்- அது கேட்டு மகிழும் உனது தாயும் கொடியவள் ஆனாள்; பரதனே- பரதா! எந்தையே என் அப்பா; என் செய்வாய்- நீ என்ன செய்வாய்?

''மறந்திலள் கோசலை
உறுதி; மைந்தனும்
சிறந்த நல்திருவினில்
திருவும் எய்தினான்
இறந்திலன்; இருந்தனன்;
என் செய்து ஆற்றுவான்
பிறந்திலன் பரதன் நீ
பெற்றதால்'' என்றாள்.

இராமன் கோசலை மகனாகப் பிறந்தான். தனது நலனையும் தனது மைந்தன் நலனையும் அவள் மறக்கவில்லை. சமயம் பார்த்துத் தன் மகனுக்கு அரசை வாங்கிக் கொடுத்து விட்டாள்.

நீயும் பரதனைப் பெற்றாய்? என்ன பயன்? நீ அவனைப் பெற்றதும் பெறாததும் ஒன்றே. சாவுமில்லை வாழ்வுமில்லை என்ற நிலை அவனுக்கு.

★ ★ ★

கோசலை-கோசலை; உறுதி-நன்மையை; மறந்திலள்-மறந்தாள் இல்லை; (அதனால்) மைந்தனும்- அவள் மகனும்; திருவினில்- செல்வத்தில்; சிறந்த அரச செல்வத்தைப் பெற்றான்; பரதன்-பரதனோ; இறந்திலன்-சாகவுமில்லை; இருந்தனன்- உயிரோடு இருக்கிறான்; என் செய்து ஆற்றுவான்- என்ன செய்து தன் துயர் போக்கிக் கொள்வான்; நீ பெற்றதால்- நீ அவனைப் பிள்ளையாகப் பெற்றதால்; பிறந்திலன்- பிறவாததற்குச் சமம் ஆனான்.

பாக்கியம் புரிந்திலாப்
பரதன் தன்னைப் பண்டு
ஆக்கிய பொலன் கழல்
அரசன் ஆணையால்
தேக்கு உயர் கல் அதர்
கடிது சேணிடைப்
போக்கிய பொருள் எனக்கு
இன்று போந்ததால்.

பாவம்! துரதிர்ஷ்டசாலியான பரதனை கேகய தேசத்திற்குப் போகுமாறு தசரதன் ஏன் அனுப்பினான்?

அதன் ரகசியம் இப்போதுதான் எனக்கு விளங்குகிறது.

இராமனுக்கு முடி சூட்டவே.

★ ★ ★

பாக்கியம் புரிந்திலா- அரனாகும் நல்ல பாக்கியம் செய்யாத; பரதன் தன்னை- பரதனை; பொலன் ஆக்கிய கழல் அரசன்- பொன்னால் செய்யப் பெற்ற வீரக் கழல் அணிந்த தசரதன்; ஆணையால்- உத்தரவு பிறப்பித்து; தேக்கு உயர் கல் அதர்- தேக்கு மரங்கள் உயர்ந்த மலை

சார்ந்த நெடுஞ்சாலை வழியே; சேண் இடை- வெகு தூரத்தில் உள்ள கேகய நாட்டிற்கு; கடிது- விரைவாக; போக்கிய பொருள்- அனுப்பியதன் பொருள்; இன்று எனக்குப் போந்ததால்- இன்று தான் எனக்கு விளங்கிற்று.

''போதி என் எதிர் நின்று
நின் புன் பொறி நாவை
சேதியாது இது பொறுத்தனன்
புறம் சிலர் அறியின்
நீதி அல்லவும் நெறி முறை
அல்லவும் நினைந்தாய்
ஆதி; ஆதலின் அறிவிலி
அடங்குதி'' என்றாள்.

'போ! என் எதிரில் நில்லாதே! தகாத சொல் கூறிய உன் நாவைத் துண்டிக்காமல் பொறுத்தேன்.

வேறு எவரேனும் அறிந்தால் நீதியற்ற முறையற்ற செயல்களை நினைப்பவள் என்று உன்மீது குற்றம் சுமத்துவார்கள்.

தண்டனைக்கும் உள்ளாவாய்.

எனவே உன் நாவை அடக்கு!' என்றாள் கைகேயி.

★ ★ ★

என் எதிரில் நின்று போதி- என் எதிரிலிருந்து அப்பால் போ; நின் புன் பொறி நாவை- கீழ்த்தரமான சொற்களைச் சொன்ன உன்னுடைய நாக்கை; சேதியாது- துண்டிக்காமல்; இது பொறுத்தனன்- இதைப் பொறுத்துக் கொண்டேன்; புறம் சிலர் அறியின்- வேறு எவராவது இதை அறிந்தால்; நீதி அல்லவும், நெறி முறை அல்லவும்-

*நியாயமற்றவும், முறையற்றவும் ஆகியவற்றை; நினைந் தாய் ஆதி- கருதிய குற்றத்துக்கு ஆளாவாய்; ஆதலின்- ஆதலால்; அறிவிலி- அறிவில்லாதவளே அடங்குதி- வாயை மூடு; என்றாள்- என்று சொன்னாள் கைகேயி.*

*(கூனி ஓடவில்லை. நின்று சிறிது சிறிதாகக் கைகேயின் மனத்தை மாற்றினாள்)*

கூனி போன பின் குல மலர்க்
குப்பை நின்று இழிந்தாள்
சோனை வார் குழல் கற்றையில்
சொருகிய மாலை
வான வார் மழை நுழை தரு
மதி பிதிர்ப்பாள் போல்
தேன் அவாவுறு வண்டினம்
அலமரச் சிதைத்தாள்.

*கூனியின் சதி நன்கு பலித்து விட்டது. கைகேயி மனம் மாறினாள்; தன் மலர் படுக்கையை விட்டு இறங் கினாள்; தன் கூந்தலிலே சூடியிருந்த மலர் மாலையை எடுத்தாள்; பிய்த்து எறிந்தாள்.*

கூனி போன பின்- மந்தரை போன பின்பு; குல மலர்க் குப்பை நின்று- சிறந்த மலர்க் குவியலாகிய படுக்கையி லிருந்து; இழிந்தாள்- இறங்கினாள்; சோனைவார் குழல் கற்றையில்- பெருமழை பொழியும் மேகம் போன்று தனது கரிய கூந்தல் தொகுதியில்; சொருகிய- சொருகிக் கொண் டிருந்த; மாலை- பூ மாலையை; வானம் வார் மழை நுழை தரும் மதி பிதிர்ப்பாள் போல்- ஆகாயத்திலிருக்கின்ற பெரிய கார்கால மேகத்தில் நுழைந்திருக்கின்ற பூரண சந்திரனை சொரிவிப்பவள் போல; தேன் அவா உறு வண்டு இனம்- மதுவின் மீதுள்ள ஆசையால் வண்டுக்

கூட்டம்; அலமர- சுழலிடும் படும்; சிதைத்தாள்- சிதைத்து எறிந்தாள்;

விளையும் தன் புகழ் வல்லியை
வேர் அறுத் தென்னக
கிளை கொள் மேகலை சிந்தினள்
கிண் கிணியோடும்
வளை துறந்தனள்; மதியினில்
மறுத்துடைப்பாள் போல்
அளக வான் நுதல் அரும்
பெறல் திலகமும் அழித்தாள்.

வளரும் புகழ்க்கொடியை அறுத்து எறிந்தது போல தனது மேகலாபரணத்தை எடுத்து வீசினாள். காலில் அணிந்திருந்த கிண்கிணியை எடுத்து எறிந்தாள்; கையில் அணிந்திருந்த வளைகளைக் கழற்றி வீசினாள்; நெற்றியில் இருந்த திலகத்தை அழித்தாள்.

★ ★

விளையும் தன் புகழ் வல்லியை- வளர்கின்ற தனது புகழாகிய கொடியை; வேர் அறுத்து என்ன- வேரோடு அறுத்தால் போல; கிளை கொள் மேகலை- ஒளி பொருந்திய தன் மேகலாபரணத்தை; சிந்தினள்- சிதறினாள்; கிண்கிணியோடும்- பாத கிண்கிணியோடும்; வளை துறந்தனள்- கைவளைகளையும் எறிந்தாள்- மதியினில்- சந்திரனிடத்தே உள்ள; மறு களங்கத்தை; துடைப்பாள் போல்- அழிப்பவள் போல; அளகவாள் நுதல்- கூந்தலை அடுத்த ஒளி மிகும் நெற்றியில் உள்ள; அரும் பெறல் திலகமும்- பெறுதற்கு அரிதான திலகத்தையும்; அழித்தாள்- துடைத்தாள்.

தா இல் மா மணிக் கலன்
முற்றும் தனித்தனி சிதறி
நாவி நன்குழல் நானிலம்
தை வரப் பரப்பிக்
காவி உண் கண்கள்
அஞ்சனம் கான்றிடக் கலுழாப்
பூ உதிர்ந்தது ஓர் கொம்பு
எனப் புவிமிசைப் புரண்டாள்.

இரத்தினம் பதித்த அணிகள் யாவும் நாலா பக்கமும் சிதறிக் கிடந்தன. கஸ்தூரி வாசனை வீசும் தனது கூந்தலை அவிழ்த்தாள்; தலைவிரி கோலமானாள்; அழுதாள்; அதனால் கண்களில் தீட்டப்பட்ட மை கலங்கியது; கரைந்து ஓடியது. மலர் உதிர்த்த பூங்கொம்பு போல பூமியிலே கிடந்தாள் கைகேயி.

தா இல் மா மணிக்கலன்- குற்றமற்ற பெரிய இரத்தின மயமான நகைகள்; முற்றும்- முழுவதும்; தனித் தனி சிதறி— தனித்தனியாகச் சிதறி; நாவி நன்குழல்- கஸ்தூரி அணிந்த கூந்தலை, நானிலம் தை வரப் பரப்பி- பூமியிலே கிடந்து புரளும்படி அவிழ்த்து விட்டு; காவி உண் கண்கள்- நீலோத்பலம் போன்ற மையுண்ட கண்கள்; அஞ்சனம் கான்றிட- மை கரைந்து ஓட; கலுழா- அழுது கொண்டு; பூ உதிர்ந்தது ஓர் கொம்பு என- மலர் உதிர்த்த கொடி போல; புவி மிசைப் புரண்டாள்- தரையிலே புரண்டாள்.

நவ்வி வீழ்ந்தென நாடக
மயில் துயின்றென்னக்
கவ்வை கூர்தரச் சனகியாம்
கடி கமழ் கமலத்து

அவ்வை நீங்கும் என்று
அயோத்தி வந்து அடைந்த அம்மடந்தை
தவ்வை ஆம் எனக் கிடந்தனள்
கேகயன் தனயை.

துள்ளித் திரிகின்ற மான் அதை விட்டு பூமியில் படுத்து புரள்வது போலவும் மகிழ்ச்சியுடன் ஆடும் அழகிய மயில் அதை விட்டு ஒய்ந்து கிடப்பது போலவும், சீதையாகிய இலட்சுமி வனம் செல்வது அறிந்து அவள் இருந்த அயோத்திக்கு மூத்தவளாகிய மூதேவி வந்துவிட்டது போலவும் கிடந்தாள் கைகேயி.

★ ★

கேகயன் தனயை- கேகயன் புதல்வியாகிய கைகேயி; கவ்வை கூர் தர- துன்பம் மிகுதலால்; நவ்வி வீழ்ந்தது என- மான் விழுந்தது போலவும்; நாடக மயில் துயின்றென்ன- குலாவிக் கூத்தாடும் மயில், அஃது ஒழிந்து ஒடுங்கிக் கிடந்தது போலவும்; சனகியாம்- சீதையாகிய; கடி கமழ் கமலத்து அவ்வை- மணம் வீசும் தாமரையில் வீற்றிருக்கும் இலட்சுமி, நீங்கும் என்று- காடு செல்வாள் என்று அறிந்து; அயோத்தி வந்து அடைந்த- அயோத்தி வந்து சேர்ந்த; அம்மடந்தை- இலட்சுமியின்; தவ்வை- மூத்தவளாகிய மூதேவியாம்; எனக் கிடந்தனள்- என்று சொல்லும்படியாக படுத்திருந்தாள்.

பட்டாபிஷேகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் கவனித்து விட்டு இரவு கைகேயி அரண் மனைக்குச் சென்றான் தசரதன்.

அங்கே என்ன கண்டான்? கைகேயி இருந்த அலங் கோலம் கண்டான். கண்டு பதைத்தான். அவளை எடுத்து ஆறுதல் மொழி பல கூறினான்.

கைகேயியும் இதுதான் தருணம் என்று எண்ணினாள். தசரதன் முன்பு அளித்திருந்த வரங்கள் இரண்டையும் இப்போது அளிக்கும்படி கேட்டாள்.

பரதனுக்கே முடிசூட வேண்டும் என்பது ஒரு வரம். இராமன் பதினான்கு ஆண்டுகள் காடு செல்ல வேண்டும் என்பது மற்றொரு வரம்.

இந்த மொழிகளைக் கேட்ட உடனே மன்னன் தசரதன் உற்ற நிலையை இங்கே நமக்குக் காட்டுகிறார் கவி.

உலர்ந்தது நா; உயிர்
ஓடல் உற்றது; உள்ளம்
புலர்ந்தது; கண்கள் பொடித்த
பொங்கு சோரி
சலம் தலை மிக்கது; தக்கது
என் கொல் என்று என்று
அலைந்து அலையுற்ற அரும்
புலன்கள் ஐந்தும்.

நாக்கு வறண்டது; உயிர் பிரியும் போல் ஊசலாடிற்று; மனம் வாடியது; கண்கள் இரத்தம் சொரிந்தன; கோபம் தலைக்கு ஏறியது; "என்ன செய்யலாம்?" என்று எண்ணி எண்ணிப் புலன்கள் ஐந்தும் குழம்பின; கலங்கின.

★ ★ ★

நா உலர்ந்தது- நாக்கு வறண்டது. உயிர் ஓடல் உற்றது- உயிர் போகத் தொடங்கியது; உள்ளம் புலர்ந்தது; மனம் தளர்ந்தது; கண்கள் பொங்கு சோரி பொடித்த- கண்கள் பொங்கி மிகுந்த இரத்தம் சிந்தின; சலம் தலை மிக்கது- துன்பம் தலைக்கேறியது; அரும்

புலன்கள் ஐந்தும்- அரிய புலன்கள் ஐந்தும்; தக்கது என் கொல்- இப்போது என் செய்வது என்று எண்ணி; அலைந்து அலையுற்ற- திரிந்து குழம்பின.

மேவி நிலத்தில் இருக்கும்;
நிற்கும்; வீழும்;
ஓவியம் ஒப்ப உயிர்ப்பு
அடங்கி ஓயும்;
பாவியை உற்று எதிர் பற்றி
எற்ற எண்ணும்
ஆவி பதைப்ப அலக்கண்
எய்துகின்றான்.

உயிர் பதைக்கிறது; துன்பத்தால் துடிக்கிறான்; தரையில் உட்காருவான்; பின்னர் எழுந்து நிற்பான்; நின்றபடியே தரையில் வீழ்வான்; உயிர்ப்பு அடங்கப் பெற்றுச் சித்திரம் போல் ஓய்ந்து கிடப்பான். பாவியாகிய கைகேயியைப் பிடித்துத் தரையில் மோதிவிடலாமா என்று எண்ணுவான்.

* * *

ஆவி பதைப்ப- உயிர் துடிக்க; அலக்கண்- துன்பம்; எய்துகின்றான்- அடைகின்ற தசரதன்; மேவி- அத்துன் பத்தினின்றும் மனத்தைத் தேற்றிக் கொண்டு; நிலத்தில் இருககும்- எழுந்து உட்காருவான்; நிற்கும்- பின் எழுந்து நிற்பான்; வீழும்- மீண்டும் தரையில் வீழ்வான்; உயிர்ப்பு அடங்கி- மூச்சுப் பேச்சு இல்லாமல்; ஓவியம் ஒப்ப-பதுமை போல; ஓயும்- ஓய்ந்து கிடப்பான்; பாவியை- பாவியாகிய கைகேயியை; எதிர் உற்று- எதிரே போய்; பற்றி- இரு கைகளாலும் பிடித்து; எற்ற- தரையிலே மோத; எண்ணும்- எண்ணுவான்.

பூதலம் உற்று அதனில்
புரண்ட மன்னன்
மாதுயரத்தினை யாவர்
சொல்ல வல்லார்?
வேதனை முற்றிட வெந்து
வெந்து கொல்லன்
ஊது உலையில் கனல் என்ன
வெய்து உயிர்த்தான்.

தரையிலே விழுந்து புரண்டு கொண்டிருக்கும் அத் தசரதனின் பெருந் துயரத்தினை எவரே சொல்ல வல்லார்? யாரும் இலர். மனவேதனை பெருகப் பெருக உளம் மேலும் மேலும் வேதனையடைகிறது. கொல்லன் உலைக்களத்திலே 'புஸ் புஸ்' என்ற சப்தத்துடன் எரியும் தழல் போல் 'புஸ்' என்ற பெருமூச்சு விட்டு வேதனைப் பட்டுக் கொண்டிருந்தான்.

★ ★

பூதலம் உற்று- தரையிலே விழுந்து; அதனில் புரண்ட- அதிலே புரண்டு கொண்டிருந்த; மன்னன்- தசரத மன்னனின்; மா துயரத்தினை- பெரும் துன்பத்தை; யாவர் சொல்ல வல்லார்- சொல்ல வல்லவர் எவர்? (ஒருவரும் இல்லை) வேதனை முற்றிட- துன்பம் அதிகரிக்க; வெந்து வெந்து- மனம் வெதும்பி வெதும்பி; கொல்லன் ஊதுலையில்- கொல்லனுடைய உலைக்களத்திலே எழுகின்ற; கனல் என- நெருப்புப் போல; வெய் துயிர்த் தான்- பெருமூச்சு விட்டான்.

கையொடு கையைப்
புடைக்கும்; வாய் கடிக்கும்
'மெய்யுரை குற்றம்' எனப்
புழுங்கி விம்மும்;

நெய் எரி உற்றென நெஞ்சு
அழிந்து சோரும்;
வையகம் முற்றும் நடந்த
வாய்மை மன்னன்.

கையொடு கை தட்டுகிறான்; கோபத்தால் உறுமி உதட்டைக் கடிக்கிறான்; 'மெய் சொல்வதே குற்றம்' என்று மனம் புழுங்குவான்; விம்முவான்; நெருப்பிலே வார்க்கப்பட்ட நெய் போல் உருகினான், வையம் முழுவதும் வாய்மைக்குப் புகழ் பெற்ற மன்னன்.

★ ★

வையகம் முற்றும்- பூமி முழுவதும்; நடந்த- புகழ் சென்ற; வாய்மை மன்னன்- சத்தியசீலனாகிய தசரத மன்னன்; கையொடு கையைப் புடைக்கும்- அங்கையிலே புறங்கை மடக்கிக் குத்திக் கொள்வான்; வாய் கடிக்கும்- உதட்டைக் கடிப்பான்; மெய் உரை குற்றம்- மெய் பேசுதல் குற்றம்; என- என; புழுங்கி- மனம் புழுங்கி; விம்மும்- விம்முவான்; நெய் எரி உற்று என- நெருப்பிலே வார்க்கப்பட்ட நெய் போல; நெஞ்சு அழிந்து- மனம் உருகி; சோரும்- சோர்வு அடைவான்.

நாகம் எனும் கொடியாள்
தன் நாவின் ஈந்த
சோக விடம் தொடரத்
துணுக்கம் எய்தா
ஆகம் அடங்கலும் வெந்து
அழிந்து அராவின்
வேகம் அடங்கிய வேழம்
என்ன வீழ்ந்தான்.

நல்ல பாம்பு போலும் கொடியவள் கைகேயி. அவள் தன் நாக்கினால் அளித்த விஷம் தலைக்கு ஏற நடுங்கி உடல் முழுவதும் துன்ப வெப்பத்தினால் வெதும்பி அழியப் பாம்பு விடத்தின் வேகம் அடங்கி வீழும் யானை போலத் தரையில் வீழ்ந்தான் தசரதன்.

★ ★

நாகம் எனும்- நல்ல பாம்பு என்று சொல்லத்தக்க; கொடியாள் தன்-கொடியவள்; தனது நாவில் ஈந்த- நாக்கினால் அளித்த; சோக விடம்- துன்ப விஷம்; தொடர- தலைக்கு ஏறிய அளவிலே; துணுக்கம் எய்தா- நடுங்கி; ஆகம் அடங்கலும்- உடல் முழுவதும்; வெந்து- வெதும்பி; அழிந்து- சோர்ந்து; அராவின்- பாம்பினால் வேகம் அடங்கிய; வேழம் என்ன- யானை போல வீழ்ந்தான்.

இரவு முழுவதும் இவ்வாறு துடித்துக் கொண்டிருந்தான் தசரத மன்னன்.

மறுநாள் பொழுது விடிந்தது. பட்டாபிஷேக ஏற்பாடுகளை எல்லாம் செய்துவிட்டு மன்னனை அழைத்துச் செல்ல வந்தான் மந்திரி சுமந்திரன்.

வந்த மந்திரியை நோக்கி கைகேயி சொல்கிறாள்.

''இரவு முழுவதும் பட்டாபிஷேகம் பற்றியே பேசி இருந்து இப்பொழுதுதான் தூங்குகிறார் அரசர். அவரை எழுப்புவது இயலாது. எனவே நீர் போய் இராமனை அழைத்து வருக.''

மந்திரியும் ''அங்ஙனமே ஆகுக'' என்று கூறிச் சென்று இராமனை அழைத்து வந்தான்.

'ஆழி சூழ் உலகம் எல்லாம்
பரதனே ஆள, நீ போய்த்
தாழ் இரும் சடைகள் தாங்கித்
தாங்க அரும் தவம் மேற்கொண்டு
பூழி வெம் கானம் நண்ணிப்
புண்ணியத் துறைகள் ஆடி
ஏழிரண்டு ஆண்டில் வா' என்று
இயம்பினன் அரசன் என்றாள்.

''கடல் சூழ்ந்த உலகம் முழுவதையும் பரதனே ஆள, நீ நீண்ட சடாமுடி தரித்து அரிய தவம் மேற்கொண்டு காடு சென்று, புண்ணிய நதிகளில் நீராடி வா. ஓராண்டினில் அல்ல; ஈராண்டுகளில் அல்ல. பதினான்கு ஆண்டுகளுக்குப் பிறகு வா. இது மன்னவன் இட்ட கட்டளை.''

இராமனை அழைத்து வரச் செய்து இவ்வாறு கூறினாள் கைகேயி.

ஆழி சூழ் உலகம் எல்லாம்- கடல் சூழ்ந்த இவ்வுலகம் அனைத்தையும்; பரதனே ஆள- பரதனே ஆண்டு கொண் டிருக்க; நீ போய்- நீ போய்; தாழ இரும் சடைகள் தாங்கி- தொங்குகின்ற பெருஞ்சடை தரித்து; தாங்க அரும்- தாங்குதற்கு அரிய; தவம் மேற்கொண்டு- தவத்தை மேற் கொண்டு; பூமி வெங்கானம்- புழுதியடைந்த வெப்பம் மிகுந்த காட்டை; நண்ணி- அடைந்து; புண்ணியத் துறைகள் ஆடி- புண்ணிய நதிகளில் நீராடி; ஏழு இரண்டு ஆண்டில்- பதினான்கு ஆண்டுகள் சென்றபின்; வா- திரும்பி வா; என்று இயம்பினன் அரசன் என்றாள்.

மன்னவன் பணியன்றாகில்
நும் பணி மறுப்பனோ? என்

பின்னவன் பெற்ற செல்வம்
அடியனேன் பெற்றது அன்றோ?
என் இனி உறுதி அப்பால்?
இப் பணி தலை மேல் கொண்டேன்
மின் ஒளிர் கானம் இன்றே
போகின்றேன்; விடையும்
கொண்டேன்.

*மன்னவன் இட்ட கட்டளையானால் என்ன? தாங்கள் பிறப்பித்த உத்தரவானால் என்ன? எதுவானால் என்ன? தாங்கள் சொன்னால் அதை நான் மறுப்பேனோ? நான் முடிசூடினால் என்ன? என் தம்பி பரதன் முடி சூடினால் என்ன? இரண்டும் ஒன்று தானே. இதோ இப்போதே காடு செல்வேன். விடை பெறும் வரை கூடக் காத்திரேன். விடை பெற்றுக் கொண்டேன்.*

★ ★

மன்னவன் பணி அன்று ஆகில்- அரசனுடைய கட்டளை அன்று ஆயினும்; நும் பணி மறுப்பனோ?- உமது கட்டளைக்குக் கீழ்ப்படிய மறுப்பேனோ?; என் பின்னவன் பெற்ற செல்வம்- என் தம்பியாகிய பரதன் பெற்ற செல்வம்; யான் பெற்றது அன்றோ- நான் அடைந்தது அன்றோ; அப்பால்- பிறகு; இதனினும்- இதனிலும் மேலான உறுதி- நன்மை; என்- யாது?; இப் பணி- எனக்கு இடப்பட்ட இக்கட்டளையை; தலை மேல் கொண்டேன்- தலை மேல் ஏற்றுக் கொண்டேன்; மின் ஒளிர் கானம்- மின்னல் விளங்கும் காட்டிற்கு; இன்றே போகின்றேன்- இன்றே செல்கிறேன்; விடையும் கொண்டேன்.

இராமன் முடி சூடப் போவதில்லை. காடு செல்கிறான் என்பது கேட்டான் இளையவனாகிய இலட்சுமணன். சினம் கொண்டான்.

அந்த இலட்சுமணன் எந்நிலையில் இருந்தான் என்பதை கம்பர் இங்கே நமக்குச் சொல்கிறார்.

கண்ணில்கடைத்தீ உக
நெற்றியில் கற்றை நாற
விண்ணில் சுடரும் சுடர் வீய,
மெய் நீர் விரிப்ப
உள் நிற்கும் உயிர்ப்பு எனும்
ஊதை பிறக்க நின்ற
அண்ணல் பெரியோன் தனது
ஆதியின் மூர்த்தி ஒத்தான்.

இலட்சுமணனுடைய கண்களில் இருந்து தீப் பொறிகள் பறந்தன. எத்தகைய தீப்பொறி? ஊழித் தீ போன்ற தீப்பொறிகள். புருவ மயிர் கற்றைகள் நெற்றிக்கு ஏறின. உடம்பில் வியர்வை பொங்கிற்று. சண்ட மாருதம் போல் சீறினான். தனது பழைய உருவாகிய ஆதிசேஷனைப் போல் விளங்கினான் இலட்சுமணன்.

★ ★

கண்ணில் கடைத் தீ உக- கண்ணில் ஊழித் தீப் போன்ற தீப்பொறிகள் சிந்த; நெற்றியில் கற்றை நாற- புருவ மயிர் கற்றைகள் நெற்றியில் சென்று விளங்க; விண்ணில் சுடரும் சுடர் வீய- வானில் விளங்கும் சூரியன் ஒழிய; மெய் நீர் விரிப்ப- உடம்பிலே வெள்ளம் போல் வியர்வை பெருகிட; உள் நிற்கும் உயிர்ப்பு எனும் ஊதை பிறக்க- உடம்பின் உள்ளே நிற்கின்ற உயிர்ப்பு என்கிற சண்ட மாருதம் தோன்றவும்; அண்ணல் பெரியோன்- பெருமை மிகு பெரியோன் ஆகிய இலக்குவன்; தனது ஆதியின் மூர்த்தி ஒத்தான்- தனது பழைய உருவாகிய ஆதி சேஷனை ஒத்தான்.

புவிப்பாவை பாரம் கெடப்
போரில் வந்தோரை எல்லாம்
அவிப்பானும் அவித்து அவர்
ஆக்கையை அண்டம் முற்றக்
குவிப்பானும் எனக்கு ஒரு
கோவினைக் கொற்ற மௌலி
கவிப்பானும் நின்றேன்; இது
காக்குநர் காமின் என்றான்.

"இராமன் முடி சூடுவதை எதிர்த்து எவர் வந்தாலும் வருக! அவரை எல்லாம் போரிலே கொன்று அவர் உடலை யெல்லாம் பெரும் குவியலாகக் குவித்து அவ்வெற்றியினால் கிடைத்த மகுடத்தை என் தலைவனாகிய இராமனுக்குச் சூட்டுவேன். இதைத் தடுக்க எவர்வரினும் வருக." என்று முழக்கம் செய்து கொண்டு தெருவிலே வந்தான் இலக்குமணன்,

* *

போரில் வந்தோரை எல்லாம்- என்னை எதிர்த்துப் போரிட வந்தவர்களை எல்லாம்; புவிப் பாரம் கெட அவிப்பானும்- பூமி தேவியின் பாரம் நீங்கும்படியாக அவித்து; அவர் ஆக்கையை- அங்ஙனம் அழித்த அவர் தம் உடலை; அண்டம் முற்ற- உலகம் முழுவதும்; குவிப்பானும்- குவிப்பவனும்; என் கோவின்- எனது ஒரே தலைவனாகிய இராமனை; கொற்ற மௌலி- வெற்றித் திருமுடி; கவிப்பானும்- சூடுபவனும்; ஆக- உறுதி கொண்டு; நின்றேன்- இது காக்குநர் காமின் என்றான்- இதனைத் தடுக்கும் வலியுடையார் தடுப்பீர் என்றான்.

விண்ணாட்டவர் மண்ணவர்
விஞ்சையர் நாகர் மற்றும்

எண் நாட்டவர் யாவரும்
நிற்க ஓர் மூவர் ஆகி
மண் நாட்டுநர் காட்டுநர்
வீட்டுநர் வந்தபோதும்
பெண் நாட்டம் ஒட்டேன் இனிப்
பேருலகத்துள் என்னா

''கைகேயிக்கு ஆதரவாக தேவரே வந்தாலும் சரி; மானுடரே வந்தாலும் சரி; நாகர் வந்தாலும் சரி; வித்தியாதரர் வந்தாலும் சரி; படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில் செய்யும் அந்த மும்மூர்த்திகளே வந்தாலும் சரி, இனி இந்தப் பெண்மணியின் சதி நிறைவேற விடமாட்டேன்!'' என்று முழங்கினான்.

★ ★

(பின்னும் இலக்குமணன்) விண் நாட்டவர்- தேவரும்; மண்ணவர்; பூமியில் உள்ளவரும்; விஞ்சையர்- வித்யாதரரும்; நாகர்- பாதாள உலகத்தவரும்; மற்றும் எண் நாட்டவரும்- இன்னும் எண்ணத்தக்க பலவாகிய நாட்டில் உள்ளவர்; யாவரும்- எல்லோரும்; நிற்க- வந்து நிற்கட்டும்; மண் நாட்டுநர்- உலகை படைப்பவரும்; காட்டுநர்- காப்பவர்; வீட்டுநர்- அழிப்பவரும்; (ஆகிய) ஓர் மூவர்- ஒப்பற்ற மும்மூர்த்திகளும்; வந்த போதும்- வந்து எதிர்த்த போதிலும்; இனி- இனிமேல்; இப்பேருலகத்துள்- இப்பெரிய உலகத்திலே; பெண் நாட்டம்- பெண்ணாகிய கைகேயி தன் நோக்கத்துக்கு; ஒட்டேன்- இடம் கொடேன்.

சிங்கக் குருளைக்கு இடு
தீஞ்சுவை ஊனை, நாயின்
வெங்கண் சிறு குட்டனை
ஊட்ட விரும்பினாளால்

நங்கைக்கு அறிவின் திறம்
நன்று இது! நன்று இது! என்னாக்
கங்கைக்கு இறைவன்
கடகக்கை புடைத்து நக்கான்.

சிங்கக் குட்டிக்கு வைக்க வேண்டிய நல்ல ருசி மிகு மாமிசத்தை நாய்க்குட்டிக்கு ஊட்ட விரும்பினாள் இந்த கைகேயி; ''என்னே இவள் அறிவீனம்! என்னே இவள் அறிவீனம்!'' என்று கூறி கை கொட்டிச் சிரித்தான் இலக்குவன்.

★ ★

சிங்கக் குருளைக்கு இடு தீஞ்சுவை ஊனை- சிங்கக் குட்டிக்கு இடுதற்கு உரிய நல்ல சுவையுடைய ஊனை; வெங்கண் சிறு குட்டனை ஊட்ட விரும்பினாளால்- வெம்மையான சிறு கண்களை உடைய இளங்குட்டிக்கு ஊட்ட விரும்பினாள்; நங்கைக்கு- கைகேயியின்; அறிவின் திறம்- அறிவின் திறமை; நன்று இது- இது மிக நன்றாயிருக்கிறதே! என்னா- என்று கூறி; கங்கைக்கு இறைவன்- கங்கை கொண்டு வந்த பகீரதன் வழித்தோன்றலாகிய லட்சுமணன்; கடகக்கை புடைத்து- வீர கங்கணம் அணிந்த தன் கைகளைக் கொட்டி; நக்கான்- பின்வருமாறு கூறினான்.

''ஆகாதது அன்றால் உனக்கு
அவ்வனம் இவ் அயோத்தி
மாகாதல் ராமன் நம் மன்னவன்
வையம் ஈந்தும்
போகா உயிர் தாயர் நம் பூங்குழல்
சீதை என்றே
ஏகாய் இனி; இவ்வயின் நிற்றலும்
ஏதம்'' என்றாள்.

''இலட்சுமணா! இங்கே வா! இராமன் செல்கிற அந்த வனம் உனக்கு ஆகாதது அன்று. உனக்கும் அதுவே யாகும். இராமன் செல்கிற அந்த வனமே உனது அயோத்தி. ''இராமனே நம் தசரத மன்னன். சீதையே நம் தாய்'' என்று கருதிய வண்ணம் செல்வாய். புறப்படு. இனி இங்கு நிற்பதும் தவறு'' என்றாள் சுமித்திரை தன் மைந்தன் இலக்குவனை நோக்கி.

★ ★

உனக்கு ஆகாதது அன்று- இராமன் செல்கின்ற வனம் உனக்கு ஆகாதது அன்று (ஆனதே) அவ்வனம் இவ்வயோத்தி - இராமன் செல்கின்ற அவ்வனமே உனது அயோத்தியாகும்; மா காதல் இராமன்- உன்னிடம் மிக்க அன்புடைய இராமன்; நம் மன்னவன்- நம் தசரத மன்னன் ஆவான்; நம் பூங்குழல் சீதை- பூ அணிந்த கூந்தலை உடைய நம் சீதையே நம்தாய்; என்றே- என்று கருதிய வண்ணம்; ஏகாய் புறப்பட்டுச்செல்; இவ்வயின் நிற்றலும் ஏதம்- இனி இங்கே நிற்பதும் தவறு.

பின்னும் பகர்வாள்; 'மகனே! இவன்
பின் செல்'; தம்பி
என்னும்படி அன்று; அடியாரினில்
ஏவல் செய்தி
மன்னும் நகர்க்கே இவன் வந்திடில்
வா; அது இன்றேல்
முன்னம் முடி; என்றனள்; பால்
முலை சோர நின்றாள்.

மேலும் அவள் சொல்கிறாள்; 'மகனே! இவன் பின் செல். எப்படி? தம்பி எனும் முறை பற்றியன்று. இராமனுக்கு அடியார் என்ற முறையில் ஏவல் செய்.

இராமன் மீண்டும் இந்நகருக்கு வந்தால் அவனுடன் நீயும் வா. அவன் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் அந்தச் செய்தி கொண்டு நீ மட்டும் வராதே. அவனுக்கு முன் நீ உயிர் விடு.''

அவளுடைய தனங்கள் பால் சொரிந்தன. எதனால்? மகன் மீதுள்ள தாயன்பினால்.

★ ★

பின்னும்- மீண்டும்; பகர்வாள்- சொல்வாள்; மகனே- இவன் பின் செல்- இராமனைத் தொடர்ந்து செல்வாயாக; தம்பி எனும்படி அன்று- தம்பி என்கிற முறையில் அன்று; அடியாரினில் ஏவல் செய்தி- அடிமையைப் போல ஏவிய செயல்களைச் செய்வாய்; இவன்- இந்த இராமன்; மன்னும் நகர்க்கே வந்திடில் வா- வளம் நிலைத்த இந்த அயோத்திக்குத் திரும்பி வந்தால் வா; இன்றேல்- அவ்விதம் இல்லையேல்; முன்னம் முடி- அவனுக்கு முன்னால் நீ உன் உயிரை விடு; என்றாள்- என்று சொன்னாள்; பால் முலை சோர நின்றாள்- மார்பிலிருந்து பால் சொரிய நின்றவளாகிய சுமித்திரை.

கிள்ளையொடு பூவை
அழுத; கிளர் மாடத்து
உள் உறையும் பூசை அழுத;
உரு அறியாப்
பிள்ளை அழுத; பெரியோரை
என் சொல்ல
வள்ளல் வனம் புகுவான் என்று
உரைத்த மாற்றத்தால்

இராமன் காடு செல்வது கேட்டுக் கிளிகள் அழுதன; நாகணவாய்ப் பறவைகள் அழுதன; உயர் மாளிகைகளில்

இருக்கும் பூனைகள் அழுதன; இராமன் உருவத்தைக் கண்டிராத சிறு பிள்ளைகள் அழுதன; அவ்விதமிருக்க இராமனை நன்கு அறிந்த பெரியவர் பற்றி என் சொல்ல?

★ ★

வள்ளல்- வள்ளலாகிய இராமன்; வனம் புகுவான்- காட்டிற்குச் செல்வான்; என்று உரைத்த மாற்றத்தால்- என்று சொல்லக் கேட்ட அக்கணமே; கிள்ளையோடு பூவை அழுத- கிளிகளும் நாகணவாய் பறவைகளும் புலம்பின; கிளர் மாடத்துள் உறையும்- விளங்குகின்ற வீடுகளில் வசிக்கின்ற பூசை- பூனை; அழுத- அழுதன

உரு அறியாப் பிள்ளை அழுத- இராமன் உருவத்தை அறியாத குழந்தைகள் அழுதன; (எனில்) பெரியோரை என் சொல- இராமனை நன்கு அறிந்த பெரியோரைப் பற்றி என்ன சொல்வது?

ஆவும் அழுத; அதன் கன்று அழுத
அன்று அலர்ந்த
பூவும் அழுத; புனல் புள் அழுத
கள் ஒழுகும்
காவும் அழுத; களிறு அழுத
கால் வயப் போர்
மாவும் அழுதன; அம் மன்னவனை
மானவே.

பசுக்கள் அழுதன; கன்றுகள் கதறின; அன்று அலர்ந்த மலர்கள் கண்ணீர் வடித்தன; நீர் நிலைகளில் உள்ள பறவைகள் அழுதன; தேன் சொரியும் மலர்ச் சோலைகள் அழுதன; யானைகள் அழுதன; காலில் வலுவுடைய

போர்க் குதிரைகளும் அழுதன. எவர் போல்? தசரத மன்னன் போல.

★ ★

அம்மன்னவனைமான- இராமனுடைய பிரிவு பொறுக்கமாட்டாமல் வருந்தும் தசரத சக்கரவர்த்தியைப் போலவே; ஆவும் அழுத- பசுவும் அழுதன; அதன் கன்று அழுத- அப்பசுக்களின் கன்றுகளும் அழுதன; அன்று அலர்ந்த பூவும் அழுத- அன்று மலர்ந்த மலர்களும் அழுதன; புனல் புள் அழுத- நீர் வாழ் பறவைகளும் அழுதன. தேன் ஒழுகும் கரவும் அழுத- தேன் சொரியும் சோலைகளும் அழுதன; களிறு அழுத- யானைகள் அழுதன; கால் வயப் போர் மாவும் அழுதன- தேரில் பூட்டப்படும் வலிமை பொருந்திய போர்க் குதிரைகளும் அழுதன.

வெய்யோன் ஒளி தன் மேனியில்
விரி சோதியில் மறையப்
பொய்யோ எனும் இடையாளொடும்
இளையானொடும் போனான்;
மையோ? மரகதமோ? மறிகடலோ?
மழை முகிலோ?
ஐயோ இவன் வடிவு என்பது ஓர்
அழியா அழகு உடையான்.

'அஞ்சனமோ! மரகத மணியோ! அலை புரண்டு வரும் கடலோ! மழை பொழிய எழுந்த மேகமோ!' என்று சொல்லத் தக்க ஒப்பற்ற அழியாத அழகுடையவனாகிய இராமன் தன் திருமேனியினின்று பரவி எழும் பசிய ஒளியினால் சூரியனுடைய செவ்வொளி மறையும்படி, உளதோ இலதோ என்று ஐயுறத்தக்க இடையுடைய

சீதையோடும், இளையவனாகிய இலட்சுமணனோடும் போனான். அந்தோ! பரிதாபம்!.

★ ★

இவன் வடிவு- இவனது திருமேனியின் நிறம்; மையோ- அஞ்சனமோ; மரகதமோ- மரகத ரத்தினமோ; மறி கடலோ- புரண்டு அலை வீசும் கடலோ; மழை முகிலோ- மழை பெய்யும் நிலையில் உள்ள கார் மேகமோ; என்பது- என்று சொல்லத்தக்க; அழியா- என்றுமே அழியாத; ஓர் ஒப்பற்ற அழகுடையான்- அழகுபடைத்த இராமன்; வெய்யோன் ஒளி- சூரியனின் ஒளி; தன் மேனியின் விரி சோதியின் மறைய- தன் மேனியினின்று வெளிப்பட்டு பரவுகிற ஒளிக்குள் புகுந்திட; பொய்யோ- இல்லை என்று சொல்லும் படியான; இடையாளோடும்- இடைக் கொண்ட சீதையுடனும்; இளையானோடும்- இலக்குமண னுடனும்; போனான் சென்றான்.

மூவரும் கங்கைக் கரையை அடைந்தனர். பொழுது போயிற்று. இருள் வந்தது. புற்களைக் கொண்டு படுக்கை ஒன்று செய்து கொடுத்தான் இலட்சுமணன்.

சிருங்கிபேரம் என்ற ஊரைச் சேர்ந்தவன் ஒருவன். அவன் பெயர் குகன்; வேடர் குலத் தலைவன். கங்கையின் இரு கரையும் சொந்தமாக உடையவன். ஏராளமான ஓடங்களை உடையவன். அவன் வந்து இராமனை வணங்கினான்.

துடிபியின் குழாத்தில் சுற்றும்
சுற்றத்தன்; தொடுத்த வில்லன்;
வெம்பி வெந்து அழியா நின்ற
நெஞ்சினன்; விழித்த கண்ணன்;

தம்பி நின்றானை நோக்கித்
தலைமகன் தனிமை நோக்கி
அம்பியின் தலைவன் கண்ணீர்
அருவிசோர் குன்றில் நின்றான்.

ஓடங்கள் வைத்திருக்கும் தலைவனாகிய குகன் எப்படிப்பட்டவன்? யானைக் கூட்டங்கள் சுற்றிக் கொண்டு இருப்பன போல் சுற்றுகின்ற இனத்தாருடையவன்; நாணேற்றிய வில்லினை உடையவன; அந்த வில்லினைக் கையில் ஏந்தி இரவு முழுவதும் உறக்கம் கொள்ளாமல் காவல் புரிகிறான்.

இராமன் புல் தரையில் படுத்திருப்பதைப் பார்க்கிறான்; அருமை தம்பியாகிய இலட்சுமணன் தன்னந் தனியனாக நின்றுக் கொண்டு காவல் புரிவதைக் காண்கிறான்.

கண்ணீர் அருவிபோல் பெருக்கெடுத்து ஓட நிற்கிறான்.

அம்பியின் தலைவன்- ஓடங்கள் வைத்திருக்கும் தலைவனாகிய குகன்; தும்பியின் குழாத்தில் சுற்றும் சுற்றத்தன்- யானைக் கூட்டம்போல் சுற்றிக் கொண்டுள்ள இனத்தார் உடையவன்; தொடுத்த வில்லன்- நாணேற்றிய வில்லினை உடையவன்; வெம்பி வெந்து அழியா நெஞ்சினன்- வருந்திக் கொதித்து நிலை குலையும் மனம் உடையவன்; விழித்த கண்ணன்- உறக்கமும் கண் கொட்டுதலும் இன்றி விழித்திருக்கும் கண்களை உடையவனாகி; தம்பி நின்றானை நோக்கி- நிற்கின்ற தம்பியைப் பார்த்து; தலைமகன் தனிமை நோக்கி- இராமன் தரையிலே படுத்திருக்கும் தன்மையையும் பார்த்துக் கண்ணீர் சொரிந்தான்.

அதிகாலையிலே எழுந்திருந்து, கங்கையைக் கடப்பதற்கு ஓடம் கொண்டு வரச் சொல்லி, இராமன், இலட்சுமணன், சீதை ஆகிய மூவரும் அதில் ஏறிக் கொண்டார்கள். ஓடத்தை மறு கரைக்குக் கொண்டு சேர்த்தான் குகன். கரை சேர்ந்தவுடனே இராமன் குகனைப் பார்த்துக் கேட்டான்.

தேன் உள; தினை உண்டு
ஆல் தேவரும் நுகர்வதற்கு ஆம்
ஊன் உள; துணை நாயேம்
உயிர் உள விளையாடக்
கான் உள புனலாடக்
கங்கையும் உளது அன்று
நான் உளதனையும் நீ இனிது
இரு; நட எம்பால்

இங்கே தேன் இருக்கிறது; தினை இருக்கிறது. தேவர்களும் விரும்பி உண்ணத் தக்க ஊன் உள்ளது. நாய்களாகிய நாங்கள் துணைக்கு இருக்கிறோம். விளையாடுவதற்குப் பொழில்கள் இருக்கின்றன. நீராடுவதற்குக் கங்கையும் இருக்கிறது. என் உயிர் உள்ள அளவும் நீ இங்கேயே இரு. "வா! என் பின் நட" என்று வேண்டினான் குகன்.

★ ★

தேன் உள- எம்மிடம் தேன் இருக்கிறது; தினை உண்டு- தினையும் இருக்கிறது; தேவரும் நுகர்தற்கு ஆம் ஊன் உள- தேவர்களும் உண்ணத்தக்க சுவையுள்ள மாமிசம் இருக்கிறது; துணை- உமக்குப் பக்கபலமாக; நாயேம் உயிர் உள- நாயாகிய இந்த ஜீவன்கள் உள;

விளையாட- பொழுது போக்கி விளையாடுவதற்கு; கான் உள- காடுகள் உள்ளன; புனல் ஆட- நீராடுவதற்கு; கங்கையும் உள- கங்கா நதியும் இருக்கிறது; நான் உளதனையும்- என் மூச்சுள்ள வரைக்கும் நீ இனிது இரு- நீ எங்களிடத்தில் சுகமாக இருப்பாயாக; எம் பால்- எங்கள் இடத்துக்கு; நட- எழுந்தருள்வாயாக.

அத்திசை உற்று ஐயன்
அன்பனை முகம் நோக்கி
''சித்திர கூடத்தில் செல்
நெறி பகர்'' என்னப்
பத்தியின் உயிர் ஈயும்
பரிவினன் அடி தாழா
''உத்தம அடி நாயேன்
ஓதுவது உளது'' என்றான்.

கங்கையைக் கடந்து கரை சேர்ந்தார்கள். சேர்ந்த பிறகு சித்திரகூடம் செல்கிற வழியைச் சொல் என்று கேட்கிறான் இராமன். யாரைப் பார்த்து? குகனைப் பார்த்து.

இராமனிடத்தில் ஆழ்ந்த பக்தி கொண்டவனும் அந்த பக்தியினாலே தன் உயிரையும் கொடுக்கக்கூடியவனாகிய குகன், பின் என்ன செய்தான்?

இராமனை அடிபணிந்து நாயேன் சொல்லிக் கொள்ள எண்ணியிருக்கும் விண்ணப்பம் ஒன்று உள்ளது என்கிறான்.

★ ★

ஐயன்– இராமன்; அத்திசை உற்று- கங்கையின் அக் கரை அடைந்து; அன்பனை முகம் நோக்கி- தன் பால்

அன்பு கொண்ட குகனைப் பார்த்து; சித்திர கூடத்தில் செல் நெறி பகர் என- சித்திர கூட மலை செல்லும் வழி சொல் என; பக்தியின் உயிர் ஈயும் பரிவினன்- பக்தியுடன் உயிரும் தரவல்ல அன்புடைய அக்குகன்; அடி தாழா- இராமனது திருவடிகளில் வணங்கி; உத்தம- மேலோய்! அடி நாயேன்- அடியேனும் நாய் போல் கடமைப்பட்டவனுமாகிய நான்; ஓதுவது உனது- தேவரீரிடத்துக் கூற வேண்டுவது உள்ளது! என்றான்.

தோல் உள; துகில் போலும்
சுவை உள தொடர் மஞ்சம்
போல் உள பரண்; வைகும்
புரை உள; கடிது ஓடும்
கால் உள; சிலை பூணும்
கை உள; கலி வானின்
மேல் உள பொருளேனும்
விரைவொடு கொணர்வேமால்

உடுத்திக் கொள்வதற்குரிய நூலாடைபோல் மெல்லிய தோல் உளது. இன்பந்தரும் மஞ்சம் போன்ற பரண் உளது. இருப்பதற்குக் குடில்கள் உள்ளன. வேகமாக ஓடக்கூடிய வலிவுள்ள கால்கள் உள்ளன. விண்ணிலே உள்ள பொருளாயினும் விரைவிலேயே கொண்டு வந்து தருவோம்.

எனவே தன் இடத்திலேயே இராமன் தங்கி இருக்க வேண்டினான் குகன்.

★ ★

துகில் போலும்- (உடுத்திக் கொள்வதற்கு) மெல்லிய பட்டு ஆடை போன்ற; தோல் உள- தோல்கள் உள்ளன;

சுவை உள்ள- இனிய தின்பண்டங்கள் பல உள; (தூங்கு வதற்கு) தொடர் மஞ்சம் போல் பரண் உள- சங்கிலியால் பிணைத்துத் தொங்கவிடப்பட்ட ஊஞ்சல் போன்ற பரண்கள் உள்ளன; வைக- இருப்பதற்கு; புரை உள- குடிசைகள் உள்ளன; (அன்றியும்) கடிது ஓடும் கால்கள் உள- விரைந்து ஓடும் சக்தி வாய்ந்த கால்களும் உள்ளன; சிலை பூணும் கை உள- வில் பிடித்த கைகளும் உள; கலிவானின்- (நீ விரும்புவது) ஓசை பெற்ற வானத்தின் மேல் உள்ள பொருளேனும்; விரைவொடு கொணர்வே மால் கொண்டு வருவேன்- விரைந்து கொண்டு வருவேன்.

நெறி இடு நெறி வல்லேன்;
நேடினேன் வழுவாமல்
நறியன கனி காயும் நறவு
இவை தர வல்லேன்
உறைவிடம் அமைவிப்பேன்
ஒரு நொடி வரை உம்மைப்
பிறிகிலென் உடன் ஏகப்
பெருகுவன் எனில் நாயேன்.

''நாயேனாகிய நான் உன்னுடன் வரப் பெறுவனேல் பெரு வழியும் சிறு வழியும் அறிந்து சொல்வேன். நல்ல காயும் கனியும் கொண்டு தருவேன். தங்குமிடம் நன்கு அமைபபேன். ஒரு நொடிப் பொழுது உம்மைப் பிரியேன்.

ஆகவே என்னையும் உடன் அழைத்து செல்க'' என்று வேண்டினான்.

★ ★

நாயேன்- நாய் போல் கடைப் பட்டவனாகிய நான்; உடன் ஏகப் பெருவன் எனில்- உன்னுடன் வரும் பேறு

பெறுவனாகில்; நெறி இடு நெறி வல்லேன் (செல்லுவதற்கு அரிய வழியில்) இனிது செல்லுமாறு வழி உண்டாக்கும் திறம் வல்லவன்; நறியன- மிகச் சிறந்தனவாகிய; கனி காயும்- காய் கனிகளும்; நறவு- தேன்; இவை- ஆகிய இவைகளை; நேடினேன் வழுவாமல்- தேடி தவறாமல் தர வல்லேன்; உறைவிடம் அமைப்பேன்- வசிப்பதற்கு ஏற்றபடி உறைவிடம் அமைத்துத் தர வல்லேன்; ஒரு நொடிவன- ஒரு கணமேனும்; உம்மை- உங்களை; பிறிகிலென்- பிரிந்து வாழப் பெறேன்.

கல்லுவென் மலை மேலும்
கவலையின் முதல் யாவும்
செல்லுவென் நெறி தூரம்
செறி புனல் தர வல்லேன்
வில்லினம் உளென் ஒன்றும்
வெருவலன் இரு போதும்
மல்லினும் உயிர் தோளாய்
மலர் அடி பிரியேனால்

''குன்றுகளிலே உள்ள கவலைக் கிழங்குகளைத் தோண்டி எடுப்பேன். நீண்ட வழியாயினும் செல்வேன். மலைமேல் உள்ள தண்ணீர் கொண்டு வருவேன். இரவிலும் சரி பகலினும் சரி, அஞ்சேன். விற்பிடித்த கூட்டம் ஒன்று என் பின்னே உளது எனவே நானும் உன்னுடன் வருவேன். உன்னைப் பிரியேன்.''

கவலையின் முதல் யாவும் கவலைக்கிழங்கு முதலிய எவ்வகைக் கிழங்கும்; மலை மேலும் கல்லுவேன்- மலைமேலும் தோண்டி எடுத்துத் தருவேன்; நெறி தூரம் செல்லுவேன்- எவ்வளவு தூரமாயினும் சென்று; செறி புனல் தர வல்லேன்- (உயிர் தங்குவதற்குரிய) தண்ணீர் கொண்டு வந்து தர வல்லேன்; வில் இனம்

உளேன்- வில் வல்ல கூட்டத்தினர் உடையேன்; ஒன்றும் வெருவலன்— எதற்கும் அஞ்ச மாட்டேன்; மல்லினும் உயர் தோளாய்— மற்போர் புரிவதினும் மேம்பட்ட தோளினை உடையவனே; மலர் அடி பிரியேனால்— மலர் அடி ஒரு போதும் பிரியேன்.

இவ்வாறு உளம் கரைந்து குகன் கூறிய மொழி கேட்டான் இராமன். குகன் பால் அன்பு கொண்டான்.

''என் மனைவியான இந்தச் சீதை உன் தோழி; என் தம்பியான இந்த இலக்குமணன் உன் தம்பி; நீ என் உயிர் தோழன்; இது வரை நாங்கள் நால்வரே உடன் பிறந்தவராயிருந்தோம். இப்பொழுது உன்னுடன் ஐவரானோம்; உன் சுற்றம் என் சுற்றம். அவர்கள் உன்னைப் பிரிந்து வருந்தலாகாது; அவர்களைப் பாது காக்க யாருளர்? நான் அயோத்தி நீங்கி வந்து விட்டேன். அங்கு உள்ளவரைப் பாதுகாக்க பரதன் இருக்கிறான் நீ இங்கே இரு; வடக்கு நோக்கி வரும் போது உன்னிடம் வருவேன்'', என்று கூறி குகனை நிற்கச் செய்தான் இராமன்.

தீயன சுவை யாவும்
திசை செல நூறித்
தூயன உறை கானம்
துருவினன் வர வல்லேன்
மேயின பொருள் நாடித்
தருகுவென் வினை மற்றும்
எயின செய வல்லேன்
இருளினும் நெறி செல்வேன்.

''தீய விலங்குகளை எல்லாம் திசை தொறும் விரட்டி நல்ல விலங்குகள் உள்ள காடு எது என்று அறிந்து வந்து

சொல்வேன். நீங்கள் விரும்பும் பொருள் தேடிக் கொண்டு வந்து தருவேன். இட்ட கட்டளைகளை எல்லாம் செய்வேன். இருளாயிருந்தாலும் அஞ்சாது செல்வேன்.

★ ★

தீயன- தீயனவாகிய; சுவையாவும்- சுவையுள்ள; புலி முதலியவற்றை எல்லாம்; திசை செல நூறி- நீங்கள் வசிக்கும் இடத்தைச் சுற்றி இல்லாது பிற திசைகளுக்கு ஓட அழித்து; தூயன- பரிசுத்தமான மான் போன்ற, பிராணிகள்; உறை- வாழ்கின்ற; கானம்- காட்டினி டத்தை; துருவினன்- ஆராய்ந்து கண்டுபிடித்து; வர வல்லேன்- தர வல்லேன்; மேயின பொருள்- நீங்கள் விரும்பிய பொருளை; நாடித்தர வல்லேன்- தேடிக் கண்டு பிடித்துக் கொண்டு வருவேன்; ஏயின் வினை மற்றும்- நீங்கள் கட்டளையிட்ட எந்த செயலையும்; செய வல்லேன்- செய்து முடிக்கும் வல்லமை உடையேன்; இருளினும் நெறி செல்வேன்- இரவிலும் வழிச் செல்ல வல்லேன்.

இவ்வாறு குகன் சொல்லவே, அவனுக்கு சமாதானம் சொல்லி அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டு, சீதை இலட்சுமணன் ஆகியோருடன் சித்திர கூட பர்வதம் சென்று இருந்தான் இராமன்.

அயோத்தியில் என்ன நடந்தது? இராமன் காடு சென்றான் என்று கேட்டு உயிர் விட்டான் தசரத மன்னன்.

அவனுடைய உடலை எடுத்து பத்திரம் செய்து விட்டு பரதனுக்குச் சொல்லியனுப்பினார் மந்திரி. தூதுவர் களும் விரைந்து சத்துருக்னன் ஆகிய இருவரையும் அழைத்து வந்தனர்.

பரதன் வந்தான். தன் தாய் கைகேயி இருந்த அரண்மனைக்குச் சென்றான்.

''தந்தை எங்கே? அண்ணன் எங்கே?'' என்று கேட்டான்.

''உன் தந்தை இறந்தார். இராமன் வனம் சென்றான்,'' என்றாள் கைகேயி.

'வனத்தினன்' என்று அவள்
இசைத்த மாற்றத்தை
நினைத்தனன் இருந்தனன்
நெருப்பு உண்டான் என
'வினைத்திறம் யாது இனி
விளைப்பது? இன்னமும்
எனைத்துள கேட்பன
துன்பம் யான்'? என்றான்.

இராமன் காடு சென்றான் என்பது கேட்டான் பரதன். தீ உண்டவன் போல் துடித்தான். ''இன்னும் எத்தனை கெடுதல்கள் உள்ளன? கேட்க வேண்டிய துயரச் செய்திகள் இன்னும் எத்தனை?'' என்று அலமந்தான்.

★ ★

வனத்தினன்- இராமன் காடு சென்றான்; என்று- என்று; அவள் இசைத்த- அந்தக் கைகேயி சொன்ன; மாற்றத்தை-சொல்லை நினைத்தனன்- எண்ணி-எண்ணிப் பார்த்து; நெருப்பு உண்டான் என- நெருப்பை உட்கொண்டவன் போல; இருந்தனன்- மிக்க பெரும் துன்பத்துடன் இருந்து; வினைத்திறம் யாது?- இனியும் விளையப் போகும் தீவினை யாது உண்டோ?- இன்னமும்

எனைத்துள கேட்பன துன்பம் யான்- நான் இன்னும் கேட்க வேண்டிய துயரச் செய்திகள் எத்தனை பாக்கி உள்ளன என்றான்.

துடித்தன கபோலங்கள்;
சுற்றும் தீச்சுடர்
பொடித்தன மயிர்த்தொளை
புகையும் போர்த்தது
மடித்தது வாய்; நெடு மழைக்
கை மண்பக
அடித்தன; ஒன்றொடு ஒன்று
அசனி அஞ்சவே

கன்னங்கள் துடித்தன. மயிர்த் துவாரங்கள் தீயுமிழ்ந்தன; வாய் மடித்தது. கைகள் ஒன்றை ஒன்று அடித்துக் கொண்டன.

★ ★

கபோலங்கள்- கன்னங்கள்; துடித்தன- துடித்தன; மயிர்த் தொளை- மயிர்த் துவாரங்கள்; சுற்றும்- நாற்புறமும்; தீச்சுடர்- அனல் கொழுந்தை; பொடித்தன- அரும்பின; புகையும் போர்த்தது- புகையும் நாலாபக்கமும் பரவியது; வாய் மடித்தது- வாய் மடித்துக் கொண்டது; மழை நெடுகை- மேகம் போன்ற வன்மைக் குணம் கொண்ட நீண்ட கைகள்; அசனி அஞ்ச- இடியும் அஞ்சும்படி; மண்பக- பூமி பிளக்கும்படி (பேரொலி செய்து) ஒன்றோடு ஒன்று; அடித்தன- ஒன்றை ஒன்று அடித்துக் கொண்டன.

சூடின மலர்க்கரம்
சொல்லின் முன் செவி

கூடின; புருவங்கள் குதித்துக்
　　கூத்து நின்று
ஆடின; உயிர்ப்பினோடு
　　அழல் கொழுந்துகள்
ஓடின; உமிழ்ந்தன உதிரம்
　　கண்களே.

கைகேயி சொன்ன அந்தச் சுடு சொற்கள் காதிலே விழுவதற்கு முன் அவனுடைய தாமரை மலர் போன்ற கைகள் காதுகளை மூடிக் கொண்டன; புருவங்கள் துடித்தன; கண்கள் சிவந்தன- அனல் கக்கின.

✶ ✶

சூடின மலர்க் கரம்- வணங்கும் போது குவிந்திருந்த தாமரை மலர் போன்ற பரதனது கைகள்; சொல்லின் முன்- கைகேயி சொன்ன அச்சுடு சொற்கள் காதிலே விழு முன்; செவி கூடின- காதைப் பொத்தின; புருவங்கள் குதித்து நின்று கூத்தாடின- புருவங்கள் நெறிப்புற்று மேலும் கீழும் சென்றன; உயிர்ப்பினோடு அழல் கொழுந் துகள் ஓடின- தோன்றின பெருமூச்சுடனே நெருப்புச் சுவாலைகள் வெளி வந்தன; கண்கள் உதிரம் உமிழ்ந்தன- அவனது கண்கள் ரத்தம் கக்கின.

ஏங்கினன் விம்மலோடு
　　இருந்த ஏந்தல் அப்
பூங்கழல் காவலன்
　　வனத்துப் போயது
தீங்கு இழைத்ததினோ?
　　தெய்வம் சீறியோ?
ஓங்கிய விதியினோ?
　　யாதினோ? எனா

விம்மி விம்மி அழுது கொண்டிருந்தான். அந்த விம்மலோடு சொன்னான் "இராமன் வனம் போனது எதனால்? ஏதாவது தீங்கு செய்தானா? தெய்வத்தை இகழந்தானா? விதியினாலா? எதனால்?" என்று கேட்டான் பரதன்.

★ ★

ஏங்கினன்- ஏக்கம் கொண்டவனாய்; விம்மலோடு இருந்த ஏந்தல்- மன வருத்தத்தோடு இருந்த புருஷோத்தம னாகிய பரதன்; அப்பூங்கழல் காலவன்- வீரக் கழல் அணிந்த மலர் போலும் திருவடியுடைய அந்த இராமன் வனத்துப் போயது- காட்டுக்குப் போனது; தீங்கு இழைத்ததினோ- தீய செயல் செய்ததனாலோ?; தெய்வம் சீறியோ- தெய்வம் கோபித்ததாலோ?; ஓங்கிய விதியினோ?- யாவற்றினும் மேம்பட்ட ஊழ்வினை யினாலோ? யாதினோ?- எதனால்; எனா- என்று வினவி.

"குருக்களை இகழ்தலின்
அன்று; குன்றிய
செருக்கினால் அன்று; ஒரு
தெய்வத்தாலும் அன்று
அருக்கனே அனைய அவ்
அரசர் கோமகன்
இருக்கவே வனத்து அவன்
ஏகினான்" என்றாள்.

இராமன் வனம் சென்றது பெரியோர்களை இகழ்ந்த தால் அன்று; கர்வத்தால் அன்று; தெய்வத்தாலும் அன்று.

அரசன் உயிருடன் இருந்த போதே அவன் கான் சென்றான் என்றாள்.

★ ★

*(இராமன் வனம் சென்றது)*

குருக்களை இகழ்தலின் அன்று- பெரியோர்களைப் பழித்த குற்றத்தினால் அன்று; குன்றிய செருக்கினால் அன்று- கர்வத்தின் உயர்வால் அன்று; ஒரு தெய்வத் தாலும் அன்று- ஒரு தெய்வம் சீறியதாலும் அன்று; அருக்கனே அனைய அரசர் கோமகன்- சூரியனை போன்ற தசரத சக்கரவர்த்தி; இருக்கவே- உயிருடன் இருக்கவே; அவன் வனத்து ஏகினான்- அவன் காட்டுக்குப் போனான்'' என்றாள்.

''குற்றம் ஒன்றும் இல்லையேல்
கொதித்து வேறுளோர்
செற்றதும் இல்லையேல்
தெய்வத்தால் அன்றேல்
பெற்றவன் இருக்கவே
பிள்ளை கான் புக
உற்றது என்? பின் அவன்
உலந்தது என்?'' என்றான்.

''குற்றம் ஏதும் இல்லை என்றால்; கோபித்தவர் எவரும் இல்லை என்றால்; தெய்வம் சீறவில்லை என்றால் பெற்றவன் இருக்கும் போதே பிள்ளை கான் சென்றது ஏன்? அவன் சென்ற பின் தந்தை வான் சென்றது ஏன்?'' என்றான் பரதன்.

★ ★

குற்றம் ஒன்றும் இல்லையேல்- இராமன் செய்த குற்றம் ஒன்றும் இல்லையாகில்; கொதித்து வேறுளோர் செற்றதும் இல்லையேல்- மாற்றார் கொதித்துப் போர் செய்து விரட்டியதும் இல்லையேல்; தெய்வத்தால்

அன்றால்- தெய்வக் குற்றமும் அன்று ஆயின்; பெற்றவன் இருக்கவே- பெற்ற தகப்பன் உயிரோடு இருக்க; பிள்ளை கான் புக உற்றது என்?- பிள்ளை காடு சென்றது எதனால்? பின் அவன் உலந்தது என்- பின்னே அவன் (தசரதன்) உயிர் நீங்கியது எதனால்?'' என்றான்.

''தீயன இராமனே செய்யுமேல் அவை
தாய் சொல் அல்லவோ
தலத்துள்ளோர்க்கு எலாம்
போயது தாதை விண்
புக்க பின்னரோ?
ஆயதன் முன்னரோ
அருளுவீர்'' என்றான்.

அப்படியே இராமன் தீயன செய்திருப்பினும் அதனால் என்ன? தாய் தன் மக்களைக் கோபிப்ப தில்லையா? வருத்தி அடக்குவதில்லையா?

சரி; அவன் வனம் சென்றது மன்னர் இறப்பதன் முன்னரோ? பின்னரோ?

★ ★

தீயன- தீய செயல்களை; இராமனே செய்யுமேல்- இராமனே செல்வானேயானால்; அவை- அச்செயல்கள்- தலத்து உளோர்க்கு எலாம்- இவ்வுலகத்தவர்க்கு எல்லாம்; தாய் சொல் அல்லவோ- தாயின் சொல் அல்லவோ?; போயது- இராமன் வனம் போனது; தாதை- தந்தை யாகிய தசரத சக்ரவர்த்தி; விண் புக்க பின்னரோ ஆயதன் முன்னரோ அருளுவீர்- இறந்ததன் முன்போ அல்லது அதற்குப் பிறகோ சொல்வீர் என்றான்.

''வாக்கினால் வரம் தரக் கொண்டு
மைந்தனைப்
போக்கினேன் வனத்திடைப்
போக்கிப் பார் உனக்கு
ஆக்கினேன், அவன் அது
பொறுக்கலாமையால்
நீக்கினன் தன் உயிர்
நேமி வேந்து'' என்றாள்.

''இரண்டு வரங்கள் தருவதாக வாக்களித்திருந்தார் உன் தந்தை; அந்த வாக்கைக் கொண்டு இரண்டு வரங்களையும் இப்போது பெற்றேன். அவற்றுள் ஒன்றினால் இராமனை வனத்திற்குப் போக்கினேன். மற்றொன்றினால் இந்த அரசை உனது ஆக்கினேன். அது பொறாது அரசன் தன் உயிர் போக்கிக் கொண்டான்'' இவ்வாறு கூறினாள் கைகேயி.

★ ★

வாக்கினால்– மன்னவன் சொன்ன வாக்கினால்; இரண்டு வரம் தர- இரண்டு வரங்கள் தர; கொண்டு- அவற்றைப் பெற்றுக் கொண்டு மைந்தனை வனத்திடைப் போக்கினேன்- இளம் வயதினனாகிய இராமனைக் காட்டுக்கு அனுப்பினேன்; போக்கி- அனுப்பி விட்டு; பார் உனக்கு ஆக்கினேன் - பூமியை உனக்காகவைத்துளேன் ;நேமி வேந்து - ஆக்ஞா சக்கரத்தைஉடைய அந்த வேந்தன்; அது பொறுக்கலாமையால்– மைந்தனைப் பிரிந்த அந்ததுயரம் தாங்க முடியாமல்; நீக்கினன் தன் உயிர்- தன் உயிரை விட்டான்; என்றாள்.

இவ்வாறு மனம் வெம்பி நொந்து கொண்டிருந்த பரதனை நோக்கி மேற்கொண்டு நடக்க வேண்டிய காரியங்களைக் கவனிக்குமாறு வசிஷ்டர் கூறினார்.

மந்திரி சுமந்திரனும் தசரத மன்னனுக்கு வேண்டிய ஈமக் கடன் ஏற்பாடுகளைச் செய்வித்தான்.

பிறகு பரதன் சபை கூட்டி ''நான் அரசனாக முடி தரிக்க மாட்டேன் காடு சென்று ராமனை அழைத்து வருவேன்,'' என்று கூறினான்.

படைகள் புறப்பட்டன. அயோத்தி மக்களும் புறப் பட்டார்கள். எல்லாரையும் அழைத்துக் கொண்டு கானகம் புறப்பட்டான் பரதன்.

எல்லாரும் கங்கைக் கரை அடைந்தார்கள். படை களின் வருகையையும் பரதன் வருகையையும் கேள்வி யுற்றான குகன்.

அஞ்சன வண்ணன் என் ஆருயிர்
நாயகன் ஆளாமே
வஞ்சனையால் அரசு எய்திய
மன்னரும் வந்தாரே!
செஞ்சரம் என்பன தீ
உமிழ்கின்றன செல்லாவோ
உஞ்சு இவர் போய் விடின் 'நாய்
குகன்'' என்று எனை ஓதாரோ

எனது ஆருயிர்த் தலைவன் மைவண்ணன் இராமன் நாடாளாது தடுத்து வஞ்சனை புரிந்து அரசு பெற்ற இந்த மன்னரும் வந்தாரே!

தீ உமிழ்கின்ற அம்புகளை நான் இவர் பால் செலுத்தி னால் அவை இவர் மீது பாயாது போய் விடுமோ?

என்னைக் கடந்து இவர் உயிருடன் போய் விட்டால் நன்றி கெட்ட நாய் குகன் என்று என்னைக் கூற

மாட்டாரோ! என்று குகன் தன் கூட்டத்தாருடன் பேசிக் கொண்டு பரதனின் படைகளை சமாளிப்பதற்கு சித்த மாக நிற்கிறான்.

★ ★

என் ஆருயிர் நாயகன்- எனது ஆருயிர்த் தலைவன்; அஞ்சன வண்ணன்- மை போலும் கரு நிறம் உடைய இராமன்; ஆளாமே- அரசு செய்யாமல்; வஞ்சனையால்- வஞ்சித்து; அரசு எய்திய- ஆட்சியைப பற்றிய மன்னரும்- அரசரும்; வந்தாரே- வந்து விட்டாரே; தீ உமிழ்கின்றன- தீயினைச் சொரிகின்றனவாகிய; செஞ்சரம் என்பன சிவந்த அம்பு என்பன; செல்லாவோ?- இவர் மீது செல்ல மாட்டாவோ? இவர் உஞ்சு போய்விடின- இவர் எனது கணைக்குத் தப்பிப் போய் விட்டால்; நாய் குகன்- நன்றி கெட்ட நாயாகிய குகன்; என்று எனை ஓதாரோ- என்று என்னைச் சொல்ல மாட்டாரோ?

முன்னவன் என்று நினைந்திலன்;
மொய்புலி அன்னான் ஓர்
பின்னவன் நின்றனன் என்றிலன்;
அன்னவை பேசானேல்
என் இவன் என்னை இகழ்ந்தது? இவ்
எல்லை கடந்தன்றோ அன்றோ?
மன்னவர் நெஞ்சினில், வேடர்
விடும் சரம் பாயாவோ?

வனம் புகுந்த இராமன் தன் முன்னவன் என்பதனை எண்ணாமல் படையுடன் வந்திருக்கிறானே!

இராமரின் பின்னவனான இலக்குமணன் இருக்கின் றான் பாயும் புலி போல என்பதும் எண்ணவில்லை.

என்னை இவன் இகழ்ந்தது எவ்வாறு? இந்த எல்லை கடந்த பின்னன்றோ?

மன்னவர் நெஞ்சில் வேடர் விடும் ·அம்பு பாயாதோ?

''பார்க்கிறேன் ஒரு கை'' என்று சவால் விடுத்த வண்ணம் நிற்கிறான் குகன்.

★ ★

இவன்- இப் பரதன்; முன்னவன் என்று நினைத்திலன்- இராமன் தன் அண்ணனாயிற்றே என்று கருதினான் இல்லை; மொய் புலி அன்னான்- வலிமை கொண்ட புலி போன்ற; ஓர் பின்னவன்- ஒப்பற்ற தம்பியாகிய இலக்குமணன்; நின்றான்- உடன் இருக்கின்றான்; என்றிலன்- என்று எண்ணினான் இல்லை; அன்னவை பேசானேல்- அவ்வாறெல்லாம் எண்ணாவிடினும் போகட்டும்; என்னை இகழ்ந்தது ஏன்- இங்கே இருக்கின்ற என்னை ஒரு பொருளாக மதியாமல் இகழ்ச்சியாக நினைத்தெனால்? இவ் எல்லை கடந்தன்றோ?- இவன் வல்லமை எல்லாம் இந்த எனது எல்லையை கடந்தால் அன்றோ நிலை நிற்கும்? வேடர் விடும் சரம்- வேடர் விடுகின்ற அம்பு; மன்னவர் நெஞ்சில் பாயாவோ- அரசர் மார்பில் பாயமாட்டாவோ?

ஆழ நெடுந்திரை ஆறு
கடந்து இவர் போவாரோ?
வேழ நெடும் படை கண்டு
விலங்கிடும் வில் ஆளோ?
தோழமை என்று அவர் சொல்லிய
சொல் ஒரு சொல் அன்றோ?
''ஏழைமை வேடன் இறந்திலன்''
என்று எனை ஏசாரோ?

ஆழம் மிக்கதும், அலை மோதுகின்றதுமான இந்தக் கங்கை ஆறு கடந்து இவர் போய் விடுவாரோ? எப்படிப் போவார் எனது தயவு இல்லாமல்? படகு விட நான் அனுமதி தந்தால் தானே இவர் கங்கையைக் கடத்தல் இயலும்? யானை, குதிரை, தேர் முதலிய படைகளுடன் வந்து விட்டால் விலகி வழி விடுவேனோ?

''நீ என் தோழன்'' என்று அந்த இராமன் கூறிய சொல் ஓர் ஒப்பற்ற சொல் அன்றோ?

இவருக்கு நான் வழி விட்டால் ''ஏழை வேடன் இறந் திலனே! உயிரோடு உள்ளானே! தடுத்து நிறுத்தாமல் வழி விட்டானே என்று எனனை ஏசமாட்டாரோ?''

★ ★

ஆழம்- ஆழமும்; நெடு- நீண்டதும்; திரை அலை மிக்கதும் (ஆகிய) ஆறு கடந்து- இந்த கங்கையைத் தாண்டி; இவர் போவாரோ- இவர் போய் விடுவாரோ? வேழ நெடும் படை- யானைகளை உடைய பெரிய சேனையை; கண்டு- பார்த்து; விலங்கிடும்- அஞ்சி ஒதுங்கிப் போகும்; வில் ஆளோ- வில் வீரனோ? தோழமை- என்று அவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ?- நீ எனது தோழன் என்று அந்த இராமன் சொல்லிய சொல் நன்கு மதிக்கத் தக்க சொல் அன்றோ? ஏழைமை வேடன் இறந் திலன் என்று எனை ஏசாரோ?- எளிய, ஏழையான வேட னாகிய நான் (குகன்) இங்ஙனம் மானங்கெட வாழ்தலை விட இறந்திருக்கலாமே என்று எனை உலகத்தார் பழிக்க மாட்டாரோ?

கங்கை இருகரை உடையான்
கணக்கு இறந்த நாவாயான்
உங்கள் குலத் தனி நாதற்கு
உயிர்த் துணைவன்; உயர் தோளான்

வெம் கரியின் ஏறு அனையான்
வில் பிடித்த வேலையினான்
கொங்கு அலரும் நறும் தண்தார்க்
குகன் என்னும் குறி உடையான்

இப்படியாக குகன் தன் கூட்டத்தினரை எல்லாம் சேர்த்து வைத்துக்கொண்டு யுத்தத்துக்குத் தயாராக நிற்கும்போது அந்தக் கரையில் என்ன நடக்கிறது?

மந்திரியாகிய சுமந்திரன் பரதனிடம் என்ன சொல்கிறான்? யாரைப் பற்றி? குகனைப் பற்றி.

''இதோ நம் எதிரே காணப்படுகிற இவன் குகன் என்ற பெயர் உடையவன்; கங்கையின் இரு கரைகளும் அவனுக்குச் சொந்தம்.

அவனுக்குக் கணக்கற்ற ஓடங்கள் உள்ளன. அவன் இராமனுக்கு உற்ற நண்பன்'' என்கிறான்.

★ ★

கங்கை இரு கரை உடையான்- கங்கா நதியின் இரு கரைகளையும் தனக்கு உரிமையாக உடையவன்; கணக்கு இறந்த நாவாயான்- அளவற்ற படகுகளை உடையவன்; உங்கள் குலத் தனி நாதற்கு- உங்கள் குலத்தில் தோன்றிய ஒப்பற்ற தலைவனாகிய இராமனுக்கு; உயிர்த் துணைவன்- உயிர்.நண்பன்; உயர் தோளான்- உயர்ந்த தோள்களை உடையவன்; வெம் கரியின் ஏறு அனையான்- மதத்தால் வெவ்விய ஆண் யானையை ஒப்பான்; வில் பிடித்த வேலையினான்- வில் ஏந்திய படை கடல் போல உடையவன்; கொங்கு அலரும்- தேன் சொரியும்; நறு- வாசனை வீசும்; தன் தார்- குளிர்ந்த மாலை அணிந்தவன்; குகன் என்னும் குறி உடையான்- குகன் என்னும் பெயர் கொண்டவன்.

வற்கலையின் உடையானை
 மாசு அடைந்த மெய்யானை
நற்கலை இல் மதி என்ன
 நகை இழந்த முகத்தானைக்
கல் கனியக் கனிகின்ற
 துயரானைக் கண்ணுற்றான்
வில் கையினின்று இடை வீழ
 விம்முற்று நின்று ஒழிந்தான்

பரதனைப் பார்க்கிறான் குகன். மரவுரி உடுத்திக் கொண்டு, முகத்திலே வருத்தம் உடையவனாய், புழுதி படிந்த மேனியனாய், கல்லும் கரைந்துருகும்படி துயர் வடிப்பவனாய் நின்ற பரதனைப் பார்க்கிறான்.

இதுவரை அவன் கொண்டிருந்த கருத்து மாறுகிறது.

'ஆகா' தவறு செய்து விட்டேன் என்று நினைக்கிறான். கலங்குகிறான், வில் அவன் கையிலிருந்து நழுவி விழுந்தது; முந்தின உறுதி குலைந்தது.

★ ★

வற்கலையின் உடையானை—மரவுரியை உடுத்தவனை; மாசு அடைந்த மெய்யானை - புழுதி படிந்த உடம்பு உடையவனை; நல்கலை இல் மதி என்ன— அழகிய கலைகள் இல்லாத சந்திரன் போல; நகை இழந்த முகத்தானை - ஒளி இல்லாத முகம் உடையவனை; கல் கனிய கனிகின்ற துயரானை - கல்லும் குழைந்து உருகும்படி பொங்கி வரும் துன்ப முடையானை; (பரதனை) கண்ணுற்றான் - கண்டான்; வில் கையினின்று இடை வீழ- வில் தன் கையிலிருந்து கீழே விழும்படி; விம்முற்று நின்று ஒழிந்தான் - கலங்கிச் செயலற்று நின்றான்.

நம்பியும் என் நாயகனை
ஒக்கின்றான்; அயல் நின்றான்
தம்பியையும் ஒக்கின்றான்;
தவவேடம் தலை நின்றான்
துன்பம் ஒரு முடிவில்லை
திசை நோக்கித் தொழுகின்றான்
எம்பிரான் பின் பிறந்தார்
இழைப்பரோ பிழைப்பு என்றான்

ஆடவரில் சிறந்த இவன் எனது தலைவன் இராமன் போலவே இருக்கிறான். பக்கத்தில் இருப்பவனோ இலட்சுமணன் போலவே இருக்கிறான். தவக் கோலம் தரித்துள்ளான். அவனது துன்பத்திற்கு ஓர் எல்லை இருப்பதாகத் தெரியவில்லை. இராமன் சென்ற தென் திசை நோக்கித் தொழுகின்றான். இராமபிரான் தம்பிமார் தவறும் செய்வரோ என்று நினைக்கிறான் குகன்.

★ ★

நம்பியும்- ஆடவரில் சிறந்த இப் பரதனும்; என் நாயகனை- எனது தலைவனாகிய இராமனை; ஒக்கின்றான்- ஒப்ப இருக்கின்றான்; அயல் நின்றான்- அருகே நிற்கின்ற சத்துருக்கனன்; தம்பியையும் ஒக்கின்றான்- இலட்சுமணனை ஒப்ப இருக்கின்றான்; தவ வேடம் தலை நின்றான்- தவ வேடம் மேற்கொண்டு உள்ளான்; துன்பம் ஒரு முடிவு இல்லை- இவனுடைய துன்பத்திற்கு ஓர் எல்லை இல்லை; திசை நோக்கி தொழுகின்றான்- இராமன் சென்ற தென்திசை நோக்கி வணங்குகின்றான்; எம்பிரான்- எம்பிரானாகிய இராமனின்; பின் பிறந்தார்- பின்னே தோன்றிய தம்பிகள்; பிழைப்பு இழைப்பரோ?- பிழை செய்வார்களோ? என்றான் குகன்.

உடனே ஓர் ஓடத்தின் மீது ஏறிக்கொண்டு பரதனிடம் வந்து அவன் காலிலே விழுந்து வணங்குகிறான் குகன். பரதனும் அவனைத் தூக்கி, தந்தையை விட மிகுந்த மகிழ்ச்சியுடனே அணைத்துக் கொண்டான்.

தான் வந்த நோக்கத்தைக் குகனிடம் கூறினான் பரதன். பரதனைத் தன் ஓடத்தில் ஏற்றிக் கொண்டு மறு கரையில் சேர்த்தான் குகன். குகனுடைய இனத்தார் எல்லாரும் பரதனுடைய படைகளைத தங்கள் ஓடங்களில் ஏற்றிக் கொண்டு மறு கரையில் சேர்ததார்கள்.

கரை சேர்ந்த பரதன் குகனை நோக்கி அன்றிரவு இராமன் எங்கே துயில் கொண்டான் என்று வினவினான். அப்போது குகன் இராமன் துயில் கொண்ட இடத்தைக் காட்டுகிறான்.

அல்லை ஆண்டு அமைந்த மேனி
அழகனும் அவளும் துஞ்ச
வில்லை ஊன்றிய கையோடும்
வெய்துயிர்ப் போடும் வீரன்
கல்லை ஆண்டு உயர்ந்த தோளாய்!
கண்கள் நீர் சொரியக் கங்குல்
எல்லை காண்பளவும் நின்றான்;
இமைப்பு இலன் நயனம்'' என்றான்

இலட்சுமணன் எங்கிருந்தான்? என்று கேட்டான் பரதன்.

''கார் முகில் வண்ணனாகிய இராமனும் சீதையும் இங்கே உறங்க, கையிலே வில் தாங்கி, கண்ணீர் மல்க, அனல் கக்கும் பெருமூச்சுடன் இரவு முழுதும் கண் இமையாது காவல் புரிந்தான் என்றான் குகன்.

* *

கல்லை ஆண்டு உயர்ந்த தோளாய்- மலை ஒத்த தோள்களை உடையவனே!; அல்லை ஆண்டு அமைந்த மேனி- இருளையும் வென்றதாக அமைந்த கருமேனி உடைய; அழகனும்- அழகனாகிய இராமனும்; அவளும்- சீதையும்; துஞ்ச- தூங்க; வீரன்- சுத்த வீரனாகிய இலட்சுமணன்; வில்லை ஊன்றிய கையோடும்- வில் தரித்த கையுடனும்; வெய்து உயிர் போகும்- வெம்மையுடைய பெருமூச்சோடும்; கண்கள் நீர் சொரிய- கண்கள் தாரை தாரையாக நீர் சொரிய; கங்குல் எல்லை காண்பனவும்- பொழுது விடியும் வரை; நயனம் இமைப்பிலன்- கண் மூடாதவனாய் (சிறிதும் துயில் கொள்ளாமல்); நின்றான்- காவல் புரிந்து நின்றான்; என்றான்- என்று குகன் பரத னுக்குக் கூறினான்.

கார் எனக் கடிது சென்றான்;
கல் இடைப் படுத்த புல்லின்
வார் சிலைத் தடக்கை வள்ளல்
வைகிய பள்ளி கண்டான்;
பார் மிசைப் பதைத்து வீழ்ந்தான்;
பருவரல் பரவை புக்கான்;
வார் மணிப் புனலான்; மண்ணை
மண்ணு நீர் ஆட்டும் கண்ணான்

கேட்டான் பரதன். மேகம் போல விரைந்து ஓடினான். இராமன் கற்கள் மத்தியிலே புல்லில் படுத் திருந்த இடத்தைக் கண்டான்; துடி துடித்தான்; கண்ணீர் வடித்தான். அப்படியே நிலத்தில் விழுந்து புரண்டான். அந்த இடத்தைக் கண்ணீரால் நனைத்தான்.

★ ★

கார் என- மேகம் என்று சொல்லும்படியாக; கடிது சென்றான்- விரைந்து சென்றான்; வார் சிலைத் தடக் கை

நீண்ட வில் ஏந்தியவனும்;பெரிய கைகளை உடையவனும்; வள்ளல்- வரையாது கொடுப்பவனும் ஆகிய இராமன்; கல் இடைப்படுத்த புல்லில் வைகிய பள்ளி கண்டான்- கல் இடையே பரப்பிய புல்லால் ஆகிய படுக்கையைக் கண்டான்; (கண்டு) பதைத்து-வருத்தமுற்று, அவ்வருத்தம் தாங்க முடியாமல் துடித்து; பார் மிசை வீழ்ந்தான்- பூமியிலே விழுந்தான்; வார் மணிப் புனலால்- பெருகுகின்ற முத்துப் போன்ற கண்ணீரால்; மண்ணை மண்ணு நீர் ஆட்டும் கண்ணான்- தரையை நீராட்டும் கண் உடையவன் ஆனான்; பருவரல் பரவை புக்கான்- சோகக் கடலில் மூழ்கினான்,

இராமன் சென்று தங்கியிருக்கும் இடத்தைத் தனக்குக் காட்டுமாறு குகனை வேண்டினான் பரதன்.

குகனும் பரதனுடைய வேண்டுதலுக்கு இணங்கி, அவனை அழைத்துக் கொண்டு படைகள் பின் தொடர, சித்திரகூட பர்வதம் சேர்ந்தான்.

சித்திரகூட பர்வதத்திலே இராமனைக் கண்டான் பரதன். அவன் அடிகளிலே வீழ்ந்து வணங்கினான்; அழுதான்; அரற்றினான்.

இராமன் பரதனை தூக்கி எடுத்து அணைத்துக் கொண்டு ஆறுதல் மொழி பல கூறினான்.

பரதனும் ஒருவாறு தேறி அயோத்தியில் தசரத மன்னன் இறந்த செய்தியைக் கூறினான்.

தந்தை இறந்த செய்தி கேட்டான் இராமன்- பெரிதும் துன்புற்றான்; வசிட்டர் இராமனை அழைத்துக்கொண்டு மந்தாகினி ஆற்றின் கரை சென்று, இறந்து போன அரசனுக்குச் செய்ய வேண்டியவற்றைச் செய்தார்.

பிறகு எல்லாரும் இராமன் இருப்பிடம் சேர்ந்தனர்.

''எனக்கு ராஜ்யம் வேண்டாம்; தாங்கள் திரும்பி வாருங்கள்; ராஜ்யத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்று அழைத்தான் பரதன்; கெஞ்சினான்; மன்றாடினான்.

இராமன் அதற்கு இணங்கவில்லை.

''தந்தை சொல்லைக் காத்து ஈரேழு ஆண்டுகள் இந்த வனத்திலே கழித்து, பிறகே நாட்டுக்கு வருவேன்'' என்று உறுதியாகச் சொல்லி விட்டான்.

ராமனோ இப்படிச் சொல்கிறான். பரதனோ தனக்கு ராஜ்யம் வேண்டாம் என்கிறான்.

அரசன் இல்லாவிட்டால் நாடு என்ன ஆகும்? குடிகள் என்ன ஆவார்கள்?

இந்தச் சிக்கலைத் தீர்ப்பது எப்படி?

சிக்கல் தீர ஒரு வழி சொன்னார் வசிட்டர்.

''ராஜ்யம் இராமனுடையதாகவே இருக்கட்டும். இராமன் அயோத்திக்கு வராவிட்டால் அவனுடைய பாதுகைகளைக் கொடுக்கட்டும். இராமனின் பிரதிநிதியாக பரதன் ராஜ்ய காரியங்களைக் கவனிக்கட்டும்.'' என்றார் வசிட்டர்.

சிக்கல் தீர்ந்தது. இராமன் இணங்கினான்; பரதனும் சம்மதித்தான்.

அடித்தலம் இரண்டையும்
அழுத கண்ணினான்
முடித்தலம் என்ன
முறையில் சூடினான்

படித்தலத்து இறைஞ்சினன்
பரதன் போயினான்
பொடித்தலம் இலங்குறு
போலம் கொள் மேனியான்.

இராமனுடைய பாதுகைகள் இரண்டையும் பெற்றுக் கொண்டான பரதன்; தலை மேல் காத்துக் கொண்டான். இதுவே நமக்குக் கிரீடம் என்று எண்ணிக் கொண்டான்; இராமனை வணங்கினான்; திரும்பிச் சென்றான்.

★ ★

அழுத கண்ணினான்-அழுத கண்களை உடையவனும்; தலம் பொடி இலங்குறு மேனியன்- நிலத்தின் புழுதி படிந்து விளங்கும் மேனி உடையவனும்; பரதன்- (ஆகிய) பரதன்; அடித்தலம் இரண்டையும்- அந்தப் பாதுகைகள் இரண்டையும்; முடித்தலம் இவை என- கிரீடங்கள் இவையே என்று கொண்டு; முறையில் சூடினான்- முறைப்படி சிரமேல் கொண்டவனாய்; படித்தலத்து இறைஞ்சினான் - தரையில் விழுந்து வணங்கி; போனான்- திருமபிச் சென்றான்.

நந்தியம் பதியிடை
நாதன் பாதுகம்
செந்தனிக் கோல் முறை
செலுத்தச் சிந்தையன்
இந்தியங்களை அவித்து
இருத்தல் மேயினான்
அந்தியும் பகலும் நீர்
அழுத கண்ணினான்

அந்தப் பாதுகைகளை எடுத்துக்கொண்டு பரதன் அயோத்திக்குப் போகவில்லை; அரண்மனைக்கும் போக வில்லை.

அயோத்திக்குச் சற்றுத் தொலைவிலே உள்ள நந்தி கிராமம் என்ற இடத்திலே சிம்மாசனத்தின் மீது வைத்தான்.

கண்ணீர் சொரிந்தவனாய், ஐம்பொறிகளையும் அடக்கியவனாய், இராமனின் பிரதிநிதியாக அரசு செலுத்தி வந்தான்.

★ ★

நந்தி அம் பதியிடை- நந்திக் கிராமம் எனும் இடத்திலே; நாதன் பாதுகம்- தலைவனான இராமன் பாதுகைகளை; செம் தணிகோல் முறை செலுத்த- ஒப்பற்ற செங்கோலை முறைப்படி செலுத்த; அந்தியும் பகலும்- இரவும் பகலும்; நீர் அழுத கண்ணினான்- நீர்ப் பெருக்கு வற்றாத கண்களை உடையவனாய்; சிந்தை யான் இந்திரியங்களை அவித்து- மனத்தினால் ஐம்பொறிகளையும் அடக்கி; இருத்தல் மேயினான்- அங்கு தங்கினான் பரதன்.


அயோத்தியா காண்டம் முற்றிற்று.

# கம்பனின் அயோத்தியா காண்டம்

அயோத்தியா காண்டத்தைப் படிப்போர் முன் நிலை மாறிய கதாபாத்திரங்களை கொண்டு வந்து திறம்பட நிறுத்துகிறார் கவிச் சக்கரவர்த்தி கம்பன். சூழ்ச்சியில் சிக்கிய சிற்றன்னை கைகேயியைக் காண்கிறோம்; தசரதனைப் போல நாமும் துடிக்கிறோம்; எதிர்பாராத ஏமாற்றம் எதிர் கொண்ட போதும், சமநிலை மாறாத இராகவனைப் போற்றுகிறோம்; உணர்ச்சிக் குவியலாகும் இலட்சுமணனைக் கண்டு வியக்கிறோம்; கல்யாணராமன் மரவுரி உடுத்து, வனம் புகுதலைக் கண்டு மனம் புழுங்குகிறோம். அவனைத் தொடரும் சீதாப் பிராட்டியாரின் பண்பை போற்றுகிறோம். இலட்சுமணனை அண்ணனுக்கு ஏவல் செய்யும் பணியாளனாக அனுப்பும் சுமித்திரையின் அருங்குணத்திற்கு அஞ்சலி செலுத்துகிறோம்; அன்புக்கு இலக்கணமாக விளங்கும் இராகவனின் தம்பி குகனுக்கு அறிமுகமாகிறோம்; மாறுபட்ட சூழ்நிலையில் தடுமாறும் பரதனைப் பார்க்கிறோம்; அண்ணனின் பாதுகைகளைத் தலையில் வைத்துக் கொண்டு, இரகுவீரனுக்காக அரசு செலுத்தும் கொள்கை வீரன் பரதனை, சிரம் தாழ்த்தி வணங்குகிறோம்.

மாறுபட்ட அயோத்தி, நிலை மாறிவிட்ட கதாபாத்திரங்கள், புதுப்புது சூழ்நிலைகள் ஆகியவற்றைக் கம்பன் தவிர வேறு யாரே சுவை குன்றாமல் சித்தரிக்கக் கூடும்?

அல்லல் தரும், அவலம் மிகுந்த இத்துன்பம் நிறைந்த மாய உலகைக் கடந்து, கரையேற்றுவான் இறைவன் என்ற கூற்றைக் குகன் மூலம் காட்டுகிறாரோ கம்பநாடன், அயோத்யா காண்டத்தில்?



# கம்பன் கவித் திரட்டு

(மூன்றாம் பாகம்)

## ஆரண்ய காண்டம்

முதற்பதிப்பு 1990

உரிமம் ஆசிரியருக்கே

வெளியீட்டோர் :
நித்தியானந்த ஜோதி நிலையம்
த. பெ. 1284
3D 43 V. K. சாலை சென்னை-28.

மாருதி பிரஸ்,
173, பீட்டர்ஸ் ரோடு,
சென்னை-14

## ஆரண்ய காண்டம் படலங்கள்


1. விராதன் வதைப்படலம்
2. சரபங்கன் பிறப்பு நீங்கு படலம்
3. அகத்தியப் படலம்
4. சடாயு காண் படலம்
5. சூர்ப்பணகைப் படலம்
6. கரன் வதைப் படலம்
7. மாரீசன் வதைப் படலம்
8. சடாயு உயிர் நீத்த படலம்
9. அயோமுகிப் படலம்
10. கவந்தப் படலம்
11. சபரி பிறப்பு நீங்குப் படலம்.

# ஆரண்ய காண்டம்

## விராதன் வதைப் படலம்

### (கடவுள் வாழ்த்து)

பேதி யாது நிமிர் பேத வுருவம்
பிறழ்கிலா
ஓதி யோதி யுணறும் தொறு
முணர்ச்சியுதவும்
வேதம் வேதியர் விரிஞ்சன்
முதலோர் தெரிகிலா
ஆதி நாத ரவரெம்
மறிவினுக் கறிவரோ.

எங்கும் நிறைந்திருப்பனும், வேதம் வேதியர், விரிஞ்ஜன் முதலியோரின் ஆராய்ச்சிக்கும் அப்பாற்பட்டவனும், எல்லாப் பொருள்களுக்கும் தலையாயவனுமாகிய இராமபிரானை வணங்கி எடுத்த கருமத்தை இனிது முடிப்போமாக!

# ஆரண்ய காண்டம்

ஆரண்ய காண்டம் பன்னிரண்டு படலங்கள் கொண்டது. மொத்தம் 1196 பாடல்கள். இவற்றுள் இத் தொகுப்பில் எடுக்கப்பட்டுள்ள பாடல்கள் 133.

ஆரண்யத்தில் நிகழ்ந்தவற்றைக் கூறும் காண்டம் இது. விராதன் வதையில் தொடங்குகிறது. சபரி பிறப்பு நீங்கு படலத்தில் முடிகிறது.

சித்திரகூட மலையில் இருப்பது தெரிந்துவிட்டபடியால் இனிமேல் அயோத்தி மக்கள் அடிக்கடி வருவார்கள் என்று கருதினான் இராமன். எனவே அவ்விடம் விட்டு அகன்றான்; இளையவனுடனும் சீதையுடனும் தண்டகாரணியம் நோக்கிப் புறப்பட்டான்.

சூரிய குலத்தில் தோன்றிய மனுச்சக்கரவர்த்தியின் மகன் இட்சுவாகு. அவனுக்குப் புதல்வர் நூறு பேர் அந்த நூற்றுவரில் கடைப்பட்டவன் தண்டன் என்பவன். அவன் முரட்டன், துஷ்டன், தண்டிக்கத்தக்கவனாக இருந்தமையின் தண்டன் என்று அவனுக்குப் பெயர் வந்தது.

விந்திய மலைக்கும் சைவலமலைக்கும் இடையே உள்ள பகுதியைத் தனது ராஜ்யமாகக் கொண்டான் அவன். மதுமந்த நகரில் இருந்து அரசு செலுத்திவந்தான்.

ஒரு நாள் அவன் சுக்கிராச்சாரியார் ஆசிரமத்துக்குச் சென்றான். அவர் மகள் அரஜை என்பவள்மீது காமுற்றான். வலிந்து அவளைக் கற்பழித்தான். இதனை அறிந்த சுக்கிராச்சாரியார் அவனைச் சபித்தார். அதனால் அவனது நாடு பாழாகி அவனும் அழிந்தான். அந்த இடம் தண்டக வனம் என்று பெயர் பெற்றது.

தண்டக வனத்திலே இருந்த முனிவர்கள் மகிழ்ந்தார்கள் இராமனை வரவேற்றார்கள்.

இராமன், இலக்ஷ்மணன், சீதை ஆகிய மூவரும் அத்திரி முனிவருடைய ஆசிரமத்துக்குச் சென்றனர்.

அத்திரி என்பவர் சப்தரிஷிகளுள் முதல்வர். திரிவர்க்க தோஷங்களாகிய காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்றையும் போக்கியவர் என்பது பொருள் வேத அத்யயனம் செய்யாது மூன்று இரவுகளைப் போக்காதவர் என்றும் கூறுவர். இவர் பிரம்ம குமாரர்களில் ஒருவர்.

இவருடைய மனைவி அனசூயை. அனசூயை என்றால் பொருமை அற்றவள் என்று பொருள். இவள் தக்ஷப் பிரஜாபதியின புதல்வியருள் ஒருத்தி.

தனது கற்பு நிலையைச் சோதிக்க வந்த மும் மூர்த்திகளையும குழந்தைகளாக்கித் தொட்டிலில் இட்டு ஆட்டியவள்.

என்றும் மாசுபடியாத பட்டாடை, நறுமணங்குன்றாத கலவைச் சாந்து, என்றும் குன்றா இளமை, ஆகியவற்றை சீதைக்கு அளித்தாள் என்று வான்மீகம் கூறும்.

விராதன் என்பவன் ஓர் அரக்கன். சிவந்த கண்கள், சுருண்ட தலைமயிர், விஷம் ஒரு மலை வடிவு பெற்று வருவது போலும் தோற்றத்தினன்.

அவனது நடைப் பெயர்ச்சியினால் பெருங்காற்று எழுந்தது. அக்காற்று மலைகளைப் பெயர்த்தது. அவ்விதம் பெயர்ந்த மலைகள் காற்றிடைப்பட்ட பஞ்சுபோல் பறந்தன.

குதிரை, யானை, சிங்கம், புலி இவற்றையெல்லாம் ஒரு பாம்பினாலே தொடுத்துக் கட்டி மாலையாக அணிந்து கொண்டிருந்தான் அவ் விராதன்.

யானைகளைப் பிடித்துத் தன் அகன்ற வாயிலே மென்று தின்று கொண்டிருந்தான். அப்பொழுதும் அடங்காத பசியுடையவன். இந்திரனது ஐராவதம் என்னும் யானையின் நெற்றிப் பட்டத்தைத் தன் நெற்றிப் பட்டமாகவும், அதன் கொம்புகளில் அலங்கரிக்கப்பட்ட பூண்களைத் தனது தோள் வளைகளாகவும் கொண்டு விளங்கினான்.

அவ்வரக்கன் தான் கொன்ற புலிகளின் தோலை ஆடையாக உடுத்தியிருந்தான். யானைத் தோல்களைச் சல்லடமாக அணிந்திருந்தான். திசை யானைகளுக்குக் கட்டப்பட்டிருந்த மணிகளை எல்லாம் ஒரு மலைப் பாம்பிலே கோத்து அதனைத் தனது ஆடைக்கு அலங்கார மாகக் கட்டியிருந்தான்.

பூதங்கள் ஐந்தும் ஓர் உருக்கொண்டு வருவதே போலும் உருவத்தன் இடி போன்ற குரல் உடையவன். இருபத்தையாயிரம் யானைகளின் பலம் கொண்டவன்.

இத்தகைய விராதன் சீதா பிராட்டியைத் தூக்கிக் கொண்டு ஆகாயத்தில் எழும்பினான். இராம லட்சுமணர் இருவரும் அவனது தோள் மீது ஏறி இரு தோள்களையும் வெட்டி வீழ்த்தினர்.

உடனே விராதன் தன் சுய உருப்பெற்று இராமப் பிரானைப் பலவாறு துதித்தான்.

"அவனை 'நீ யார்' என்று வினவ அவன் சொன்ன பதில் வருமாறு :

"நான் ஒரு கந்தர்வன். தும்புரு எனும் பெயருடையவன். குபேரன் ஆட்சிக்குட்பட்ட தேவர் உலகில் உள்ளவன். அரம்மை எனும் தேவமாது ஆடல் புரியக்கண்டு அவள் மீது காதல் கொண்டேன்; சீற்றம் கொண்ட குபேரன் என்னை அரக்கனாகச் சபித்தான்.

இந்த வானமண்டலம் முழுவதும் சுற்றித் திரிந்து எல்லாரையும் வருத்திக்கொன்ற கிலிஞ்சன் என்ற அரக்கனின் மைந்தனாகப் பிறந்தேன். நினது திருவடி தீண்டப் பெற்றேன். சாபம் நீங்கப்பெற்றேன்'' என்றுகூறித் தும்புரு எனும் கந்தர்வனாகி வானுலகு சென்றான்.

பிறகு இராமன் இலட்சுமணன் சீதை மூவரும் சரபங்கர் ஆசிரமம் சென்றனர்.

இராமனின் வருகைக்காக காத்திருந்த முனிவர் இராமனைத் தரிசித்து, எரியில் புகுந்து முக்தி எய்தினார்.

''எனது ஆசிரமத்துக்கு வரவேண்டும்; எனது ஆசிரமத்துக்கு வரவேண்டும்'' என்று முனிவர் பலரும் அழைத்தனர். இவ்வாறு பத்து ஆண்டுகள் அவர்களுடைய ஆசிரமங்களிலே தங்கிவிட்டு இராமன் சீதையோடும் இலக்ஷ்மணனோடும் அகஸ்தியர் ஆசிரமம் சென்றான்.

முனிவர் மகிழ்ந்தார், அவர்களை வரவேற்றார். அங்கேயே இருக்குமாறு கூறினார். அஸ்திரங்கள் பல கொடுத்தார்.

அரக்கர்களை அழிக்கும் நோக்கத்துடன் வந்திருப்பதால் இன்னும் தெற்கே சென்று அவர்கள் வரும் வழியிலே இருப்பது நல்லது என்றான் இராமன்.

''நல்லது என்று அகஸ்தியரும் பஞ்சவடி எனும் இடம் பற்றிக் கூறி அங்கே சென்று வசிக்குமாறு கூறினார்.

பஞ்சவடி என்றால் ஐந்து ஆலமரங்கள் உள்ள இடம் என்று பொருள். இந்த இடம் அகண்ட கோதாவரிக் கரையில் நாசிக் அருகே உள்ளது. பஞ்ச என்றால் ஐந்து என்று பொருள். வடம் என்றால் ஆலமரம் என்று பொருள்.

ஓங்கும் மரன் ஓங்கி
மலை ஓங்கி மணல் ஓங்கிப்
பூங்குலை குலாவு குளிர் சோலை
புடை விம்மித்
தூங்கு திரை ஆறு தவழ்
சூழலது ஓர் குன்றின்
பாங்கர் உளதால் உறையுள்
பஞ்சவடி மஞ்ச!

மரங்கள் ஓங்கி வளரப் பெற்றதாய் - மலைகள் உயர்ந்து காணப்பெற்றதாய் - மணல் மேடுகள் உயர்ந்து விளங்கப் பெற்றதாய் - அசைந்து செல்லும் ஆறு தவழ் வதால் - ஓரிடம் குன்றின் அருகே உள்ளது பஞ்சவடி என்று அதற்குப் பெயர்.

○ ○

மஞ்ச - மைந்தனே! ஓங்கு மரன் ஓங்கி - உயர்ந்த மரங்கள் வளரப் பெற்று; மலை ஓங்கி - மலைகள் உயரப் பெற்றும்; மணல் ஓங்கி - மணல் குன்றுகள் உயரப் பெற்றும்; பூ குலை குலாவு - பூங்கொத்துக்கள் விளங்குகின்ற; குளிர் சோலை - குளிர்ந்த சோலைகள்; புடை விம்மி - பக்கங் களில் விளங்கப் பெற்றும்; தூங்கு திரை - மிக்க அலை மோதும்; ஆறு தவழ் - மெதுவாகச் செல்லும் ஆறு பாயப் பெற்ற; சூழலது - சூழ்நிலை உடைய; ஓர் குன்றின் பாங்கர் - ஒரு குன்றின் அருகே; பஞ்சவடி - பஞ்சவடி என்ற; உறையுள் - வாசஸ்தலம்; உளது - இருக்கிறது

○ ○

கன்னியின் வாழை கனி
ஈவ, கதிர் வாலின்
செந்நெல் உள; தேன் ஒழுகு
போதும் உள; தெய்வப்

பொன்னி எனல் ஆய புனல்
ஆறும் உள; போதா
அன்னம் உள: பொன் இவளொடு
அன்பின் விளையாட

அகஸ்திய முனிவரிடத்திலே விடை பெற்றுக் கொண்டு இராமனும் சீதையும் லட்சுமணனும் பஞ்சவடி நோக்கிப் புறப்பட்டனர். வழியிலே ஜடாயு என்ற கழுகரசனைக் கண்டனர். ஜடாயு அவர்களைப் பஞ்சவடிக்கு அழைத்துச் சென்றது. அங்கே கோதாவரி நதியை அவர்கள் கண்டார்கள்.

O O

(அவ்விடத்தில்) கனி ஈவ - பழங்கள் தரும்; கன்னி இள வாழை - மிகவும் இளமையான வாழை மரங்களும்; கதிர் - கதிர்களையும்; வாலின் - வாலையும் உடைய; செந்நெல் உள - சிவந்த நெற் பயிர்களும் உள; தேன் ஒழுகு போதும் உள - தேன் சொரியும் மலர்களும் உள்ளன; தெய்வப் பொன்னி - தெய்வத் தன்மை பொருந்திய காவிரி; ஆய - அனைய; புனல் ஆறும் உள - வெள்ளம் பெருகும் ஆறும் உண்டு; பொன் இவளொடு - பொன் போன்ற இச் சீதையுடன்; அன்பின் விளையாட - அன்போடு விளையாடுவதற்கு போதா - பெரு நாரைகளும்; அன்னமும் - அன்னப்பறவைகளும்; உள - உள்ளன.

O O

புவியினுக்கு அணியாய், ஆன்ற
பொருள் தந்து புலத்திற்று ஆகி
அவி அகத்துறைகள் தாங்கி
ஐந்திணை நெறி அளாவிச்
சவி உறத்தெளிந்து, தண் என்று
ஒழுக்கமும் தழுவி, சான்றோர்
கவி எனக் கிடந்த கோதா வரியினை
வீரர் கண்டார்.

கோதாவரி நமது நாட்டின் அழகியதொரு பெருநதி. எனவே புவியினுக்கு அணியாகி என்றார் கம்பர்.

ஆன்ற பொருள் தருவதாவது என்ன? சிறந்த மலைகளிலே உள்ள பொருள்களை அடித்துக்கொண்டு வருதல். அவ்வளத்தால் ஏராளமான விளைபொருள்களைக் கொடுத்து நாட்டின் செல்வம் பெருக்குதல். புண்ணிய நதி ஆதலால் தன்னிடை மூழ்குவோர்கு அறம், பொருள், இன்பம், வீடு என்கிற நான்கு விதமான புருஷார்த்தங் களையும் கொடுத்தல்.

விளை நிலங்களுக்கு வளம் தருவதால் புலத்திற்றாகி என்றார்.

அங்கே மலர்களின் குவியல் உண்டு. குளிர்ந்த சோலை தழைத்து இருக்கும். இளம் வாழை மரங்கள் உள. அவை கனி தரும. செந்நெல் உண்டு. தேன் வழியும் மலர்கள் உள்ளன. தெய்வத் தன்மை பொருந்திய காவிரியே என்று சொல்லத் தக்க ஆறும் உண்டு. திருமகள் ஒத்த சீதையுடன் விளையாட அன்னம் உண்டு. பெரு நாரை உண்டு.

மக்கள் நீராடுவதற்காக நீர்த்துறைகள் ஆங்காங்கே பெற்று இருப்பதால் அவி அகத்துறைகள் தாங்கி என்றார்.

குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் வழியே கோதாவரி நதி பாய்வதால் ஐந்திணை நெறி அளாவி என்றார்.

பளிங்கு போல் தெளிந்து இருப்பதால் அவியுறத் தெரிந்து என்றார்.

மிகவும் குளிர்ந்த தண்ணீருடையதாக இருப்பதால் தண் என்று ஒழுக்கம் தழுவி என்றார்.

ஆகவே, சான்றோர் தம் கவி போல் இருந்தது கோதாவரி எனும் நதி என்றார்.

○ ○

புவியினுக்கு அணியாய் - பூமிக்கு ஓர் அலங்காரமாய்; ஆன்ற பொருள் தந்து - சிறந்த பொருள்களைக் கொடுத்து; புலத்திற்கு ஆகி - வயல்களுக்கு உரியதாகி; அவி அகத் துறைகள் தாங்கி - நீராடுதற்குரிய துறைகள் உள்ளனவாய்; ஐந்திணை நெறி அளாவி - குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்ற ஐந்து வகை நிலங்கள் வழி சேர்ந்து; சவி உறத் தெளிந்து - செவ்வையாகத் தெளிந்து; தண் என்று ஒழுக்கம் தழுவி - குளிர்ந்த நல்ல ஒழுக்கம் கொண்டு; சான்றோர் கவி என - பெரியோர் செய்த கவி போல; கிடந்த - இருந்த; கோதாவரியை - கோதாவரி ஆற்றை; வீரர் கண்டார் - வீரர்களாகிய இராம லட்சுமணர் கண்டனர்.

கோதாவரி நதியைச் சான்றோர் கவிக்கு உவமை கூறுகிறார் கம்பர். எப்படி? புவியினுக்கு அணியாகி - பலவித அணிகள் பொருந்தியதாக விளங்கும் சான்றோர் கவி; உலகத்தினரால் கொண்டாடப்பெறும்.

ஆன்ற பொருள் தந்து - அறம் பொருள் இன்பம் வீடு என்ற சதுர்வித புருஷார்த்தங்களின் பெருமையை உணர்த்தும்; கற்பவருக்கு நுண் அறிவுபுகட்டும் - ஆராய்ச்சி செய்பவருக்கு மேலும் மேலும் புதியனவாகப் புலப்படத் தக்க பொருள் தரும்.

அவி அகத்துறைகள் தாங்கி - அகப்பொருள் இலக்கணங்கள் பொருந்தி இருக்கும்; ஐந்திணை நெறி அளாவி - குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய ஐவகை நிலங்களுக்கும் உரிய புணர்தல், இருத்தல், பிரிதல், இரங்கல், ஊடல் எனும் ஐவகை ஒழுக்கங்களும் உள்ளதாக இருக்கும்.

சவி உறத் தெளிந்து - மயங்க வைத்தல் என்ற குற்றத்துக்கு இடமில்லாமல் தெளிவாக நன்கு விளங்கச் சொல்லுதல் என்ற அழகுடையதாக இருக்கும்.

தன் என்ற ஒழுக்கம் உடையதாய் - தீய ஒழுக்கங்களை விவரிக்காமல் நல் ஒழுக்கங்களையே வலியுறுத்தும். மெல் லென்ற ஓசையோடு தட்டின்றிச் செல்லும் நடையுடைய தாய் இருக்கும்.

○ ○

ஓதிமம் ஒதுங்க கண்ட
உத்தமன் உழையள் ஆகும்
சீதை தன் நடையை நோக்கிச்
சிறியதோர் முறுவல் செய்தான்
மாது அவள் தானும் ஆண்டு வந்து
நீர் உண்டு மீளும்
போதகம் நடப்ப நோக்கிப்
புதியது ஓர் முறுவல் பூத்தாள்.

அன்னங்கள் ஒதுங்கி நடந்து செல்கின்றன உத்தம னான இராமன் அவற்றை நோக்கினான்; அருகில் உள்ள சீதையின் நடையையும் நோக்கினான்; புன் முறுவல் பூத்தான்.

சீதை என்ன செய்தாள்? அங்கு வந்து நீர் குடித்துச் செல்லும் ஆண் யானையின் நடை கண்டு அதுவரை இல்லாத புன்முறுவல் பூத்தாள்.

"உன் நடை அழகின் முன்னே இந்த அன்னத்தின் நடையழகு என்னே" எனும் கருத்துத் தொனிக்க இராமன் புன்முறுவல் பூத்தான்."

"இராமன் நடை அழகின் முன் இந்த ஆண் யானை நடையில் தோற்கும்" எனும் கருத்துப் படச் சீதை புன்முறுவல் பூத்தாள்.

○ ○

ஓதிமம் - அன்னங்கள்; ஒதுங்க - விலகிச் செல்ல; கண்ட - பார்த்த; உத்தமன் - உத்தமனாகிய இராமன்; உழையள் ஆகும் - அருகில் உள்ள; சீதை தன் நடையை நோக்கி - சீதையின் நடையைப் பார்த்து; சிறியது ஓர் முறுவல் செய்தான் - புன்னகை பூத்தான். ஆண்டு வந்து - அங்கே வந்து; நீர் உண்டு - நீர் குடித்து; மீளும் - திரும்பிச் செல்லும்; போதகம் - ஆண் யானை; நடப்ப நோக்கி; - விலகி நடப்பது கண்டு; மாது அவள் தானும் - சீதையும்; புதியது ஓர் புன்முறுவல் பூத்தாள் - (இராமனது நடை கண்டு) இதுவரை இல்லாத புதியதொரு புன்சிரிப்புச் சிரித்தாள்.

○ ○

பஞ்சி ஒளிர் விஞ்சு குளிர்
பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்சம்
நிமிர் சீறடியள் ஆகி
அம் சொல் இள மஞ்ஞை என
அன்னம் என மின்னும்
வஞ்சி என நஞ்சம் என
வஞ்ச மகள் வந்தாள்.

இவ்விதம் இவர்கள் பஞ்சவடியில் தங்கியிருந்தபோது சூர்ப்பணகை வந்தாள்; உள்ளத்திலே வஞ்சக எண்ணம் கொண்டு அழகியதோர் வடிவம் எடுத்து வந்தாள்; விஷம் என்று சொல்லும்படி வந்தாள்; அன்னம்போல நடந்து வந்தாள்; செம்பஞ்சும் குளிர் தளிர்களும் வருந்த செக்கச் செவேல் என்ற சிவந்த தாமரை போன்ற தனது சிறிய அடிகளை எடுத்து மெல்ல மெல்ல வைத்து இளமயில் போல வந்தாள்.

○ ○

ஒளி விஞ்ச - ஒளி மிகுந்து விளங்கும்; பஞ்சி - செம் பஞ்சும்; குளிர் பல்லவம் - குளிர்ச்சி தரும் இளம் தளிர்களும்;

அனுங்க - வருந்த; செஞ்செவிய - செந்நிறமான அழகு கொண்ட; கஞ்சம் நிகர் - தாமரை ஒத்த; சீறடியள் ஆகி - தனது சிறிய அடிகளை எடுத்து வைத்து நடந்து; அம் சொல் - அழகிய சொற்கள் பேசும்; இள மஞ்ஞை என - இளமயில் போலவும்; அன்னம் என - அன்னப் பறவை போலவும்; மின்னல் வஞ்சி என்ன - மின்னல் கொடி போலவும்; நஞ்சம் என - விஷம் போலவும்; வஞ்ச மகள் - வஞ்சனையே உருவாகிய அந்த சூர்ப்பணகை; வந்தாள் - வந்தாள்.

○ ○

காணின் உயர் கற்பகம்
உயிர்த்த கதிர் வல்லி
மேனி நனி பெற்று விளை
காம நிறை வாசத்
தேனின் மொழி உற்று இனிய
செவ்வி நனி பெற்றோர்
மானின் விழி பெற்று
மயில் வந்தது என வந்தாள்.

கற்பகத் தருவிலே படரும் கொடிக்கு காமவல்லி என்று பெயர். நறுமணம் வீசும் அந்தக் காமவல்லி போல் மேனி பெற்று வந்தாள் சூர்ப்பணகை; தேன் மொழியாள்; நல்ல அழகுடன் விளங்கினாள்.

இயற்கையிலேயே பார்ப்பதற்கு அழகாயிருக்கும் மயில். அதன் நடையும் அழகு. அதற்கு மானின் கண்ணும் ஏற்பட்டால் எப்படியிருக்கும்? மானின் விழி பெற்று மயில் வந்தது என வந்தாள்.

○ ○

காணின் உயர் - உயர்ந்த நறுமணம் வீசுகின்ற; கற்பகம் உயிர்த்த - கற்பக தருவைச் சார்ந்து அதன்மேல் படர்கின்ற;

கதிர்வல்லி - காமவல்லி என்ற தெய்வ பூங்கொடி; மேனி நனி பெற்று - அழகியதொரு பெண் வடிவம் பெற்று; காமம் விளை நெறி - காமம் விளைவிக்கின்ற ஒழுக்கமும்; வாசத் தேனின் மொழி உற்று - வாசனை வீசும் தேன் மொழியளாகி; இனிய செவ்வி நனி பெற்று - கண்ணுக்கினிய அழகை நன்கு பெற்று; ஓர் மானின் விழிபெற்று - மானின் மருண்ட பார்வையுடன்; மயில் வந்தது என - மயில் போன்ற சாயலும் நடையும் கொண்டு; வந்தாள் - வந்தாள்.

○ ○

பூவிலோன் புதல்வன் மைந்தன்
புதல்வி; முப்புரங்கள் செற்ற
சேவலோன் துணைவனான
செங்கை யோன் தங்கை; திக்கின்
மா எலாந் தொலைத்து வெள்ளி
மலை எடுத்து உலக மூன்றும்
காவலான் பின்னை; காமவல்லியாங்
கன்னி என்றாள்.

அப்படி அவள் வருகிற போது அவளது சிலம்பு, மேகலை, ஆரம் முதலிய அணிகள் ஒலித்தன. அவள் தனது கூந்தலில் சூடியுள்ள மலரில் வண்டுகள் மொய்த்து ஆரவாரம் செய்தன. இவற்றால் யாரோ பெண் ஒருத்தி வருகிறாள் என்று அறிந்தான் இராமன். ஒலி வரும் வழியிலே பார்வையைச் செலுத்தினான். அவன் அருகே வந்தாள் சூர்ப்பணகை. வணங்கினாள். "யார் நீ? உன் ஊர் எது? உன் பெயர் என்ன? உன் உறவினர் யார்?" என்று கேட்டான் இராமன்.

அப்போது அவள் சொன்னாள் :

"பிரும்மதேவர் தமக்குத் துணையாக ஒன்பது பிரும்மாக் களைப் படைத்தார். அவருள் ஒருவர் புலஸ்தியர். அந்தப் புலஸ்தியரின் புதல்வன் விச்ரவசு. விச்ரவசுவின் மகள் நான்;

சிவபெருமானது துணைவனாகிய குபேரனின் தங்கை; திக்கு யானைகளை உலுக்கி, கயிலாய கிரியைப் பெயர்த்த வனும் திரிலோக சக்கரவர்த்தியுமான இராவணனுக்குப் பின் பிறந்தவள்; என் பெயர் காமவல்லி; கன்னி நான்" என்றாள்.

○ ○

பூவிலோன் - தாமரை மலரில் தோன்றிய பிரும்மாவினது; புதல்வன் - பிள்ளையாகிய புலஸ்தியருடைய; மைந்தன் - குமாரனாகிய விச்ரவசுவின்; புதல்வி - பெண் நான்; முப்புரங்கள் செற்ற - திரிபுர தகனம் செய்த; சேவலோன் - ரிஷபத்தை வாகனமாக உடைய சிவபெருமானின்; துணைவனான - நண்பனாகிய; செங்கையோன் - சிவந்த கைகளை உடைய (குபேரனின்); தங்கை - தங்கை; திக்கின் மா எலாந் - திக்கஜங்களை எல்லாம்; தொலைத்து - வலிவிழக்கச் செய்து; வெள்ளிமலை எடுத்து - வெள்ளி மயமான கைலாச கிரியைப் பெயர்த்த; உலக மூன்றும் காவலான் - மூவுலகும் காத்தல் வல்ல இராவணனது; பின்னை - பின் பிறந்தவள்; காம வல்லியாம் கன்னி - காமவல்லி எனும் பெயர் கொண்ட கன்னி நான்.

○ ○

தனது பெருமைகளை எல்லாம் சொல்லிப் பார்த்தாள்; தான் கன்னி என்றும் கூறினாள். இராமன் மீது விருப்பம் கொண்டு வந்திருப்பதாகச் சொன்னாள்; இராமன் இணங்க வில்லை; மறுத்துவிட்டான்.

அந் நிலையில் சீதையைக் கண்டாள். அவளது பேரழகு கண்டாள். அவள் இருப்பதால் இராமன் தன்னை லட்சியம் செய்யவில்லை என்று கருதினாள். இராமன் இல்லாதபோது சீதையை எடுத்துப் போக முயன்றாள். அந்தச் சமயத்திலே அருகிலே காவல் நின்ற இளையவன் சூர்ப்பணகையின் மூக்கை அறுத்து விரட்டிவிட்டான்.

○ ○

நசையாலே மூக்கு இழந்து
நாணம் இலா நான் பட்ட
வசையாலே நினது புகழ்
மாசுண்டது ஆகாதோ
திசை யானை விசை கலங்கச்
செருச் செய்து மருப்பு ஒசித்த
இசையாலே நிறைந்த புயத்து
இராவணவோ! இராவணவோ!

சூர்ப்பணகை அலறத் தொடங்கினாள்.

"ஓ இராவணா! ஓ இராவணா!" என்று பெருங்குரல் எடுத்துத் தன் அண்ணனை அழைத்தாள்.

"எட்டுத் திக்கிலும் உள்ள யானைகளை வென்று, அவற்றின் கொம்புகளை ஒடித்து அடக்கிப் புகழ்பெற்ற இராவணனே! ஆசையினாலே நான் என் மூக்கைப் பறிகொடுத்து விட்டேன். இது உன் புகழுக்கு இழுக்கு அன்றோ? நின் புகழுக்குக் களங்கம் வராதோ."

○ ○

திசை யானை - எட்டுத் திக்கிலும் உள்ள யானை; வசை கலங்க - தன் சினவேகம் அடங்க; செருச்செய்து - அவற்றுடன் போர் செய்து; மருப்பு ஒசித்த - கொம்புகளை ஒடித்த; இசையாலே பெயர் எழுது - புகழாலே விளங்கப் பெற்ற; இராவண ஓ! இராவண ஓ! - இராவணனே; நசையாலே - ஆசையினாலே; மூக்கு இழந்து - என் மூக்கைப் பறிகொடுத்து; நான் பட்ட - நான் அடைந்த; நாண் இலா - வெட்கம் கெட்ட; வசையாலே - பழியினாலே; நின் புகழ் - உனது புகழும்; மாசுண்டது ஆகாதோ - களங்கம் அடையாதோ; (ஆகும் என்றபடி).

திசை யானை எட்டாவன, வருமாறு:

1. ஐராவதம் 2. புண்டரீகம் 3. வாமனம் 4. குமுதம் 5. அஞ்சனம் 6. புஷ்பதந்தம் 7. சார்வபௌமம் 8. சுப்பிரதீகம்.

○ ○

உரன் நெரிந்து விழ என்னை
உதைத்து உருட்டி மூக்கு அரிந்த
நரன் இருந்து தோள் பார்க்க
நான் இருந்து புலம்புவதோ?
கரன் இருந்த வனம் அன்றோ?
இவை படவும் கடவேனோ?
அரன் இருந்த மலை எடுத்த
அண்ணாவோ! அண்ணாவோ!

"சிவன் இருந்த கயிலாய மலையைப் பெயர்த்த என் அண்ணா!

என்னை உதைத்து உருட்டி என் மூக்கை அறுத்த மானிடன் பெருமிதங்கொண்டு தன் தோள் கண்ட வண்ணம் இன்னும் இருக்கிறானே! நான் புலம்புகிறேனே! கரன் பாதுகாப்பில் இருக்கும் வனம் இதுவன்றோ! எனக்கு இந்த கதி நேரலாமோ?"

இவ்விதம் புலம்பிவிட்டு கரதூஷணர்களிடம் சென்று முறையிட்டாள் சூர்ப்பணகை அவர்களும் பெரும் படையைத் திரட்டிக்கொண்டு இராம லட்சுமணர்களுடன் போர் செய்ய வந்தார்கள். அவர்களும் அவர்களுடன் வந்த படைகளும் பொடிப் பொடியாகச் சிதறி அழியும்படி போர் செய்தனர் இராம லட்சுமணர்.

○ ○

அரன் இருந்த - சிவபெருமான் எழுந்தருளிய; மலை எடுத்த - கயிலாய கிரியைப் பெயர்த்த; ஓ அண்ணா! உரன்

நெரிந்து விழ - என் மார்பு நெரிபட்டு நான் கீழே விழ; என்னை உதைத்து - என்னைக் காலால் உதைத்து; உருட்டி - நான் உருண்டு விழச் செய்து; மூக்கு அரிந்த - என் மூக்கை அறுத்த; நரன் - மானிடன்; இருந்து - இன்னமும் உயிருடன் இருந்து; தோள் பார்க்க - தன் தோள் வலி கண்டு பெருமிதம் அடைய; நான் இருந்து - நான் தனியே இருந்து கொண்டு; புலம்புவதோ? கரன் இருந்த வனம் அன்றோ?; இவை படவும் - இவையாவும் இருக்கவும்; கடவேனோ - நமது ஆட்சியில் நான் இக்கதி அடைவேனோ?

○ ○

தலை சிந்தின: வழி சிந்தின;
தழல் சிந்தின; தரைமேல்
மலை சிந்தினபடி சிந்தின
வருசிந்துர மழைபோல்
சிலை சிந்தின; கணை சிந்தின
திசை சிந்தின; திசையூடு
உலை சிந்தின; பொறி சிந்தின
உயிர் சிந்தின உடலம்.

தலைகள் சிந்தின; விழிகள் சிந்தின; நெருப்புப் பொறி பறக்கும் விழிகள் சிதறின; தரையிலே யானைகள் மலை போல் விழுந்தன; இராமன் விட்ட அம்புகள் எல்லாத் திக்குகளிலும் மழை போல் உதிர்ந்தன; கொல்லன் உலைக் களத்திலிருந்து கிளம்பும் நெருப்புப் பொறிபோல் அரக்கர் தம் உடல்கள் சிதறின. உயிர்கள் சிதறின.

○ ○

தலைசிந்தின - அரக்கர்களது தலைகள் சிதறின; தழல் சிந்தின விழி சிந்தின - தீப்பொறி கக்கிய அவர் தம் விழிகள் சிந்தின; தரைமேல் - பூமியிலே; மலை சிந்தினபடி - மலை

கள் சிதறி விழுந்தனபோல். வருசிந்துரம் - எதிர்த்து வந்த யானைகள்; சிந்தின - சிதறி விழுந்தன; மழைபோல் சிலை சிந்தின கணை - மழைபோல் இராமன் வீசிய அம்புகள்; திசை சிந்தின - எல்லாத் திக்குகளிலும் சிதறின; திசை ஊடு - அத்திக்குகளில் எல்லாம்; உலை சிந்தின பொறி சிந்தின உடலம் - கொல்லன் உலைக் களத்திலிருந்து சிதறிய நெருப்புப் பொறிபோல் உடல்கள் சிதறின; உயிர் சிந்தின.

○ ○

அரக்கர் படைகள் எல்லாம் அழிந்து போயின. கரன் மாண்டான்; தூஷணனும் மாண்டான்.

மூக்கு அறுபட்ட சூர்ப்பணகை இலங்கை சென்றாள். அவளது அலங்கோலங் கண்ட இலங்கை மக்கள் தமக்குள் பின் வருமாறு பேசிக்கொண்டனர்.

○ ○

போர் இலான் புரந்தரன்
ஏவல் பூண்டான்
ஆர் உலாம் நேமியான்
ஆற்றல் தோற்றுப் போய்
நீரினான்; நெருப்பினான்;
பொருப்பினான் இனி
ஆர் கொலாம் ஈது?'' என
அறைகின்றார் சிலர்

இவள் மூக்கை அறுத்தவர் எவராக இருப்பார்? தேவர்களின் தலைவன் இந்திரனாக இருப்பானோ? அன்று; அவன் தான் நம் இராவணனுடன் போர் செய்ய முடியாமல் தோற்று அவனுக்கு ஏவல் செய்கிறானே. திருமாலோ? அன்று. அவன் தான் இராவணனை எதிர்க்க முடியாமல்

பாற்கடலில் ஒளிந்துக் கொண்டானே, சிவனோ? அவன் தான் கயிலையில் இருக்கிறானே.

பின் எவராயிருப்பர்?

○ ○

சிலர் - சில அரக்கர்; புரந்தரன் - இந்திரன்; போர் இலான் - போர் செய்ய முடியாது தோற்றுப்போய்; ஏவல் பூண்டான் - இராவணன் ஏவல் செய்கிறான்; ஆர் உலாம் - கூரிய; நேமியான் - சக்கரம் உடைய திருமால்; ஆற்றல் தோற்றுப் போய் - போரிலே தோற்று வலிவிழந்து; நீரினான் - கடலில் புகுந்து கொண்டான்; நெருப்பினான் - தீயுமிழ் கடவுளாகிய சிவபெருமான்; பொருப்பினான் - கையிலங்கிரியிலேயுளான்; ஈது - இவ்வாறு மூக்கை அறுத்தவர்; யார் கொல் - யாவராயிருக்க முடியும்? என அறைகின்றனர் - என்று ஒருவரை மற்றொருவர் வினவு கின்றனர்.

○ ○

முழவினில், வீணையில் முரல்
நல் யாழில்
தழுவிய குழலினில் சங்கில்
தாரையில்
எழு குரல் இன்றியே
என்றும் இல்லது ஓர்
அழுகுரல் பிறந்தது அவ்
இலங்கைக்கு அன்று அரோ.

அன்றையதினம் இலங்கையிலே ஓர் அழுகுரல் தோன்றியது. வீணையின் நாதமும் யாழின் மெல் ஓசையும், முழவின் முழக்கவும், குழலின் ஓசையும் எல்லாம் ஒய்ந்தன; ஓய்ந்தன, ஓய்ந்தே போயின!

○ ○

முழவினில் - மத்தளத்தினின்றும்; வீணையில் - வீணையினின்றும்; முரல் - ஒலிக்கின்ற; நல்யாழினில் - நல்ல யாழினின்றும்; தழுவிய - இசை தழுவிய; குழலினில் - புல்லாங் குழலினின்றும்; சங்கில் - சங்க வாத்தியங் களினின்றும்; தாரையில் - ஒழுங்காகத் தொடர்ந்து வரும்; எழுகுரல் - எழுகின்ற குரல்; இன்றியே - இல்லாமலே; என்றும் இல்லது - என்றும் இல்லாத; ஓர் அழுகுரல் - ஒப்பற்ற அழுகைக் குரல்; அன்று - அன்றைய தினம்; அவ் இலங்கைக்கு - அந்த இலங்கையில்; பிறந்தது - தோன்றியது.

○ ○

மடித்த பில வாய்கள் தொறும்
வந்து புகை முந்தத்
துடித்த தொடர் மீசைகள்
சுருக்கொள உயிர்ப்பக்
கடிதத் கதிர் வாள் எயிறு
மின் கனல மேகத்து
இடித்த உருமு ஒத்து உரறி
''யாவர் செயல்?'' என்றான்.

### இலங்கையிலே

இராவணன் தனது சிங்காதனத்தில் வீற்றிருக்கிறான். மூக்கறுபட்ட சூர்ப்பணகை ஓடி வருகிறாள். அவன் முன் விழுந்து புரண்டு அழுகிறாள். கண்டான் இராவணன்; கொண்டான் கோபம். பல்லை நறநறவென்று கடித்தான்; உதட்டை மடித்தான்; அனல் கக்கும் பெருமூச்சு விட்டான். "மூக்கை அறுத்தவன் எவன்?" என்று இடிபோல முழங்கினான்.

○ ○

(இராவணன் என்ற வடமொழிப் பெயர் கூச்சலிடுபவன் என்றும் கூச்சலிடச் செய்பவன் என்றும் பொருள்படும். சிவனது கயிலங்கிரியை இராவணன் பெயர்த்த போது அதற் கீழே அவனுடைய விரல்கள் நசுங்கின. வலி பொறுக்க முடியாமல் பேரிரைச்சல் இட்டான் அதனால் இப் பெயர் வந்தது.) மடித்த - கோபத்தால்உதடு மடிக்கப்பட்ட; பிலம் வாய்கள் தொறும் - குகை வாய் போன்று; ஆழ்ந்து அகன்று நீண்டுள்ள தனது பத்து வாய்களிலும்; புகை வந்து முந்த - கோபத்தால் புகை வெளிச் செல்லவும்; துடித்த தொடர் மீசைகள் - பட பட என்று துடித்த நெடுந்தூரம் தொடர்ச்சியாக உள்ள மீசை; சுருக்கொள்ள - தீப்பிடிக்கும் படி; உயிர்ப்ப - சினத்தீயுடன் கலந்த மூச்சு விடவும்; கடித்த- கோபத்தால் நறநறவென்று கடித்த; வாள் எயிறு - கூர்மை யும் ஒளியும் கொண்ட பற்கள்; மின் கனல - மின்னல் போல் ஒளி வீச; மேகத்து இடித்த உரம் ஒத்து - மேகம் இடித்த இடிபோல; உரறி - பெரு முழக்கம் செய்து; யாவர் செயல் என்றான் - இது எவருடைய செயல் என்று கேட்டான்.

○ ○

"கானிடை அடைந்து
புவி காவல் புரிகின்றார்
மீன் உடை நெடுங் கொடியினோன்
அனையர் மேல் கீழ்
ஊன் உடை உடம்பு உடைமையோர்
உவமை இல்லார்
மானிடர் தடிந்தனர்கள்
வான் உருவி" என்றாள்.

மானிடர் இருவர் காட்டிலே வந்து அரசு செலுத்து கின்றனர். ஈரேழு பதினான்கு உலகங்களிலும் அவரை ஒப்பாரிலர்; மன்மதன் போன்றார்; மனித உடல் தாங்கியவர்; வாளை உருவி என் மூக்கை அரிந்து விட்டனர்.

○ ○

மேல் - மேலே உள்ள உலகங்களிலும்; கீழ் - கீழே உள்ள உலகங்களிலும்; உவமை இல்லார் - உவமை கூறுதற்கு வேறு எவரும் இல்லாதவர்; மானிடர் - மானிடர்; ஊன் உடை - மாமிச தேகம் கொண்டார்; கானிடை அடைந்து - காட்டிலே வந்து தங்கி; புவி காவல் புரிகின்றார் - ராஜ்ய பாரம் செய்கின்றனர்; மீன் உடை - மீன் பொறிக்கப் பெற்ற; நெடுங்கொடியினோன் - நீண்ட கொடியுடைய மன்மதன்; அனையர் - போன்றோர்; வாள் உருவி - தம் வாளை உருவி; தடிந்தனர்கள் - என் மூக்கை அறுத்துவிட்டார்கள்.

○ ○

"மன் மதனை ஒப்பர்
மணி மேனி; வட மேருத்
தன் மதன் அழிப்பர் திரள்
தோளின் வலி தன்னால்;
என் அதனை இப்பொழுது
இசைப்பது? உலகு ஏழின்
நல் மதன் அழிப்பர் ஓர்
இமைப்பின் நனிவில்லால்"

மன்மதனைப் போலும் அழகினர்; அழகு மட்டும் உடையவர் அல்லர்; வடக்கே உள்ள மேரு மலையின் செருக்கை அடக்கும் புயவலியுடையவர்; கண்மூடிக் கண் திறக்கும் நேரத்தில் ஏழுலகங்களையும் அழிக்கும் வில்திறம் படைத்தோர்; அதை இப்பொழுது சொல்வதில் பயன் என்ன?

○ ○

மணிமேனி - உடல் அழகில்; மன்மதனை ஒப்பர் - மன்மதனுக்கு ஒப்பாவார்; திரள்தோளின் வலி தன்னால் - தமது திரண்ட தோள்களின் வலிமையால்; வடமேரு தன் - வடக்கே உள்ள மேருமலையின்; மதன் - செருக்கை;

அழிப்பர் - அழிக்க வல்லவர்; வில்லால் - வில் வலிமையினால்; ஓர் இமைப்பில் - கண் மூடிக் கண் திறக்கும் முன்; உலகு ஏழின் - ஏழு உலகங்களின்; நல் மதன் - சிறந்த வலியை; அழிப்பர் - அழிப்பார்கள்; அதனை இப்பொழுது இசைப்பது என்? - அதனை இப்பொழுது எவ்வாறு எடுத்து இயம்புவேன்?

O O

மருந்து அனைய தங்கை
மணி நாசி வடிவாளால்
அரிந்தவரும் மானிடர்
அறிந்தும் உயிர் வாழ்வார்
விருந்து அனைய வாளொடும்
விழித்து இறையும் வெள்காது
இருந்தனன் இராவணனும்
இன் உயிர் கொடு இன்னும்

ஒரே ஒரு தங்கை; எஞ்சியிருக்கிறாள்; தேவாமிர்தம் போல் கிடைத்தற்கு அரியவள். அவளது மூக்கை அரிந்து விட்டனர். அரிந்தவரோ மானிடர். அவரோ இன்னமும் உயிரோடு இருக்கின்றனர்;

சிவபெருமான் அளித்த சந்திரஹாஸம் எனும் வாளை வைத்துக்கொண்டு, இது வரை அதை உபயோகிக்காமல் போற்றி வைத்து, இராவணன் என்பவன் இன்னமும் இருக்கிறான்.

இவ்வாறு இராவணன் தன்னைப் படர்க்கையில் பழித்து கொண்டான்.

O O

மருந்து அனைய - தேவாமிர்தம்போல் கிடைத்தற்கு அரிய; தங்கை - தங்கையாகிய சூர்ப்பணகையின்; மணி நாசி - அழகிய மூக்கினை; வடிவாளால் - கூரிய தம்

வாளினால்; அரிந்தவரும் மானிடர் - அறுத்தவரும் அற்ப மானிடரே; அறிந்தும் - இக் கொடும் செயலை அறிந்த பிறகும்; உயிர் வாழ்வார் - அவர்கள் உயிருடன் இருக்கின்றனர்; இராவணனும் - இராவணன் என்ற பெயர் கொண்டவனும்; விருந்து அனைய வாள் ஒடும் - புதிதான வாளோடும்; விழித்து - தன் இருபது கண்களும் கொட்ட விழித்துப் பார்த்துக்கொண்டு; இறையும் வெள்காது - சிறிதும் வெட்கமில்லாமல்; இன் உயிர் கொடு - தன் இனிய உயிரை வைத்துக்கொண்டு; இருந்தனன் - உயிரோடு இருக்கிறான்.

O O

என்று உரை செயா,
நகைசெயா எரி விழிப்பான்
''வன் துணை இலா இருவர்
மானிடரை வாளால்
கொன்றிலர்களா, நெடிய
குன்றுடைய கானில்
நின்ற கரனே முதலினோர்
நிருதர்'' என்றான்.

''காட்டிலே உனக்குக் காவலாக இருந்த கரன் முதலானோர் என்ன செய்து கொண்டிருந்தனர்? துணை வலிமையற்ற இருவரேயாக உள்ள அம் மானிடரைக் கொன்றனர் இல்லையா?'' என்று கேட்டான். எப்படிக் கேட்டான்? கண்களில் தீப்பொறி பறக்கக் கேட்டான்.

O O

என்று உரை செயா - என்று சொல்லி; நகை செயா - சிரித்து; எரி விழிப்பான் - தீப்பொறி பறக்க விழிப்பவனாய்; (சூர்ப்பணகையை நோக்கி) நெடிய குன்றுடைய கானில் நின்ற - நீண்ட மலைகளையுடைய காட்டிலே உனக்குக்

காவலாய் நின்ற; கரனே முதலினோர் - கரன் முதலாக உள்ள; நிருதர் - அரக்கர்; வன்துணை இலா - வலிய துணை இல்லாத; இருவர் மானிடரை - இருவரே ஆக உள்ள அம் மனிதரை; வாளால் - தமது வாளினால்; கொன்றிலர்களா - கொன்றாரில்லையா? என்றான் - என்று கேட்டான்.

O O

அற்று அவன் உரைத்த லோடும்
அழுது இழி அருவிக் கண்ணாள்
எற்றிய வயிற்றள், பாரினிடை
வீழுந்து ஏங்குகின்றாள்
"சுற்றமும் தொலைந்தது ஐய!
நொய்து" எனச் சுமந்த கையள்
உற்றது தெரியும் வண்ணம்
ஒரு வகை உரைக்கலுற்றாள்

அப்படி அவன் கேட்ட உடனே கண்களிலிருந்து அருவி போல் நீர் பொழிந்து கொண்டு, வயிற்றிலே அடித்துக் கொண்டு தரையிலே கிடந்து புரண்டு அழுது கொண்டிருந்த சூர்ப்பணகை, தலைமீது இருகைகளையும் வைத்துக்கொண்டு "நம் சுற்றம் தொலைந்தது ஐயா!" என்று அலறினாள். கானிலே நிகழ்ந்தவற்றை ஒருவாறு உரைக்கலானாள்.

O O

அற்று அவன் உரைத்தலோடும் - அவ்வாறு இராவணன் கேட்ட அளவில்; அழுது இழி அருவி கண்ணாள் - அழுது வீழ்கின்ற அருவி போன்று நீர் சொரியும் கண்ணினள் ஆகியவளும்; எற்றிய வயிற்றள் - தனது இரு கைகளாலும் வயிற்றிலே அடித்துக் கொண்டவளும்; பாரின் இடை வீழ்ந்து - பூமியிலே விழுந்து; ஏங்குகின்றாள் - அழுது புரண்டு வருந்துகின்றவளும் ஆகிய சூர்ப்பணகை (அவனை

நோக்கி) ஐய - ஐயனே! சுற்றமும் அக் கரன் முதலாகிய நம் சுற்றமும்; நொய்து தொலைந்தது - எளிதில் அழிந்து போயிற்று; என - என்று கூறி; சுமந்த கையாள் - தலைமேல் கையை வைத்துக்கொண்டு; உற்றது தெரியும் வண்ணம் - அங்கே நடந்தது தெரியும்படி; ஒரு வகை - ஒருவாறு; உரைக்கலுற்றாள் - சொல்லத் தொடங்கினாள்.

○ ○

"சொல் என்தன் வாயில் கேட்டார்
தொடர்ந்து எழு சேனையோடும்
கல் என்ற ஒலியில் சென்றார்
கரன் முதல் காளை வீரர்
எல் ஒன்று கமலச் செங்கண்
இராமன் என்று இசைத்த ஏந்தல்
வில் ஒன்றில் கடிகை மூன்றில்
ஏறினர் விண்ணின்" என்றாள்.

"மூக்கறுபட்ட செய்தியை நான் வந்து கரன் முதலியோரிடம் சொன்னேன். சொல் கேட்ட அளவில் சேனைகள் பின் தொடரப் புறப்பட்டனர். செந்தாமரை போலும் அழகிய கண்களை உடைய அந்த இராமன் எனும் பெருமை மிக்கோன் ஒரே வில்லினால் மூன்றே நாழிகையில் அவர்கள் எல்லாரையும் விண் உலகுக்கு அனுப்பிவிட்டான்" என்றாள்.

○ ○

சொல் - நான் கூறிய அச் சொற்களை; என்தன் வாயில் கேட்டார் - என் வாயினாலே நான் சொல்லக்கேட்டனராய்; தொடர்ந்து எழு சேனையோடும் - தம்மைப் பின் தொடர்ந் தெழுந்த சேனைகளோடும்; கல் என்ற ஒலியில் - கல் என்ற ஒலியோடு; சென்ற கரன் முதல் காளை வீரர் - கரன்

முதலான வீரக் காளைகள்; எல் ஒன்று - சூரியனுடைய கிரணங்கள் பட்ட; கமலம் - தாமரைப் போல்; செங்கண் - சிவந்து ஒளிரும் கண்களை உடைய; இராமன் என்று இசைத்த - இராமன் எனும் பெயர் கொண்ட; ஏந்தல்- பெருமைமிக்க ஒருவனது; வில் ஒன்றில் - ஒரே வில்லால்; கடிகை மூன்றில் - மூன்றே நாழிகை அளவில்; விண்ணில் ஏறினர் - விண்ணுலகு புகுந்தனர்; என்றாள்.

○ ○

ஆயிடை எழுந்த சீற்றத்து
அழுந்திய துன்பம் ஆழித்
தீயிடை உருக்கும் நெய்யில்
சீற்றத்துக்கு ஊற்றம் செய்ய
"நீ இடை இழைத்த குற்றம்
என்னை கொல்? நின்னை இன்னே
வாயிடை இதழும் மூக்கும்
வலிந்து அவர் கொய்ய" என்றான்.

அந்த மானிடர் இவ்வாறு உன் மூக்கையும், உதடுகளையும் அரியும்படியாக நீ அவர்களுக்குச் செய்த குற்றம் என்ன? என்று கேட்டான் இராவணன். யாரை நோக்கி? சூர்ப்பணகையை நோக்கி.

○ ○

அ இடை - அப்பொழுது இராவணன்; எழுந்த - பொங்கி எழுந்த; சீற்றத்து அழுந்திய துன்பம் மாறி - கோபத்தில் அழுந்திய தன் துன்பம் மாறுபட்டு வேறாகி; தீ இடை உருக்கு நெய்யில் - நெருப்பிலே வார்த்த நெய்போல; சீற்றத்துக்கு ஊற்றம் செய்ய - தான் கொண்ட கோபத்திற்கு வலியை உண்டாக்க; அவர் - அந்த மானிடர்; நின்னை - உன்னை; இன்னே - இவ்விதமாக; வாய் இடை

இதழும் மூக்கும் - வாயிடமான உதடும் மூக்கும்; வலிந்தனர் கொய்ய - வலிந்து அரியும்படியாக; நீ இடை இழைத்த குற்றம் என்? - நீ அவரிடம் செய்த குற்றம் யாது? என்றான் - என்று கேட்டான்.

O O

"என் வயின் உற்ற குற்றம்
யாவர்க்கும் எழுத ஒண்ணாத்
தன்மையன் இராமனோடும்
தாமரை தவிரப் போந்தாள்
மின் வயின் மருங்குல் கொண்டாள்
வேய் வயின் மென்தோள்
கொண்டாள்
பொன் வயின் மேனி கொண்டாள்
பொருட்டினால் புகுந்தது" என்றாள்.

நீ செய்த குற்றம் என்ன? என்று கேட்ட இராவணனுக்குப் பதில் சொல்கிறாள் சூர்ப்பணகை. என்ன சொல்கிறாள்? "ஓவியற்கு எழுத ஒண்ணா உருவத்தனாகிய இராமன்பால் பெண் ஒருத்தி இருக்கிறாள். அவளோ! தாமரை மலரை நீங்கி வந்த திருவினாள்; மின்னல் போலும் இடையுடையாள்; மூங்கில் போலும் மெல்லிய தோள் உடையாள்; பொன் போன்ற மேனியாள்; அவள் பொருட்டால் விளைந்தது" என்றாள்.

O O

(அது கேட்ட சூர்ப்பணகை) என்வயின் உற்ற குற்றம் - என்பால் ஏற்பட்ட தவறு (யாது எனில்); யாவர்க்கும் எழுத எண்ணாத - சித்திரக்கலை வல்லார் எவர்க்குமே எழுத முடியாத; தன்மையன் - சிறப்பு அமைந்த; இராமனோடும் - அந்த இராமனோடும்; தாமரை தவிரப் போந்தாள் -

தனக்கு இருப்பிடமான தாமரை மலரைவிட்டு வந்தவளும்; மின்வயின் மருங்குல் கொண்டாள் - மின்னலிடமிருந்து தனது இடையைப் பெற்றவளும்; வேய்வயின் மென்தோள் கொண்டாள் - மூங்கிலிடமிருந்து தன் மென்மையான தோள்களைப் பெற்றவளும்; பொன் வயின் மேனி கொண்டாள் - பொன்னிடமிருந்து தன் மேனியைக் கொண்டவளுமாகிய ஒருத்தி; பொருட்டினால் - காரணத்தால்; புகுந்தது என்றாள் - நிகழ்ந்தது என்றாள்.

○ ○

"இன்னவள் தன்னை உன் பால்
உய்ப்பல் என்று எடுக்கல் உற்ற
என்னை அவ் இராமன் தம்பி
இடை புகுந்து இலங்குவாளால்
முன்னை மூக்கு அரிந்து விட்டான்;
முடிந்தது என் வாழ்வு; முன் நின்
சொன்னபின் உயிரை நீப்பான்
துணிந்தனென்" என்னச்
சொன்னாள்.

"இப்படிப்பட்ட சீதை என்பாளைத் தூக்கி வந்து உன் பால் சேர்க்க எண்ணி அவள் பால் நண்ணிய என்னை, இராமனின் தம்பியாகிய லட்சுமணன் என்பான் வந்து இடையே புகுந்து நான் அவளைத் தூக்கு முன் என் மூக்கை அரிந்து விட்டான். என் வாழ்வு நாசமாயிற்று இதனை உன் பால் தெரிவித்துவிட்டு உயிர் துறப்பது என்று முடிவு செய்தேன்" என்றாள்.

○ ○

இன்னவள் தன்னை - இப்படிப்பட்ட அழகியாகிய சீதை என்பாளை; உன்பால் உய்ப்பல் என்று - உன்னிடம் சேர்க்கக் கருதி; எடுக்கல் உற்ற என்னை - தூக்கிக்கொண்டு

வர அவள் அருகில் சென்ற என்னை; அ இராமன் தம்பி - அந்த இராமனுடைய தம்பியாகிய லட்சுமணன்; இடைபுகுந்து - நடுவே ஓடி வந்து புகுந்து; இலங்குவாளால் - தன்னிடம் விளங்கிய ஒரு வாளினால்; முன்னை - அவளை நான் எடுக்கப் புகு முன்பே; மூக்கு அரிந்துவிட்டான் - என் மூக்கை அறுத்து விட்டான்; என் வாழ்வும் முடிந்தது - அதனால் என் வாழ்வும் முடிந்தே போய்விட்டது; உன்னில் சொன்ன பின் - இவற்றையெல்லாம் உன் பால் கூறிய பின்; உயிரை நீப்பான் துணிந்தனென் - உயிர் துறப்பது என்று முடிவு செய்தேன்; என்ன - என்று சொன்னாள்.

○ ○

மஞ்சு ஒக்கும் அளக ஓதி
　　மழை ஒக்கும் வடித்த கூந்தல்
பஞ்சு ஒக்கும் அடிகள்; செய்ய
　　பவளத்தை விரல்கள் ஒக்கும்
அம் சொற்கள் அமுதில் அள்ளிக்
　　கொண்டவள் வதனம் ஐய,
கஞ்சத்தின் அளவிற்றேனும்
　　கடலினும் பெரிய கண்கள்.

சீதையின் முகத்திலே வந்து தொங்குகின்ற சுருண்ட கூந்தல் மேகம் போல் இருக்கும். வாரி முடித்த கூந்தல் நீர் உண்ட கருமேகம்போல் இருக்கும். அவள் பாதங்களோ செம்பஞ்சு போல் இருக்கும். விரல்களோ சிவந்த பவளம் போல் இருக்கும். முகமோ தாமரை மலர் போன்றது. கடல் போன்ற அகல கண்கள். அவள் வாயினின்றும் உதிர்க்கின்ற சொற்கள் அமுதம்!

○ ○

ஐய - ஐயனே! அம்சொற்கள் - அழகிய சொற்களை; அமுதில் - அமுதத்திலிருந்து; அள்ளிக்கொண்டவள் - வாரி

எடுத்துக் கொண்டவள் (அவள்); வதனம் - அவளது முகம்; கஞ்சத்தின் அளவிற்றேனும் - தாமரை மலர் அளவினது ஆயினும்; கண்கள் - அவளுடைய கண்கள்; கடலினும் பெரிய - கடலை விட அகன்று ஆழமானவை; பெரியவை; அளக ஓதி - முன்னே குழைந்து விளங்கும் கூந்தல்; மஞ்சு ஒக்கும் - மேகம் போலிருக்கும்; வடித்த கூந்தல் - பின்னே வாரி முடித்துத் தொங்க விடப்பட்ட கூந்தலோ; மழை ஒக்கும் - நீருண்ட கருமேகம் போலிருக்கும்; அடிகள் - அவள் பாதங்களோ; பஞ்சு ஒக்கும் - செம்பஞ்சு போலிருக்கும்; விரல்கள் - அவளுடைய விரல்கள்; செய்ய பவளத்தை ஒக்கும் - சிவந்த பவளம்போல் இருக்கும்.

○ ○

வில் ஒக்கும் நுதல் என்றாலும்
வேல் ஒக்கும் விழி என்றாலும்
பல் ஒக்கும் முத்து என்றாலும்
பவளத்தை இதழ் என்றாலும்
சொல் ஒக்கும்; பொருள் ஒவ்வா ஆல்
சொல்லலாம் உவமை உண்டோ?
நெல் ஒக்கும் புல் என்றாலும்
நேர் உரைத்தாக வற்றோ?

அவளுடைய புருவங்கள் விற்போன்றவை என்று சொன்னாலும், விழிகள் வேல் போன்றவை என்று சொன்னாலும், முத்துப்போன்ற பற்கள் என்று சொன்னாலும், பவளம் போலும் உதடுகள் என்று சொன்னாலும் சொல் பொருந்துமே அன்றிப் பொருள் பொருந்தாது. உவமை சொல்லக் கூடியது எதுவுமே இல்லை. புல்மாதிரி இருக்கும் நெல் என்றால் அது சரியாகுமா?

○ ○

நுதல் - அவளுடைய புருவம்; வில் ஒக்கும் - வில் போலிருக்கும்; என்றாலும் - என்று சொன்னாலும்; விழி - கண்; வேல் ஒக்கும்-வேல் போலிருக்கும்; என்றாலும் - என்று சொன்னாலும்; பல் - அவளுடைய பற்கள்; முத்து ஒக்கும் என்றாலும் - முத்துப் போன்றவை என்று சொன்னாலும்; பவளத்தை இதழ் என்றாலும் - பவளத்தை அவளது உதடுகளுக்குச் சமமாகச் சொன்னாலும்; சொல் ஒக்கும் - சொல் அளவில் ஒத்திருக்கும்; பொருள் ஒவ்வா - பொருள் அமைதி தகுதி பெறா; ஆல் - ஆதலால்; சொல்லலாம் உவமை உண்டோ? - சொல்லத்தக்க உவமானப் பொருள் இந்த உலகில் உண்டோ? இல்லை. நெல் புல் ஒக்கும் என்றாலும் - நெல் புல்லை ஒத்திருக்கும் என்று சொன்னாலும்; நேர் உரைத்தாக அற்றோ? - சொல் அளவில் தகுதி பெறுமே அன்றிப் பொருளில் தகுதி பெறுமோ; பெறாது அன்றோ?

○ ○

தோளையே சொல்லுகேனோ?
சுடர் முகத்து உலவுகின்ற
வாளையே சொல்லுகேனோ?
அல்லவை வழுத்துகேனோ?
மீளவும் திகைப்பதல்லால்
தனித்தனி விளம்பல் ஆற்றேன்?
நாளையே காண்டி அன்றே
நான் உனக்கு உரைப்பது என்னோ.

அவளுடைய தோளின் அழகைச் சொல்லுவேனா? ஒளி வீசும் முகத்திலே உலவும் வாள் போன்று கூரிய விழிகளைச் சொல்லுவேனா? ஏனைய உறுப்புகளைச் சொல்வேனா? எதைச் சொல்வது? எப்படிச் சொல்வது? தனித் தனியே சொல்ல முடியாமல் தவிக்கிறேன். நாளைக்குத்

தான் நீ போகிறாயே! நேரில் கண்டு கொள். நான் சொல்வது எதற்கு?

○ ○

தோளையே சொல்லுகேனோ - அவளுடைய தோள் அழகைச் சொல்வேனா? சுடர் முகத்து உலவுகின்ற வாளையே சொல்லுகேனோ? - ஒளி பொருந்திய அவள் முகத்தில் உலவுகின்ற வாள் போலும் கண்களைச் சொல் வேனோ? அல்லவை வழுத்துகேனோ? - மற்றும் சொல்லக் கூடிய அவயவங்கள் பற்றிக் கூறுவேனோ? மீளவும் திகைப் பது அல்லால் - வருணித்துச் சொல்லும்போது மீண்டும் திகைக்கிறேனே அன்றி; தனித்தனி விளம்பல் ஆற்றேன் - அவற்றைத் தனித்தனி எடுத்துச் சொல்ல முடியாதிருக் கிறேன். நாளையே காண்டி அன்றோ - நாளை நீ காணப் போகிறாய் அல்லவா? நான் உனக்கு உரைப்பது என்னோ - நான் சொல்வது எதற்கு.

○ ○

பாகத்தில் ஒருவன் வைத்தான்;
பங்கயத்து இருந்த பொன்னை
ஆகத்தில் ஒருவன் வைத்தான்;
அந்தணன் நாவில் வைத்தான்;
மேகத்தில் பிறந்த என்னை
வென்ற நுண் இடையை நீயும்
மாகத் தோள் வீர, பெற்றால்
எங்ஙனம் வைத்து வாழ்தி?

உமையைத் தனக்கு உரியவளாகப் பெற்றான் சிவன். தன் இடது புறம் வைத்துக் கொண்டான். திருமகளைத் தனக்கு உரியவளாகப் பெற்றான் திருமால்; மார்பிலே வைத்துக் கொண்டான். கலைமகளைத் தனக்கு உரிமையாகப் பெற்றான் பிரமன்; நாவிலே வைத்துக் கொண்டான். சீதையைப் பெற்றால் நீ எவ்வாறு வைத்து வாழ்வாய்?

இவ்வாறு தம் ஐயனைப் புகழ்கிறாள் அந்தச் சூர்ப்பணகை. அபசகுனத்தின் அறிகுறி இங்கேயே தொனிக்கிறது "சீதையைப் பெற்றால் நீ எங்ஙனம் வைத்து வாழ்வாய்?" என்று கேட்கிறாள். "வாழமாட்டாய்; வீழ்வாய்" என்பது தொனிக்கிறது.

○ ○

மாகத் தோள் வீர - பெரிய வானம் அளாவிய தோள்களை உடைய வீரனே! ஒருவன் பாகத்தில் வைத்தான் - மும்மூர்த்திகளில் ஒருவனாகிய சிவன் தனது மனைவியாகிய உமையை இடது பாகத்தில் வைத்துக்கொண்டான்; ஒருவன் - திருமால்; பங்கயத்து இருந்து பொன்னை - தாமரையில் நின்ற திருமகளை; ஆகத்தில் வைத்தான் - தனது மார்பில் வைத்துக் கொண்டான்; அந்தணன் - பிரமன்; நாவில் வைத்தான் - (தனது மனைவியாகிய கலைமகளை) தனது நாவிலே வைத்துக் கொண்டான்; நீயும் மேகத்தில் பிறந்த மின்னை - மேகத்தில் பிறந்த மின்னலை; வென்ற - வெற்றிகண்ட; நுண் இடையை - நுண்ணிய இடையாளாகிய சீதையை; பெற்றால் - அடையப் பெற்றால்; எங்ஙனம் வைத்து வாழ்தி? - எவ்வாறு வைத்து வாழ்வாய்? (வாழ மாட்டாய் என்ற பொருள் இங்கே தொனிப்பது காண்க.)

○ ○

இந்திரன் சசியைப் பெற்றான்;
இருமூன்று வதனத்தோன் தன்
தந்தையும் உமையைப் பெற்றான்;
தாமரைச் செங்கணானும்
செந்திருமகளைப் பெற்றான்;
சீதையைப் பெற்றாய் நீயும்
அந்தரம் பார்க்கின், நன்மை
அவர்க்கு இலை உனக்கே ஐயா.

தேவேந்திரன் இந்திராணியை மனைவியாகப் பெற்றான். ஆறுமுகப் பெருமானின் தந்தையாகிய சிவபெருமான் உமையைப் பெற்றான். செந்தாமரைக் கண்ணனாகிய திருமால் இலட்சுமியைப் பெற்றான். அவ்வாறே நீயும் சீதையைப் பெற்றாய் நன்மை யாருக்கு? அவருக்கா? இல்லை! உனக்கே.

○ ○

ஐயா - ஐயனே; இந்திரன் - தேவேந்திரன்; சசியைப் பெற்றான் - இந்திராணியைத் தனக்குரியவளாகப் பெற்றான்; இரு மூன்று வதனத்தோன் - ஆறுமுகப் பெருமானின்; தந்தையும் - தந்தையாகிய சிவபெருமானும்; உமையைப் பெற்றான் - பார்வதியைப் பெற்றான்; தாமரை செங்கணானும் - செந்தமாரை போலும் கண்கள் கொண்ட திருமாலும்; செந்திருமகளைப் பெற்றான் - அழகிய இலட்சுமியைப் பெற்றான்; (அவ்வாறே) நீயும் சீதையைப் பெற்றாய் - நீயும் சீதையைப் பெற்றுவிட்டாய்; அந்தரம் பார்க்கின் - நன்மை உனக்கே அவர்க்கு இல்லை.

○ ○

கரனையும் மறந்தான்; தங்கை
மூக்கினைக் கடிந்தும் நின்றான்
உரனையும் மறந்தான்; உற்ற
பழியையும் மறந்தான்; வெற்றி
அரனையும் கொண்ட காமன்
அம்பினால், முன்னைப் பெற்ற
வரனையும் மறந்தான்: கேட்ட
மங்கையை மறந்திலாதான்.

சூர்ப்பணகை சொல்லக் கேட்ட மங்கையை மறவாத இராவணன், தன்னை முற்றிலும் மறந்தான்.

கரனும் பிறரும் மாய்ந்ததை மறந்தான்; தங்கையின் மூக்கை அறுத்தவன் திறமையும் மறந்தான்; அதனால் விளைந்துள்ள அவமானத்தையும் மறந்தான்; சிவனையும் வெற்றி கண்ட காமனின் அம்பினால் தாக்கப்பட்டுத் தான் பெற்ற வரனையும் மறந்தான்.

O O

கேட்ட மங்கையை மறந்திலாதான் - இவ்வாறு சூர்ப்பணகை கூறக் கேட்ட சீதை எனும் மங்கையை மறந்திலாத இராவணன்; கரனையும் மறந்தான் - தம்பியாகிய கரன் மாண்டதையும் மறந்தான்; தங்கை மூக்கினைக் கடிந்தும் நின்றான் உரனையும் மறந்தான் - தங்கையாகிய சூர்ப்பணகையின் மூக்கை அறுத்த பின்னரும் நிற்கும் வீரனின் வலிமையையும் மறந்தான்; உற்ற பழியையும் மறந்தான் - அதனால் தனக்கு நேர்ந்த இழிவையும் மறந்தான்; அரனையும் கொண்ட - சிவனையும் வெற்றி கண்ட; காமன் அம்பினால் - மன்மதன் கணையினால்; முன்னை வரனையும் மறந்தான் - முன்பு தான் பெற்ற சிறந்த வரத்தையும் மறந்தான்.

O O

'செந்தாமரைக் கண்ணோடும்
செங்கனி வாயினோடும்
சந்தார் தடந்தோளொடும்
தாழ் தடக்கைகளோடும்
அம்தார் அகலத்தொடும்
அஞ்சனக் குன்றம் என்ன
வந்தான் இவன் ஆகும் அவ்வல்வில்
இராமன்'' என்றான்.

சூர்ப்பணகையோ இராமனையே எண்ணி எண்ணி இரவு முழுவதும் தூங்கவில்லை. இராவணன் கண்முன் எப்படி

சீதையின் உரு தென்பட்டதோ அதே போல சூர்ப்பணகை யின் கண்முன் எப்போதும் இராமனுடைய உருவே நின்று கொண்டிருந்தது.

அவள் சொன்னாள்,

"செந்தாமரை போன்ற கண்களுடனும், கோவைப்பழம் போல் சிவந்த வாயுடனும், அழகான தோள்களோடும், முழங்கால் வரை தொங்கும் கைகளுடனும், அகன்ற மார்புடனும், மலை போல் நிற்கிறானே இவன்தான் வில் தரித்த அந்த இராமன்" என்றாள்.

○ ○

"செந்தாமரைக் கண்ணோடும் - செந்தாமரை போன்ற கண்களொடும்; செங்கனி வாயினோடும் - சிவந்த கோவைப் பழம் போன்ற வாயுடனும்; சந்து ஆர் தடம் தோளொடும் - அழகு நிறைந்த பெரிய தோள்களுடனும்; தாழ் தடக்கைகளோடும் - முழங்கால் அளவு தொங்குகின்ற பெரிய கைகளோடும்; அம்தார் அகலத்தொடும் - அழகிய மாலையணிந்த அகன்ற மார்புடனும்; அஞ்சனக் குன்றம் என - மை மலைபோல்; வந்தான் - வந்தவனாகிய இவன் தான்; அவ் வல் வில் இராமன் என்றாள் - வலிய வில் உடைய இராமன் என்றாள்.

○ ○

பொய் நின்ற நெஞ்சில் கொடியாள்
புகுந்தாளை நோக்கி
நெய் நின்ற கூர் வாளவன்
நேர் உறநோக்கு, "நங்காய்!
மைந் நின்ற வாள் கண் மயில்
நின்று என வந்து என் முன்னர்
இந் நின்றவள் ஆம் கொல் இயம்பிய
சீதை?" என்றான்.

சூர்ப்பணகை மூட்டி விட்ட காமத்தீ கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது. சீதையையே எண்ணி எண்ணி இரவு முழுவதும் உறங்கவில்லை இராவணன்.

காலையில் அவனைக் காண வந்தாள் சூர்ப்பணகை. "நன்றாகப் பார்! இதோ என் கண் முன் ஒரு பெண் நிற்கிறாளே! மை தீட்டப்பெற்று வாள் போலும் கண்களுடன் ஒரு மயில் வந்து நிற்பது போல் நிற்கிறாளே! இந்தப் பெண் தானா நீ சொன்ன அந்த சீதை நன்றாகப் பார்த்துச் சொல்" என்று கேட்டான் இராவணன்.

○ ○

நெய் நின்ற கூர் வாளவன் - பகைவரது நிணம் தோய்ந்து நின்ற கூரியவாளாயுதத்தை உடைய இராவணன்; பொய் நின்ற நெஞ்சில் கொடியாள் புகுந்தாளை நோக்கி- அங்கு வந்த பொய் சேர் மனத்தாளாகிய கொடிய சூர்ப் பணகையைப் பார்த்து; நங்காய்! - பெண்ணே! நேர் உற நோக்கு - நன்றாகப் பார்; மை நின்ற - மை தீட்டப்பட்ட; வாள் கண் - வாள் போலும் கண்களை உடைய; மயில் நின்று என - ஒரு மயில் வந்து நின்றது போல, வந்து என் முன்னர் - என் முன் வந்து; இந்நின்றவள் ஆம் கொல் - இதோ நிற்கின்றாளே; இவள்தானா? இலம்பிய சீதை - நீ சொன்ன சீதை.

○ ○

"பேதாய்! பெண்ணைப் பற்றிக் கேட்கிறேன் நான், ஆணைப் பற்றிச் சொல்கிறாய் நீ. நாம் தான் மாயம் செய்வதில் வல்லவர் என்றால் மானிடர் நம்மினும் வல்லவரோ? நம்மிடமே வந்து மாயம்செய்கிறார்?"

இவ்வாறு கூறினான் இராவணன். அவனோ அந்தச் சீதையையே எண்ணி அவள் தன் எதிரே வந்து நிற்பாள் போல் காண்கிறான்; அவளோ இராமனையே இடை

விடாது எண்ணி எண்ணி அவனே தன் எதிர் வந்து நிற்பான் போல் காண்கிறாள். அவன் சீதையைக் கேட்கிறான். அவள் இராமனைச் சொல்கிறாள்.

இரண்டும் உரு வெளித் தோற்றமே! சமயம் பார்த்து மெதுவாக விண்ணப்பம் நீட்டுகிறாள் சூர்ப்பணகை. "நீ போய் சீதையைத் தூக்கிக்கொண்டு வந்து இன்பமடை, நான் இன்புறுவதற்கு இராமனை எனக்குக் கொடு" என்கிறாள்.

○ ○

மீன் கொண்டு ஊடாடும் வேலை
மேகலை உலகம் ஏத்தத்
தேன் கொண்டு ஊடாடும் கூந்தல்
சிற்றிடைச் சீதை என்னும்
மான் கொண்டு ஊடாடு நீ; உன்
வாள் வலி உலகம் காண
யான் கொண்டு ஊடாடும் வண்ணம்
இராமனைத் தருதி என்பால்!

வண்டு மொய்த்த மலர் கூந்தலும், சிற்றிடையும் கொண்ட சீதை என்கிற மான் போன்ற மங்கையைத் தூக்கிக் கொண்டு வந்து நீ இன்பம் அடைவாய் நான் இன்புறும் வண்ணம் இராமனை எனக்குக்கொடு.

○ ○

மீன் கொண்டு - மீன்களைத் தன்னிடத்திலே கொண்டு; ஊடாடும் - அலை வீசுகிற; வேலை - கடலையே; மேகலை - மேகலாபரணமாக உடைய; உலகம் - இந்த உலகத்தினர்; ஏத்த - புகழும்படி; தேன் கொண்டு ஊடாடும் கூந்தல் - வண்டுகள் தனக்கு இடமாகத் திரியும் கூந்தல்; சிற்றிடை - சிறிய இடையையும் உடைய; சீதை என்னும் - சீதை

என்கிற; மான் கொண்டு - மான் போலும் மங்கையைத் தூக்கிக்கொண்டு வந்து; ஊடாடு நீ - நீ இன்புறுவாய்; உன் வாள்வலி - உன் ஆயுத வலிமையை; உலகம் காண - உலகத்தினர் கண்டு வியப்புறும் வண்ணம்; யான் கொண்டு ஊடாடும் வண்ணம் - நான் கலந்து இன்புறும் விதமாக; என் பால் - என்னிடத்திலே; இராமனைத் தருதி - இராமனைக் கொண்டு வந்துகொடு.

○ ○

மாரீசன் சுபாகு என இருவர்; சுந்தன் எனும் யக்ஷனுக்கும் தாடகைக்கும் பிறந்தவர்; அகஸ்திய முனிவரால் சபிக்கப்பெற்று அரக்கரானோர்; இராவணனுக்கு மாமன் முறையினர்; மாயம் வல்லவர்.

தாடகையின் மூத்த புதல்வன் மாரீசன். இரண்டாவது புதல்வன் சுபாகு. இம் மூவரும் விசுவாமித்திர முனிவரின் வேள்வியை அழிக்கப் போந்தனர். இராமனது அம்புக்கு ஆற்றாது ஓடிப் பிழைத்தான் மாரீசன். தாடகையும் சுபாகுவும் கொல்லப்பட்டனர்.

○ ○

"சந்த மலர்த் தண் கற்பக
நீழில் தலைவர்க்கும்
அந்தகனுக்கும் அஞ்ச
அடுக்கும் அரசு ஆள்வாய்
இந்த வனத்து என் இன்னல்
இருக்கைக்கு எளியோரின்
வந்த கருத்து என் சொல்லுதி''
என்றான் மருள்கின்றான்.

சூர்ப்பணகை ஊட்டிய காமம் என்ற நஞ்சு தலைக்கு ஏறி நிற்பத் தவிக்கிறான் இராவணன். எவ்வாறேனும் அச்

சீதையை அடைய விரும்புகிறான். சீதையை மாயத்தால் தூக்கி வரத் தீர்மானிக்கிறான். அதற்குத் தன் மாமன் மாரீசனின் துணையினை நாடுகிறான். மாரீசனின் இருக்கை தேடிச் செல்கிறான், தனியனாக அவ்வாறு தனியனாக வந்த இராவணனைக் கண்டு மருள் கிறான் மாரீசன். ஏன்? இராவணன் வருகையால் தனக்கு எவ்விதத் துன்பம் நேருமோ என்று அஞ்சுகிறான் மாரீசன். அச்சத்தால் மருள்கிறான். "தேவர் கோனும் தென் திசைக்கோனும் அஞ்ச ஆட்சி புரியும் ஒருவனே! இந்தக் காட்டிலே உள்ள எளியவனாகிய எனது இருக்கைக்குத் தனியனாக வந்திருக்கிறாய், வருகையின் உட்கருத்து என்ன? சொல்" என்று கேட்கிறான், அப்போது இராவணன் சொல் கிறான்:

○ ○

மருள்கின்றான் - (இராவணன் தன்னிடம் வந்தது என்ன தீமை செய்யக் கருதியோ?) என்று அஞ்சி மயங்கினவனாகிய மாரீசன் (அந்த இராவணனை நோக்கி) சந்தம் மலர் தண் கற்பக நீழல் - அழகிய மலர்களை உடைய குளிர்ந்த கற்பக விருட்சங்களின் நிழலில் அமர்ந்து வானுலகை ஆட்சி செய்யும்; தலைவர்க்கும் - தேவர்களின் தலைவனான இந்திரனுக்கும்; அந்தகனுக்கும் - யமனுக்கும்; அஞ்ச அடுக்கும் - அஞ்சும்படி ஆணை செலுத்தும்; அரசு ஆள்வாய் - அரசு செலுத்துகிறவனே;

(நீ) இந்த வனத்து - இந்தக் காட்டிலே; என் இன்னல் இருக்கைக்கு - துன்பத்துக்கு இடமான எனது இருப்பிடத்துக்கு; எளியோரின் - எளிய நிலையில் உள்ளவர் போல்; வந்த கருத்து என்? - வந்த நோக்கம் யாது? சொல்லுதி - சொல்வாய்; என்றான் - என்று சொன்னான்.

○ ○

ஆனது அனைத்தும்;
        ஆவி தரித்தேன்; அயர்கின்றேன்
போனது பொற்பும்
        மேன்மையும் அற்றேன் புகழோடும்
யான் அது உனக்கு இன்று
        எங்ஙன் உரைக்கேன் இனி என் ஆ
வானவருக்கும் நாண
        அடுக்கும் வசை அம்மா!

எனக்கு வரவேண்டிய தீமைகள் எல்லாம் வந்துவிட்டன புகழ் போயிற்று; சிறப்பும் போயிற்று; மேன்மையும் இழந்தேன்; வானவருக்கும் நாணத்தக்க சிறுமை வந்து விட்டது. அதை உனக்கு எவ்வாறு கூறுவேன்! எடுத்து இயம்பும் ஆற்றல் இலேன்; உயிரை மட்டும் இழக்காமல் பிடித்து வைத்துக்கொண்டிருக்கிறேன். வருந்துகிறேன். இனி எனக்கு என்ன பெருமை உளது?

○ ○

ஆனது அனைத்தும் - எனக்கு வரவேண்டிய தீமைகள் எல்லாம் வந்துவிட்டன; போனது புகழோடும் பொற்பும் - புகழோடு எனது சிறப்பும் போயிற்று;

மேன்மையும் அற்றேன் - மேன்மை இழந்தேன்; அது - அதை; உனக்கு - உனக்கு; இன்று எங்ஙனம் உரைக்கேன்? எவ்வாறு சொல்வேன் இன்று; ஆவி தரித்தேன் - உயிரை மட்டும் போகாது பிடித்து வைத்துக் கொண்டிருக்கிறேன்; அயர்கின்றேன் - வருந்துகிறேன்; வானவருக்கும் - தேவர்களுக்கும்; நாண - வெட்கமுறும் வண்ணம்; அடுக்கும் வசை- வந்து சம்பவித்துள்ளது நிந்தனை (சிறுமை) இனி என் ஆ - இனி என்ன பெருமை இருக்கிறது?

○ ○

வன்மை தரித்தோர் மானிடர்
மற்று அங்கு அவர் வாளால்
நின் மருகிக்கும் நாசி இழக்கும்
நிலை நேர்ந்தால்
என் மரபுக்கும் நின் மரபுக்கும்
இதன் மேல் ஓர்
புன்மை தெரிப்பின் வேறு இனி
மற்று என்? புகழ் வேலோய்.

புகழ் மிக்க வேல் கொண்ட மாமனே! மானிடர் பலம் பெற்று விட்டனர்; தண்டகாரண்யத்திலே அவர் தம் வாளால் மூக்கினை இழக்கும் நிலை உனது மருகியாகிய சூர்ப்பணகைக்கு நேர்ந்தது. நின் குலத்துக்கும் என் குலத்துக்கும் இதை விட இழிவு வேறு என்ன வேண்டும்? என்று தூபம் போட்டான் இராவணன்.

○ ○

புகழ் வேலோய் - புகழ் மிக்க வேலாயுதம் உடையோய்; மானிடர் - மனிதர்; வன்மை தரித்தோர் - பலம் பெற்று விட்டனர்; மற்று - மேலும்; அங்கு - தண்டகாரணியத்தில்; அவர் - அந்த மானிடர்; வாளால் - தம் கை வாளினால்; நின் மருகிக்கும் - உனது மருமகளாகிய சூர்ப்பணகைக்கும்; நாசி இழக்கும் நிலை நேர்ந்தால் - மூக்கை இழக்கும்படியான ஒரு சூழ்நிலை உண்டானால்; என் மரபுக்கும் - என் குலத்துக்கும்; நின் மரபுக்கும் - உன் குலத்துக்கும்; இதன் மேல் - இதற்கு மேலான; ஓர் புன்மை தெரிப்பின் - ஓர் இழிவைக் கூறுமிடத்து; மற்று இனி வேறு என்? - இனிமேல் வேறு என்ன இருக்கிறது?

○ ○

"வெப்பு அழியாது என் நெஞ்சம்
உலந்தேன்; விளிகின்றேன்;
ஒப்பு இலர் என்றே போர் செயல்
ஒல்லேன்; உடன் வாழும்
துப்பு அழி செவ்வாய் வஞ்சியை
வௌவத் துணை கொண்டிட்டு
இப்பழி நின்னால் தீரிய
வந்தேன் இவண்" என்றான்.

"மேற்கூறிய நிகழ்ச்சிகளால் எனக்கு ஏற்பட்டுள்ள மனக்கொதிப்பு அழியவில்லை. மனமும் அழிந்தேன்; இறக்கும் நிலையில் உள்ளேன்.

அவர்களுடன் போர் செய்ய விருப்பம் இலேன். காரணம் அம்மானுடர் எனக்கு நிகரானவர் அல்லர். ஆயினும் அவர் பால் உள்ள வஞ்சிக்கொடி போன்றாளை வவ்வி கொணடுவர முடிவு செய்துளேன். இவ்வாறு செய்வதன் மூலம் எனக்கு ஏற்பட்டுள்ள பழி தீர்த்துக் கொள்ள விரும்புகிறேன். அதற்கு உனது துணை வேண்டி இங்கே வந்துளேன்" என்றான்.

○ ○

வெப்பு அழியாது - (மேற் கூறிய நிகழ்ச்சிகளால்) எனக்கு உண்டான மனக் கொதிப்பு அழியாமல்; நெஞ்சும் உலந்தேன் - மனமும் அழிந்தேன்; விளிகின்றேன் - அதனால் நான் இறந்து அழியும் நிலையில் இருக்கின்றேன்; ஒப்பு இலர் என்றே - எனக்கு அம்மானுடர் நிகரானவர் அல்லர் என்று கருதியே; போர் செய ஒல்லேன் - அவரோடு போர் செய்ய விருப்பமில்லாதவனாக இருக்கின்றேன்; உடன் வாழும் - அம்மானிடரோடு வாழ்கின்ற; துப்பு அழி செவ்வாய் - பவழத்தைத் தோல்வியுறச் செய்யும் சிவந்த வாயுடைய; வஞ்சியை - கொடி போன்றாளை; வவ்வு -

அபகரிக்க; துணை கொண்டு இட்டு - உன்னை என் துணையாகக்கொண்டு; இ பழி நின்னால் தீரிய - எனக்கு ஏற்பட்டுள்ள இப் பழியை உன்னைக்கொண்டு நீக்கிக் கொள்ள; இவண் வந்தேன் - இவ்விடம் வந்தேன்; என்றான் - என்று கூறினான்.

○ ○

இச் சொல் அனைத்தும் சொல்லி
அரக்கன் எரிகின்ற
கிச்சின் உருக்கு இட்டு உய்த்தனன்
என்னக் கிளர்வான் முன்
சிச்சி எனத் தன் மெய்ச் செவி
பொத்தித் தெருமந்தான்
அச்சம் அகற்றிச் செற்ற
மனத்தோடு அறைகின்றான்.

இராவணன் கூறிய சொற்களைக் கேட்டான் மாரீசன். இரும்பை உருக்கிக் காதிலே ஊற்றியது போல இருந்தது. 'சிச்சீ' என்று கூறித் தன் காதுகளைப் பொத்திக்கொண்டான்; வருந்தினான்; பயம் நீங்கப் பெற்றான்; கோபமுற்றான்; பின் வருமாறு சொல்கின்றான்.

○ ○

அரக்கன் - இராவணன்; எரிகின்ற கிச்சின் - எரிகின்ற நெருப்பில்; உருக்கு இட்டு உய்த்தனன் என்ன - உருக்கை இட்டுக் காய்ச்சி அதனைத் தன் காதுகளில் செலுத்தினான் என்னும்படி; இ சொல் அனைத்தும் - இவ்வித வார்த்தைகள் எல்லாம்; சொல்லி - தன்னிடம் சொல்லி; கிளர்வான் முன் - தன்னைத் தூண்டும்; அந்த - இராவணன் முன்; சிச்சி எனத் தன் மெய்ச் செவி பொத்தி - சீச்சீ என்று சொல்லித் தன் காதுகளைப் பொத்திக்கொண்டு; தெருமந்தான் - குழப்ப

முற்று வருந்தினவனாகி; அச்சம் அகற்றி - ஒருவாறு பயம் நீங்கப் பெற்றவனாய்; செற்ற மனத்தோடு - கோபமுற்ற மனத்துடனே; அழைக்கின்றான் - பின் வருமாறு சொல்லத் தொடங்கினான்.

○ ○

மன்னா! நீ நின் வாழ்வை
முடித்தாய்! மதியற்றாய்
உன்னால் அன்று ஈது ஊழ்வினை
என்றே உணர்கின்றேன்;
இன்னா தேனும் யான் இது
உரைப்பன் இதம் என்னச்
சொன்னான் அன்றே அன்னவனுக்குத்
துணிவு எல்லாம்.

"அரசனே! நீ உனது வாழ்வை முடித்துக் கொண்டாய்; புத்தி கெட்டுப் போனாய்; இது உன் செயல் அன்று - உனது பண்டை வினையின் செயலே என்று நினைக்கிறேன். நான் சொல்லப்போவது உனக்குப் பிடிக்காது இருப்பினும் உனக்கு நல்லதே சொல்வேன்" என்று சில நல்லுரைகள் நவின்றான் மாரீசன்.

○ ○

மன்னா - அரசே! நீ உன் வாழ்வை முடித்தாய் - நீ உனது வாழ்நாளை முடித்துக் கொண்டாய்; மதி அற்றாய் - உனது அறிவை இழந்துவிட்டாய்; ஈது உன்னால் அன்று - இச் செயல் உன்னால் ஆக்கப்பட்டது அன்று; ஊழ்வினை - உனது பழைய வினையின் பயனே இவ்வாறு உன்னைத் தூண்டியது; என்றே உணர்கின்றேன் - என்றே கருதுகின்றேன்; இன்னாது ஏனும் - (உனக்கு) ஆகாதது என்று தோன்றினும்; இதம் இது யான் உரைப்பன் - உனக்கு

நன்மை தரத்தக்க இதனை நான் உனக்குக் கூறுவேன்; என்ன - என்று கூறி; அன்னவனுக்கு - அந்த இராவணனுக்கு; துணிவு எல்லாம் - உறுதியளிக்கும் நல்ல புத்தியாகிய நீதி அனைத்தும்; சொன்னான் - எடுத்துக் கூறினான் மாரீசன்.

○ ○

திறத் திறனாலே செய்தவம்
முற்றித் திரு உற்றாய்;
மறத்திறனாலே சொல்லுதி;
சொல் ஆய்; மறை வல்லாய்!
அறத் திறனாலே எய்தினை
அன்றோ அது; நீயும்
புறத்திறனாலே பின்னும்
இழக்கப் புகுவாயோ?

"நீ இப்போது பெற்றுள்ள செல்வமும் சீரும் தர்ம வழியிலே அறத்தினாலே வந்தவை. அவைகளை இந்த மறவழி பின்பற்றி இழக்கத் துணிவாயோ? சொல்?" என்றான்.

○ ○

மறைவல்லோய் - வேதங்களை (நன்கு) அறிந்தவனே! திறம் திறனாலே - மிகத் திறமையினாலே; செய்தவம் முற்றி - செய்யக்கூடிய தவங்களையெல்லாம் செய்து முடித்து; திரு உற்றாய் - நீ இப்பொழுது பெற்றுள்ள சீரும் செல்வமும் பெற்றுள்ளாய்; மறத்தினாலே - அதர்மத்தினால் (உன் கொடிய வலிமையை மேற்கொண்டு) சொல்லுதி - இவ்வாறு சொல்கிறாய்; அறத்திறனாலே எய்தினை அன்றோ? - நீ செய்த அறத்தின் வலிமையினாலே இச் செல்வச் சிறப்பினை அடைந்தாய் அன்றோ? அது - அச் செல்வ வாழ்க்கையை; புறத்திறனாலே - அறத்திற்குப்

புறனான அதர்ம வலிமையினாலே; பின்னும் இழக்க - பின்பு இழந்து விடுதற்கு; புகுவாயோ - அத்தீய செயலில் புக்கு நீ கெடப் போகின்றாயோ? சொல்வாய் - சொல்வாயாக.

○ ○

நாரம் கொண்டார் நாடு
கவர்ந்தார் நடை அல்லா
வாரம் கொண்டார் மற்றொருவற்கு
ஆய் மனை வாழும்
தாரம் கொண்டார் என்று இவர்
தம்மைத் தருமம் தான்
ஈரும் கண்டாய்; கண்டகர்
உய்ந்தார் எவர்? ஐயா!

ஐயனே! பிறர் நாட்டிலே உள்ள நீரைத் தம் வலியாலோ அல்லது திருட்டுத் தனமாகவோ அபகரித்தவர்,

பிறர் நாட்டை அதர்ம வழியிலே பிடுங்கிக் கொண்டவர்,

தொன்று தொட்டு மனு நீதி முறைப்படி வாரம் வசூலிக்காமல், அதர்ம முறையில் குடி வாரம் வசூல் செய்வோர்,

மற்றொருவருக்கு வாழ்க்கைத் துணையாகி அவர் தம் மனையிலே வாழும் மனைவியை அபகரித்துக் கொண்டவரும், பெரும் பாவிகள் இவர்களை தரும தேவதை தானே அழிக்கும். இவருள் உய்ந்தார் எவர்? எவரும் இலர்.

○ ○

ஐயா - ஐயனே; நாரம் கொண்டார் - பிறர் நாட்டிலே உள்ள நீரை தம் வலியால் அல்லது திருட்டுத் தனத்தால் அபகரித்துக் கொண்டவரும்; நாடு கவர்ந்தார் - பிறருடைய நாட்டை அதர்ம வழியில் பற்றிக் கொண்டவரும்; நடை

இல்லா வாரம் கொண்டார் - மனு முறைப்படி நடைபெற்று வரும் முறை இல்லாமல் அதிகமான குடிவாரத்தை (வரியை) குடிகளிடமிருந்து வலிய வாங்கிக் கொண்டவரும்; மற்று ஒருவர்க்கு ஆய மனை வாழும் - வேறு ஒருவருக்கு உரியவள் ஆகி அவனது வீட்டில் வாழ்ந்துவரும்; தாரம் கொண்டார் - மனைவியைத் தம் வலியால் அபகரித்துக் கொண்டவரும்; என்று இவர் தம்மை - என்று சொல்லப்பட்ட இவர்களை; தருமம் தான் - தரும தேவை தானே வந்து; ஈரும் - அறுத்து அழிக்கும்; கண்டகர் உய்ந்தார் எவர்? - பாவிகள் யாரே அழிவடையாமல் தப்பிப் பிழைத்தார்; (ஒருவரும் இலர்.)

○ ○

அந்தரம் உற்றான் அகலிகை
பொற்பால் அழிவுற்றான்;
இந்திரன் ஒப்பார் எத்தனையோர்
தாம் இழிபு உற்றார்?
செந்திரு ஒப்பார் எத்தனையோர்
நின் திரு உண்பார்?
மந்திரம் அற்றார் உற்றது
உரைத்தாய் மதி அற்றாய்.

தேவர் உலகினை ஆளும் தேவேந்திரன் அகலிகையின் அழகிலே மயங்கினான்; அழிவுற்றான். இம்மாதிரி கெட்டு அழிந்தோர் பலர். உன் பால் திருமகளை ஒத்தார் பலர் உளர். அங்ஙனமிருக்க உனக்கு ஏன் இந்தக் கெடுமதி? ஆலோசனையில்லாதவர் கூறிய யோசனை இது. அறிவுகெட்டு விட்டாய்.

○ ○

அந்தரம் உற்றான் - சுவர்க்கத்தைத் தனக்கு உரிமையாகக் கொண்டு ஆட்சி புரியும் இந்திரன்; அகலிகை பொற்பால் - அகலிகையின் அழகில் ஈடுபட்டு; அழிவுற்றான் -

யாவரும் வெறுக்கத் தக்க சாபக் கேட்டினை அடைந்தான்; இந்திரன் ஒப்பார் - அந்த இந்திரனைப் போன்றவர்; எத்தனையோர் தாம் இழிபு உற்றார் - எத்தனை பேர் தாம் சிறப்பு அழிந்து இழிநிலையுற்றனர்? செம் திரு ஒப்பார் - செவ்விய திருமகளைப் போன்ற அழகுடை மகளிர்; எத்தனையோர் நின் திரு உண்பார் - எவ்வளவு பேர் உன் நலத்தை அனுபவிப்பவராய் உள்ளனர்? (அவ்விதம் இருக்க) மந்திரம் அற்றோர் - ஆலோசனையற்றவர்; உற்றது உரைத்தாய் - கூறிய யோசனையைச் சொன்னாய்; மதி அற்றாய் - அறிவு கெட்டவன் ஆனாய்.

○ ○

செய்தாயேனும் தீவினையோடும்
பழி அல்லால்
எய்தாது; எய்தாது; எய்தின்
இராமன் உலகு ஈன்றான்
வைதால் அன்ன வாளிகள்
கொண்டு உன் வழியோடும்
கொய்தான் அன்றே கொற்றம்
முடித்து உன் குழு எல்லாம்.

உன் எண்ணப்படியே இக்காரியத்தை நீ செய்தாயேனும் பாவம் தான்வரும்; பழி தான்வரும்; வேறு எதுவும் உனக்குக் கிட்டாது; கிட்டாது. அப்படி ஒரு கால் உன் எண்ணம் கை கூடுமாயின் பின் என்ன விளையும் தெரியுமோ? உலகனைத்தும் ஈன்ற திருமாலாகிய இராமபிரானின் சுடுசரத்தால் நீ உன் குலத்தோடு அழிவாய்; உன்னைச் சேர்ந்த அரக்கர் கூட்டம் பூண்டோடு மாயும். இது நிச்சயம்.

○ ○

செய்தாய் ஏனும் - நீ உன் எண்ணப்படியே இதனைச் செய்தாயேனும்; தீவினையோடும் பழி அல்லாது எய்தாது எய்தாது - பாவத்தோடு பழியல்லாது வேறு எதுவும் உனக்குக் கிட்டாது கிட்டாது; எய்தின் - அப்படியே உன் எண்ணம் நிறைவேறினாலும்; உலகு ஈன்றான் - உலகணைத்தும் படைத்த திருமாலாகிய இராமன் வைதால்; அன்ன முனிவர் தம் கொடிய சாபம் போன்ற; வாளிகொண்டு - கூரிய தனது அம்பு கொண்டு; உன் வழியோடும் - உன் குலத்தோடும்; கொற்றம் முடித்து - உன் அரசை அழித்து, உன் குழு எல்லாம் - உன்னைச் சேர்ந்த அரக்கர் கூட்டத்தை எல்லாம்; கொய்தான் அன்றே - பூண்டோடு அழித்து விட்டான் என்றே வைத்துக்கொள்.

○ ○

மாண்டார் மாண்டார் நீ இனி
மாள்வார் தொழில் செய்ய
வேண்டா; வேண்டா; செய்திடின்
உய்வான் விதி உண்டோ?
ஆண்டார்; ஆண்டார்; எத்தனை
என்கேன்; அறம் நோனார்
ஈண்டார்; ஈண்டார்; நின்றவர்
எல்லாம் இலர் அன்றோ?

மாண்டார் மாண்டவரே. அவ்வாறு மாண்டவர் தொழிலை நீ செய்ய வேண்டாம்; வேண்டாம் அப்படி உன் விருப்பப்படி நீ செய்வாயானாள் உய்யும் வழி உனக்கு வேறு இல்லை. உலகிலே அரசாண்டவர் எத்தனை பேர்? அற வழியே நிற்காதவர் இவ்வுலகில் இருக்கவே மாட்டார். இவ்வுலகில் நீண்ட காலம் இருந்தவர் எல்லாரும் இறந்து போயினர் அன்றோ?

○ ○

மாண்டார் மாண்டார் - இறந்தவர் இறந்து போனவரே; நீ இனி மாள்வார் தொழில் செய்ய வேண்டா வேண்டா - நீ இனி இறப்பவர் செய்யும் தொழிலைச் செய்ய வேண்டாம் வேண்டாம்; செய்திடின் - அவ்வாறு செய்வாய் ஆயின்; உய்வான் விதி உண்டோ? - உய்யும் வழி உண்டோ? (இல்லை) ஆண்டார் ஆண்டார் எத்தனை என்கேன் - உலகை ஆண்டவர் எத்தனை பேர் இறந்தனர் என்பேன்; அறம் நோனார் - அறத்தின் வழியே தன் வாழ்க்கையைச் செலுத்தாதவர்; ஈண்டார் ஈண்டார் - நீடித்து இங்கு இருக்கவே மாட்டார் மாட்டார்; நின்றவர் எல்லாம் - இவ்வுலகில் நீண்ட காலம் இருந்தவர் எல்லாரும்; இவர் அன்றோ - இப்பொழுது இல்லாது இறந்து போயினர் அன்றோ.

○ ○

நின்றும் சென்றும் வாழ்வன
யாவும் நிலையா வாய்ப்
பொன்றும் என்னும் மெய்ம்மை
உணர்ந்தாய்; புலையாள்தற்கு
ஒன்றும் உன்னாய்; என் உரை
கொள்ளாய்; உயர் செல்வத்து
'என்றும் என்றும் வைகுதி;
ஐயா! இனி' என்றான்.

"ஐயனே! இந்த உலகிலே உள்ள உயிர்கள் எல்லாம் அழியும் தன்மையுடையன; நிலைத்து இருப்பன அல்ல; இந்த உண்மையை நீ உணர்ந்துள்ளாய். ஆதலின் இந்த இழிதொழில் புரிய எண்ணாதே. என் சொல்லை ஏற்பாயாக. இப்பொழுது பெற்றுள்ள செல்வத்துடன் என்றென்றும் வாழ்வாயாக" என்றான் மாரீசன்.

○ ○

ஐயா!-ஐயனே! நின்றும் சென்றும் - நகராமல்ஓரிடத்தில் நிலைபெற்றிருந்தும், நடமாடிப் பல இடங்களுக்குச் சென்றும்; வாழ்வன யாவும் - வாழ்கின்ற எல்லா உயிர் களும்; நிலையா - நிலைத்து இருப்பன அல்ல; (ஆதலால்) பொன்றும் என்னும் மெய்ம்மை - உலகில் உள்ள எல்லாம் ஒரு காலத்தில் அழியும் என்ற உண்மையை; உணர்ந்தாய் - உணர்ந்திருக்கின்றாய் புலையாள்தற்கு - (அத்தகைய நீ) இவ் இழி தொழில் செய்தற்கு; ஒன்றும் உன்னாய் - சிறிதும் நினையாதிருப்பாயாக; என் உரை கொள்ளாய் - என் சொல்லை ஏற்றுக்கொள்வாயாக; இனி உயர் செல்வத்து - இனியும் இப்பொழுது நீ பெற்றுள்ள உயர்ந்த செல்வ நிலையில்; என்றும் என்றும் வைகுதி - என்றென்றும் நீடித்து இருப்பாயாக; என்றான் - என்று இராவணனுக்குச் சொன்னான் மாரீசன்.

○ ○

''கங்கை சடை வைத்தவனோடும்
கயிலை வெற்பு ஓர்
அங்கையின் எடுத்த எனது
ஆடு எழில் மணித்தோள்
இங்கு ஓர் மனிதற்கு
எளிய என்றனை'' எனத் தன்
வெங்கண் எரியப் புருவம் மீது
உற விடைத்தான்.

''கங்கையைச் சடையிலே தரித்த சிவபெருமான் வீற்றிருக்கின்ற கயிலாய கிரியைப் பெயர்த்து என் உள்ளங் கையிலே வைத்துக்கொண்டவன் நான் அத்தகைய பராக்கிரமம் கொண்ட தோள்கள் என்தோள்கள் கேவலம் ஒரு மனிதனுக்கு எளிய என்று கூறினாய்'' என்று கண்களில் தீப்பொறி பறக்கக் கூறினான் இராவணன்.

○ ○

(அம்மொழி கேட்ட இராவணன் மாரீசனை நோக்கிச் சொல்கிறான்).

கங்கை சடை வைத்தவனோடும் - சடையிலே கங்கையை வைத்துள்ள சிவபெருமானோடும்; கயிலை வெற்பு - அவன் இருக்கும் கயிலாய மலையை; ஓர் அம்கையில் எடுத்த - எனது ஓர் உள்ளங்கையிலே பெயர்த்து எடுத்து வைத்துக் கொண்ட; எனது ஆடு எழில் மணித்தோள் - என்னுடைய போர் செய்ய வல்ல அழகிய சிறந்த தோள்கள்; இங்கு ஒரு மனிதனுக்கு இங்கே ஓர் அற்ப மனிதனுக்கு; எளிய என்றனை என - கீழ்ப்பட்டவை என்றாய் என்று; தன் வெம் கண் - தன் கொடிய கண்கள்; எரிய - கனல் கக்க; புருவம் மீதுற - புருவங்கள் மேல் நோக்கி நிற்க; விடைத்தான் - கோபித்துரைத்தான்.

○ ○

"நிகழ்ந்ததை நினைந்திலை என்
நெஞ்சின் நிலை அஞ்சாது
இகழ்ந்தனை; எனக்கு இளைய
நங்கை முகம் எங்கும்
அகழ்ந்தவரை ஒப்பு உற
அமைந்தவரை ஐயா!
புகழ்ந்தனை; தனிப் பிழை
பொறுத்தனன் இது" என்றான்.

"என்ன நடந்தது என்பதை நீ நினைத்துப் பார்க்கவில்லை. எனது மனநிலையை இகழ்ந்தாய் எனது தங்கையின் மூக்கை அறுத்த அந்த மானிடரை அஞ்சாது என்னிடமேபுகழ்ந்து பேசுகிறாய். இது மாபெரும் பிழை; பொறுத்தேன்" என்றான் இராவணன்.

○ ○

ஐயா!- ஐயனே! நிகழ்ந்ததை - நடந்ததை; நினைக்கிலை - நினைத்தாய் இல்லை; அஞ்சாது - அச்சம் இல்லாது; என் நெஞ்சின் நிலை - எனது மனநிலையை; இகழ்ந்தனை - இகழ்ந்து கூறினாய்; எனக்கு இளைய நங்கை - எனக்கு இளையவளான தங்கை சூர்ப்பணகையின்; முகம் எங்கும் - முகம் எல்லாம்; அகழ்ந்தவரை ஒப்பு உற - தோண்டப்பட்ட மலையில் உள்ள மேடு பள்ளங்கள் போல விளங்க; அமைத்த வரை - செய்தவரான அந்த மானிடரை; புகழ்ந்தனை - என்னிடமே புகழ்ந்து பேசினாய்; தனிப் பிழை - ஒப்பற்ற பிழை; இது பொறுத்தனென் - இந்தப் பெரும் பிழை பொறுத்தேன்; என்றான் - என்று கூறினான் இராவணன்.

○ ○

தன்னை முனிவுற்ற தறுகண்
தகவு இலோனைப்
பின்னை முனிவுற்றிடும் எனத்
தவிர்தல் பேணான்
"உன்னை முனிவுற்று, உன்
குலத்தை முனிவுற்றாய்
என்னை முனிவுற்றிலை; இது
என்?" என இசைத்தான்.

தன் பால் சினம் கொண்டு சீறிய இராவணன் மேலும் சீறுவானோ என்று மாரீசன் அஞ்சினான் அல்லன். அவனுக்கு நலன் கூறுவதை விடுத்தான் அல்லன். "நீ என் மீது சீறினாய் அல்லை; உன் மீது சீற்றம் கொண்டாய். உன் குலத்தின் மீது சினங்கொண்டாய். நீ இச் செயல் புரிய முற்பட்டது ஏன்?" என்று இதமாகக் கூறினான்.

○ ○

தன்னை முனி உற்ற - தன்பால் சினம் கொண்ட; தறுகண் தகவு இலோனை - அஞ்சாத நேர்மையற்ற அவ்

விராவணனை; பின்னை முனிவுற்றிடும் - மேலும் தன் மீது சினம் கொள்வான் என்று; தவிர்தல் பேணான் - அவனுக்கு நலம் கூறுவதை விடாதவனாய்; (அந்த மாரீசன் இராவணனை நோக்கி) என்னை முனிவுற்றிலை - என் மீது நீ கோபிக்கவில்லை; உன்னை முனிவுற்று உன் குலத்தை முனிவுற்றாய் - உன்னையே கோபித்துக்கொண்டாய் உன் குலத்தைக் கோபித்தாய்; இது என்? நீ இச் செயல் புரியத் துணிவது ஏன்? என்று இசைத்தான் - என்று இதமாகக் கூறினான்.

○ ○

எடுத்த மலையே நினையின்
"ஈசன் இகல் வில்லாய்
வடித்த மலை; நீ இது வலித்தி"
என வாரிப்
பிடித்து அமலை நாண் இடை
பிணித்து, ஒருவன் மேல் நாள்
ஒடித்த மலை அண்ட முகடு
உற்ற மலை அன்றோ?

"கயிலை மலை இமயமலையின் ஒரு சிகரம். அதனை எடுத்ததையே நீ பெரிதாகப் பாராட்டினால் - பெருமை படுவாயானால்; மனிதன் என்று நீ எந்த இராமனை இழித்துக் கூறுகிறாயோ அந்த இராமன் பதினாறு வயது பாலனாய் இருந்த காலத்திலே சீதையின் சுயம்வரத்திலே எடுத்து வளைத்த நிலையில் அந்த வேகம் தாங்காது ஒடிந்து போன மலை போன்ற அச் சிவ தனுசு எது? ஆகாய முகடு அளாவியதும் மலைகளுள் சிறந்ததும், பெரியதுமான மேருமலை அன்றோ?"

இவ்வாறு இராமனின் ஆற்றலை எடுத்துக் கூறினான் மாரீசன்.

○ ○

எடுத்த மலையே நினையின் - நீ எடுத்த கயிலாயமலையையே நினைத்துப் பெருமை கொள்வாய் என்றால்; இது ஈசன் வில்லாய் வடித்த மலை - இதுவே சிவபெருமான் போர் செய்வதற்கு வில்லாக வடித்துக் கொண்ட மலை; நீ இது வலித்தி என - நீ இதை வளைத்து நாண் ஏற்று என விசுவாமித்திரர் கூற; ஒருவன் - நீ இழித்துக் கூறும் ஒருவனாகிய (மானிடனாகிய) இராமன்; மேல் நாள் - முன் ஒரு நாள்; வாரி - அதனை எளிதில் எடுத்து; பிடித்து - கையில் பிடித்து; அம்மலை இடை நாண் பிணித்து - அந்த மலையிடையே நாணேற்றி; (வளைக்கத் தொடங்கிய நிலையில்) ஒடித்த மலை - ஒடித்த அவ்வில்லாகிய மலை; அண்ட முகடு உற்ற - இவ்வண்டத்தின் உச்சியைத் தொட்டு உயர்ந்த; மலை அன்றோ - மேரு மலைக்கு நிகரானது அன்றோ?

○ ○

யாதும் அறியாய்; உரை கொளாய்
இகல் இராமன்
கோதை புனையா முன் உயிர்
கொள்ளை படும் அன்றே
பேதை மதியால் "இஃது ஓர்
பெண் உருவம்" என்றாய்;
சீதை உருவோ? நிருதர்
தீவினை அன்றோ?

இராமனின் ஆற்றலைப் பற்றி நீ ஏதும் அறியாய்; நான் சொல்லும் நல்லுரையும் ஏற்றுக்கொள்ள மாட்டாய்; இராமன் போருக்கு எழு முன்பே நம் அரக்கர் குலம் அழியும் என்பது உறுதி. நீ அபகரித்து கொண்டு வர எண்ணும் சீதையை ஒரு பெண் உருவம் என்று கருதுகின்றாய்; "புத்தி கெட்டவனே! அது சீதை உரு அன்று அரக்கர் செய்த

தீவினை அல்லவா பெண் உருக்கொண்டு சீதை எனும் பெயர் தாங்கி வந்துளது."

○ ○

யாது அறியாய் - இராமனின் ஆற்றல் பற்றி நீ ஏதும் அறியமாட்டாய்; உரை கொளாய் - நான் கூறும் நல்லுரைகளையும் நீ ஏற்றுக் கொள்ள மாட்டாய்; இகல் இராமன் - போரில் வல்ல இராமன்; கோதை புனையாமுன் - போர்க்கு எழுக் கையுறை அணியா முன்பே; (அதாவது போரணி பூணத் தொடங்கும் அந்த நேரத்திலேயே) உயிர் கொள்ளை படும் அன்றே - அரக்கர்களாகிய நமது உயிர் அனைத்தும் அழிக்கப்படும் என்பது உறுதி; பேதை மதியால் - உன் மூட மதியால்; இஃது ஓர் பெண் உருவம் என்றாய் - இது ஓர் பெண் உருவம் என்றாய்; (நீ அபகரித்து வரக் கருதும் சீதை ஒரு பெண் வடிவம் என்று கருதியுள்ளாய்) சீதை உருவோ - அது சீதை எனும் பெண் உருவமோ? (அன்று) நிருதர் தீவினை அன்றோ - அரக்கர்களாகிய நம்மவர் செய்த பாவமே சீதை உருவம் பெற்று வந்துளது அன்றோ.

○ ○

உஞ்சு பிழையாய் உறவினோடும்
　　என உன்னா
நெஞ்சு பறை போதும்; அது
　　நீ நினைய கில்லாய்
அஞ்சும் எனது ஆருயிர்
　　அறிந்து அருகு நின்றார்
நஞ்சு நுகர் வாரை "இது
　　நன்று" எனலும் நன்றே?

சீதையைத் தூக்கி வந்தால் நீ உயிர் வாழமாட்டாய். உறவினரோடும் அழிவாய். அதனை எண்ணிப் பார்க்கும்

திறன் உனக்கு இல்லை. உன் நிலை கண்டு எனது ஆருயிர் அஞ்சுகின்றது. என் மனம் பறை அடிப்பதுபோல் துடிக்கின்றது. உனக்குச் சாதகமாக நான் பேசுவது என்பது விஷம் குடிப்பவரைப் பார்த்து அருகில் நின்றார், "இது நன்று" என்று சொல்வது ஒக்கும். அது நன்றோ?

○ ○

உறவினோடும் உஞ்சு பிழையாய்-(இக்காரியம் செய்தால்) நீ உன் உறவினரோடும் பிழைக்கமாட்டாய் (அழிவாய்)என- என்று; உன்னா - எண்ணி; நெஞ்சு பறை மோதும் - எனது நெஞ்சு பறையடிப்பதுபோல் துடிக்கிறது; நீ அது நினைய கில்லாய் - நீ அதை நினைக்கின்றாயில்லை; (அத் தீமையை எண்ணும் திறமையில்லாதவன் ஆனாய்) அஞ்சும் எனது ஆருயிர் - (உன் நிலை கண்டு) எனது அரிய உயிர் அஞ்சுகின்றது; (உனக்கு இணங்கி நான் பேசுவது என்பது) நஞ்சு நுகர்வாரை அறிந்து - விஷம் அருந்துவாரைத் தெரிந்து; அருகு நின்றார் – அருகில் நிற்பவர்; இதுநன்று என்னலும் - இது நல்லது என்று கூறுவதும் நன்றே இதனினும் நல்லது ஆகும்.

○ ○

என்ன உரை இத்தனையும்
எத்தனையும் எண்ணிச்
சொன்னவனை ஏசின
அரக்கர் பதி சொன்னான்;
அன்னை உயிர் செற்றவனை
அஞ்சி உறைகின்றாய்
உன்னை ஒருவற்கு ஒருவன்
என்று உணர்கை நன்றோ?

இவ்வாறு நன்கு யோசித்து நல்லுரை பகர்ந்த மாரீசனை நோக்கி அரக்கர் பதியான இராவணன் கூறுகின்றான், "உன்

தாயைக் கொன்றான் அந்த இராமன். அவனுக்கு அஞ்சி இங்கு வந்து மறைந்து நீ வாழ்கின்றாய் போர் செய்யும் திறம் கொண்ட ஒருவன் என்று உன்னை மதித்து வருதல் நன்றோ?"

○ ○

என்ன - என்று மாரீசன் சொன்ன; உரை இத்தனையும்- அறிவுரைகள் இவ்வளவையும்; எத்தனையும் எண்ணி எல்லா விதங்களாலும் ஆலோசித்து; சொன்னவனை - சொன்ன மாரீசனை; ஏசினன் - ஏசினவனாய்; அரக்கர் பதி - அரக்கர் தம் அரசனான இராவணன்; சொன்னான் - பின் வருமாறு கூறினான்; அன்னை உயிர் செற்றவனை- உன் தாயாகிய தாடகையின் உயிரைப் போக்கிய அந்த இராமனுக்கு; அஞ்சி - பயந்து; உறைகின்றாய் - இங்கு வந்து தவம் செய்பவன்போல் மறைந்து வாழ்கின்றாய்; உன்னை - அத்தகைய பேதையாகிய உன்னை; ஒருவற்கு ஒருவன் என்று - போர் செய்வதற்கு உரிய ஆண் மகன் என்று; உணர்கை - மதித்தல்; நன்றோ - சிறப்புடையது ஆகுமோ?

○ ○

"மறுத்தனை எனப் பெறினும்
நின்னை வடி வாளால்
ஒறுத்து மனம் உற்றது முடிப்பென்
ஒழிகல் லேன்;
வெறுப்பன கிளத்தல் உறும்
இத்தொழிலை விட்டு என்
குறிப்பின் வழி நிற்றி; உயிர்
கொண்டு உழலின்" என்றான்.

"எனது நோக்கப்படி நடக்க நீ மறுத்தனையாகின் எனது வாளால் உன்னைக் கொன்று நான் கருதியதை

முடிப்பேன். அவ்வாறு செய்யாமல் இவ்விடம் விட்டு அகல மாட்டேன். ஆதலின் நீ உயிருடன் வாழ விரும்பினால் எனக்குப் பிடிக்காத இந்த உபதேசம் செய்யும் தொழிலை விட்டு என் வழி நிற்பாயாக, என் நோக்கப்படி நடப்பாயாக." என்றான் இராவணன்.

○ ○

மறுத்தனை எனப் பெறினும் - எனது கருத்துக்கு ஏற்ப நடக்க மறுத்தாய் எனினும்; நின்னை - உன்னை; வடிவாளால் - எனது கூறிய வாளினால்; ஒறுத்து - அழித்து; மனம் உற்றது - என் மனம் கருதியதை; முடிப்பென் - செய்து முடித்தே தீருவன்; ஒழிகில்லேன் - இதனைச் செய்யாமல் விடமாட்டேன்; ஆதலின் - ஆதலினால்; உயிர் கொண்டு உழலின் - நீ உயிரோடு வாழ விரும்பினால்; வெறுப்பன கிளத்தல் உறும் - நான் வெறுப்பனவற்றைச் சொல்லும் இத் தொழிலை விட்டு; நீ எனக்கு உபதேசம் செய்யும் தகாத இத் தொழிலை விட்டு; என்குறிப்பின் வழி - என் நோக்கின்படி; நிற்றி - நின்று நடப்பாயாக; என்றான் - என்று கூறினான் இராவணன். (மாரீசனை நோக்கி)

○ ○

"ஆண்டையான் அனைய கூற
அரக்கர் ஓர் இருவரோடும்
பூண்ட என் மானம் தீரத்
தண்டகம் புக்க காலைத்
தூண்டிய சரங்கள் பாயத்
துணைவர் பட்டு உருள அஞ்சி,
மீண்ட யான் சென்று செய்யும்
வினை என் கொல்? விளம்புக"
என்றான்.

''விசுவாமித்திரருடைய யாகத்தின் போது நான் அடைந்த அவமானம் போக்கக் கருதி அரக்கரான நண்பர் இருவருடனே தண்டக வனம் புகுந்தேன். மான் உருவில் இராமனுக்குக் கேடு விளைக்கப் புகுந்தேன். அப்போது அவன் ஏவிய கணையினால் எனது நண்பர் இருவரும் மாய்ந்தனர். நான் பயந்து ஓடி வந்தேன். மீண்டும் நான் சென்று செய்யும் செயல் யாது சொல்'' என்றான் மாரீசன்·

○ ○

ஆண்டையான் அனைய கூற - இராவணன் அவ்வாறு சொல்லவே; (மாரீசன்) பூண்ட என் மானம் தீர - முதன் முதல் விசுவாமித்திரர் யாகம் செய்தபோது நான் அந்த இராமனால் அடைந்த அவமானம் நீங்கும் பொருட்டு; அரக்கர் ஓர் இருவரோடும் - நண்பர்களான இராக்கதர் இருவருடனே; தண்டகம் புகுந்தகாலை - மான் வேடம் பூண்டு இராமன் இருந்த தண்டக வனம் சென்று அவனுக்குக் கேடு விளைக்கப் புகுந்த காலை; தூண்டிய சரங்கள் பாய - அந்த இராமன் ஏவிய அம்புகள் பாய்ந்தமையால்; துணைவர் - எனக்குத் துணை வந்த நண்பர்; பட்டு உருள - ஆவி துறந்து கீழே விழுந்து உருள; அஞ்சி மீண்ட யான் - பயந்து ஓடிவந்த நான்; சென்று செய்யும் வினை என் கொல்? - மறுபடியும் அங்கு சென்று செய்யக்கூடிய செயல் என்ன? விளம்புக - சொல்; என்றான் - என்று கேட்டான்.

○ ○

ஆயவன் அனைய கூற,
அரக்கர் கோன் ஐய நொய்து உன்
தாயை ஆருயிர் உண்டானை
யான் கொலச் சமைந்து நின்றேன்
''போய் ஐயா புணர்ப்பது என்னை
என்பது பொருந்திற்று ஒன்றோ?
மாயையால் வஞ்சித்து அன்றோ
வெளவுதல் அவளை'' என்றான்.

"நான் போய்ச் செய்வது என்ன என்று கேட்கிறாயே! நீ அஞ்சும் இராமனைக் கொல்ல நான் உறுதி பூண்டுள்ளேன். ஆகவே உனக்கு அந்த பயம் வேண்டாம். சீதையை நான் தூக்கி வருவதற்கான வஞ்சகச் செயலை நீ செய்.''

O O

ஆயவன் அனைய கூற - மாரீசன் அவ்வாறு கூறவே; அரக்கர் கோன் - அரக்கர்க்கு அரசனாகிய இராவணன்; ஐய - ஐயனே; நொய்து உன் தாயை - பெண் என்று கருதாது இழிந்த முறையில் உனது தாயின்; ஆருயிர் உண்டானை - அரிய உயிரை அழித்த அந்த இராமனை; கொல்ல - கொல்லுவதற்கு; யான் சமைந்து நின்றேன் - நான் உறுதி பூண்டுள்ளேன்; போய் ஐயா புணர்ப்பது என்னை - நீ போய்ச் செய்யக் கூடிய சூழ்ச்சி என்ன? என்பது - என்று வினவுதல்; பொருந்திற்று ஒன்றோ - உனக்குப் பொருத்தமான செயலோ? அவளை - அந்த சீதையை; மாயையால் வஞ்சித்து - உனது மாயத்தால் வஞ்சித்து ஏமாற்றி; வெளவுதல் அன்றோ - நான் அவளை அபகரித்து வருதல் அன்றோ.

O O

''என்ன மா மாயம் யான் மற்று
இயற்றுவது? இயம்புக'' என்றாள்
''பொன்னின் மான் ஆகிப் புக்கு அப்
பொன்னை மால் புணர்த்துக'' என்ன
'அன்னது செய்வென்' என்னா
மாரீசன் அமைந்து போனான்.
மின்னும் வேல் அரக்கர் கோனும்
வேறு ஒரு நெறியில் போனான்.

''அங்கு சென்று நான் செய்யக்கூடிய மாயம் யாது?'' என்று கேட்டான் மாரீசன்.

"பொன் மான் உருக்கொண்டு அப் பெண் மானின் உள்ளம் கவர்வாய்" என்றான் அரக்கர்கோன்.

"அங்ஙனே ஆகுக" என்று இசைந்து சென்றான் மாரீசன்.

இராவணனும் வேறு ஒரு வழியில் சென்றான்.

○ ○

இங்கு யான் என்ன மா மாயம் இயற்றுவது - இப்பொழுது யான் செய்யத்தக்க மா மாயச் செயல் எது? இயம்புக - சொல்வாய்; என்றான் - என்று இராவணனை நோக்கிக் கேட்டான் மாரீசன்; பொன்னின் மான் ஆகிப் புக்கு - பொன் போன்ற நிறங்கொண்ட ஒரு மான் ஆகி அவர்கள் இருக்கும் இடம் சென்று; அப் பொன்னை மால் புணர்த்துக - பொன் போன்ற அச் சீதைக்கு ஆசை உண்டாக்குவாயாக; என்ன - என்று சொன்னான் இராவணன். அன்னது செய்வன் என்னா - அப்படியே செய்வேன் என்று; மாரீசன் அமைந்து போனான் - மாரீசன் அதற்கு இசைந்து சென்றான்; மின்னும் வேல் அரக்கர் கோனும் - மின்னும் வேல் தாங்கிய அரக்கர்க்கரசனாகிய இராவணனும்; வேறு ஒரு நெறியில் போனான் - வேறு ஒரு வழியாகச் சென்றான்.

○ ○

தன் மானம் இலாத
    தயங்கு ஒளி சால்
மின் மானமும்
    மண்ணும் விளங்குவது ஓர்
பொன் மான் உருவம் கொடு
    போயினன் ஆல்
நன் மான் அனையாள் தனை
    நாடுறுவான்.

மண்ணிலும் சரி விண்ணிலும் சரி தனக்கு ஒப்புமையில்லாத ஓர் பொன்மான் உருக்கொண்டு சீதையை நாடி இராமன் இருந்த காடு சென்றான் மாரீசன்.

○ ○

நல் மான் அனையாள் தனை - அழகிய மான் போன்ற சீதையை; நாடுறுவான் - நாடுதலை மேற் கொண்ட அம் மாரீசன்; தன் மானம் இலாத - தனக்கு நிகர் இல்லாத; தயங்கு ஒளி சால் - விளங்கும் ஒளி மிக்க; மின் மானமும் - மின்னலோடு கூடிய ஆகாயத்தும்; மண்ணும் - புவியிலும்; விளங்குவது ஓர் - விளங்குவதான ஒப்பற்ற; பொன்மான் உருவம் கொடு - பொன்மான் உருவம் கொண்டு; போயினான் - இராமன் இருந்த வனம் போனான்.

○ ○

நெற்றிப் பிறையாள்
முனம் நின்றிடலும்
முற்றிப் பொழி காதலின்
முந்துறுவாள்
பற்றித் தருக என்பென்
எனப் பதையா
வெற்றிச் சிலை வீரனை
மேவினள் ஆல்.

அந்த மான் வந்து சீதை முன் நின்றது; கண்டாள் சீதை. அதன்பால் ஆசை கொண்டாள். இதைப் பற்றி தருமாறு இராமனைக் கேட்பேன் என்று கூறிக்கொண்டு விரைந்து சென்றாள் இராமன் இருக்குமிடத்துக்கு.

○ ○

நெற்றிப் பிறையாள் முனம் - பிறை மதி போன்ற நெற்றியுடைய சீதையின் முன்னே; நின்றிடலும் - அந்த மான்

போய் நிற்கவும்; முற்றிப்பொழி காதலின் முந்துறுவாள் - நிறைந்து மேல் ததும்புகின்ற ஆசையின் முன் செல்பவளான அவள்; பற்றித் தருக என்பென் - இதைப் பிடித்துக் கொடுப்பீர் என்பேன்; எனப்பதையா - என்று வேகமாக; வெற்றிச் சிலை - வெற்றி வில் ஏந்திய; வீரனை - இராமன் இருக்குமிடம்; மேவினள் - சென்றாள்.

○ ○

அனையவள் கருத்தை உன்னா
அஞ்சனக் குன்றம் அன்னான்
"புனை இழை காட்டு அது" என்று
போயினான்; பொறாத சிந்தைக்
கனை கழல் தம்பி பின்பு
சென்றனன்; கடக்க ஒண்ணா
வினை என வந்து நின்ற
மான், எதிர் விழித்தது அன்று ஏ.

"எங்கே அந்த மான்? காட்டு" என்று சொல்லிக் கொண்டே சீதையைப் பின் தொடர்ந்து சென்றான் இராமன். லட்சுமணனும் பின்னே சென்றான். அந்த மானும் அவர்களை விழித்துப் பார்த்தது. எது போல? ஊழ்வினை வருவது போல வந்து நின்ற மான் அவர்களைப் பார்த்தது.

○ ○

அனையவள் கருத்தை உன்னா - அவ்வாறு வருந்திக் கூறிய சீதையின் நோக்கத்தை எண்ணி; அஞ்சனக் குன்றம் அன்னான் - மை மலை போன்ற இராமன்; புனை இழை - பூண்ட அணிகளையுடைய பெண்ணே! அது காட்டு - எங்கே அந்த மானைக் காட்டு; என்று - என்று; போயினான் - அம் மானைக் காணச் சென்றான்; பொறாத - அது கண்டு பொறாத மனமுடைய; கனை கழல் - ஒலிக்கும் வீரக்கழல்

அணிந்த; கம்பி - நம்பியாகிய இலட்சுமணனும்; பின் சென்றனன்-பின்னே தொடர்ந்து சென்றான்; (அப்பொழுது) கடக்க ஒண்ணா - விலக்க முடியாத; வினைஎன - ஊழ்வினை என்று; வந்து - வந்து; நின்ற மான் - நின்ற மாரீசனாகிய மான்; எதிர் - அவர்களை நோக்கி; விழித்தது - விழித்துப் பார்த்தது.

○ ○

என் ஒக்கும் என்னல் ஆகும்?
இளையவ! இதனை நோக்காய்;
தன் ஒக்கும் என்பது அல்லால்
தனை ஒக்கும் உவமை உண்டோ?
பல் நக்க தரளம் ஒக்கும்;
பசும் புல் மேல் படரும் மெல் நா
மின் ஒக்கும்; செம்பொன் மேனி
வெள்ளியின் விளங்கும் புள்ளி.

உடன் வந்த தம்பியை நோக்கிச் சொல்கிறான் இராமன் "தம்பீ! இந்த மானை உற்று நோக்குவாயாக. இதற்கு ஒப்பானது எது? எதுவுமில்லை. இதன் பற்கள் முத்துப்போல் உள்ளன. நாக்கு மின்னல் போல உள்ளது; மேனி செம்பொன் போன்றுளது. புள்ளிகளோ நக்ஷத்திரங்கள் போல் ஒளி வீசுகின்றன."

○ ○

இளையவ! - தம்பீ! இதனை நோக்காய் - இந்த மானை உற்று நோக்குவாயாக; தன் ஒக்கும் - இதற்கு நிகர் இதுவே; என்பது அல்லால் - என்று சொல்வது தவிர; (வேறு) என் ஒக்கும் என்னவாகும்? - எதை இதற்கு ஒப்புமை சொல்லலாகும்? தனை ஒக்கும் உவமை உண்டோ? - இதற்கு ஏற்ற உவமை சொல்வதற்கு உண்டோ? (இல்லை);

பல் - இதன் பற்கள்; நக்க தரளம் ஒக்கும் - ஒளி வீசும் முத்துகளுக்கு ஒப்பாகும்; பசும் புல் மேல் படரும் - பசும் புல்லைத் தின்பதற்கு அதன் மேல் செல்லும்; மென்நா - மெல்லிய நாக்கு; மின் ஒக்கும் - மின்னலுக்கு ஒப்பாகும்; மேனி செம்பொன் - இதன் உடலோ சிவந்த பொன் போன்றுள்ளது; புள்ளி - இதன் உடலில் அமைந்துள்ள புள்ளி; வெள்ளியின் விளங்கும் - வெள்ளிபோல் ஒளி வீசுகின்றது.

○ ○

ஆரியன் அனைய கூற
அன்னது தன்னை நோக்கிச்
'சீரியது அன்று இது' என்று
சிந்தையில் தெளிந்த தம்பி
''காரியம் என்னை? ஈண்டுக் கண்டது
கனக மானேல்
வேலி அம் தெரியல் வீர
மீள்வதே மேன்மை'' என்றான்.

இராமன் அவ்வாறு கூறிய உடனே அம் மானைப் பார்த்துத் தன் சிந்தையிலே ஒரு முடிவு கொண்ட தம்பியாகிய லட்சுமணன் "இது பொன் மான் ஆயின் இதனால் நமக்கு ஆக வேண்டியது யாது? ஒன்றுமில்லை. ஆகவே இதிலே சிந்தை பறிகொடாது திரும்புவதே நாம் செய்தகு சீரிய செயலாகும்'' என்றான்.

○ ○

ஆரியன் அனைய கூற - மேலோனாகிய இராமன் அவ்வாறு கூறவும்; அன்னது தன்னைநோக்கி - அம் மானைப் பார்த்து; சிந்தையில் தெளிந்த தம்பி - தெளிந்த சிந்தையுடைய தம்பியாகிய லட்சுமணன்; வேரி அம் தெரியல் வீர - நல்ல மணமும் அழகும் கொண்ட மாலையணிந்த

வீர; ஈண்டு கண்டது - இங்கே பார்த்தது; கனக மானேல் - பொன் மானே ஆயின்; காரியம் என்னை? - இதனால் நமக்கு ஆக வேண்டியது எது? (ஒன்றுமில்லை - ஆகவே) மீள்வதே - நாம் இதனை விட்டுப் பர்ணசாலைக்குத் திரும்பச்செல்வதே; மேன்மை - மேலான செயல்; என்றான் - என்றுசொன்னான்.

○ ○

அற்று அவன் பகரா முன்னம்
அழகனை அழகியாளும்
'கொற்றவன் மைந்த; மற்றிக்
குழைவுடை உழையை, வல்லை
பற்றினை தருதி ஆயின்
பதியிடை அவதி எய்தப்
பெற்றுழி இனிது உண்டாடப்
பெறற்கு அருந்தகைமைத்து'
என்றாள்.

அப்படி இலட்சுமணன் சொன்ன உடனே அழகில் சிறந்த இராமனைப் பார்த்து அழகில் சிறந்த சீதை சொல்கிறாள்:

"சக்கரவர்த்தி திருமகனே! விரைவிலே இந்த மானைப் பிடித்துத் தருவீராயின் நமது வனவாசம் முடிந்து அயோத்திக்குத் திரும்பச் சென்று வாழும்போது மகிழ்ந்து விளையாடத் தக்கதாயிருக்கும்."

○ ○

அற்று அவன் பகரா முன்னம் - அவ்வாறு அந்த லட்சுமணன் சொல்லும் அளவிலே; அழகனை - அழகில் சிறந்த இராமனை; அழகியாளும் - அழகே வடிவு கொண்டு வந்த சீதையும்; கொற்றவன் மைந்த - சக்கரவர்த்தி திருமகனே! குழைவு உடை - இப்பொழுது தளர்ந்த நிலையில் உள்ள; இ உழையை - இம் மானை; வல்லை -

விரைவிலே; பற்றினை - பிடித்து; தருதி ஆயின் - தருவாய் ஆயின்; அவதி எய்தப் பெற்று - நம் வனவாசம் முடியப் பெற்று மதியிடை - நம் அயோத்தி நகரிலே; இனிது உண்டாட - மகிழ்ந்து விளையாட; பெறற்கு அருந்தகைத்து - பெறுதற்குரிய சிறப்புடையதாகும்; என்றாள் - என்று சொன்னாள்.

○ ○

ஐயா, நுண் மருங்குல் நங்கை
அஃது உரை செய, ஐயன்
'செய்வென்' என்று அமைய நோக்கித்
தெளிவு உடைச் செம்மல் செப்பும்
'வெய்ய வல் அரக்கர் வஞ்சம்
விரும்பினார் வினையின் செய்த
கை தவமான் என்று அண்ணல்
காணுதி கடையின்' என்றான்.

இவ்வாறு சீதா பிராட்டி சொல்லவும் 'அவ்வாறே பற்றித் தருவன்' என்று இராமன் அம் மானை நோக்கினான். "இம் மான் மாயம் வல்ல அரக்கர் வஞ்சம் தீர்க்கக் கருதி ஏவிய மாயமான். இதனை நீவிர் இறுதியில் காண்பீர்." என்றான் லட்சுமணன்.

○ ○

ஐய - உள்தோ இலதோ என்று ஐயம் கொள்ளத் தக்க மருங்குல் நங்கை - இடையுடையவளாகிய சீதை; அஃது உரை செய்ய - அம்மொழி கூறவும்; செய்வன என்று - அவ்வாறே பற்றித் தருவன் என்று; ஐயன் - இராமன்; அமைய நோக்க - அம் மானைக் கூர்ந்து நோக்க; தெளிவுடை தம்பி - தெளிந்த மதி கொண்ட தம்பியாகிய லட்சுமணன்; செப்பும் - பின் வருமாறு சொல்லத் தொடங்கினான். அண்ணல் -

பெரியோய்! வஞ்சம் விரும்பினார் - வஞ்சகச்செயல் புரிய விரும்பினவர்களான; வெய்ய - கொடிய; வல் - வலிமை பொருந்திய; அரக்கர் - இராட்சதர்கள்; வினையில் செய்த - சூதாகச் செய்த; கைதவம் மான் என்று - மாயமான் இஃது என்று; கடையின் - முடிவில்; காணுதி - காண்பாய்; என்றான் - என்று கூறினான்.

O O

மந்திரத்து இளையோன் சொன்ன
வாய்மொழி மனத்துக் கொள்ளான்
சந்திரற்கு உவமை சான்ற
வதனத்தாள் சலத்தை நோக்கிச்
சிந்துரப் பவளச் செவ்வாய்
முறுவலன், சிகரச் செவ்விச்
சுந்தரத் தோளினான் அம்
மானினைத் தொடரலுற்றான்.

அழகிய தோள்கள் கொண்ட அவ்விராமன் ஆலோசனை மிக்க இளையோனாகிய லட்சுமணன் சொன்ன மொழி களைக் காதில் ஏற்றான் அல்லன்; பவழ வாயில் புன்னகை பூத்தான்; மானைப் பின் தொடர்ந்து சென்றான்.

O O

சிகர செவ்வி - மலைச் சிகரங்கள் போன்ற; சுந்தரத் தோளினான் - அழகிய தோள்கள் கொண்ட; இராமன் மந்திரத்து இளையோன் - ஆலோசனை மிக்க இளையவ னாகிய லட்சுமணன்; சொன்ன - எடுத்துக்கூறிய; வாய் மொழி - உண்மையான சொற்களை; மனத்துள் - தன் மனத் தின் உள்ளே; கொள்ளான் - ஏற்றுக்கொள்ளாதவனாய்; சந்திரற்கு - சந்திரனுக்கு; உவமை சான்ற - உவமை கூறுவதில் சிறந்து விளங்கிய; வதனத்தாள் - முகம் உடைய

வளான சீதா பிராட்டியின்; சலத்தை நோக்கி - கோபத்தைக் கருதி; சிந்துரம் - செந்நிறங்கொண்ட; பவளச் செவ்வாய் - பவழம் போன்ற சிவந்த வாயிடத்தே; முறுவலன் - புன்னகை கொண்டவனாய்; அ மானினை - அந்த மானை; தொடரல் உற்றான் - பின் பற்றிச் செல்லத் தொடங்கினான்.

○ ○

மிதித்தது மெல்ல, மெல்ல,
வெறித்தது, வெருவி மீதில்
குதித்தது, செவியை நீட்டிக்
குரபதம் உரத்தைக் கூட்டி
உதித்து எழும் ஊதை உள்ளம்
என்று இவை உருவச்செல்லும்
கதிக்கு ஒரு கல்வி வேறே
காட்டுவது ஒத்தது அன்றே.

முதலில் மெதுவாக அடி எடுத்து வைத்தது அந்த மாயமான்; பிறகு அச்சம் கொண்டதுபோல் மேலே தாவிக் குதித்தது. பிறகு கால்களை உடம்போடு சேர்த்துக்கொண்டு காற்றினும் கடுவேகமாக ஓடிய தன்றே.

○ ○

மெல்ல மெல்ல மிதித்தது - (அந்த மாயமான் முதலில்) மெதுவாக அடிவைத்து நடந்து சென்றது; வெறித்தது - வெறித்துப் பார்த்தது; வெருவி மீதில் குதித்தது - அச்சங் கொண்டதுபோல மேலே தாவிக் குதித்தது; செவியை நீட்டி - தன் காதுகளை நீட்டி; குரபதம் உரத்தை கூட்டி - குளம் போடுகூடிய கால்களை மார்பில் ஒட்டினாற்போல மடக்கி வைத்துக்கொண்டு; உதித்து எழும் ஊதை உள்ளம் என்று இவை - தோன்றி மேற்கிளம்பி எழும் காற்று, மனம் என்ற இவற்றை; உருவ செல்லும் - ஊடுருவிச் செல்லும்; கதிக்கு -

செலவிற்கு; ஒரு கல்வி வேறே காட்டியது ஒத்தது - கற்றறிய வேண்டிய ஒரு புதிய பாடத்தைத் தனிப்பட்ட முறையில் காட்டியதை; ஒத்து - ஓட்டம் எடுத்தது.

○ ○

குன்றிடை இவரும்; மேகக்
குழுவிடைக் குதிக்கும்; கூடச்
சென்றிடின் அகலும்; தாழின்
தீண்டல் ஆம் தகைமைத்து ஆகும்
நின்றதே போல நீங்கும்
நிதி வழி நேயம் நீட்டும்
மன்றல் அம் கோதை மாதர்
மனம் எனப் போயிற்று; அம்மா!

அந்த மாயமான் மலைமீது ஏறும்; மேகக் கூட்டங்களின் இடையே தாவிக் குதிக்கும். கூடச் சென்றால் வெகு தொலைவில் ஓடிவிடும்; அருகில் வந்து நிற்கும்; கையால் பற்றிவிடும் நிலையில் வரும்; நிற்கும். அருகில் சென்றால் ஓடிவிடும். ஓரிடத்தே நில்லாது பணமுடையவர்களையே நாடி அலையும் விலை மகளிர் மனம்போல அம் மானும் பாசாங்குகள் பல செய்து ஓரிடத்தும் நில்லாது அவ்வனம் எங்கும் சுற்றித் திரிந்தது.

○ ○

அ மான் - அந்த மாயமான்; குன்று இடை இவரும் - மலையின் மீது ஏறும்; மேக குழு இடைக் குதிக்கும் - மேகக் கூட்டங்களின் இடையே தாவிக் குதிக்கும்; கூடச் சென்றிடின் - அதனோடு கூடப்போனால்; அகலும் - நீண்ட தூரம் ஓடிப்போகும்; தாழில் - சற்றுத் தாமதித்தால்; தீண்டல் ஆம் தகைமைத்து ஆகும் - கையால் பற்றிவிடும் நிலையில் அருகே வந்து நிற்கும்; நின்றதேபோல நீங்கும் -

அருகே நின்றதுபோல் நின்று திடீரென்று வெகு தொலைவில் சென்றுவிடும்; (ஆதலின் அது) நிதி வழி நேயம் நீட்டும் - செல்வம் உள்ள வழியில் தம் ஆசையைச் செலுத்தும்; மன்றல் அம்கோதை மாதர் - மணம் வீசும் அழகிய மாலை அணிந்த விலை மகளிர்; மனம் என - மனம் என்று சொல்லும்; தகைத்து - தன்மையது ஆயிற்று.

○ ○

பற்றுவான் இனி அல்லன்; பகழியால்
செற்று வானில் செலுத்தல் உற்றான்
என
மற்ற மாய அரக்கன் மனக்கொளா
உற்ற வேகத்தின் உம்பரின்
ஓங்கினான்.

இனி இராமன் தன்னைப் பிடிப்பதில் கருத்துச் செலுத்த மாட்டான். பகழி ஒன்றால்கொன்று விண்ணுலகு செலுத்துவான் என்று கண்டு கொண்டான் மாரீசன். தனது முழு சக்தியையும் உபயோகித்து வானிலே எழும்பிக் குதித்து ஓடினான்.

○ ○

அ மாய அரக்கன் - மாயையில் வல்ல அரக்கனான அம் மாரீசன்; இனிப் பற்றுவான் அல்லன் - இராமன் இனி என்னைப் பிடிக்க முயலமாட்டான்; பகழியால் செற்று - தன் அம்பினால் என்னைக் கொன்று; வானில் செலுத்தல் உற்றான் - விண்ணுலகு செலுத்தக் கருதியுள்ளான்; என - என்று; மனம் கொளா - மனத்தில் எண்ணிக்கொண்டு; உற்ற வேகத்தின் - தனக்கு உரிய மிக வேகத்துடனே; உம்பரில் ஓங்கினான் - வானில் மேல் எழும்பிச் செல்லலாயினான்.

○ ○

அக்கணத்தில் ஐயனும் வெய்ய தன்
சக்கரத்தில் தகைவு அரிது ஆயது; ஓர்
செக்கர் மேனிப் பகழி செலுத்தினான்
''புக்க தேயம் புக்கு இன்
உயிர் போக்கு?'' எனா.

அந்தக் கணத்திலே இராமன் என்ன செய்தான்? சுதர்சனம் என்ற சக்கரம்போல எவராலும் தடுப்பதற்கு அரிய அஸ்திரம் ஒன்றை ஏவினான். எத்தகைய அம்பு? வெய்யதோர் பகழி - சிவந்த நிறம் கொண்ட பகழி. என்ன சொல்லி ஏவினான்? "இவன் எங்கு செல்கிறானோ அங்கு தொடர்ந்து சென்று இவன் இன்னுயிர் மாய்ப்பாயாக" என்று கூறி அப் பகழியை ஏவினான்.

○ ○

அ கணத்தில் - அதே சமயத்தில்; ஐயனும் - இராமனும்; தன் சக்கரத்தினில் - திருமாலாகிய நிலையில் கொண்டுள்ள சுதர்சனம் எனும் சக்கரம்போல; தகைவு அரியது ஆயது - எவராலும் தடுப்பதற்கு அரியது ஆகிய; ஓர் - ஒரு; வெய்ய - கொடிய; செக்கர் மேனி பகழி - சிவந்த நிறம் கொண்ட அம்பை; புக்க தேயம் புக்கு - இவன் செல்லும் இடம் எங்கும் தொடர்ந்து சென்று; இன் உயிர் போக்கு எனா - இவனுடைய இனிய உயிரைப் போக்கு என்று சொல்லி; செலுத்தினான் - ஏவினான்.

○ ○

நெட்டிலைச் சரம், வஞ்சனை நெஞ்சுறப்
பட்டது; அப்பொழுதே பகுவாயினால்
அட்டதிக்கினும் அப்புறமும் புக
விட்டு அழைத்து ஒரு குன்று என
வீழ்ந்தான்.

அந்த இராமபாணம் என்ன செய்தது? அந்த வஞ்சகனின் மார்பிலே தைத்தது. அந்தக் கணமே அவன் தன் பெருவாய் திறந்து எட்டுத் திக்கும் கேட்கும் வண்ணம் உரத்த குரல் எழுப்பி "ஹா சீதே; ஹா லக்ஷ்மணா" என்று கூவி ஒரு மலைபோல் தன் சுய உருவில் வீழ்ந்தான்.

O O

நெடு இலை சரம் - நீண்டு கூர்மையாயுள்ள சிலை போன்ற அலகு கொண்ட அந்த இராம பாணம்; வஞ்சனை - வஞ்சகனான அந்த மாரீசனுடைய; நெஞ்சு உற - இதயத்திலே நன்கு பொருந்த; பட்டது - போய் தைத்தது; அப்பொழுதே - அந்தக் கணத்திலே; பகுவாயினால் - பிளந்த தன் வாயினால்; அட்ட திக்கும் - எட்டுத் திக்குகளிலும்; அப்புறமும் - அவற்றிற்கு அப்பாலும்; புக - புகும்படி; விட்டு - பெருங்குரல் கொடுத்து; அழைத்து -"ஹா சீதே! ஹா லக்ஷ்மணா!" என்று கூவி; ஒரு குன்று என - ஒரு மலை போலத் தன் உண்மை வடிவில்; வீழ்ந்தான் - கீழே விழுந்தான் மாரீசன்.

O O

வெய்யவன் தன்
உருவொடு வீழ்தலும்
"செய்யது அன்று" எனச்
செப்பிய தம்பியை
'ஐயன் வல்லன்' என் ஆர்
உயிர் வல்லன், நான்
உய்ய வந்தவன்
வல்லன் என்று உன்னினான்.

கொடிய வஞ்சகனான அந்த மாரீசன் தன் சுயரூபம் கொண்டு வீழ்ந்த உடனே இராமன் எண்ணியது யாது?

இந்த மான் பின்னே செல்வது சரியன்று என்று சொன்ன தம்பி மிக்க கெட்டிக்காரன். நான் உய்யும் பொருட்டு என் பின்னே காடு போந்தவன் என்று பெருமையோடு எண்ணினான்.

○ ○

வெய்யவன் - கொடியவனான அந்த மாரீசன்; தன் உரு ஒடு - தன் சுய உருவத்துடனே; வீழ்தலும் - கீழே விழுந்தவுடன்; (இராமன்) செய்யது அன்று - இந்த மான் பின்னே செல்வது சரியன்று (வஞ்சக மான்) என - என்று; செப்பிய - சொன்ன; தம்பியை - தம்பியாகிய லட்சுமணனை; ஐயன் வல்லன் - என்னப்பன் கெட்டிக்காரன்; என் ஆருயிர் வல்லன் - எனது அரிய உயிர் போன்றவன்; வலியன் (சமர்த்தன்) நான் உய்ய வந்தவன் - காட்டிலே எனக்கு ஏற்படவிருக்கும் இன்னல்களினின்றும் நான் பிழைத்து வாழ என்னுடன் காடு போந்தவன்; என்று உன்னினான் - என்று பெருமையோடு எண்ணினான்.

○ ○

எயிறு அலைத்து
முழை திறந்து ஏங்கிய
செயிர் தலைக் கொண்ட
சொல் செவி சேர்தலும்
குயில் தலத்திடை உற்றது
ஓர் கொள்கையாள்
வயிறு அலைத்து
விழுந்து மயங்கினாள்.

மாரீசனின் கூக்குரல் கேட்டவுடனே சீதை என்ன செய்தாள்? தன் இரு கைகளாலும் வயிற்றிலே அடித்துக் கொண்டு மரத்தின் மீதிருந்த குயில் தரையிலே விழுந்தது போல துயருற்றுத் தரையிலே விழுந்து மயங்கினாள்.

எயிறு - பற்கள்; அலைத்தது - மூடி அசைதல் கொண்ட; முழை திறந்து - குகை போன்ற தன் வாய் திறந்து; ஏங்கிய - முழங்கிய; செயிர்தலை கொண்ட சொல் - குற்றம் மேற் கொண்ட அம் மாரீசனின் கூக்குரல்; செவி சேர்தலும் - காதில் விழுந்த உடனே; குயில் - ஒரு குயிலானது; தலத்து இடை உற்றது - தான் இருந்த மரத்தினின்றும் தரையிலே வீழ்ந்தது போல; ஓர் கொள்கையாள் - ஒரு துயர் நிலை அடைந்தவளாய்; வயிறு அலைத்து - தன் வயிற்றைக் கைகளால் புடைத்துக்கொண்டு; விழுந்து - தரையில் விழுந்து; மயங்கினாள் - மயக்கமுற்றாள்.

○ ○

'பிடித்து நல்கு இவ் உழை
எனப் பேதையேன்
முடித்தனென் முதல் வாழ்வு'
என மெய் அழல்
கொடிப் படிந்தது என,
நெடுங்கோள் அரா
இடிக்கு உடைந்தது
எனப் புரண்டு ஏங்கினாள்.

"நீயே இந்த மானைப் பிடித்து வந்து எனக்குக்கொடு என்று சொல்லி அறிவு கெட்டவள் ஆனேனே! என் வாழ்வுக்கு ஆதாரமான கணவன் அழியும்படியான காரியத்தைச் செய்து விட்டேனே!" என்று கூறி நெருப்பிலே பட்ட கொடிபோலவும், இடியோசை கேட்ட பாம்பு போலவும் வலிவிழந்து தரையிலே புரண்டு அழுதாள்.

○ ○

இ உழை - இந்த மானை; பிடித்து நல்கு - நீயே பிடித்து வந்து எனக்குக் கொடு; என் - என்று; பேதையேன் - அறிவு

இல்லாத நான்; முதல் வாழ்வு - என் வாழ்வுக்கு ஆதாரமாயுள்ள என் கணவனை; முடித்தனென் - அழியும்படியான செயலைச் செய்து முடித்து விட்டேனே; என - என்று கூறி; மொய் அழல் கொடி படிந்தது என - எழுநா விட்டு எரியும் தீ ஒன்று; ஒரு பூங்கொடியைப் பற்றிக்கொண்டது போலவும்; நெடுங்கோள் அரா - நீண்ட வலிய பாம்பு ஒன்று; இடிக்கு உடைந்தது என - இடி முழக்கம் கேட்டு வலிவிழந்து வருந்திக் கிடந்தது போலவும்; புரண்டு - தரையிலே கிடந்து புரண்டு; ஏங்கினாள் - வருந்தி அழுதாள்.

○ ○

''குற்றம் வீந்த குணத்தின்
எம் கோமகன்
மற்றை வாள் அரக்கன்
புரி மாயையால்
இற்று வீழ்ந்தனன்
என்னவும், என் அயல்
நிற்றியோ? இளையோய்
ஒரு நீ'' என்றாள்.

"குற்றம் என்பது இல்லாத குணக்குன்றாய் என் தலைவன் மாற்றார் செய்த சூழ்ச்சியால் வீழ்ந்தான். அவனது குரல் கேட்டும் தம்பியாகிய நீ இங்கு நிற்பாயோ" என்று கடிந்து கொண்டாள் சீதை. யாரை நோக்கி? இளையவனாகிய லட்சுமணனை நோக்கி.

○ ○

குற்றம் வீந்த - குற்றம் என்பது இல்லாத; குணத்தின் - நல்ல குணங்களை உடைய; எம் கோமகன் - என் தலைவன்; மற்றை - வேறுபட்ட; (அதாவது பகைவனான) வாள் அரக்கன் - கொடிய அரக்கன்; புரிமாயையால் -

செய்த மாயத்தால்; இற்று வீழ்ந்தனன் என்னவும் - உயிரற்றுக் கீழே விழுந்தான் என்பதை (அவன் குரலால்) கேட்ட பின்பும்; இளையோய் ஒரு நீ - அவனுடைய தம்பியாகிய நீ; என் அயல் நிற்றியோ - என் அருகிலே நிற்கின்றாயோ? என்றாள் - என்று லட்சுமணனை நோக்கிக் கடிந்து கொண்டாள்.

○ ○

''பார் எனப் புனல் எனாப்
பவனம் வான், கனல்
பேர் என அவை
அவன் முனியில் பேருமால்
கார் எனக் கரிய அக்
கமலக் கண்ணனை
யார் எனக் கருதி இவ்
இடரின் ஆழ்கின்றீர்?''

"இராமனை—கார் மேனி வண்ணனை—செந்தாமரைக் கண்ணனை—யார் என்று கருதிநீவிர் இத்துன்பத்தில் கிடந்து உழல்கின்றீர்? அவன் சினங்கொண்டால் நிலம், நீர், காற்று, தீ, வானம் எனப்படும் ஐம்பெரும் பூதங்களும் நிலை குலையுமே!" என்றான் இளையவன்.

○ ○

பார் என - புவி என்றும்; கனல் என - தீ என்றும்; புனல் என - நீர் என்றும்; பவனம் வான் கனல்பேர் என அவை - காற்று ஆகாயம் எனும் பேர் கொண்ட எவையும்; அவன் முனியில் - இராமன் கோபித்தால்; பேரும் ஆல் - அவை நிலை தளர்ந்து கெடும்; ஆதலின்; கார் எனக் கரிய அக்கமலக் கண்ணனை - நீருண்ட மேகம் போலும் கரிய நிறங்கொண்ட செந்தாமரைக் கண்ணனாகிய இராமனை; ஆர் எனக் கருதி -

யார் என்று நினைத்து; இவ் இடரின்-இவ்விதத் துன்பத்தில்; ஆழ்கின்றீர் - நீவிர் ஆழ்ந்து தவிக்கின்றீர்?

O O

காவலன், ஈண்டு நீர்
கருதிற்று எய்து மேல்
மூவகை உலகமும், முடியும்;
முந்து உள
தேவரும் முனிவரும்
முதல செவ்வியோர்
ஏவரும் வீவர்; நல்
அறமும் எஞ்சுமால்

இராமன் எல்லா உயிர்களையும் காத்தல் வல்லோன். நீர் கருதியவாறு அழிவுறுவான் ஆயின் மூவுலகமும் முடியும்; பிரம்மாதிதேவர் அழிவர்; முனிவர்களும் அழிவார்கள்; நல்லதோர் அறமும் அழியும்.

O O

காவலன் - எல்லா உயிர்களையும் காத்தல் வல்லோனாகிய இராமன்; ஈண்டு - இப்பொழுது; நீர் கருதிற்று - நீவிர் கருதியவாறு; எய்துமேல் - அழிவுற்றால்; மூவகை உலகமும் முடியும் - சுவர்க்கம், பூமி, பாதாளம் என்று சொல்லப்பெறும் மூவகை உலகங்களும், அனைத்தும் அழிந்துப்போம்; முந்து உள - முதன்மையாகக் கருதப்பட்ட பிரம்மாதி தேவர்களும்; முனிவரும் - முனிவர்களும். முதல - முதன்மையாகக் கொண்ட; செவ்வியோர் ஏவரும் - சிறந்தோர் யாவரும்; வீவர் - அழிவர்; நல் அறமும் - அழியாத நல்லதோர் அறமும்; எஞ்சும் ஆல் - அழியும்.

O O

''பரக்க என் பகர்வது?
பகழி பண்ணவன்
துரக்க, அங்கு அதுபடத்
தொலைந்து சோர்கின்ற
அரக்கன் அவ்வுரை எடுத்து
அரற்றினான்; அதற்கு
இரக்கம் உற்று இரங்கலீர்;
இருத்திர் ஈண்டு'' என்றான்.

"இராமன் ஏவிய அம்பு தைக்கவே சோர்வுற்று அழியும் அந்த அரக்கன் இராமனுடைய குரல் எடுத்துக் கதறிக் கூவினான். ஆகவே அது பற்றி நீவிர் கலங்காதீர்; வருந்தாதீர்; அழாதீர்!'' என்று சீதைக்கு ஆறுதல் கூறினான் லட்சுமணன்.

○ ○

பரக்க என் பகர்வது - விரிவாக நான் இனி என்ன சொல்வது? பண்ணவன் - நம் தலைவனாகிய இராமன்; பகழி துரக்க - அம்பு ஒன்றை ஏவ; அங்கு அதுபட - ஆங்கே அது அந்த மான் மீது பட; தொலைந்து சோர்கின்ற அரக்கன் - தன் வலி தொலைந்து சோர்ந்து அழிகின்ற அவ் வரக்கன்; அ உரை எடுத்து அரற்றினான் - இராமன் குரலால் அவ் வார்த்தைகளைக் கூறிக் கதறிக் கூவினான்; (ஆதலின்) அதற்கு இரக்கம் உற்று இரங்கலீர் - அதன் பொருட்டு ஏங்கி வருந்தாதீர்; ஈண்டு இருத்திர் - இங்கே கவலையின்றி இருப்பீராக என்று தேறுதல் கூறினான் லட்சுமணன்.

○ ○

என்று அவன் இயம்பலும்
எழுந்த சீற்றத்தள்
கொன்றன இன்னலள்
கொதிக்கும் உள்ளத்தள்

நின்ற நின் நிலை இது
நெறியிற்று அன்று எனா
வன் தறு கண்ணினள்
வயிர்த்துக் கூறுவாள்.

இவ்வாறு இளைய பெருமாள் கூறிய உடனே என்ன ஆயிற்று? சினம் பொங்கிய சீதைக்கு தன்னைக் கொன்று விட்டது போலும் துயரம் மேலிட்டது; உள்ளம் கொதித்தது; உறுத்து விழித்தாள் "உன் அண்ணனின் அலறல் கேட்டும் நீ விரைந்து ஓடினாய் அல்லை; சிறிதும் மனம் பதறாமல் நிற்கின்றாய். உனது இந்த நிலை நியாயமா? நல்நெறியா? அடுக்குமா?" என்று சில கடும் சொற்களை அள்ளி வீசினாள்.

○ ○

என்று அவன் இயம்பலும் - என்று லட்சுமணன் கூறியதும்; எழுந்த சீற்றத்தள் - சினம் பொங்கியவளாய்; கொன்று அன தன்னைக் கொன்றதே போலும்; இன்னலள் - துன்பமுடையவளாய்; கொதிக்கும் உள்ளத்தள் - கொதிக்கின்ற மனம் உடையவளாய்; வன்தறு கண்ணினள் - வலிய வீரத் திரு பார்வையுடையவளாய்; (லட்சுமணனை நோக்கி) நின்ற நின் நிலை இது - உன் முன்னவனின் அலறல் கேட்டும் சிறிதும் நிலை தளராமல் இங்கு நிற்கின்றாயே இது; நெறியிற்று அன்று - நல்ல நெறியாகுமா? ஆகாது. எனா - என்று; வயிர்த்துக்கூறுவாள்- கடுமையான சொற்கள் சில கூறத் தொடங்கினாள்.

○ ○

"ஒரு பகல் பழகினார்
உயிரை ஈவரால்
பெருமகன் உலைவுறு
வெற்றி கேட்டும் நீ

வெருவலை நின்றனை
வேறு என்? யான் இனி
எரியிடைக் கடிது வீழ்ந்து
இறப்பென் ஈண்டு'' என

ஒரு நாள் பழகிய போதினும் உயிரைக் கொடுத்து உதவி செய்வர். யார்? உண்மை அன்புடையோர். அவ்விதமிருக்க நீயோ இராமன் உயிருக்கு ஆபத்து வந்தது அறிந்தும் அசையாது, நிலை பெயராது, அஞ்சாது, கலங்காது நிற்கின்றாய். இனி எனக்கு என்ன இருக்கிறது? தீயிலே விழுந்து உயிர் துறப்பேன் என்று கூறி,

○ ○

ஒரு பகல் பழகினார் - ஒரு நாளே பழகினவர் ஆயினும்; (உண்மை அன்புடையோர்) உயிரை ஈவர் - (அந்த நண்பருக்காக) தமது உயிரையும் கொடுத்து உதவி செய்வர்; (அங்ஙனமிருக்க) பெருமகன் - தலைவனாகிய இராமன்; உலைவு உறு பெற்றி - அழிவடைந்தான் என்பது; கேட்டும் - காதால் கேட்டும்; வெருவலை - பதறவில்லை; நின்றனை - என் எதிரில் நின்று கொண்டிருக்கிறாய்; வேறு என் - எனக்கு வேறு கதி என்ன இருக்கிறது? இனியான் - இனிமேல் நான்; கடிது - விரைவிலே; எரி இடை - தீயிலே; வீழ்ந்து - விழுந்து; ஈண்டு - இப்போதே; இறப்பன் - உயிர் துறப்பேன்; எனா - என்று.

○ ○

தாமரை வனத்திடைத்
தாவும் அன்னம் போல்
தூம வெம் காட்டு எரி
தொடர்கின்றாள் தனை
சேம வில் குமரனும்
விலக்கிச் சீறடிப்
பூமுக நெடு நிலம்
புல்லிச் சொல்லுமால்

குளத்திலே மலர்ந்திருக்கிற தாமரைக் காட்டிலே தாவும் அன்னம் போல ஓடினாள் சீதை எங்கே? காட்டிலே புகைவிட்டு எரியும் தீ நோக்கி. எதற்கு? தீயிலே விழுந்து உயிர்விட; அப்போது இளைய பெருமாள் பூமியிலே விழுந்து வணங்கி, சீதையைத் தடுத்து நிறுத்திப் பின்வருமாறு சொன்னான்.

○ ○

தாமரை வனத்திடை - குளத்திலே உள்ளதொரு செந்தாமரைக் காட்டிலே; தாவும் - தாவியோடும்; அன்னம் போல் - அன்னப் பறவை போல; தூம வெம் காட்டு எரி - புகை சூழ்ந்த காட்டுத் தீயினிடத்திலே; தொடர்கின்றாள் - செல்லத் தொடங்கினாள்.

தனை - அவ்வாறு உயிர் விடச் சென்ற சீதையை; சேம வில் குமரனும் - சீதையைப் பாதுகாத்தல் கருதி வில்லேந்தி நின்ற இளைய பெருமாள்; விலக்கி - தடுத்து; சிறு அடி பூ முகம் - சிறிய அடிகளாகிய தாமரை மலர் முன்னே; நெடு நிலம் புல்லி - பூமியிலே விழுந்து வணங்கி; சொல்லுவான் - பின் வருமாறு சொல்லத் தொடங்கினான்.

○ ○

"துஞ்சுவது என்னை? நீர்
சொற்ற சொல்லை யான்
அஞ்சுவென்; மறுக்கிலென்;
அவலம் தீர்ந்து இனி
இஞ்சு இரும்; அடியனேன்
ஏகுகின்றனென்;
வெஞ்சின விதியினை
வெல்ல வல்லமோ?"

நீவிர் உயிர் துறப்பது ஏன்? வேண்டாம்; நீவிர் கூறிய சொற்களுக்கு நான் அஞ்சுகிறேன். உமது கட்டளையை

நான் மறுக்கவில்லை. போகின்றேன். விதி வலிது. அதை வெல்ல நம்மால் முடியுமோ? (முடியாது)

○ ○

துஞ்சுவது - நீவிர் இறப்பது; என்னை - ஏன்? நீர் சொற்ற சொல்லை - நீவிர் சொன்ன சொல்லுக்கு; யான் அஞ்சுவென் - நான் பயப்படுகிறேன்; மறுக்கிலேன் - நீவிர் இட்ட கட்டளைக்குக் கீழ்ப்படிய நான் மறுத்தேன் அல்லன். இனி - இனிமேல்; அவலம் தீர்ந்து - உம்முடைய வருத்தம் நீங்கி; இஞ்சு இரும் - இங்கே இருப்பீராக; அடியனேன் ஏகுகின்றனன் - நான் செல்கிறேன்; வெஞ்சின விதியை - மிக்க சினத்துடன் நம்மீது சீறி வரும் விதியை; வெல்ல வல்லமோ? - வெல்லும் வல்லமை நமக்குளதோ. (இல்லை)

○ ○

போகின்றேன் அடியனேன்
பொருந்தி வந்து, கேடு
ஆகின்றது; அரசன் தன்
ஆணை நீர் மறுத்து
''ஏகு'' என்றீர்; இருக்கின்றீர்
தமியிர் என்று, பின்
வேகின்ற சிந்தையான்
விடை கொண்டு ஏகினான்.

எனது ஐயன் இராமனுடைய கட்டளை 'இங்கே இரு' என்பது; அதை மீறி ''ஏகு'' என்கிறீர். துணை எவருமின்றி இருக்கிறீர். வேகின்ற சிந்தையோடு போகின்றேன். விடையும் கொண்டேன் என்று சொல்லிப் போனான் லட்சுமணன்.

○ ○

அடியனேன் போகின்றேன் - அடியேன் இப்போதே போகின்றேன்; கேடு - ஒரு பெருங்கேடு; பொருந்தி வந்து

ஆகின்றது - நம்மிடம் வலியே வந்து பொருந்தியுள்ளது; அரசன் தன் ஆணை - இராமனது கட்டளையை; மறுத்து - மீறி; ஏகு என்றீர் - நீவிர் என்னைப் போகச் சொல்கின்றீர்; தமியீர் இருக்கின்றீர் - நீவிர் தனியாக இருக்கின்றீர்; என்று - எனக் கூறி; பின் - பிறகு; வேகின்ற சிந்தையான் - துயரால் மனம் வெந்து கொண்டிருக்கும் இலட்சுமணன்; விடைகொண்டு - சீதையிடம் விடை பெற்றுக்கொண்டு; ஏகினான் - சென்றான்.

O O

"இருப்பனேல், எரியிடை
இறப்ப ரால் இவர்;
பொருப்பு அனையானிடைப்
போவெனே எனின்
அருப்பம் இல் கேடு வந்து
அடையும்; ஆருயிர்
விருப்பனேற்கு என் செயல்"
என்று விம்மினான்.

"நான் போகாது இங்கு நின்றால் இவர் தீயில் வீழ்ந்து இறப்பர். போனாலோ? பெரும் கேடு வரும். இருதலைக் கொள்ளி எறும்புபோல் தவிக்கிறேன். உயிர் விடாது உழல்கின்றேன் என் செய்வேன்?" என்று விம்மினான் லட்சுமணன்.

O O

இருப்பனேல் - நான் போகாது இங்கே இருப்பேன் ஆகில்; இவர் எரியிடை இறப்பர்; இந்தப் பிராட்டி தீயில் வீழ்ந்து உயிர் விடுவர்; பொருப்பு அனையான் குடை - குன்றனைய இராமனிடையே செல்வேன் ஆகில்; அருப்பம் இல் - அற்பமானது என்று தள்ளிவிட முடியாத; கேடு - பெருங்கேடு; வந்து அடையும் - வந்து சேரும், ஆருயிர் விருப்பனேற்கு -

உயிரை விடாமல் அதன் மீது பற்றுக்கொண்டிருக்கும் யான் என் செயல் - என்ன செய்வேன்? (ஒன்றும் தெரியவில்லையே) என்று - என்று எண்ணி; விம்மினான் - தேம்பி வருந்தி யழுதான் லட்சுமணன்.

○ ○

இளையவன் ஏகலும்
இறவு பார்க்கின்ற
வளை எயிற்று இராவணன்
வஞ்சம் முற்றுவான்
முளை வரித் தண்டு ஒரு
மூன்றும் முப் பகைத்
தளை அரி தவத்தவர்
வடிவும் தாங்கினான்.

லட்சுமணன் "எப்பொழுது செல்வான்? எப்பொழுது செல்வான்?" என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் வளைந்த கோரப் பற்கள் கொண்ட இராவணன்.

லட்சுமணன் சென்ற உடனே சந்நியாசிக் கோலம் கொண்டான். திரிதண்டம் ஒன்றைக் கையில் ஏற்றான்.

○ ○

இளையவன் - லட்சுமணன்; ஏகலும் - சென்ற உடனே; இறவு பார்க்கின்ற - அவன் செல்வதை எதிர்பார்த்துக் கொண்டிருந்த; வளை எயிற்று - வளைந்த பற்களை உடைய; இராவணன் - இராவணன்; வஞ்சம் - தான் எண்ணி வந்த வஞ்சகச் செயலை; முற்றுவான் - செய்து முடித்தற் பொருட்டு; வரி - வரிந்து கட்டப்பட்ட; முளை - மூங்கில்; தண்டு - கோல்; ஒரு மூன்றும் - ஒன்றாகிய மூன்றும் முப்பகை - காமம், வெகுளி, மயக்கம் என்ற மூன்று

விதமான உட்பகைகளாகிய; தளை - பந்தங்களையும் அரி - அறுத்த; தவத்து அவர் வடிவும் - துறவியர் வடிவமும்; தாங்கினான் - மேற்கொண்டான்.

○ ○

ஊண் இலனாம் என
உலர்ந்த மேனியன்
சேண் நெறி வந்தது
ஓர் வருத்த செய்கையன்
பாணியின் அளந்து
இசை படிக்கின்றான் என
வீணையின் இசைபட
வேதம் பாடுவான்.

நீண்டகாலமாகச் சோறு காணாதவன் என்றுசொல்லும் படியாக, வற்றி உலர்ந்த உடலையுடையவனாய்; நெடுந் தூரம் நடந்து வந்தவன் போல அலுப்பு மேலிட்டவனாய், சாமகானம் செய்து கொண்டு அதற்கு ஏற்ப வீணையொடு கைத்தாளம் போட்டுக்கொண்டு வந்தான்.

○ ○

ஊண் இலனாம் - நீண்ட நாட்களாக உணவு கொள்ளாதவன்; என - என்று சொல்லும்படியாக; உலர்ந்த மேனியன் - வற்றிக் காய்ந்து போன உடல் உடையவனாய்; சேண் நெறி வந்தது - நீண்ட தூரத்திலிருந்து நடந்து வந்தவன் போல; ஓர் வருத்த செய்கையன் - அலுப்புத் தோன்றும் செயல்கள் உடையோனாய்; பாணியின் அளந்து - கைகளால் தாளம் போட்டுக் கொண்டு, இசைபடிக்கின்றான் என - பாடுகிறான் என்று சொல்லும்படியாக; வீணையின் இசைபட - வீணா கானத்துடன்; வேதம் பாடுவான் - சாமவேதத்தை கானம் செய்வான் ஆனான்.

○ ○

பூப்பொதி அவிழ்ந்தன
நடையன்; பூதலம்
தீப்பொதிந்ததாம் என
மிதிக்கும் செய்கையன்
காப்பு அரும் நடுக்கு உறும்
காலன்; கையினன்
மூப்பு எனும் பருவமும்
முனிய முற்றினான்.

பூவின் இதழ்கள் மெல்ல அவிழ்வது போன்ற நடை; தீ மேல் நடப்பவன் போல அடிமேல் அடிவைத்த நடை; நடுங்கும் கால்கள்; நடுங்கும் கைகள்; பிறர் கண்டு அருவருக்கத்தக்க முதுமை.

○ ○

பூப்பொதி அவிழ்ந்து அன - பூவின் இதழ் மெல்ல விரிவது போலும்; நடையன் - மெதுவான நடையுடையவனாய்; பூதலம் - பூமி; தீ பொதிந்தது ஆம் என - பூமியிலே நெருப்பு நிரம்ப இருப்பது போல; மிதிக்கும் செய்கையன் - பட்டதும் படாததுமாக அடிமேல் அடி வைப்பவனாய்; காப்பு அரும் - காத்தற்கு இயலாமல்; நடுக்கு உறும்-நடுங்கும்; காலன் - கால்களை உடையவனாய்; கையினன்-கைகளை உடையவனாய்; மூப்பு எனும் பருவமும்-முதுமையும்; முனிய - பிறர் கண்டு அருவருக்கத் தக்க விதமாக; முற்றினான் - முதுமை எய்தினான்.

○ ○

தாமரை மணி, தொடர்
தவத்தின் மாலையன்
ஆமையின் இருக்கையின்,
வளைந்த ஆக்கையன்,

நாம நூல் மார்பினன்
நணுகினான் அரோ
தூமனத்து அருந்ததி
இருந்த சூழல் வாய்.

ஆமை போல் கூன் விழுந்த உடல்; கையிலே மணி மாலை; மார்பிலே பூணூல். இவ்விதத் தோற்றத்துடன், அருந்ததி போலும் கற்பினளாகிய சீதை இருந்த பன்ன சாலையை அணுகினான். யார்? இராவண சந்நியாசி.

O O

தவத்தின் - தவத்திற்கு அறிகுறியான; தாமரை மணி தொடர் மாலையன் - தாமரை மணிகளால் தொடுக்கப் பட்ட மாலை ஏந்தியவனாய்; ஆமையின் இருக்கையின் - ஆமையின் முதுகு போல; வளைந்த - கூன் விழுந்த; ஆக்கையன்-உடல் கொண்டவனாய்; நாம நூல் மார்பினன்-பெருமை மிகு பூணூல் புரளும் மார்புடையயோனாய்: தூமனத்து - தூய சிந்தையுடைய: அருந்ததி - அருந்ததி போலும் கற்புடைய சீதா பிராட்டி; இருந்த சூழல்வாய் - இருந்த பன்ன சாலையை; அணுகினான் - நெருங்கினான்

O O

தோம் அறு சாலையின்
வாயில் துன்னினான்
நா முதல் குழறிட
நடுங்கு சொல்லினான்
''யாவிர் இவ்விருக்கையுள்
இருந்துளீர்?'' என்றான்
தேவரும் மருள் கொளத்
தெரிந்த மேனியான்.

அரக்கர் தம் மாயங்களை நன்கு அறிந்த தேவர்களும் மயங்கும் வண்ணம் துறவி வேஷம் பூண்ட அந்த இராவண சந்நியாசி சீதையிருந்த பன்னசாலை வாயிலை அடைந்தான். "இதனுள் இருப்பவர் யார்" என்று நாக் குழறக் கேட்டான்.

○ ○

தெரிந்த - அரக்கர் தம் மாயங்களை நன்கு அறிந்த; தேவரும் - தேவர்களும்; மருள் கொள - இவன் இராவணன் என்று அறியாது மயங்கும் வகையில்; மேனியான் - துறவு மேனி கொண்ட அந்த இராவணன்; தோம் அறு சாலையின் வாயில்-குற்றமற்ற அப்பன்னசாலை வாயிலை; துன்னினான்-நண்ணினான்; நா முதல் குழறிட - நாத்தடுமாற; நடுங்கு சொல்லினான் - நடுங்கும் சொற்களை உடையவனாய்; இவ் இருக்கையுள் - இந்த குடிலில்; இருந்துளீர் - இருக்கின்றவர்களே! யாவீர் - நீங்கள் யார்? என்றான் - என்று கேட்டான்.

○ ○

தோகையும் "இவ் வழித்
தோம் இல் சிந்தனைச்
சேகு அறு நோன்பினர்''
என்னும் சிந்தையாள்
பாகு இயல் கிளவி ஓர்
பவளக் கொம்பர் போன்று
"ஏகுமின் ஈண்டு'' என
எதிர் வந்து எய்தினாள்.

"இவர் - இந்த வனத்திலே தவம் செய்பவர் போலும்'' என்று எண்ணினாள் சீதை. தேன் பாகுபோலும் இனிய மொழிகளால் "இங்கே எழுந்தருள்க'' என்று வரவேற்ற வண்ணம் ஒரு பவளக் கொடி போல் அந்தக் கபட சந்நியாசியின் எதிரில் வந்து தோன்றினாள்.

○ ○

தோகையும் - மயில் போலும் சாயலாளாகிய சீதையும்; இவ் வழி - இந்த வனத்தில் இருக்கும்; தோம் இல் சிந்தனை மாசற்ற மனமுடைய; சேகு அறு நோன்பினர் - குற்றமற்ற தவ விரத முடையவர்; இவர்; என்னும் சித்தையாள் - என்ற எண்ணங்கொண்டவளாய்; பாகு இயல் கிளவி - தேன் பாகு போலும் சுவையுடைய இனிய சொற்களால்; ஈண்டு ஏகுமின் - இங்கு எழுந்தருள்க; என - என்று கூறி; எதிர் வந்து எய்தினாள் - அந்தக் கபட சந்நியாசியின் எதிரே வந்தாள்.

○ ○

வெற்பிடை மதம் என
  வியர்க்கும் மேனியன்
அற்பினின் திரைபுரள்
  ஆசை வேலையன்
பொற்பினுக்கு அணியினைப்
  புகழின் சேக்கையைக்
கற்பினுக்கு அரசியைக்
  கண்ணில் நோக்கினான்.

இராவணனுடைய உடல் முழுவதும் வியர்வைத் துளிகள் அரும்பின; பெருக்கெடுத்து ஓடின; ஆசை எனும் கடலிலே அகப்பட்ட அவன், அழகுக்கு ஓர் அணியாய், புகழுக்கு இருப்பிடமாய், கற்பினுக்கு அரசியாய் விளங்கும் சீதா பிராட்டியைத் தன் கண்களால் கண்டான்.

○ ○

வெற்பு இடை மதம் என - மலையிடத்தே உண்டாகும் சிலாசத்து எனும் கல்மதம்போல; வியர்க்கும் மேனியன் - வியர்வை பெருகும் உடலுடையவனும், அற்பினில் - அன்பினால்; திரை புரள் - அலை புரண்டு எழும்; ஆசை

வேலையன் - ஆசை எனும் கடலிடைப்பட்டவனுமாகிய இராவணன்; பொற்பினுக்கு அணியினை - அழகுக்கு ஓர் அணிகலன் போன்றவளை; புகழின் சேக்கையை - புகழுக்கு இருப்பிடமானவளை; கற்பினுக்கு அரசியை - கற்பு என்பதற்கு ஓர் அரசி போன்றவளை; கண்ணில் நோக்கினான் - தன் கண்களால் நேரில் கண்டான்.

○ ○

புன மயிர் சாயலின்
எழிலில் பூதறைச்
சுனை மடுத்து உண்டு
இசை முரலும் தும்பியின்
இனம் எனக் களித்துளது
என்பது என்? அவன்
மனம் எனக்களித்தது
கண்ணின் மாலையே.

இராவணனுக்குத் தலைகள் பத்து; கண்கள் இருபது; இந்த இருபது கண்களும் என்ன செய்தன? களித்தன. எதை போல? - மலர்களிலே உள்ள தேன் ஒரு மடுவிலே தேங்கியுள்ளது. தேங்கிய மதுவை உண்டு களித்து மயங்கி ரீங்காரம் செய்கின்றன வண்டுகள். அம் மாதிரி ஏன்? அவன் மனம் போல கண்களும் களித்தன என்பதே பொருந்தும்.

○ ○

கண்ணின் மாலையே - சீதையைக் கண்ட அந்த இராவணனுடைய கண் வரிசைகள்; புனமயில் சாயல் தன் எழிலில் - காட்டிலே சுயேச்சையாய் திரிகின்ற மயில் போலும் மேனியளாகிய சீதையின் அழகினால்; பூ நறை சுனை மடுத்து - பூக்களில் உள்ள தேன் நிறைந்த மடுவில் அதனைத் தேக்கிப் பருகி; இசை முரலும் - ரீங்காரம்

செய்கின்ற; தும்பியின் இனம் என - வண்டுகள் கூட்டம்போல; களித்துளது என்பது என்? - மகிழ்ந்து மயங்கின என்று சொல்வதில் என்ன சிறப்பு? (பின் என்னை) அவன் மனம் எனக் களித்தது - அவன் மனமேபோல் கண்களும் களித்தன.

○ ○

சேயிதழ்த் தாமரைச்
சேக்கை தீர்ந்து இவண்
மேயவள் மணி நிற
மேனி காணுதற்கு
ஏயுமே இருபது இங்கு
இமைப்பு இல் நாட்டங்கள்
ஆயிரம் இல்லை என்று
அல்லல் எய்தினான்.

தாமரை மலரிலே வீற்றிருக்கின்ற திருமகள்; தனது இருக்கை விட்டு இவ்விடம் வந்துவிட்டாள். அவளது அழகிய மேனி காண்பதற்கு எனது கண்கள் இருபது போதுமோ? போதா - "ஆயிரம் கண்கள் - இமையாத கண்கள் - பெற்றிலனே" என்று வருந்தினான். - வருந்தியவன் யார்? இராவணன்.

○ ○

சேய் இதழ் தாமரைச் சேக்கை - சிவந்த இதழ்களை உடைய தாமரை மலராகிய தனது இருப்பிடம்; தீர்ந்து - விட்டு; இவண் - இவ்விடம்; மேயவள் - வந்துள்ள திருமகளாகிய இவள்; மணி நிறமேனி - சிறந்த ஒளியுடைய திருமேனியை; காணுதற்கு - காண்பதற்கு; இங்கு இருபது நாட்டங்கள் - எனக்குள்ள இந்த இருபது கண்கள்; ஏயுமே - போதுமோ; (போதா) இமைப்பு இல் நாட்டங்கள் -

இமையாத கண்கள்; ஆயிரம் இல்லை என்று - ஆயிரம் இல்லையே என்று; அல்லல் எய்தினான் - (எண்ணி) துன்பம் அடைந்தான் இராவணன்.

○ ○

ஆண்டையான் அனையன உன்னி
ஆசை மேல்
மூண்டு எழு சிந்தனை
முறை இலோன் தனைக்
காண்டலும் கண்ணின் நீர்
துடைத்த கற்பினாள்
"ஈண்டு எழுந்தருளும்"
என்று இனிய கூறினாள்.

தன் கணவனுக்கு நேர்ந்த துன்பம் கேட்டுக் கண்ணீர் பெருக்கிக் கொண்டிருந்த சீதை அக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் கட்டுக்கு அடங்காத ஆசை மேலும் மேலும் உந்த அங்கே நின்று கொண்டிருந்த கபட சந்நியாசியை வரவேற்றாள் "இங்கே எழுந்தருள்வீர்" என்று இனிய சொல் கூறினாள்.

○ ○

ஆண்டையான் - அங்கிருந்து கொண்டு; அனையன - மேற்கூறியவற்றையெல்லாம்; உன்னி - எண்ணி; ஆசை மேல் மூண்டு எழு - ஆசையானது மேலும் மேலும் மூண்டு எழுகின்ற; முறை இலான் - நல்வழி நில்லாத அந்த கபட சந்நியாசியை; கண்ணின் நீர் துடைத்த கற்பினாள் - கண்களிலிருந்து பெருகும் நீரைத் துடைத்துக்கொண்டு சிறந்த கற்புடையவளாகிய; சீதை 'ஈண்டு எழுந்தருளும்" என்று- நீவிர் இங்கே எழுந்தருள்வீராக என்று; இனிய கூறினாள் - இனிய சொல் கூறினாள்.

○ ○

இருந்தவன் "யாவது
இவ் இருக்கை இங்கு உறை
அருந்தவன் யாவன்?
நீர் யாரை?" என்றலும்
"விருந்தினர்; இவ்வழி
விரகு இலார்" எனப்
பெருந் தடங் கண்ணவள்
பேசல் மேயினாள்

'சீதா பிராட்டி அளித்த வரவேற்பைப் பெற்று, இருக்கையில் அமர்ந்த இராவணன் கேட்டான். என்ன கேட்டான்?" இது எவரது உறைவிடம்? இங்கே தவம் செய்பவர் யார்? நீர் யார்?" என்று கேட்டான்.

"ஐயோ பாவம்! கள்ளங் கபடம் அறியாதவர். இவ்வழிச் செல்பவர் போலும் இவ்விடத்துக்குப் புதியவர் போலும்" என்று கருதி சீதா பிராட்டியும் சொல்லத் தொடங்கினாள்.

○ ○

இருந்தவன் - சீதா பிராட்டியின் வரவேற்பை ஏற்று அவளால் அளிக்கப்பட்ட இருக்கையில் அமர்ந்த அந்த இராவண சந்நியாசி; இவ் இருக்கை - இந்த இருப்பிடம்; யாவது - எவருடையது? இங்கு உறை - இங்கே வசிக்கின்ற; அருந்தவன் - அரிய தவசி யாவன்? யார்? நீ யாரை? நீர் - யார்? என்றலும் - என்று கேட்கவும்; இவ்வழி விருந்தினர் - இவர் இவ்விடம் வந்த விருந்தினர்; விரகு இலார் - வஞ்சமற்றவர்; என - என்று எண்ணி; பெருந்தடங்கண் அவள் - பெரிய விசாலமான கண்களை உடைய சீதா பிராட்டியும்; பேசல்மேயினாள் - பேசத் தொடங்கினாள்.

○ ○

''தயரதன் தொல் குலத்
தனயன், தம்பியோடு
உயர்குலத்து அன்னைசொல்
உச்சி ஏந்தினான்
அயர்வு இலன்; இவ்வழி
உறையும் அன்னவன்
பெயரினைத் தெரிகுதிர்
பெருமையீர்'' என்றாள்.

"பழைமை மிகும் இட்சுவாகு குலத்திலே தோன்றிய தசரத சக்கரவர்த்தியின் மகன் - தன் தாயின் கட்டளையைத் தலைமேல் தாங்கி; தம்பியோடு கான்போந்து அயர்வின்றி இங்கே உறைகின்றார். அவர் பெயரை நீவிர் அறிந்திருப்பீரே! அறியீரோ?'' என்று கேட்டாள்.

○ ○

பெருமையீர் - பெருமைக்கு உரியவரே. தொல் குலம் - பழைமையான இட்சுவாகு குலத்தைச் சேர்ந்த; தயரதன் - தசரத சக்கரவர்த்தியின்; தனயன் - குமாரன்; உயர் குலத்து - உயர்ந்த குலத்திலே பிறந்த; அன்னை சொல் - தாயின் கட்டளையை; உச்சி ஏந்தினான் - தலைமேல் தாங்கினான்; தம்பியோடு - தம்பியாகிய லட்சுமணனோடு; அயர்வு இலன் - சிறிதும் சோர்வு வருத்தம் இன்றி; இவ்வழி உறையும் - இவ்விடத்தில் வசிக்கின்றார்; அன்னவன் - அவரது; பெயரினை - பெயரை; தெரிகுதிர் - அறிந்திருப்பீரே; என்றாள் - என்று சொன்னாள்.

○ ○

''கேட்டனன்; கண்டிலென்
தெழுவு கங்கை நீர்
நாட்டிடை ஒரு முறை
நண்ணினேன்; மலர்

வாள் தடங்கண்ணின் நீர்
யாவர் மாமகள்?
காட்டிடை அரும் பகல்
கழிக்கின்றீர்'' என்றான்.

"கங்கை நீர் பாயும் அந்தக் கோசல வள நாட்டுக்கு ஒரு முறை சென்றுளேன்; நீவிர் சொன்னவற்றைக் கேட்டுளேன்; ஆனால் நேரில் கண்டேன் அல்லன். அகன்ற மலர் விழியுடைய நீவிர் எவர் மகள்? இந்தக் காட்டிடத்தே அரிய வாழ்நாளைக் கழிக்கின்றீர்?'' என இரங்குவான் போல் கேட்டான்.

○ ○

கேட்டனன் - நீர் சொன்ன யாவும் கேள்வியுற்றேன் (ஆனால்) கண்டிலன் - நான் அவரை நேரில் கண்டேன் அல்லன்; கெழுவு கங்கை நீர் நாட்டிடை - கங்கை ஆறு பாயும் அந்தக் கோசல வள நாட்டுக்கு; ஒரு முறை - ஒரு தடவை; நண்ணினேன் - போயிருந்தேன்; மலர் - தாமரை மலரையும்; வாள் - வாளையும் போன்ற; தடங்கண்ணின் - அகன்ற பெரிய கண்களையுடைய; நீர் யாவர் மாமகள் - நீவிர் எவருடைய மகள்? காடு இடை அரும் பகல் கழிக்கின்றீர்? - இத்தக் காட்டினிடையே அரிய வாழ்நாளைக் கழிக்கின்றீர்? என்றான் - என்று இரங்குவான் போல் கேட்டான்.

○ ○

''அனக மா நெறி படர்
அடிகள்! நும் அலால்
நினைவது ஓர் தெய்வம்
வேறு இலாத நெஞ்சினாள்
சனகன் மாமகள்; பெயர்
சனகி; காகுத்தன்
மனைவி யான்'' என்றனள்
மறு இல் கற்பினாள்.

"சன்மார்க்க நெறியிலே ஒழுகு் அடிகாள்! நும் போன்ற தவசிகளை அன்றி வேறு தெய்வத்தை நினையாத மன முடையான் சனக மகாராசன்; அவனது மகள் நான்; என் பெயர் சானகி; காகுத்தன் மனைவி நான்" என்றாள்.

○ ○

மறு இல் கற்பினாள் - மாசற்ற கற்புடைய சீதாபிராட்டி; அனக மா நெறி படர் - குற்றமற்ற சன்மார்க்க வழி நிற்கும்; அடிகள் - அடிகளே; நும் அலால் - உம் போன்றவர் அல்லாது; நினைவது ஓர் தெய்வம் - நினைக்கக்கூடிய தெய்வம்; வேறு இலாத - வேறு ஒன்று இல்லாத; நெஞ்சினான் - மனங் கொண்ட; மா சனக - மாட்சிமை மிக்க சனக மகாராசனது; மா மகள் - இளங்குமரி; பெயர் சனகி - சானகி என்பது எது பெயர்; யான் காகுத்தன் மனைவி - காகுஸ்தரது மனைவி ஆவேன்; என்றனள் - என்று மறுமொழி கூறினாள்.

○ ○

அவ்வழி அணையனை
உரைத்த ஆயிழை
"வெவ்வழி வருந்திினிர்
விளைந்த மூப்பினிர்
இவ்வழி இருவினை
கடக்க எண்ணினீர்
எவ்வழி நின்றும் இங்கு
எய்தினீர்?" என்றாள்.

இவ்வாறு தனது வரலாறு கூறிய சீதை அந்த இராவண சந்நியாசியை நோக்கிக் கேட்கிறாள். "இம்மைமறுமை ஆகிய இருவினைகளையும் கடக்க எண்ணித் தவவேடம் தனைக் கொண்டீர். முதுமை மேலிட்டவராகக் காணப்

படுகிறீர். இந்தக் கொடிய காட்டிலே நடந்து வந்ததால் களைப்புற்றிருக்கிறீர். நீவிர் எங்கிருந்து எங்கிருந்து இங்கு வருகின்றீர்'' என்று கேட்கிறாள்.

○ ○

அனையன உரைத்த - அவ்விதம் கூறிய; ஆய் இழை - சீதை; அவ்வழி - அப்போது; (அந்த இராவண சந்நியாசியை நோக்கி) விளைந்த மூப்பினிர் - பழுத்த முதுமையுடையீர்; இ வழி - இத் தவ வழியிலே; இருவினை கடக்க எண்ணினீர் - இரு வினைகளையும் கடக்கக் கருதியுள்ளீர்; எவ் வழி நின்றும் இங்கு எய்தினீர்? - எங்கிருந்து இங்கு வந்தீர்?; வெவ்வழி வருந்தினீர்- கொடிய இக் காட்டு வழி நடந்ததால் இளைப்புற்றவராகக் காணப்படுகிறீர்; என்றாள் - என்று கேட்டாள்.

○ ○

''இந்திரற்கு இந்திரன்;
எழுதல் ஆகலாச்
சுந்தரன்; நான் முகன்
மரபில் தோன்றினான்.
அந்தரத் தோடும் எவ்
உலகும் ஆள்கின்றான்;
மந்திரத்து அருமறை
வைகும் நாவினான்.''

தேவர் எல்லாருக்கும் அரசன் தேவேந்திரன்; அவனுக்கு அரசன் இராவணேசுவரன்; ஓவியத்தில் எழுத முடியாத சுந்தர ரூபன்; பிரமன் வமிசத்திலே தோன்றியவன்; வானுலகோடு ஏனைய உலகம் யாவும் ஆள்கின்றான். வேதங்களை நன்கு அறிந்தவன்.

○ ○

இந்திரற்கு - இந்திரனுக்கு; இந்திரன் - அரசன்; எழுதல் ஆகலா - எவராலும் எழுத முடியாத; சுந்தரன் - அழகன்; நான்முகன் - பிரமனுடைய; மரபில் - வமிசத்தில்; தோன்றினான் - வந்தவன்; அந்தரத்தோடும் - வானுலகத்தோடும்; எவ்வுலகும் - எல்லா உலகங்களும்; ஆள்கின்றான் - ஆள்கின்றவன்; மந்திரத்து - மந்திரங்கள் கொண்ட; அருமறை - அரிய வேதங்களை; வைகும் நாவினான் - ஓதும் நாவினையுடையவன்.

○ ○

''ஈசன் ஆண்டு இருந்த பேர்
இலங்கு மால் வரை
ஊசி வேரொடும் பறித்து
எடுக்கும் ஊற்றத்தான்
ஆசைகள் சுமந்த பேர்
ஆற்றல் ஆனைகள்
பூசல் செய் மருப்பினைப்
பொடி செய் தோளினான்.''

"ஈசன் வசிக்கிறானே, அந்த கயிலங்கிரியை வேரோடு பிடுங்கிய ஆற்றல் உடையவன். அது மட்டுமா? வலிமை மிக்க யானைகளின் தந்தங்களை ஒரே நொடியில் பொடி செய்யக்கூடிய பேராற்றல் உள்ளவன்!'' என்று பொடி வைத்து பேசினான் இராவணன்.

○ ○

ஈசன் - சிவபெருமான்; ஆண்டு இருந்த - இருப்பிடமாகக் கொண்டு எழுந்தருளும்; இலங்கு மால் வரை - சிறந்து விளங்கும் பெரிய கயிலாய கிரியை; ஊசி வேரொடும் - சிறு வேர் விடாமல்; பறித்து - பிடுங்கி; எடுக்கும் - எடுக்கின்ற; ஊற்றத்தான் - வலிமையுடையவன்; ஆசைகள் சுமந்த -

திக்குகளைத் தாங்கிய; பேர் ஆற்றல் ஆனைகள்-பேராற்றல் கொண்ட யானைகள்; பூசல் செய் - சண்டை செய்கின்ற; மருப்பினை - தந்தங்களை; பொடி செய் - தூளாக ஒடித்த; தோளினான் - தோளை உடையவன்.

○ ○

வெம்மை தீர் ஒழுக்கினன்;
விரிந்த வேள்வியன்;
செம்மையோன்; மன்மதன்
திகைக்கும் செவ்வியன்;
எம்மையோர் அனைவரும்
இறைவர் என்று எணும்
மும்மையோர் பெருமையும்
முற்றும் பெற்றியான்.

தீமையற்ற நல் ஒழுக்கம் உடையவன்; பரந்த வேதங்களை நன்கு ஓதியவன்; செம்மை நெறி பிறழாதவன்; மன்மதனும் வெட்கும் அழகுடையவன்; மும்மூர்த்திகளின் பெருமையுடையவன்.

○ ○

வெம்மை தீர் ஒழுக்கினன் - தீமையற்ற நல்ல ஒழுக்கம் உடையவன்; விரிந்த வேள்வியன் - விரிவான வேதங்களைக் கேட்டு ஓதி உணர்ந்தவன்; செம்மையோன் - செம்மை நெறி பிறழாதவன்; மன்மதன் திகைக்கும் செவ்வியன்; மன்மதனும் திகைக்கும்படியான அழகுடையவன்; எம்மை யோர் அனைவரும் - எவர் எவ்வுலகினராயினும் அவர் அனைவரும்; இறைவர் என்று எணும் - தெய்வம் என்று கருதும்; மும்மையோர் பெருமையும் - மும் மூர்த்திகளின் பெருமையும்; முற்றும் பெற்றியான் - முழுவதும் அமைந்த பெருமையுடையவன்.

○ ○

தாள் உடை மலர் உளான்
தந்த அந்தம் இல்
நாள் உடை வாழ்க்கையன்;
நாரி பாகத்தன்
வாள் உடைத் தடக் கையன்
வாரி வைத்த வெங்
கோள் உடைச் சிறையினன்;
குணங்கள் மேன்மையான்.

பிரமதேவனிடம் இருந்து சாகாவரம் பெற்றவன்; சிவபெருமான் கொடுத்த சந்திரகாசம் என்ற வாள் ஏந்திய கையன்; நவக்கிரகங்களையும் சிறையில் அடைத்தவன்; மேன்மையான குணங்களை உடையவன்.

○ ○

தாள் உடை மலர் உளான் - தண்டினை உடைய தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவன்; தந்த-அருளிய; அந்தம் இல்-முடிவிலாத; நாள் உடை வாழ்க்கையன் - வாழ் நாட்களை உடையவன்; நாரி பாகத்தன் - உமையவளைத் தன் இடமருங்கில் உடைய சிவ பெருமான்; வாள் உடைத் தடக்கையன் (அருளிய) - சந்திரகாசம் எனும் வாளை உடைய பெரிய கைகளை உடையவன்; வாரி வைத்த - ஒருங்கே திரட்டி எடுத்து வைத்த; வெங் கோள் உடை - நவக்கிரகங்களை எல்லாம் அடைத்து வைத்த; சிறையினன் - சிறைச்சாலையினை உடையவன்; குணங்கள் மேன்மையான் - மேன்மை மிகு குணங்களை உடையவன்.

நவக்கிரகங்களை எல்லாம் கைது செய்து சிறையில் அடைத்து விட்டான் இராவணன். அதைத் தற்பெருமையாக சொல்லிக்கொள்கிறான்.

○ ○

"நிற்பவர் கடைத்தலை
நிறைந்து தேவரே;
சொற்படும் மற்றவன்
பெருமை சொல்லுங்கால்;
கற்பகம் முதலிய
நிதியம் கையன;
பொற்பு அகம் மான நீர்
இலங்கைப் பொன் நகர்."

அவனுடைய அரண்மனை வாயிலிலே தேவர்கள் வந்து கூட்டம் கூட்டமாகக் காத்திருக்கிறார்கள். கற்பக விருட்சம் முதலிய தேவருலகச் செல்வம் யாவும் அவன் கைவசம் உள்ளன. அவன் வசிக்கும் இலங்காபுரியோ தேவேந்திர பட்டணமாகிய அமராவதி போலிருக்கும்.

○ ○

கடைத்தலை நிறைந்து - அவனுடைய 'தயவு நாடி தலைவாசலிலே கூட்டம் கூட்டமாக; நிற்பவர் - வந்து காத்து நிற்பவர்; தேவரே-தேவர்களே ஆவார்கள்; கற்பகம் முதலிய - கற்பகம், சந்தானம், அரிசந்தனம், மந்தாரம், பாரிஜாதம் முதலிய தெய்வ விருட்சங்களும்; நிதியம் - தேவருலகச் செல்வமும்; கையன-அவன் கைவசம் உள்ளன; நீர் இலங்கைப் பொன்னகரம் - அவன் வாழ்கின்ற பொன்னகரம் நீர் சூழ்ந்த இலங்கை; பொற்பு அகம்மான - அது எது போன்ற நகரம் எனின் தேவேந்திரனுடைய ராஜ தானியாகிய அமராவதி போன்றது. மற்று அவன் பெருமை சொல்லுங்கால் - மேலும் அவனது பெருமை சொல்லப் புகின்; சொல்படும் - சொற்கள் போதா.

○ ○

"ஆண்டையான் அரசு
வீற்றிருந்த அந்நகர்
வேண்டியான் சில பகல்
உறைதல் மேயினேன்
நீண்டனென் இருந்து
அவற் பிரியும் நெஞ்சு இலேன்
மீண்டனென்" என்றனன்
வினையம் உன்னுவான்.

அந்நகரிலே நான் சில நாட்கள் தங்கியிருந்தேன். அவ் விடம் விட்டுப் பிரியமனமிலேன். மீண்டும் போகிறேன் என்றான்.

O O

ஆண்டையான்-தலைவனான அவன்; அரசு வீற்றிருந்த - அரசாட்சி புரிந்து வீற்றிருந்த; அந்நகர் - அந்த இலங்கா புரியிலே; யான் - நான்; வேண்டி - விரும்பி; சில பகல் - சில நாட்கள்; உறைதல் மேயினேன் - தங்கியிருந்தேன்; நீண்டனென் இருந்து - அவ் விடவிருந்து நீங்கி நீண்ட நாள் இருந்து விட்டேன்; அவர் பிரியும் நெஞ்சு இலேன் - அவருடன் நெருங்கிப் பழகிய பின் பிரிய மனமிலேன்; மீண்டனென் - திரும்பிவிட்டேன்; என்றனன் - என்று கூறினான்; வினையம் உன்னுவான் - வந்த காரியத்திலே கண்ணும் கருத்துமாயிருந்த இராவணன்.

O O

"வனத்திடை மாதவர்
மருங்கு வைகலீர்;
புனல் திரு நாட்டிடைப்
புனிதர் ஊர் புக

நினைத்திலீர் அற நெறி
நினைக் கிலாதவர்
இனத்திடை வைகினீர்;
என் செய்தீர்?'' என்றாள்.

''காட்டிலே அருந்தவம் புரியும் முனிவர் மத்தியிலே வாழ்ந்தீர் அல்லீர்; நீர் வளம் மலிந்த நாட்டிலே பரிசுத்தமானவர்கள் வாழ்கின்ற பதிகளிலே வாழ்ந்தீர் அல்லீர்; தரும நெறி பற்றிய எண்ணம் சிறிதும் இல்லாத அரக்கரிடையே வாழ்ந்தீர். என்ன காரியம் செய்தீர்!'' என்றாள்.

○ ○

வனத்து இடை - காட்டினிடத்தே வாழும்; மாதவர் - தவம்புரி முனிவர்; மருங்கு - அருகே; வைகலீர் - தங்கியிருந்தீர் அல்லீர்; புனல் திரு நாட்டிடை - நீர் வளம் மிக்க சிறப்பு மிகுநாட்டிலே வாழும்; புனிதர்-புண்ணிய சீலர்கள்; பரிசுத்த வாழ்க்கை வாழ்கிறவர்கள்; ஊர் புக - இருக்கும் ஊர்களுக்குச் செல்ல; நினைத்திலீர் - நினைத்தீர் அல்லீர்; அற நெறி - தரும மார்க்கத்தை; நினைக்கிலாதவர் - சிறிதும் நினையாதவர்களான இனத்திடை - அரக்கர் கூட்டத்திலே; வைகினீர் - தங்கியிருந்தீர்; என் செய்தீர்? எத்தகைய தகாத செயல் புரிந்தீர்? என்றாள் - என்று கூறினாள் சீதை.

○ ○

''அரக்கர் நல்லவரே! தேவர்களைவிடத் தீயர் அல்லர்'' என்று சொல்கிறான் இராவணன்.

''தருமத்தை வளர்க்கும் வள்ளலாகிய இராமன் இவ் வனத்தில் அரிய தவம் செய்யும் நாட்களுக்குள் அரக்கர் தம் குலத்தோடு இறந்து ஒழிவார்கள்'' என்று சொல்கிறாள் சீதை.

''மானிடர், அரக்கர் தம்மை வேருடன் அழிப்பர். எனின், யானையின் இனத்தை இளமுயல் கொல்லும்; சிங்கத்தை மான் குட்டி கொன்று விடும்!'' என்கிறான் இராவணன்.

அதாவதுமனிதரால் அஃது இயலாது என்பது பொருள்.

சீற்றம் கொண்ட இராவண சந்நியாசி மேலும் சொல்கிறான் :

○ ○

"மேருவைப் பறிக்க வேண்டின்
விண்ணினை இடிக்க வேண்டின்
நீரினைக் கலக்க வேண்டின்
நெருப்பினை அவிக்க வேண்டின்
பாரினை எடுக்க வேண்டின்
பால் நிகர் செம்சொல் ஏழாய்
யார் எனக் கருதி சொன்னாய்
இராவணற்கு அரிது என்?"

என்றான்.

"மகா மேரு மலையை அடியோடு பெயர்த்து எடுக்க விரும்பினாலும் சரி; வான மண்டலத்தை இடித்து நொறுக்க விரும்பினாலும் சரி; கடல்களைக் கலக்க விரும்பினாலும் சரி; அக் கடலிலே உள்ள வடவா மகாக்கினியை அவிக்க விரும்பினாலும் சரி; பூமியை பெயர்த்தெடுக்க விரும்பினாலும் சரி; அந்த இராவணனுக்கு இவை ஏதும் அரிய செயல் அல்ல. இராவணனை நீ யார் என்று நினைத்து இந்த வார்த்தை சொன்னாய்; பால் போலும் சுவை மிகு சொல்லுடைய பெண்ணே!"

○ ○

பால் நிகர் செம் சொல் ஏழாய் - பால் போலும் சுவையுள்ள சொற்களையுடைய பெண்ணே! யார் எனக் கருதி சொன்னாய் - அந்த இராவணனை யார் என்று எண்ணி இவ் வார்த்தை சொன்னாய்; மேருவைப் பறிக்க வேண்டின் - மகா மேரு பர்வதத்தைப் பறித்து எடுக்க விரும்பினாலும்; விண்ணினை இடிக்க வேண்டின் - வான மண்டலத்தை

இடித்துத் தள்ளவிரும்பினாலும்; நீரினைக்கலக்க வேண்டின்-கடல் நீரைக் கலக்கவிரும்பினாலும்; நெருப்பினை அவிக்க வேண்டின் - அக் கடலில் உள்ள வடவா மகா அக்கினி எனும் நெருப்பை அவிக்க விரும்பினாலும்; பாரினை எடுக்க வேண்டின் - பூமியைப் பெயர்த்து எடுக்க விரும்பினாலும்; இராவணற்கு - அந்த இராவணனுக்கு; அரிதுஎன் - முடியாத அரிய காரியம் எது? எதுவுமில்லை. என்றான்.

O O

திக் விஜயம் செய்து வந்த இராவணன் கார்த்த வீரியார்ச்சுனனோடு போர் புரிய விரும்பினான். நர்மதை ஆற்றில் அவன் நீராடுவது அறிந்தான். அங்கு சென்றான். தானும் நீராடினான். கரை சேர்ந்தான் மணலால் சிவலிங்கம் அமைத்துப் பூசை செய்தான்.

அப்போது மேற்கே நீராடிக் கொண்டிருந்த கார்த்த வீரியார்ச்சுனனுக்கு நீர் போதவில்லை. தன் ஐநூறு கைகளாலும் நீரைத் தடுத்தான்; நீரை மிகுவித்தான்; நீர் விளையாடினான். அவ்வாறு நீரைத் தடுத்ததால் எதிர் பொங்கியது வெள்ளம்; கரை புரண்டது. இராவணன் பூசை செய்த சிவலிங்கம் நிலை குலையச்செய்தது. கோப முற்றான் இராவணன். சேனையோடு சென்றான்; கார்த்தவீரியன் மீது போர் தொடுத்தான். அப்போது கார்த்தவீரியன் தனது ஆயிரங்கைகளாலும் பற்றி இராவணனைச் சிறை வைத்தான். புலத்தியன் சென்று கார்த்தவீரியனுக்கு "இராவணஜித்" எனும் பட்டமளித்து இராவணனை விடுவித்தான். அத்தகைய கார்த்தவீரியன் ஜமதக்கினி முனிவரது ஆசிரமத்துப் பசுவைக் கவர்ந்தான். இரு கை கொண்ட பரசுராமன் சென்று கார்த்தவீரியனைப் போரில் வென்று பசுவை மீட்டான்.

O O

"அரண் தரு திரள் தோள் சால
உள எனின் ஆற்றல் உண்டோ?
கரண்ட நீர் இலங்கை வேந்தைச்
சிறை வைத்த கழல் கால் வீரன்
திரண்ட தோள் வனத்தை எல்லாம்
சிறியது ஓர் பருவம் தன்னில்
இரண்டு தோள் ஒருவன் அன்றோ
மழுவினால் எறிந்தான்?" என்றாள்.

"திரண்டதோள்கள் இருந்து விட்டால் மட்டும் போதுமா? திறமை உண்டாகி விடுமா? அதே இராவணனைக் கார்த்த வீரியார்ச்சுனன் சிறை வைக்கவில்லை? அந்தக் கார்த்த வீரியார்ச்சுனனை இரண்டே தோள் கொண்டவனும் இளைஞனுமாகிய பரசுராமன் தனது கோடாலி கொண்டு வெட்டி வீழத்தவில்லையா?"

○ ○

அரண் தரு - பாதுகாப்பளிக்கின்ற; திரள் தோள் - திரண்ட தோள்கள்; சால உள எனின் - மிகுதியாக இருந்து விட்டால் போதுமா? ஆற்றல் உண்டோ - திறமை உண்டாகி விடுமா? அவை வலியவை என்று கூறிவிட முடியுமா? கரண்ட நீர் இலங்கை வேந்தை - நீர்க்காகங்கள் வாழும் கடல் நீரால் சூழப் பெற்ற இலங்கை அரசனாகிய இராவணனை; சிறை வைத்த - முன் ஒருகால் சிறையில் அடைத்து வைத்த; கழல்கால் வீரன் - வீரக்கழல் அணிந்த கால்களை உடைய வீரனாகிய கார்த்தவீரியார்ச்சுனைது; திரண்டதோள் வனத்தை எல்லாம் - திரண்டதோள்களாகிய காட்டை (கார்த்தவீரியார்ச்சுனன் ஆயிரம் தோள்களை உடையவன்) சிறியது ஓர் பருவம் தன்னில் - சிறு வயதிலே; இரண்டு தோள் ஒருவன் - இரண்டு தோள்களோடு கூடியவனாகிய பரசுராமன்; மழுவினால் - தன் கைக்

கோடாலியால் வெட்டி வீழ்த்தினான்; அன்றோ - அல்லவா என்றாள்.

○ ○

என்று அவள் உரைத்தலோடும்
எரிந்தன நயனம்; திக்கில்
சென்றன திறள் தோள்; வானம்
தீண்டின மகுடம்; திண் கை
ஒன்றொடு ஒன்று அடித்த; மேகத்து
உரும் என எயிற்றின் ஒளி
மென்றன; வெகுளி பொங்க
விட்டது மாய வேடம்.

இவ்வாறு சீதை சொன்ன உடனே இராவண சந்நியாசிக்குக் கோபம் வந்துவிட்டது. கண்கள் தீப்பொறி கக்கின; கிரீடம் அணிந்த தலைகள் வானை முட்டின; இருபது கைகளும் நாலாபக்கமும் சென்று ஒன்றுடன் மற்றொன்று அடித்துக்கொண்டன; மேகத்திலே தோன்றும் இடிபோல், பல்லை நறநற என்று கடித்தான். இடியில் தோன்றும் மின்னல்போல் பற்கள் ஒளி வீசின. மாய சந்நியாசி வேடம் கலைந்தது.

○ ○

என்று அவள் உரைத்தலோடும் - என்று பிராட்டி கூறிய அளவில்; நயனம் எரிந்தன - அந்த இராவண சந்நியாசியின் கண்கள் எரி கக்கின; திரண் தோள் - திரண்ட தோள்கள்; திக்கில் சென்றன - திக்குகள் எங்கும் பரந்து பூரித்துச் சென்றன; மகுடம் - கிரீடங்கள்; வானம் தீண்டின - ஆகாயத்தை முட்டின; திண் கை - வலிய கைகள்; ஒன்றொடு ஒன்று அடித்த - ஒன்றோடு ஒன்று அடித்துக்கொண்டன. (எது போல?) மேகத்தின் உரும் என - மேகத்தில் தோன்றும் இடிபோல; எயிற்றின் ஒளி மென்றன - பல்லை நறநற என்று

கடித்தபோது அப் பல் வரிசையில் தோன்றிய ஒளி, மின்னல் போல் தோன்றின; வெகுளி பொங்க - சினம் எழுந்து பொங்க; விட்டது மாயவேடம் - மாய சந்நியாசி வேடம் கலைந்தது.

○ ○

ஆற்ற வெம் துயரத்து அன்னாள்
ஆண்டு உற்ற அலைக்கண் நோக்கின்
ஏற்றம் என் நினைக்கல் ஆகும்?
எதிர் எடுத்து இயம்பலாகும்
மாற்றம் ஒன்று இல்லை; செய்யும்
வினை இல்லை; வரிக்கல் ஆகாக்
கூற்றம் வந்து உற்ற காலத்து
உயிர் எனக் குலைவு கொண்டாள்.

இவ்வாறு இராவணன் தன் சுயரூபம் வெளிப்பட்டு நிற்கக் கண்டாள் சீதை.

இராமனுக்கு ஆபத்து நேர்ந்து விட்டதாக எண்ணி துயருற்றிருக்கும் அவளுக்கு மற்றும் ஒரு பெருந்துயரம் நேர்ந்துவிட்டது. இத்துயரத்துக்கு அதிகமான துன்பம் வேறு எது உளது? எதைச் சொல்லமுடியும்? அவள் சொல்லக் கூடியது எதுவும் இல்லாது போயிற்று. என்ன செய்வது என்று தெரியவில்லை. தப்பிக்கின்ற வழியும் இல்லை. செயலற்றவள் ஆனாள். இயமன் வந்தபோது உயிர் எப்படித் துடிக்குமோ அப்படித் துடித்தாள்.

○ ○

ஆற்ற வெம் துயரத்து அன்னாள் - இராமபிரானுக்கு ஏற்பட்ட துன்பத்தை எண்ணிப் பெரும் துன்பமுற்றிருந்த சீதை; ஆண்டு உற்ற - அப்பொழுது அந்த இராவணனால் நேர்ந்த; அலைக்கண் நோக்கின் - துன்பத்தைப் பார்க்கும்

போது; ஏற்றம் என் நினைக்கல் ஆகும்? - மேலும் அதிகமான துன்பம் எதனை நினைக்கமுடியும்? (வேறு எந்தத் துன்பத்தையும் நினைத்துச் சொல்ல முடியாத அவ்வளவு பெரிய துன்பம் என்றபடி) எதிர் எடுத்து இயம்பலாகும் - இதற்கு எதிராக வேறு எத்துன்பத்தை எடுத்துக் கூறுதல் இயலும்? மாற்றம் ஒன்றும் இல்லை - அவள் சொல்லக் கூடிய சொல் எதுவுமில்லாது போயிற்று; செய்யும் வினை இல்லை - அவனை விட்டுத் தப்பிக்கத் தக்க செயலும் இல்லாது போயிற்று. (ஆகவே) வரிக்கல் ஆகா - வரிக்கத் தகாத; கூற்றம் - இமயன்; வந்து உற்ற காலத்து - வந்த சமயத்திலே; உயிர் என - தவிக்கும் உயிர் போல; குலைவு கொண்டாள் - நடுக்கம் கொண்டாள்.

○ ○

"குலைவு உறல், அன்னம்! முன்னம்
யாரையும் கும்பிடா என்
தலைமிசை மகுடம் என்னத்
தனித்தனி இனிது தாங்கி
அலகு இல் பூண் அரம்பை மாதர்
அடி முறை ஏவல் செய்ய
உலகம் ஈரேழும் ஆளும்
செல்வத்துள் உறைதி" என்றான்.

அப்போது இராவணன் சொல்கிறான்: "அன்னம் போன்றவளே! அஞ்சாதே. யாரையும் கும்பிட்டு அறியாத என் தலைமீது உள்ள கிரீடம் போல உன்னை என் தலை மீது தாங்குவேன்; தேவ மகளிர் ஏவல் செய்ய வைப்பேன். ஈரேழு பதினான்கு உலகங்களையும் ஆளும் பெரும் செல்வத்தில் மகிழ்ந்திருப்பாயாக."

○ ○

அன்னம் - அன்னம் போன்றவளே! குலைவுறல் - பயப் படாதே; முன்னம் யாரையும் கும்பிடா - இதற்குமுன் எவரையும் கும்பிட்டு வணங்காத; என் தலை மிசை - என் முடி மீதுள்ள; மகுடம் என்ன - கிரீடம் என்று சொல்லும் படியாக; தனித்தனி - ஒவ்வொரு தலையிலுமாக; இனிது தாங்கி - இனிமையாக உன்னை உயர்த்தி வைத்துக் கொண்டு; அலகு இல் பூண் அரம்பை மாதர் - கணக்கற்ற ஆபரணங்களை அணிந்த அரம்பையர்கள்; அடிமுறை ஏவல் செய்ய - உன் திருவடி பணிந்து முறைப்படி நீ அவர்களுக்கு இடும் குற்றேவல் செய்ய; உலகம் ஈரேழும் - ஈரேழு பதினான்கு உலகங்களும்; ஆளும் - ஆட்சி செலுத்தும்; செல்வத்துள் - எனது பெரும் செல்வ வாழ்வில்; உறைதி - மகிழ்ந்திருப்பாயாக; என்று - என்று சொன்னான்.

○ ○

''விண்ணவர் ஏவல் செய்ய
வென்ற என் வீரம் பாராய்;
மண்ணிடைப் புழுவின் வாழும்
மானிடர் வலியர் என்றாய்;
பெண் எனப் பிழைத்தாய் அல்லை
உன்னை யான் பிசைந்து தின்ன
எண்ணுவென்; எண்ணில் பின்னை
என் உயிர் இழப்பென்'' என்றான்.

''தேவர்களை வெற்றி கண்டு அவர்கள் எனக்கு ஏவல் செய்ய வைத்த எனது வீர பராக்கிரமத்தை நீ எண்ணிப் பார்க்காதவளாய் இந்த பூமியிலே வாழும் அற்பப் புழுக் களாகிய மானிடர் வலியர் என்றாய் இவ்வாறு என் எதிரில் கூறிய நீ ஒரு பெண் ஆனமையின் உன்னைச் சும்மாவிட்டேன். இன்றேல் உன்னைப் பிசைந்து தின்றிருப்பேன். அப்படிச் செய்து விட்டால் நீ இறந்துவிடுவாய். உன் மீது கொண்ட

காதலால் நானும் இறப்பேன். அதனால் உன்னை நான் கொன்றேனல்லன் என்றான்.

○ ○

விண்ணவர் ஏவல் செய்ய - தேவர்கள் நான் ஏவிய காரியங்களைச் செய்ய; வென்ற - அவர்களை வென்று அடிமை கொண்ட; என் வீரம் பாராய் - என்னுடைய பராக்கிரமத்தை எண்ணிப் பாராதவளாய்; மண் இடை - இந்த பூமியிலே; புழுவின் வாழும் - அற்பப் புழுக்களைப்போல் வாழுகின்ற; மானிடர் - மனிதர்; வலியர் என்றாய் - வலியுடையோர் என்று கூறினாய் (இவ்வாறு என் எதிரில் கூறிய நீ) பெண் எனப் பிழைத்தாய் - ஒரு பெண் என்ற காரணத்தினால் உயிர் பிழைத்தாய்! அல்லை - இன்றேல்; உன்னை யான் பிசைந்து தின்ன எண்ணுவேன் - உன்னை என் கைகளால் பிசைந்து தின்ன எண்ணியிருப்பேன்; பின்னை எண்ணில் - பின் விளைவுகளை நோக்கி அவ்வாறு செய்தேனல்லன்;

(உன்னைக் கொன்று தின்றால் நீ இறந்து படுவாய் உன்னை அடையமுடியாமல்) என் உயிர் இழப்பேன் - நானும் எனது உயிர் துறப்பேன்; என்றான் - என்று சொன்னான்.

○ ○

செவிகளைத் தளிர் கையாலே
சிக்குறச் சேமம் செய்தாள்;
''கவினும் வெஞ்சிலைக்கை வென்றிக்
காகுத்தன் கற்பினேனை
புவியிடை ஒழுக்கம் நோக்காய்
பொங்கு எரிப் புனிதர் ஈயும்
அவியை நாய் வேட்டது என்ன
என் சொனாய் அரக்க?'' என்னா.

காமாந்தகாரம் கொண்ட இராவணனுடைய சொற்கள் தனது காதுகளிலே விழாதவாறு தன் காதுகளை இறுக மூடிக்கொண்டாள் சீதை.

"பூமியிலே நல்லொழுக்கத்தைச் சிந்தியாத அரக்கனே! வெற்றி வில் ஏந்திய காகுத்தன் கற்பரசியாகிய என்னை என்ன சொன்னாய்? தவ முனிவர்கள் தாம் வளர்க்கும் அக்னியிலே அளிக்கும் பவித்ரமான அவியை உண்ண நாய் விரும்பியது போல என்ன வார்த்தை சொன்னாய்?"

○ ○

செவிகளை - தன் இரு காதுகளையும்; தளிர் கையாலே - மெல்லிய தன் இரு கரங்களாலே; சிக்கு உற - அழுத்தி; சேமம் செய்தாள் - (இராவணனுடைய சொற்கள் காதிலே விழாதபடி) பாதுகாத்துக் கொண்டவளாய் (அவனை இகழ்ந்து நோக்கி) அரக்க - அரக்கனே; புவியிடை - பூமியிலே; ஒழுக்கம் - (உள்ள நல் ஒழுக்கத்தை, நோக்காய் - நாடாதவனே; கவினும் வெம் சிலை வென்றிக் கை - வெற்றி தரும் கொடிய வில்லேந்திய கையனாகிய; காகுத்தன் கற்பினேனை - காகுத்தனுடைய கற்பு மிக்க மனைவியாகிய என்னை; புனிதர் - பரிசுத்தராகிய முனிவர்கள்! பொங்கு எரி - கொழுந்து விட்டு எரியும் தீயிலே; ஈயும் - தேவர்க்கு அளிக்கும்; அவியை - அவியை; நாய் வேட்டது என்ன - இழிவாகிய நாய் ஒன்று விரும்பியது போல (நீ விரும்பி) என் சொனாய் - என்ன சொன்னாய்; என்னா - என்று கூறி (மேலும் சொல்வாள்):

○ ○

''புல் நுனை நீரின் நொய்தாய்
போதலே புரிந்து நின்ற
இன் உயிர் இழத்தல் அஞ்சி
இற்பிறப்பு அழிதல் உண்டோ?

மின் உயிர்த்து உருமின் சீறும்
வெங்கணை விரவா முன்னம்
உன் உயிர்க்கு உறுதி நோக்கின்
ஒளித்தியாய் ஓடி'' என்றாள்.

''இந்த உயிர் அற்பமானது; புல்லின் நுனியிலே தங்கியுள்ள பனிநீர் போன்று விரைவிலே அழியுந் தன்மையது. இத்தகைய எனது உயிருக்கு ஆபத்து வந்துவிட்டதே என்று அஞ்சி நான் உன் கருத்துக்கு இணங்கேன். குலத்திற்குக் கேடு செய்யேன். இடித்து முழங்கி மின்னல் போல் வரும் இராமனின் சுடுசரம் உன்மீது பாயு முன் ஓடி ஒளிந்து கொள். உன் உயிர் மீது ஆசையிருந்தால் அதைக் காக்க ஓடு'' என்றாள்.

○ ○

நுனை நீரின் - புல்லின் நுனியிலே தங்கியிருக்கின்ற நீர்த்துளி போன்று; நொய்தாய் - அற்பமாகி; போதலே - அழிந்து போவதையே; புரிந்து நின்ற - தன் தொழிலாக்கிக் கொண்டு நிற்கின்ற; இன் உயிர் இழத்தல் அஞ்சி - இனிய உயிரை விடுவதற்குப் பயந்து இல் பிறப்பு அழிதல் உண்டோ? நற்குடியிலே பிறந்த பெருமை அழியுமாறு செய்வதுண்டோ. மின் உயிர்த்து - மின்னல் போல் ஒளி வீசி; உருமின் சீறும் - இடிபோல் கர்ஜித்துக்கொண்டு வரும்; வெம்கணை - இராமனின் கொடிய கணைகள்; விரவா முன்னம் - உன்னை நாடி வந்து அழிப்பதன் முன்னர்; உன் உயிர்க்கு - உன்னுடைய உயிருக்கு; உறுதி நோக்கின் - நலம் நாடினை ஆயின்; ஓடி ஒளித்தி - இவ்விடம் விட்டு எங்காவது மறைந்து கொள்வாயாக; என்றாள் - என்று சொன்னாள்.

○ ○

''அணங்கினுக்கு அணங்கு அனாய் நின்
ஆசை நோய் அகத்துப் பொங்க
உணங்கிய உடம்பினேனுக்கு
உயிரினை உதவி, உம்பர்க்

கணம் குழை மகளிர்க் கெல்லாம்
பெரும் பதம் கைக்கொள்'' என்னா
வணங்கினன்; உலகம் தாங்கும்
மலையினும் வலிய தோளான்.

உலகினைத் தாங்கி நிற்கின்ற மேரு மலையை விட; வலிமை பொருந்திய தோள்களையுடைய இராவணன் சொல்கிறான் :

''அழகுக்கு ஓர் அழகு போன்றவளே! உன் மீது கொண்ட ஆசை நோயானது என் உள்ளத்திலே பொங்குகிறது. அதனால் என் உடல் வாடிப் போயிற்று. எனக்கு உயிர்ப் பிச்சை தருவாய். தெய்வ மகளிர் எல்லாரும் உனக்கு ஏவல் செய்யக்கூடிய அரும் பெரும் பதவியை ஏற்பாய்.''

இவ்வாறு சொல்லி சீதாபிராட்டியை வணங்கினான் அந்த இராவணன்.

O O

உலகம் தாங்கும் - உலகினைத் தாங்கி நிற்கின்ற; மலையினும் - மலையை விட; வலிய - வலிமை பொருந்திய; தோளான் - தோள்களை உடைய இராவணன்; அணங்கினுக்கு அணங்கு அனாய் - அழகுக்கு ஓர் அழகு போன்றாய்; நின் ஆசை நோய் - உன்பால் கொண்ட ஆசை எனும் நோயானது; அகத்துப் பொங்க - என் உள்ளத்திலே பொங்கிக் கொதிப்பு ஏற; உணங்கிய உடம்பினேனுக்கு - (அதனால்) வாடிய உடலையுடைய எனக்கு; உயிரினை உதவி - உயிர்ப்பிச்சை அளித்து; உம்பர் - தேவருலகத்திலுள்ள; கணம் குழை - திரண்ட குழை எனும் காதணி அணிந்த; மகளிர்க்கு எல்லாம் - தெய்வப் பெண்களுக்கெல்லாம்; பெரும் பதம் - சிறந்த பெரும் பதவியை; கைக்கொள் - நீ ஏற்பாய்; என்னா - என்று; வணங்கினான் - பிராட்டியை நமஸ்கரித்தான்.

O O

ஆண்டு ஆயிடை தீயவன்
ஆயிழையைத்
தீண்டான்; அயன் மேல் உரை
சிந்தை செயாத்
தூண் தான் எனல் ஆம்
உயர் தோள் வலியால்
நீண்டான் நிலம்; யோசனை
கீழொடுமேல்.

தீயவனாகிய அந்த இராவணன் சீதாபிராட்டியைத் தொட அஞ்சினான். காரணம் பிரமதேவன் அவனுக்களித்த சாபம். அந்த சாபம் அவனது நினைவுக்கு வந்தது. எனவே தூண்கள் என்று சொல்லத்தக்க தன்னுடைய தோள் வலியாலே சீதை இருந்த அந்த இடத்தை அதாவது நிலத்தை ஒரு யோசனை அளவுக்கு அப்படியே பெயர்த்து எடுத்தான்.

O O

ஆண்டு - அப்பொழுது; தீயவன் - தீயவனாகிய அந்த இராவணன்; ஆயிழையை - பிராட்டியை; மேல் அயன் உரை - மேனாள் பிரமதேவன் இட்ட சாபச் சொல்லை; சிந்தை செய்யா - எண்ணி; தீண்டான் - அவள் மேனியைத் தொடாமல்; தூண்தான் எனல் ஆம் - தூண்கள் என்று சொல்லத் தக்க; உயர்தோர் - உயர்ந்த தன் தோள்களின் வலியால் - பலத்தினாலே; ஆயிடை - அந்த இடத்து; நிலம் கீழொடு மேல் - நிலத்தை அடியோடு; யோசனை - ஒரு யோசனை விஸ்தீரணத்துக்கு; நீண்டான் - பெயர்த்து எடுத்தான்.

O O

கொண்டான் உயர் தேர் மிசை
கோல் வளையாள்
கண்டாள்; தன் ஆருயிர்
கண்டிலளால்

மண் தான் உறும்
மீனின் மயங்கினளால்;
விண் தான் வழியா
எழுவான் விரைவான்.

அவ்வாறு பூமியைப் பெயர்த்து எடுத்த இராவணன் என்ன செய்தான்? தன் தேர் மேல் கொண்டுபோய் வைத்தான். இது கண்டாள் சீதை. உயிரற்றவள் போலானாள். தண்ணீரிலிருந்து எடுத்துத் தரை மீது போடப்பட்ட மீன்போல் மயக்கமுற்றாள். வான் மார்க்க மாகத் தன் தேரைச் செலுத்த விரைந்தான் இராவணன்.

○ ○

உயர் தேர் மிசை கொண்டான் - (அங்ஙனம் சீதா தேவியை எடுத்த இராவணன்) தனது உயர்ந்த தேர் மீது வைத்துக் கொண்டான்; கோல் விளையாள் - அழகிய வளையல்களை அணிந்த சீதை; கண்டாள் - அச் செயல் கண்டாள்; தன் ஆர் உயிர் கண்டிலள் - உயிரற்றவள் போல் ஆனாள்; மண் தான் உறும் - தரையில் போட்ட; மீனின் - மீன்போல; மயங்கினள் - மயக்கமுற்றாள்; (அப்பொழுது இராவணனும்) விண்தான் வழியா - ஆகாய மார்க்கமாக; எழுவான் - எழுந்து செல்லும் பொருட்டு; விரைவான் - விரைபவன் ஆனான்.

○ ○

'விடுதேர்' என வெம் கனல்
வெந்து அழியும்
கொடி போல் புரள்வாள்
குலைவாள் அயர்வாள்
துடியா எழுவாள்
துயரால் அழுவாள்
'கடிதா அறனே! இது
கா' எனு மால்.

"தேரைச் செலுத்து" என்று தன் தேரோட்டிக்குக் கட்டளையிட்டான்.

நெருப்பிலே வெந்து அழியும் கொடிபோல் துவண்டாள் சீதை; புரண்டாள்; நிலை குலைந்தாள்; சோர்ந்தாள்; துடித்து எழுந்தாள்; துன்பம் மேலிடக் கதறினாள்; தரும தேவதையே இத் துன்பத்தினின்றும் என்னைக் காப்பாற்று" என்று கதறினாள்.

O O

விடு தேர் என - தேரைச் செலுத்து என்று: (இராவணன் தன் தேர்ப் பாகனுக்குக் கூற) கனல் வெந்து அழியும் - நெருப்பிலே விழுந்து வேக்காடு பெற்று அழிகின்ற; கொடி போல் - ஒரு பூங்கொடி போல; புரள்வாள் - விழுந்து புரள்வாள்; குலைவாள் - நிலை குலைவாள்; அயர்வாள் - சோர்வாள்; துடியா - துடித்து; எழுவாள் - மீண்டும் எழுவாள்; துயரால் - துன்பம் பொங்க; அழுவாள் - கதறுவாள்; கடியா அறனே - எங்களால் கைவிடப்படாத ஏ தருமமே! இது கா எனும் - இத் துன்பத்தினின்றும் என்னைக் காப்பாயாக என்று கூறுவாள்.

O O

மலையே! மரனே!
மயிலே! குயிலே!
கலையே! பிணையே!
களிறே! பிடியே!
நிலையா உயிரேன்
நிலை தேறினிர் போய்
உலையா வலியார்
உழை நீர் உரையீர்.

மலையே! மரங்களே! மயிலே! குயிலே! கலைமான்களே! பெண் மான்களே! ஆண் யானைகளே! பெண் யானைகளே! நிலை கொள்ளாமல் தத்தளிக்கும் உயிருடையேன் நான். எனது இந்த நிலையை நீங்கள் அறிவீர்கள் அழியாத வலிமை கொண்ட அந்த இராமனிடமும் லட்சுமணனிடம் சொல்வீராக.

O O

மலையே - மலைகளே; மரனே - மரங்காள்; மயிலே - மயில்காள்; குயிலே - குயில்களே; கலையே - கலைமான் களே; பிணையே - பெண் மான்களே; களிறே - ஆண் யானைகளே; பிடியே - பெண் யானைகளே; நிலையா உயிரேன் - நிலை கொள்ளாது தத்தளிக்கின்ற உயிரை யுடைய எனது; நிலை - நிலையை, தேறினிர் நீர் - நன்கு அறிந்த நீங்கள்; உலையா வலியார் - உழை அழியாத வலிமை கொண்ட அந்த இராம லட்சுமணரிடத்திலே; உரையீர் - சொல்வீராக.

O O

"செஞ்சேவகனார் நிலை
நீர் தெரிவீர்
மஞ்சே பொழிலே
வன தேவதைகாள்!
'அஞ்சேல்' என நல்குதிரேல்
அடியேன்
உஞ்சால் அதுதான்
இழிவோ? உரையீர்!"

மேகங்களே! சோலைகளே! வனதேவதைகளே! சிறந்த வீரராகிய இராமபிரான் என்னை இழந்து துன்புறுவதை நீங்கள் அறிவீர்கள். அப்போது அவருக்குச் சொல்லுங்கள்,

"அஞ்சாதே என்று எனக்கு ஆறுதல் கூறுவீராயின் நான் உயிர் பிழைப்பேன். அவ்வாறு உயிர் பிழைக்கச் செய்வது உங்களுக்குத் தகாத செயலோ?"

O O

மஞ்சே - மேகங்களே; பொழிலே - சோலைகளே; வனதேவதைகாள் - வனத்திலே உள்ள தெய்வங்களே; செம்சேவகனார் நிலை - சிறந்த வீரராகிய இராமபிரான் எனை இழந்ததால் அடையக்கூடிய நிலையை; நீர் - நீங்கள்; தெரிவீர் - அறிவீர்கள்; உரையீர் - அவருக்குச் சொல்வீராக; அஞ்சேல் என - அஞ்சுதல் வேண்டாம் என்று; நல்குதிரேல் - எனக்கு ஆறுதல்மொழி கூறுவீராயின்; அடியேன் - நான்; உஞ்சால் - (உய்வேன்) அவ்வாறு உயிர் பிழைத்தால்; அது தான் இழிவோ - உங்களுக்குத் தகாத இழிசெயலோ.

O O

''கோதாவரியே! குளிர்வாய்
குழைவாய்;
மாதா அனையாய்
மனனே தெளிவாய்;
ஓதாது உணர்வார்
உழை ஓடினை போய்
நீ தான் வினையேன்
நிலை சொல்லலையோ?''

''கோதாவரியே! குளிர்ச்சி பொருந்தியவளே! தாய் போன்றவளே! தெளிந்த மனமுடையாய்! ஓதாது உணர்ந்த உத்தமன் இராமனிடம் ஓடிச்சென்று எனது நிலை சொல்வாயோ?"

O O

கோதாவரியே - கோதாவரி நதியே; குளிர்வாய் - குளிர் தன்மை உடையாய்; குழைவாய் - நீ இளகிய இயல் புடையாய்; மாதா அனையாய் - உயிர்களுக்குத் தாய் போன்றவளே (எனக்கும் தாய் போன்றவளே) மனனே தெளிவாய் - குற்றமற்ற தெளிந்த மனமுடையாய்; நீ தான் - நீயாவது; ஓதாது உணர்வார் உழை - ஓதாமலே உணர்ந்த எனது கணவராகிய இராமனிடம்; ஓடினை போய் - ஓடிச் சென்று; வினையேன் நிலை - துன்பத்திற்குரிய தீவினை யுடைய எனது நிலையை; சொல்லலையோ - சொல்ல மாட்டாயோ!

○ ○

"முந்தும் சுனைகாள்!
முழை வாழ் அரிகாள்!
இந்தந் நிலத்தோடும்
எடுத்தகை நால்
ஐந்தும், தலை பத்தும்
அலைந்து உலையச்
சிந்தும்படி கண்டு
சிரித்திடுவீர்."

"மலையிலே உள்ள நீர்ச்சுனைகளே! மலைக்குகையில் வாழும் சிங்கங்களே! நான் இருந்த பூமியோடு என்னைப் பெயர்த்துக்கொண்டு போகிற இவனது கைகள் இருபதும், தலைகள் பத்தும் இராம பாணத்தால் அறுந்து கீழே விழுதல் கண்டு நீங்கள் சிரிக்கமாட்டீர்களா!"

○ ○

முந்தும் - என் முன்னே தோன்றுகின்ற; சுனைகாள் - மலை ஊற்றுக்களே; முழைவாழ் - மலைக்குகைகளிலே வாழும்! அரிகாள் - சிங்கங்களே; இந்தந் நிலத்தோடும்-நான்

இருந்த தரையோடும்; எடுத்த கை நால் ஐந்து - பெயர்த்து எடுத்த இருபதுகைகளும்; தலை பத்தும் - தலைகள் பத்தும்; அலைந்து உலைய - இராமபிரான் விடும் பகழியால்; அறுந்து சிந்தும்படி - கீழே விழும்படி; கண்டு - நீங்கள் பார்த்து; சிரிக்கிலீரோ - சிரிக்கமாட்டீர்களோ!

○ ○

இவ்விதம் பலவாறு கூறிப் புலம்பி அழுகின்ற சீதையைப் பார்த்து இராவணன் சொல்கிறான்:

"நீ சொல்கிற அந்த மனிதர்கள் போரிலே என்னைக் கொன்று உன்னை மீட்கப் போகிறார்களா? அவர்களுக்கு வல்லமை இருந்தால் மீட்டுக் கொள்ளட்டுமே!"

இவ்வாறு சொல்லித் தன் கைகளைக்கொட்டி பரிகாசமாகச் சிரித்தான் அந்த இராவணன்.

அப்போது சீதை சொல்கிறாள்:

"உன் மாயையினாலே வஞ்சகமாகப் பொய்மான் ஒன்றை ஆக்கினாய். அவ்வாறு உண்டாக்கி உன் உயிர் கவரும் கூற்றாகிய இராமனை அந்த வஞ்ச மான் பின்னே போகச் செய்தாய், பின் அவர் இல்லாத சமயத்திலே நான் தனித்து இருந்தபோது வந்து புகுந்து என்னைக்கொண்டு போகிறாய்; கள்வனேபோல் கவர்ந்து செல்கின்றாய்.

அந்த இராமனோடு நேர்நின்று போர்செய்து உன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் தைரியமும் திறமையும் உனக்கு இருக்குமானால், உன் தேரை இவ்விடம் விட்டுச் செலுத்தாதே. நீ சுத்த வீரனோ! உன் இனத்தவரான கரதூஷணாதியரைக் கொன்று, உன் தங்கை சூர்ப்பணகையின் மூக்கை அறுத்து வாட்டிய மனிதர்கள் காட்டிலே இருக்கிறார்கள் என்பது கேட்டும் நீ இந்த மாயம் செய்தது எதனால்? அவர்கள்பால் நீ கொண்ட அச்சம் அன்றோ."

இவ்வாறு சீதை இடித்துக் கூறவும் அந்த இராவணன் சொல்கிறான்.

○ ○

மொழி தரும் அளவில் ''நங்கை!
கேள் இது; முரண் இல் யாக்கை
இழி தரு மனிதரோடே
யான் செரு ஏற்பல் என்றால்
விழி தரும் நெற்றியான் தன்
வெள்ளி வெற்பு எடுத்தோட்குப்
பழி தரும்; அதனின் சாலப்
பயன் தரும் வஞ்சம்'' என்றான்.

''பெண்ணில் சிறந்தவளே! நான் சொல்வது கேள். நீ சொன்ன அந்த மனிதர்களோடே நான் நேர் நின்று போர் செய்வேனேயாகில் அது எனக்குப் பழி. நெற்றியிலே கண் படைத்த அந்தச் சிவபெருமானுடைய கைலாசகிரியை எடுத்த என் தோள்களுக்கு இழிவு. அதை விட இந்த வஞ்சகச்செயல் நல்லதொரு பயன் தருவது ஆகும்'' என்றான்.

○ ○

மொழி தரும் அளவில் - இவ்வாறு சீதை சொன்ன அளவிலே; (அவளை நோக்கி) நங்கை - பெண்ணிற் சிறந்தவளே! இது கேள் - நான் சொல்லும் இந்தச் சொற்களைக் கேட்பாயாக; முரண் இல் யாக்கை - வலியற்ற உடல் கொண்ட; இழிதரு மனிதரோடே - இழிவான மனிதர்களுடனே; யான் செரு ஏற்பல் என்றால் - நான் போரிடுவேன் என்றால்; விழி தரும் நெற்றியான் தன் - நெற்றிக் கண்ணன், சிவபெருமானுடைய; வெள்ளிவேற்பு - வெள்ளி மலையாகிய கைலாசகிரியை; எடுத்தோட்குப் - எடுத்தஎனது தோள்களுக்குப்; பழிதரும் - பழிப்புண்டாகும்;

அதனின் - அதனைவிட; வஞ்சம் - நான் இப்பொழுது மேற்கொண்டுள்ள வஞ்சகச் செயலே; சால - மிகவும்; பயன் தரும் - நல்ல பயன் தரும் என்றான்.

O O

என்னும் அவ் வேளையின் கண்,
"எங்கு அடா போவது? எங்கே?
நில்! நில்" என்று இடித்த சொல்லன்
நெருப்பிடைப் பரப்பும் கண்ணன்
மின் என விளங்கும் வீரத்
துண்டத் தன் மேரு எனும்
பொன் நெடுங்குன்றம் வானின்
வருவதே போலும் மெய்யான்.

இப்படி இராவணன் கூறிக்கொண்டிருக்கிறபோது, "எங்கேயடா! போகிறாய்? நில், நில்" என்று இடி முழக்கம் போல கூவிக்கொண்டு, கண்களிலே நெருப்பைக் கக்கும் கோபத்துடனே, மின்னல்போல ஒளி வீசி வீரச் செயல் புரியும் மூக்குடையவனும் மேரு என்னும் பொன் மலையே பறந்து வருவது போன்ற உடல் உடையவனும் (ஆகிய சடாயு வந்தான்.)

O O

என்னும் அவ் வேலையின் கண் - என்று கூறிய அந்த சமயத்திலே; எங்கு அடா போவது எங்கே - அடா! எங்கே போகிறாய்? எங்கே? நில் நில் - அப்படியே நில், நில்; என - என்று? இடித்த சொல்லின் - இடி முழக்கம்போலே உரக்கக் கூவிய சொற்களுடன்; நெருப்பு இடை பரப்பும் கண்ணன் - சினத்தால் தீப்பொறி பரப்பும் கண்களை உடையவனும்; மின் என விளங்கும் - மின்னல்போல ஒளி வீசும்; வீர துண்டத்தன் - வீரச் செயல் புரியும் மூக்குடையவனும்; மேரு எனும் பொன் நெடுங் குன்றம் - பொன் மலையான மேரு

எனும் நெடிய மலை; வானின் வருவதே போலும் - ஆகாயத்திலே வருவதே போன்ற; மெய்யான் - பருத்த உடல் உடையவனும் (ஆன சடாயு வந்தான்).

○ ○

பாழி வன் கிரிகள் எல்லாம்
பறித்து எழுந்து ஒன்றோடு ஒன்று
பூழியின் உதிர, விண்ணில்
புடைப்புறக் கிளர்ந்து பொங்கி
அழியும் உலகும் ஒன்றாய்
அழிதர முழுதும் வீசும்
ஊழி வெம் காற்று இது என்ன
இரு சிறை ஊதை மோத

(அந்த சடாயு)

தன் இரு சிறகுகளையும் வீசிக்கொண்டு வந்ததால் ஊழிக் காற்று என்று சொல்லும்படியாகக் காற்று வீசியது

பருத்த வலிய மலைகள் எல்லாம் பூமியிலிருந்து வேரோடு பெயர்ந்து ஆகாயத்திலே எழும்பி ஒன்றுடன் மற்றொன்று மோதிப் பொடிப்பொடியாகி பூமியிலே விழுந்தன. பெரும் ஓசையுடன் கடல் பொங்கி வானை முட்டும்படியாக அலை எழும்பியது.

○ ○

பாழி வன் கிரிகள் எல்லாம் - பருத்த வலிய மலைகள் யாவும்; பறித்து எழுந்து - பறிக்கப்பட்டு மேலே எழுந்து; ஒன்றோடு ஒன்று - ஒன்றுக்கொன்று; பூழியின் உதிர - புழுதி போலாகி உதிர்ந்து விழ; விண்ணில் புடைப்புற - வானில் முட்டும்படியாக; கிளர்ந்து பொங்கி - பெரும் ஓசையிட்டு மேற்கிளம்பி; ஆழியும் - கடலும்; உலகும் - இவ்வுலகமும்;

ஒன்றாய் அழிதர - ஒரேயடியாக அழிந்து போக; முழுதும் வீசும் - உலகமெங்கும் வீசியடிக்கும்; ஊழி வெம்காற்று - ஊழிக்காற்று; இது என - இது என்று சொல்லும்படியாக; இரு சிறை - தன் இரண்டு சிறகுகளும்; ஊதைமோத - பெருங்காற்று வீச.

○ ○

சாகை வன் தலையொடு
மரமும் தாழ மேல்
மேகமும் விண்ணின்
மீச் செல்ல மீ மிசை
"மாக வெம் கலுழன் ஆம்;
வருகின்றான்" என
நாகமும் படம் ஒளித்து
ஒதுங்கி நையவே.

வனத்திலிருந்த மரங்கள் கிளையுடன் கீழே விழுந்தன. வானிலே உள்ள மேகங்கள் பூமியிலே உள்ள மலைகள் இரண்டும் இடம்மாறி விண்ணிலே சென்றன. வைகுந்தத்தில் இருக்கின்ற கருடன் வருகிறான் என்று பயந்து சர்ப்பங்கள் படம் விரித்து ஆடுதல் ஒழித்து ஓடி ஒடுங்கின.

○ ○

மரமும் - அவ் வனத்திலிருக்கின்ற மரங்களும்; சாகை வன் தலையொடு - கிளைகளாகிய வலிய தலையொடு; தாழ - தாழ்ந்து விழ; மேல் மேசமும் கிரிகளும் - மேலே உள்ள மேகங்களும் மலைகளும்; விண்ணின் மீச் செல்ல - இடம் பெயர்ந்து ஆகாயத்தின் மேலே செல்லவும், மாகவெம் கலுழனே வருகினறான் - வைகுந்தத்தில் உள்ள கருட பகவானே வருகின்றான; என - என்று சொல்லுமபடியாக; நாகமும் - சர்ப்பங்களும்; படம் ஒளிதது - தம் படங்களைச்

சுருக்கி மறைத்துக்கொண்டு; ஒதுங்கி நையவே - ஒதுங்கி சென்று வருந்த.

○ ○

யானையும், யாளியும்
முதல் யாவையும்
கான் நெடு மரத்தொடு
தூறுகள் இவை
மேல் நிமிர்ந்து இரு
சிறை வீச்சின் ஏறலால்
வானமும் கானமும்
மாறு கொள்ளவே.

சடாயு தன் இரு சிறகுகளையும் வீசுதலால் எழுந்த காற்றின் வேகத்தினாலே என்ன நிகழ்ந்தது? யானை, யாளி முதலிய விலங்குகளும், காட்டில் உள்ள நெடிய மரங்களும், புதர்களும், கற்களும். மேலே எழும்பின. வானத்திலே பறந்தன. அது எப்படி இருந்தது? எது வானம், எது கானகம் என்று தெரியாமல் நிலை மாறிக் காட்சியளித்தது.

○ ○

யானையும் - யானைகளும்; யாளியும் - யாளிகளும்; முதல் யாவையும் - முதலிய எல்லா விலங்குகளும்; கான் நெடுமரத்தொடு - காட்டில் உள்ள நெடிய மரங்களோடு; தூறு கல் இவை - புதர்கள், கற்கள் ஆகிய இவைகளும், இரு சிறை - சடாயுவின் இரண்டு சிறகுகள்; வீச்சின் - வீசுவதினாலே (எழும் காற்றின் வேகத்தினாலே) மேல் நிமிர்ந்து ஏறலால் - தம் நிலை பெயர்ந்து மேலே எழுந்து வானத்தில் ஏறிச் செல்வதால்; வானமும் கானமும் - ஆகாயமும் காடும்; மாறு கொள்ளவே - இடம் விட்டு மாறி மயங்கின.

○ ○

வந்தனன் எருவையின்
மன்னன்; மான்பு இலான்
எந்திரத் தேர் செலவு
ஒழிக்கும் ஈட்டினால்
சிந்துரக் கால் சிரம்
செக்கர் மூடிய
கந்தரம் கயிலையை
நிகர்க்கும் காட்சியான்.

இராவணனுடைய விசைத்தேர் செல்லும் வேகத்தைத் தடுத்து நிறுத்தும் முயற்சியிலே கால், தலை இரண்டும் சிவந்தன. செவ்வானம் கவிந்தது போன்றிருந்தது. கழுத்து கயிலாய கிரிபோல் காட்சியளித்துக்கொண்டு கழுகரசன் சடாயு வந்தான்.

○ ○

மாண்பு இலான் - நற்குண நற்செயல் இல்லாத இராவணனின்; எந்திரத் தேர் - சக்தி மிகு தேரின்; செலவு - போக்கை; ஒழிக்கும் - தடுத்து நிறுத்தும்; ஈட்டினால் - முயற்சியால்; சிந்துரம் கால் சிரம் - சிவந்த கால்களும், சிரமும்; செக்கர் மூடிய - செவ்வானம் கவிந்தது போன்ற; கந்தரம் - கழுத்தும்; கயிலையை - கைலாச மலையை; நிகர்க்கும் - ஒப்பாக விளங்கும்; காட்சியான் - தோற்றம் கொண்டவனுமாகிய; எருவையின் மன்னன் - கழுகுகளின் அரசனாகிய சடாயு; வந்தனன் - அந்த இராவணன் எதிரே வந்தான்.

○ ○

சீதாபிராட்டியின் புலம்பல் கேட்டு வெகு வேகமாகப் பறந்து வந்தான் சடாயு. என்ன நடந்தது என்பதறியான். அணங்கினை நோக்கினான். ''அஞ்சேல்'' என்று துணிவு

கூறினான். தேரை நிறுத்துமாறு சொன்னான். நிறுத்தினான் அல்லன் அரக்கன்.

"அறிவில்லாதவனே! பிழை செய்து விட்டாய்; பேரி உலகின் மாதா அனையாளை யார் என்று நீ எண்ணினாய்?"

"சினங்கொண்டு கொல்ல வந்த யானை மீது மண் உண்டையை வீசலாமா? அது மேலும் சினம் கொண்டு தாக்குமன்றோ!"

"அது போல அரக்கர்களைக் கொன்று அறம் காக்க வந்த இராமபிரானது தேவியை அபகரித்துச் செல்லும் நின் செயல் மேலும் உங்கள் மீது பெரும் சீற்றம் கொள்ளத் தூண்டுமன்றோ!"

"மனிதர் வடிவில் வந்துள்ள இந்த இராம லட்சுமணர், பிரமன், விஷ்ணு, சிவன் எனும் மூவர்களின் ஆதி பரம் பொருளேயன்றோ! ஆலோசனை யற்றவனே! பயித்தியம் முற்றியவனாக நீ இந்த அபசாரம் செய்தாய்.

"திரிபுரம் எரித்த சிவபெருமானிடம் நீ பெற்ற வரங்களும், நீ தேர்ச்சி பெற்றுள்ள மாயப்போர் முதலிய வித்தைகளும் எதுவரை உனக்கு உதவும்?

இராமனது வில் உன் மீது கணை தொடுக்கும் வரைதான் பின்னர் அவை உன்னைப் பாதுகாக்க மாட்டா.

இராமன் உன் மீது போர் தொடுத்து விட்டால் அவனைத் தடுத்தல் அரிது. ஆதலின் இந்தச் சீதையை இங்கேயே விட்டு நீ ஓடிவிடு.

சீதா தேவியை அவள் இருந்த பன்ன சாலைக்கு நானே கொண்டுசேர்ப்பேன்;"

இவ்வாறு சமாதான முறையில் நல்லுரை கூறினான் சடாயு.

இராவணன் இணங்கினான் அல்லன்.

"எதிர்த்து வரும் கழுகே! நாவை அடக்கு. எங்கே? அந்த மானிடரை எனக்குக் காட்டு. என் வாளினால் உன் மார்பு புண்ணாகிவிடும். இவ்விடம் விட்டு ஓடு." என்றான் இராவணன்.

உடனே சடாயு இடிபோல் முழங்கித் தன் சிறகுகளால் இராவணனது தேரின் மீது பறந்து வீணைக் கொடியை அறுத்தான்.

இராவணனுடைய இருபது தோள்களின் மீதும் தாவிக் குதித்து மூக்கால் கொத்தினான் சடாயு; தன் நகங்களால் குடைந்து புண்ணாக்கினான். சிறகுகளால் அடித்தான்; முத்து மாலை அணிந்து விளங்கிய கவசத்தை அறுத்து நாசமாக்கினான்.

இராவணனது வில்லைத் தன் மூக்கினாலே பறித்து ஒடித்தான்.

இராவணன் தனது வாளினால் சடாயுவின் சிறகை அறுத்தான். சடாயு மண்மேல் விழுந்தான்; மலை வீழ்ந்தது போல.

அது கண்டு சீதா பிராட்டி அழுது வருந்தினாள்.

O O

ஏங்குவாள் தன்மையும்
இறகு இழந்தவன்
ஆங்கு ஊறு தன்மையும்
அரக்கன் நோக்கினான்.
வாங்கினன் தேரிடை
வைத்த மண்ணோடும்
வீங்கு தோள் மீக்கொடு
விண்ணின் ஏகினான்.

இராவணனது தேர், குதிரை, பாகன் முதலியவற்றை யெல்லாம் சடாயு அழித்து விட்டான். வேறு தேர் இல்லை இராவணனுக்கு. சீதா தேவியின் தனிமை கண்டான். சடாயுவின் மரணாவஸ்தை கண்டான். சீதையை அவளிருந்த நிலத்தோடு பெயர்த்துத் தன் தேர் மீது வைத்திருந்தான் அல்லவா? அந்த நிலத்தோடு அவளைத் தன் பருத்த தோள்களில் தூக்கிக்கொண்டான். வான வீதி வழியாகச் சென்றான்.

O O

ஏங்குவாள் தனிமையும் - இவ்வாறு வருந்திப் புலம்புகின்ற சீதாபிராட்டியின் துணையற்ற தனி நிலைமையையும்; இறகு இழந்தவன் - சிறகிழந்த சடாயு; ஆங்கு - அப்போது; உறு தன்மையும் - உயிர் ஊசலாடுற்ற தன்மையையும்; அரக்கன் - இராவணன்; நோக்கினான் - பார்த்தான்; தேரிடை - தேர் மீது; வைத்த மண்ணோடும் - சீதையை வைத்த நிலத்தோடு; வாங்கினன் - தூக்கி எடுத்து; வீங்கு தோள் கொடு - பருத்து உயர்ந்த தனது தோள்களின் மீது வைத்துக்கொண்டு; விண்ணின் ஏகினான் - ஆகாய மார்க்கமாகச் சென்றான்.

O O

வஞ்சியை அரக்கனும்
வல்லை கொண்டு போய்ச்
செஞ்செவே திருவுருத்
தீண்டா அஞ்சுவான்
நஞ்சு இயல் அரக்கியர்
நடுவண் ஆயிடைச்
சிஞ்சுப வனத்திடைச்
சிறை வைத்தா அரோ.

இவ்விதம் சீதா பிராட்டியை வானவழியே தூக்கிச் சென்ற இராவணன், இலங்காபுரியில் இருக்கும் அசோக வனத்திற்குக் கொண்டு போய்; கொடிய இராட்சத மகளிர் நடுவே சிறை வைத்தான்.

○ ○

அரக்கனும் - அரக்கனான இராவணனும்; வஞ்சியை - வஞ்சிக்கொடி போன்ற சீதா தேவியை; திரு உருத் தீண்ட அஞ்சுவான் - அவளது திருமேனி தொடுதற்குப் பயந்து; ஆய் இடை - அந்த இலங்கை மா நகரிலுள்ள; சிஞ்சுப வனத்திடை - அசோக வனத்திலே; நஞ்சு இயல் - விஷம் போன்ற கொடிய நச்சுத் தன்மை கொண்ட; அரக்கியர் நடுவண் - இராட்சசிகள் நடுவே; செஞ்செவே - செம்மையாக; சிறை வைத்தான் - காவலில் வைத்தான்.

○ ○

இந்நிலை இனையவன்
செயல் இயம்பினாம்
"பொன் நிலை மானின்
பின் தொடர்ந்து போகிய
மன் நிலை அறிக" என
மங்கை ஏவிய
பின் இளையவன் நிலை
பேசுவோம் அரோ.

இதுவரை சீதை, சடாயு, இராவணன் ஆகியோரது செயல் கூறினோம்.

பொன் மான் பின்னே சென்ற இராமபிரானது நிலையை அறிவாயாக. என்று சீதா பிராட்டியால் ஏவப்பெற்ற லட்சுமணனின் நிலையை இனிக் கூறுவாம்.

○ ○

இ நிலை - இத் தன்மையதாக; இனையவர் செயல் - சீதை, சடாயு, இராவணன் ஆகியோரின் செயல்களை; இயம்பினாம் - சொன்னோம்; பொன்நிலை மானின் பின் - பொன்னிறம் பொருந்திய மாயமானின் பின்னே; தொடர்ந்து போகிய - அதனைப் பின்பற்றிச் சென்ற; மன் நிலை அறிக என - இராமபிரானின் நிலையை அறிவாயாக என்று; மங்கை ஏவிய - சீதா பிராட்டி ஏவிய; பின் இளையவன் - இளைய பெருமாளாகிய லட்சுமணன் நிலையை; பேசுவாம் - இனிச்சொல்லத் தொடங்குவோமாக

○ ○

தண் திரைக்கலம் என
விரைவில் செல்கின்றான்
புண்டரீகத் தடம்
காடு பூத்து ஒரு
கொண்டல் வந்து இழிந்தன
கோலத்தான் தனைக்
கண்டனன் மனமெனக்
களிக்கும் கண்ணினான்.

கடலிலே செல்லும் மரக்கலம் போல விரைந்து சென்றான் லட்சுமணன். நீருண்ட மேகம் ஒன்று தாமரை மலர்கள் அடர்ந்து பூத்துப் பூமியிலே வந்து இறங்கியது என்று சொல்லத் தக்க அழகிய திருமேனியுடன் விளங்கும் இராமனைக் கண்டான்; கண்ணும் மனமும் களி எய்தினான்.

○ ○

தண் திரைக் கலம் என - தெளிந்த அலைகள் வீசும் கடலிலே செல்லும் மரக்கலம் போல; விரைவில் செல்கின்றான் - வேகமாகச் செல்லும் இலட்சுமணன்; ஒரு கொண்டல் - நீருண்ட மேகம் ஒன்று; புண்டரீகத் தடம்காடு

பூத்து - தாமரை மலர்கள் அடர்ந்த காடு என்று சொல்லும் படியாக மலர்ந்து; வந்து இழிந்தன - பூமியிலே வந்து இறங்கியது என்று சொல்லும்படியான;கோலத்தான் தனை- அழகிய திருமேனியுடைய இராமபிரானை; மனம் எனக் களிக்கும் கண்ணினான் - மனம் போல மகிழும் கண்களை யுடையவனாய்; கண்டனன் - பார்த்தான்.

O O

இராமனைக் கண்ட உடனே இளைய பெருமாள் அவ் விராமனின் திருவடிகளைத் தொழுது நின்றான்.

சீதையைத் தனியே விட்டு வர நேர்ந்த காரணங்களை எல்லாம் லட்சுமணன் விவரித்தான். கேட்டான் இராமன்.

பொன்மானைப் பிடித்துத் தருமாறு கேட்ட சீதையின் மீது எவ்வித குற்றமும் இல்லை. "அது பொன் மான் அன்று; மாயமான்" என்று கூறிய உன் மீதும் குற்றம் இல்லை. குற்றம் எனதே. மானைத் தொடர்ந்து வந்த குற்றம் எனதே.

சீதைக்கு ஆபத்து விளைவிக்கக் கருதிய யாரோ செய்த சூழ்ச்சி இது என்று கூறி மனம் உடைந்து சிந்தை தளர்ந்தான் இராமன். தம்பியுடன் விரைந்தான் பன்ன சாலைக்கு.

O O

ஓடி வந்தனன் சாலையின்
சோலையின் உதவும்
தோடு இவர்ந்த பூஞ்சுரி குழலாள்
தனைக் காணான்
கூடு தன்னுடையது
பிரிந்தாருயிர் குறியா
தேடி வந்து அது
கண்டிலது ஆம் என நின்றான்.

பன்னசாலைக்கு விரைந்து ஓடி வந்தான் இராமன். சீதையைக் கண்டிலன். உடலை விட்டுச் சென்ற ஓர் உயிர் மீண்டும் அவ்வுடலில் புகுவான் வேண்டித் தேடி வந்து அவ்வுடலைக் காணாதது போல் திகைத்து நின்றான்.

O O

ஓடி வந்தனன் - விரைந்து ஓடி வந்து இராமன்; சாலையின் - அப் பன்ன சாலையினிடத்து; சோலையின் உதவும் - சோலையிலே மலர்ந்த; தோடு இவர்ந்த - இதழ்கள் ஓங்கி விளங்கிய; பூம் - பூக்களை அணிந்த; சுரி குழலாள் தனை - சுருண்ட கூந்தலை உடைய சீதா பிராட்டியை; காணான் - காணாதவனாய்; ஆர் உயிர் - அரிய உயிர்; தன்னுடையது - தன்னுடையதான; கூடு பிரிந்து - உடலை விட்டுப் பிரிந்து சென்று; குறியா தேடி வந்து - மீண்டும் அவ்வுடலில் புகும் நோக்குடன் திரும்பி வந்து; அது கண்டிலது ஆம் என - அவ்வுடலைக் காணாதது போல; நின்றான் - திகைத்து நின்றான்.

O O

கைத்த சிந்தையன் கனங்குழை
அணங்கினைக் காணாது
உய்த்து வாழ்தர வேறு ஒரு
பொருள் இலான், உதவ
வைத்த மாநதி மண்ணோடு
மறைந்தன, வாங்கிப்
பொய்த்துளோர் கொளத்திகைத்து
நின்றானையும் போன்றான்.

ஆபத்துக் காலத்தில் வாழ்வதற்கு உதவியாயிருத்தல் பொருட்டு தனது பெரும் செல்வம் முழுவதையும் துளி கூட வைத்துக்கொள்ளாமல், மண்ணிலே புதைத்து வைத்தான் ஒருவன். வஞ்சகரான கள்வர் அப்பெரு நிதியை மண்ணொடு

பெயர்த்துக்கொண்டு போயினர். தன் செல்வத்தைக் காணாமல் ஏக்கமுற்றவன் போல் ஏங்கி நின்றான் இராமன்.

O O

கனங்குழை - கனமான காதணி அணிந்த; அணங்கினை - சீதா பிராட்டியை; காணான் - காணாமல்; கைத்த சிந்தையன் - மனம் வெறுப்புற்ற இராமன்; உய்த்து வாழ் தர உதவ - வேண்டும்போது தனது ஜீவனோபாயத்துக்கு உதவுவதற்காக; வேறு பொருள் இலான் - வேறு பொருள் ஏதும் வைத்துக்கொள்ளாமல் தன்னிடமுள்ள பொருள் முழுவதையும்; மண்ணோடு வைத்த மாநிதி - மண்ணிலே புதைத்து வைத்த பெரும் செல்வமானது; பொய்த்துளோர் - வஞ்சகரான கள்வர்; வாங்கி கொள மறைந்தன - மண்ணோடு பெயர்த்துக் கொண்டு போய் மறைத்துவிட; திகைத்து நின்றானையும் போன்றான் - ஏக்கமுற்ற ஒருவன் போல் ஆனான்.

O O

"தேரின் ஆழியும் தெரிந்தனம்
நீண்டுதல் அஞ்சிப்
பாரினோடு கொண்டு அகன்றதும்
பார்த்தனம்; பயன் இன்று
ஓரும் தன்மை ஈது என் என்பது?
உரன் இலாதவர் போல்;
தூரம் போதல் முன்தொடர்தும்" என்று
இளையவன் தொழலும்

"தேர்ச் சக்கரத்தின் சுவடு கண்டோம்; தேவியைத் தீண்டுதற்கு அஞ்சி நிலத்தொடு பெயர்த்து எடுத்துச் சென்றதும் அறிந்தோம். இனி, வலிமையில்லாதவர் போல் ஆலோசிப்பதில் பயன் என்ன? தேவியை எடுத்துச் சென்றவன்

வெகு தூரம் போகு முன் நாமும் பின் தொடர்வோம்'' என்று இராமனைத் தொழுது கூறினான் லட்சுமணன்.

○ ○

இளையவனாகிய - தம்பியாகிய லட்சுமணன்; தேரின் ஆழியும் - தேர்ச் சக்கரத்தின் சுவடும்; தெரிந்தனம் - கண்டோம்; தீண்டுதல் அஞ்சி - சீதாபிராட்டியின் திருமேனி தீண்டுதற்குப் பயந்து; பாரினோடு - அவள் இருந்த நிலத்தோடு; கொண்டு - பெயர்த்து எடுத்துக்கொண்டு; அகன்றதும் - சென்றதும்; பார்த்தனம் - பார்த்துவிட்டோம்; உரன் இலாதவர் போல் - வலிமையற்றவர் போல; பயன் இன்று - ஒரு விதப் பிரயோசனமும் இல்லாமல்; ஒரும் தன்மை ஈது - நாம் ஆலோசிக்கும் இத் தன்மையை; என் என்பது - என் என்று சொல்வது; தூரம் போதல் முன் - பிராட்டியை எடுத்துச் சென்றவன் வெகு தூரம் போவதன் முன்; தொடர்தும் - அவனைப் பின் தொடர்ந்து செல்வோம்; என்று இளையவன் தொழலும் - என்று இளையவனாகிய லட்சுமணன் தொழுது கூறவும்.

○ ○

''ஆம்; அதுவே சரி'' என்று கூறி இளையவன் கூறிய யோசனைக்கு இணங்கினான் இராமன். நீண்ட அம்புப் புட்டில் முதலியவற்றை முறைப்படி அணிந்து கொண்டனர் இருவரும். தேர் சென்ற சுவடு பின்பற்றிச் சென்றனர். அவ்வாறு சிறிது தூரம் சென்றனர். தேர்ச் சுவடு மறைந்தது. வெந்த புண்ணில் வேல் ஊடுருவிச் சென்றது போல் மனம் புழுங்கினான் இராமன்.

''இனி என்ன செய்வோம் தம்பி?'' என்று பிரலாபித்தான் இராமன்.

"ஏங்கிச் செயலற்று நிற்பதால் யாது பயன்? அந்தத் தேர் வான் வழியே தெற்கு நோக்கிச் சென்றிருப்பதாகத் தெரிகிறது. அது சென்றிருக்கும் தூரமோ உமது கணை

பாய்வதற்கு அப்பாற்பட்டது அன்று. எனவே வீண் ஆலோசனையில் காலதாமதம் செய்ய வேண்டாம்,'' என்றான் லட்சுமணன்.

''ஆம்! அதுவே செய்யத் தக்க செயல்'' என்று ஒப்புக் கொண்டான் இராமன்.

இருவரும் தெற்கு நோக்கி இரண்டு யோசனை தூரம் நடந்து சென்றனர். ஒரு யோசனை என்பது பத்து மைல்.

அங்கே என்ன கண்டனர்? வீணைக்கொடி ஒன்று முறிந்து கிடக்கக் கண்டனர்.

''பிராட்டியை எடுத்துச் சென்றவன் இராவணனே. வீணைக் கொடி அவனது தேர்க் கொடியே. உற்று நோக்கின் அவனை எதிர்த்துப் போரிட்டவன் சடாயுவே எனலாம். ஆகவே நாம் வேகமாகச் செல்வோம். சடாயுவுடன் போரில் கலந்து கொள்வோம்'' என்றான் இளையவன்.

''ஆம்; அதுவே சரி'' என்றான் இராமன்.

இருவரும் சுழல் காற்று போலவும், காற்றாடி போலவும் விரைந்து சென்றனர்.

ஓரிடத்திலே வில் ஒன்று முறிந்து கிடக்கக் கண்டனர். இன்னும் சிறிது தூரம் சென்றனர். திரிசூலம் ஒன்றும், அம்புப்புட்டில் ஒன்றும் கிடக்கக் கண்டனர்.

இன்னும் சிறிது தூரம் சென்றனர். இராவணன் மார்பிலே அணிந்திருந்த கவசம் கிடக்கக் கண்டனர். அங்கே தேர்க் குதிரைகள் இறந்து கிடக்கக் கண்டனர். தேர்ப் பாகன் இறந்து கிடக்கக் கண்டனர். இன்னும் சிறிது தூரத்தில் கவச குண்டலங்கள் இரத்தின ஆபரணங்கள் முதலியன கண்டனர்.

''சீதா பிராட்டியைக் கொண்டு சென்றவன் இராவணனே. அவனுடன் போரிட்டவன் சடாயுவே'' என்று உறுதியாகக் கூறினான் லட்சுமணன்.

அங்கே இரத்த வெள்ளத்தில் சடாயு குற்றுயிராகக் கிடக்கக் கண்டனர் இருவரும்.

உடனே இராமன் அந்த சடாயுவின் மீது விழுந்து புரண்டு அழுதான்.

○ ○

துள்ளி ஓங்கு செந்தாமரை
நயனங்கள் சொரியத்
தள்ளி ஓங்கிய அமலன் தன்
தனி உயிர்த் தந்தை,
வள்ளியோன் திருமேனியில்
தழல் நிற வண்ணன்
வெள்ளி ஓங்கலில் அஞ்சன
மலை என வீழ்ந்தான்.

தனது செந்தாமரைக் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் பெருகச் சிவபெருமானின் வெள்ளிமலை மீது கரிய மலை கிடந்ததுபோல விழுந்து அழுதான் இராமன்.

○ ○

ஓங்கு செந்தாமரை நயனங்கள் - சிறந்து விளங்கும் செந்தாமரைக் கண்கள்; துள்ளி சொரியத்தள்ளி - நீர்த்துளிகளைச் சொரிந்து வெளியிட்டு ஓங்கிய; துன்பம் மேலிட்ட அமலன் - பரிசுத்தனாகிய இராமன்; தன் தனி உயிர் தந்தை - தனது ஒப்பற்ற உயிர் போன்ற தந்தையும்; வள்ளியோன் - வள்ளலுமான சடாயுவின்; திருமேனியில் - திருமேனி மீது; தழல் நிற மன்னன் - செந்நிற மேனிச் சிவபெருமானுடைய; வெள்ளி ஓங்கலில் - வெள்ளிமலை எனும் வெண்ணிறக் கயிலை மலை மீது; அஞ்சன மலை என - ஒரு கருமை நிற மலை வீழ்ந்ததுபோல் வீழ்ந்தான்.

○ ○

''என தாரம் பற்றுண்ண
ஏன்றாயைச் சான்றோயைக்
கொன்றானும் நின்றான்;
கொலையுண்டு நீ கிடந்தாய்;
வன் தாள் சிலை ஏந்தி
வாளிக் கடல் சுமந்து
நின்றேனும் நின்றேன்
நெடுமரம் போல் நின்றேனே.''

''என் மனைவியைப் பிறன் ஒருவன் கவர்ந்து சென்றான். அது கண்டு அவளைக் காத்து மீட்கும் பொருட்டு நீ போரிட்டாய் சான்றோய்! நீ இறந்துவிட்டாய். உன்னைக் கொன்றவனோ இன்னும் உயிரோடு இருக்கின்றான். நீ கொலையுண்டு கிடக்கின்றாய். நானோ வில் சுமந்து ஒரு கூடை அம்புகளைச் சுமந்து வீணில் நிற்கின்றேன், நெடு மரம்போல் நிற்கின்றேனே.''

○ ○

என் தாரம் பற்று உண்ண - என் மனைவியை இன்னொருவன் கவர்ந்து செல்ல; என்றாயை - அது கண்டு அவளை மீட்கும் பொறுப்பினை ஏற்றுப் போரிட்ட உன்னை; சான்றோயை - மேலான குணச்சிறப்புடைய உன்னை; கொன்றானும் - கொன்றவனாகிய அக் கொடியோனும்; நின்றான் - இறவாது இன்னும் உயிர் கொண்டு வாழ்கின்றான்.

நீ கொலை உண்டு கிடந்தாய் - நீயோ கொலை செய்யப் பட்டுக் குற்றுயிராய்க் கிடக்கின்றாய்; வல்தாள் சிலை ஏந்தி - வரிய அடிப்பாகம் கொண்ட வில்லினை ஏந்தி; வாளிக் கடல் சுமந்து - கடல்போல் ஏராளமான அம்புகளை வீணில் சுமந்துகொண்டு; நின்றேனும் - நிற்கின்ற யானும்;

நின்றேன் - சும்மா நிற்கின்றேன்; நெடுமரம் மரம்போல் நின்றேனே - நீண்டுயர்ந்த மரம்போலப் பயனற்றவனாய் நின்றேனே,

○ ○

இவ்வாறு இராமன் அழுது புலம்பக் கண் விழித்தான் சடாயு. சீதா பிராட்டியைக்கொண்டு சென்றவன் இராவணன் தான் என்பதை அவர்களுக்கு அறிவித்து உயிர் நீங்கினான்.

இராமனும் லட்சுமணனும் அந்தப் புள்ளின வேந்துக்கு ஈமக்கிரியை செய்து மேலும் செல்லத் தொடங்கினர்.

அந்தி நேரம் வந்தது. இராமன் லட்சுமணன் ஆகிய இருவரும் ஒரு மலைச்சாரலில் தங்கினர். இரவு முழுவதும் துயில் கொள்ளாது துன்புற்றான் இராமன். பொழுது விடிந்தது. இருவரும் மீண்டும் நடந்தனர். பதினெட்டு யோசனை தூரம் நடந்தனர் அன்றைப்பொழுது போயிற்று. இரவு வந்தது. "பருகு நீர் கொண்டு வா தம்பி" என்றான் இராமன்.

தம்பியாகிய லட்சுமணன் நீர் தேடிச் சென்றான். அயோமுகி எனும் அரக்கி ஒருத்தி லட்சுமணனைக் கண்டாள். அவன் மீது காமமுற்றாள். சூர்ப்பணகை, தாடகைபோல இவளும் ஓர் அரக்கி என்பது அறிந்தான் லட்சுமணன். அந்நிலையில் அவனை வலிந்து தூக்கிக்கொண்டு ஓடினாள் அயோமுகி, அப்போது அவளுடைய மூக்கை அறுத்து அவளுடைய பிடியிலிருந்து தப்பினான் லட்சுமணன் தண்ணீர் எடுத்துக்கொண்டு விரைந்து ஓடிவந்தான்.

நீண்ட நேரமாயிற்று நீர் கொண்டு வரச் சென்ற இளையவனைக் காணாது தவித்தான் இராமன். தேடிக் கொண்டுசென்றான். அப்போது எதிரே வந்து கொண்டிருந்த லட்சுமணன் இராமனிடம் தண்ணீரைக் கொடுத்து

அயோமுகியின் தன் பிடியில், தான் சிக்கியதையும் பின்னே அவள் மூக்கை அரிந்து வந்ததையும் இராமபிரானுக்குக் கூறி இதுவே கால தாமதம் ஆனமைக்குக் காரணம் என்றான்.

இராமன் தம்பியைத் தழுவிப் புகழ்ந்து மகிழ்ந்தான். இரவு கழிந்தது. சூரியன் தோன்றினான். இருவரும் நடக்கலாயினர்.

அப்படி நடக்கும் போது கபந்தன் என்றோர் அரக்கன் எதிர்ப்பட்டு இராம லட்சுமணர்களை விழுங்க முற்பட்டான். அப்போது அவ் வீரர் அவனது தோள்களை வெட்டி வீழ்த்தினர். அவ்வாறு வீழ்த்திய காலை அவ்வரக்கன் மாண்டு போனான். கந்தருவ உருக் கொண்டு வானில் தோன்றினான்.

"நீ யார்?" என்று வினவினான் இராமன்.

"நான் ஓர் கந்தருவன். தனு வம்சத்தில் தோன்றியவன். முனிவர் ஒருவர் சாபத்தினால் இப் பிறவி பெற்றேன். நின் கை பட்டதால் அச் சாபம் நீங்கிற்று. முன்னைய உருப் பெற்றேன்" என்றான்.

இவ்வாறு கூறிப் பலவாறு இராமனைத் துதித்தான். பின்னே மதங்காசிரமம் சென்று இராமனது வருகைக்காகக் காத்திருக்கும் சபரிக்கு அருள் புரியுமாறு கூறினான்.

பிறகு சபரியிடம் வழி கேட்டு அறிந்து சுக்ரீவனிடம் சென்று, அவனது நட்பைப் பெற்று, சீதா பிராட்டியைத் தேடுமாறு கூறி மறைந்தான்.

வால்மீகி இராமாயணத்திலே பின் வருமாறு காணப் படுகிறது.

கவந்தன் சொல்கிறான் : "ஸ்ரீ ராமா! நான் தனு என்பவன் வமிசத்திலே ஸ்ரீ என்பவனுக்கு மகனாகப் பிறந்தேன். அழகிய வடிவம் பெற்றேன். ஆயினும் கோர

உருக்கொண்டு பலரையும் அச்சுறுத்தி வந்தேன். ஸ்தூல சிரஸ் என்ற முனிவரையும் அச்சுறுத்தியபோது அவர் வெகுண்டு "இக் கோர உருவமே உனக்கு நிலைப்பதாக" என்று சபித்தார். பின்னர் நான் எனது பிழையுணர்ந்தேன். முனிவரை வேண்டினேன். இராமபிரான் உன் கரங்களைத் துண்டித்து எரிக்கும்போது இக்கோர உரு நீங்கும் என்றார். யான் கடுந்தவம் புரிந்தேன். நீண்ட வாழ்நாள் பெற்றேன். அதனால் செருக்குற்றேன்; இந்திரனை எதிர்த்தேன். என் கைகளும் தலையும் வயிற்றினுள் புகுமாறு செய்தான் இந்திரன். அவனை வேண்டினேன். ஒரு யோசனை தூரம் என் கைகள் நீள வரமளித்தான்.

அத்யாதம இராமாயணம் கவந்தனைப் பற்றி பின் வருமாறு கூறுகிறது.

"கவந்தன் ஒரு கந்தர்வன். பிரம்மாவிடம் வரம்பெற்றவன். அஷ்ட வச்ர முனிவரால் இந்தக் கோர உருப் பெற்றவன்."

இராமனும் லட்சுமணனும் அங்கிருந்து நடந்தனர். நடந்து மதங்கர் ஆசிரமம் அடைந்தனர். அவர்களது வருகைக்காகக் காத்திருக்கும் சபரியைக் கணடனர்.

இராமனைக் கண்ட சபரி அவ்விருவரையும் உபசரித்தாள். பின்னே மோட்சம் எய்தினாள். அன்றிரவு மதங்கர் ஆசிரமத்திலே தங்கி மறுநாள் பம்பாசிரஸை அடைந்தனர்.

○ ○

# ஆரண்ய காண்டப் படலங்கள்

## நிகழ்ச்சிகள் சுருக்கம்

### 1. விராதன் வதைப்படலம்

இப் படலம் இராம லட்சுமணர் விராதனைக் கொன்ற கதையைக் கூறுகிறது. தண்டகாரணியம் செல்லும் வழியில் அத்திரி முனிவரின் ஆசிரமம் அடைந்தனர். அங்கு அனசூயை சீதைக்கு ஆபரணங்களும், பட்டாடைகளும் அளித்தாள். தண்டகாரணியத்தில் சீதையை விராதன் தூக்கிச்சென்றான். தசரத மக்கள் இருவரும் அவனது தோள்களைத் துண்டித்தனர்; விராதனின் வரலாறும் இதிலுள்ளன.

### 2. சரபங்கன் பிறப்பு நீங்கு படலம்

பின்னர்ச் சரபங்கனது ஆசிரமத்திற்கு அருகே சென்றனர். பிரமனது கட்டளையால் அம்முனிவனைச் சத்திய லோகத்திற்கு அழைத்துப் போக வந்திருந்த தேவேந்திரன் இராமனைக் கண்டு துதித்துவிட்டு ஏகினான். இராமபிரானது சேவைக்குக் காத்திருந்த அந்த முனிவர், அப்பிரான் எழுந்தருளியவுடனே அவரை வணங்கி, துதித்து பின் இராகவன் எதிரிலேயே அக்கினிபிரவேசஞ் செய்து, பிறப்பு நீங்கினார்.

### 3. அகத்தியப் படலம்

சீதையுடனும் லட்சுமணனுடனும் அகத்தியர் ஆசிரமம் சென்றடையும் வழியில் கழிந்த காலத்தையும் சுதீட்சண முனிவர் பற்றியும், பஞ்சாப்ஸரஸ் தடாக வரலாற்றையும் கூறுகிறது இப் படலம்.

### 4. சடாயு காண்படலம்

இப்படலம், சடாயுவைப் பற்றிக் கூறுவதாகும். தசரத சக்கரவர்த்திக்கு உயிர்த் தோழன் சடாயு; மிக்க ஆயுளுடையவன்; கழுகுக்கரசன்; தசரதனுக்கு பற்பல உதவிகள் செய்தவன். சடாயுவை இராம லட்சுமணர் காண, அவன் இவர்களை தன் சொந்த மைந்தர்களாகவே நினைத்துப் பாதுகாத்தான். பின் பஞ்சவடியை அவ்விருவரும் அடைந்த வரலாற்றைக் கூறுகிறது.

### 5. சூர்ப்பணகைப் படலம்

இராவணனின் தங்கையான சூர்ப்பணகை தண்டகாரணியத்தில் தூஷணன் கரன் ஆகியவர்களுடன் அங்குள்ள வனவாசிகளை வருத்தி வந்தாள். இராம லட்சுமணனைக் கண்டவுடன் இராமனின்

மேனியழகில் மயங்கினாள். அழகியவடிவங்கொண்டு இராமனைக் கவர முயன்ற இவள், சீதையைக கண்டாள். சீதையே இராமன் தன்னை உதாசீனம் செய்யக் காரணம் என்று, சீதையைக் கவர்ந்துச் செல்ல யத்தனித்தாள். காவல் புரிந்த லட்சுமணனோ, சூர்ப்பணகையின் மூக்கைத் தன் வாளால் அறுத்தெறிந்தான். ஏமாற்றமடைந்த அரக்கி அவமானம் தாங்காது, பழிவாங்க திட்டமிட்டாள்.

## 6. கரன் வதைப்படலம்

இராம லட்சுமணரிடம் கருவிகொண்டு சென்ற சூர்ப்பணகை கரன் காலில் விழுந்து புலம்பி முறையிட்டாள். போருக்கு வந்த கரனுடைய இராக்கத வீரர்கள் இராமனுடைய அம்புக்கு இரையாயினர். கரன் மிகப்பெரிய சேனையோடு வந்தான். தூஷணனும் கரனுடன் சென்றான். வருணன் தனக்குத்தந்த விஷ்ணு தனுசை எடுத்து நாணேற்றி, கரனை வெற்றிக்கொண்டான். இரகு வீரன். கண்டாள் சூர்ப்பணகை; ஓடினாள்; இலங்கைக்கு இச் செய்தியை இராவணனுக்குச் சொல்ல.

## 7. மாரீசன் வதைப் படலம்

மிக்க மாயைச்செய்ய வல்லவன் மாரீசன். சூர்ப்பணகை இராவணனிடம் ஏற்படுத்திய பெருஞ்சினமும சீதையிடம் மூண்ட பெருங்காதலும் இராவணனை சீதையை வஞ்சனையால் கவர்ந்து வருவதற்குத் தூண்டியது. அதற்கு உதவியாக மாரீசனை நாடினான். முதலில் இதற்கு இணங்க மறுத்தாலும், பின்னர் பொன்மான் உருக்கொண்டு சீதை எதிரில் சென்றான் மாரீசன். சீதை அந்த மானைப் பிடித்துத் தரும்படி இராமனை வேண்டினாள். லட்சுமணன் "இது, பொய் மான்" என்று உண்மை கூறித் தடுக்கவும், கேளாமல், சீதை வற்புறுத்தவே இராமன் அதை பிடிக்கச் சென்றான். நெடுந்தூரம் சென்றுவிட்ட அந்த மானை இராமனின் அம்பு வீழ்த்தியது. தன் மெய் வடிவுக்கொண்ட மாரீசன் "ஹா சீதா! லட்சுமணா!" என்று இராமனின் குரலில் கூவினான். இக்குரல் கேட்டு, சானகி மிகவும் துயருற்றாள்.

## 8. சடாயு உயிர் நீடித்த படலம்

சீதை பதறினாள். லட்சுமணனை இராமனைக் காக்கச் செல்லுமாறு வற்புறுத்தினாள். தன்னை விட்டு இராமனிடம் ஏகுமாறு செய்தாள். சீதை தனித்திருந்த சமயம் இராவணன் சந்நியாசி வேடங்கொண்டு வந்தான். சீதை அவனுடைய தவக் கோலத்தை நம்பினாள். இராவணன் தன்

சுய உருவைக்கொண்டான். விரும்பாத ஒரு பெண்ணைத் தொட்டால் தனக்குடனே இறுதி உண்டாகும் என்ற சாபம் நினைவுக்கு வந்தது. எனவே சீதை இருந்த நிலத்தையே பெயர்த்து தேரில் வைத்துச் செல்லலானான். சீதையின் கூக்குரல் சடாயுவின் காதில் விழுந்தது. உடன் இராவணனை எதிர்த்து வீரமாகப் பொருதான். ஆனால் இறுதியில் சடாயு அவன் எறிந்த தெய்வீக வாளினால் வீழ்ந்தான். அரக்கன் சீதையை இலங்கையில் அசோகவனத்தில் கொடிய அரக்கியர் நடுவே சிறை வைத்தான். இராமனும் லட்சுமணனும் பன்னசாலையையடைந்து சானகியைக் காணாது அவளை தேடிச் சென்றபோது, குற்றுயிராகச் சடாயுவைக் கண்டனர். விவரங்களை அறிந்தனர். இராமபிரான் சடாயுவுக்கு ஈமக்கடன் செய்தான்.

## 9. அயோமுகிப் படலம்


இராகவன் தன் தம்பியோடு, வனத்தில் செல்கையில் அவனுக்குத் தாகம்ஏற்பட்டது. லட்சுமணனை நீர் கொண்டு வரச் சொன்னான். லட்சுமணனும் சென்றான். வழியில் அயோமுகி என்றொரு அரக்கி. இளையவன்மீது ஆறாக் காதல் கொண்டாள். அழகிய உருவங்கொண்டு, லட்சுமணனை எடுத்துச் சென்றாள். இராமனின் தம்பியோ அவளுடைய மூக்கை அறுத்து, அவளிடமிருந்து மீண்டான்.

## 10. கவந்தப் படலம்

கவந்தன், சாபத்தினால் அரக்கனானவன், கவந்தன் வசித்த வனத்தை அடைந்தபோது, தன் இரண்டு கைகளையும் நீட்டினான். இராமனும் லட்சுமணனும், சிக்கவே, வயிற்றில் அவர்களைத் திணிக்க முற்பட்டான். இராமனும் இளையவனும் தங்கள் வாளினால் அவன் இரண்டு தோள்களையும் வெட்டித் தள்ளினர். சாபம் நீங்கினான் கவந்தன். இருவரையும் தொழுதான். இனி அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதையும் கூறினான்.

## 11. சபரி பிறப்பு நீங்கு படலம்

சபரி மதங்கரது சீடர்களுக்கு உபசாரஞ் செய்துகொண்டு அவ்வாசிரமத்திலேயே வசித்து வந்த தவப்பெண். இந்த ஆசிரமத்திற்கு தசரதனின் இரு மகன்களும் வரும் செய்தி கேட்டாள். அவ்வனத்தில் உள்ள நல்ல கனிகளைச் சேர்த்து வைத்தாள். அப்பழங்களைக் கொடுத்து இராம லட்சுமணரை உபசரித்தாள். இராமபிரானின் அருளால் சபரி பிறப்பு நீங்கிய படலமாகிய இதுவே ஆரண்ய காண்டத்தின் பதினோராவது படலம்.

இந்நூலின் தொகுப்பாசிரியர்கள் அமரர் சக்திதாசன் சுப்பிரமணியனும் அவர்தம் துணைவியார் திருமதி. ஜலஜா சக்திதாசனும் செய்துள்ள தமிழ்த்தொண்டு போற்றற்குரியது. சிறந்த இலக்கியவாதியான இவ்விருவரும் மூத்த தேசீய எழுத்தாளர்கள்; சுமார் 50 ஆண்டுகள் இலக்கியப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்கள், அமரர் சக்திதாசன் சுப்பிரமணியன் தனியாக எழுதிய நூல்கள் இருபத்தி ஆறு. அவர்தம் துணைவியாருடன் சேர்ந்து எழுதிய நூல்கள் இருபது திருமதி. ஜலஜா சக்திதாசன் தனியாக எழுதிய நூல் பதினான்கு. தேசீயம், ஆராய்ச்சி, திறனாய்வு, இலக்கியம், அரசியல், விஞ்ஞானம், உலகியல், சமயம், வரலாறு ஆகிய பல்வேறு துறைகளிலும் எழுதிய பெருமை இவ்விரு ஆசிரியர்களுக்கும் உண்டு. தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, இந்தி என்ற மொழிகளில் எழுதிய சிறப்பும் இவர்களுக்கு உண்டு.

1974ம் ஆண்டு, 'கம்பன் கவித்திரட்டு' தொகுக்கப் பட்டது. இந்நூலின் முதல் காண்டம், (பால காண்டம்) 1980ம் ஆண்டு வெளிவந்தது. இந்த முதல் காண்டத்திற்கு தமிழகம் நல்ல ஆதரவு தந்தது.

இப்போது 'கம்பன் கவித்திரட்டு' இரண்டாம், மூன்றாம் காண்டங்களை ஒரே தொகுப்பாக வெளியிடுகிறோம். அறிஞர் தம் ஆதரவை வேண்டுகிறோம்.